ஆலமரத்துப்
பைங்கிளி
பூவை. எஸ். ஆறுமுகம்

ஆலமரத்துப் பைங்கிளி

சிறுகதைகள்

பூவை. எஸ். ஆறுமுகம்

பூம்புகார் பதிப்பகம்
சிதம்பரம்

முதற்பதிப்பு—ஜூன் 1964
முழு உரிமையும் பூம்புகார் பதிப்பகத்தார்க்கு உரியது.

விலை ரூபாய்: 3. 75

விற்பனை உரிமை:

தொல்காப்பியர் நூலகம்,
107, கனகசபை நகர்,
சிதம்பரம்.

அச்சிட்டோர்: செந்தமிழ் அச்சகம், சென்னை-14.

பதிப்புரை

பூவை. எஸ். ஆறுமுகம் அவர்கள் சிறந்த சிறு கதை எழுத்தாளர் ஆவர். இன்றுவரை ஏறக்குறைய அறுநூற்றுக்கு மேற்பட்ட கதைகள் எழுதியுள்ளார். இவருடைய முதல் சிறுகதைத் தொகுதியைப் பொன்னி ஆசிரியர் திரு. **முருகு சுப்பிரமணியன்** அவர்கள் 1951-ல் 'கடல் முத்து' என்ற தலைப்பில் வெளியிட்டார். 1961-ல் ஆனந்த விகடன் இவருடைய 'மகுடி' என்ற ஓரங்க நாடகத்திற்குப் பரிசு கொடுத்துப் பாராட்டியது.

பல திறனாய்வுக் கட்டுரைகளும், பேட்டிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

தமிழகம் அவருடைய எழுத்துத் திறனைச் சுவைத்துப் போற்றுமாக!

இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள சிறுகதைகள், "ஆனந்த விகடன்" "தமிழ்" "கங்கை" "கலைமகள்" "உமா" "அமுதசுரபி" "சுதேசமித்திரன்" (கிழமை இதழ்) "நண்பன்" "கல்கி" "விஜேந்தன்" "பொன்னி" "தினமணிக் கதிர்" ஆகிய இதழ்களில் பல்வேறு காலங்களில் வெளியானவை. இக் கதைகளை வெளியிட்ட இதழாசிரியர்களுக்கு நன்றி.

பூம்புகார் பதிப்பகத்தார்.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	பாட்டுப் புத்தகம் பத்துக் காசு	5
2.	காதல் என்னும் பொய் விளையாட்டு	19
3.	சொக்கப் பச்சை	28
4.	குழந்தைத் தெய்வம்	43
5.	ஆலமரத்துப் பைங்கிளி	57
6.	பால் சுரந்த சக்தி	73
7.	புடம்	79
8.	கோடிச் செம்பொன்	97
9.	உயிர்ப் பரிசு	112
10.	காணிக்கை	120
11.	ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்	130
12.	கண் மயக்கம்	142
13.	எழுதிச் செல்லும் விதியின் கை	159
14.	பிறந்த நாள்	166
15.	இருமனம்	176
16.	சிவன் தந்தது	185
17.	நாதத் தந்தி	197

1

“பாட்டுப் புத்தகம் பத்துக் காசு!”

திருவாளர் மெய்கண்ட பிள்ளைவாளுக்கு ஜாகை திருக்காட்டுப்பள்ளியில்தான் என்றாலும், அவரது சொத்து—பத்து மட்டும் தஞ்சாவூரில்தான் ஏகமாகச் செழித்துத் தழைத்து வந்தன. இதுதான் உண்மை. ஆனால், இதைக் காட்டிலும் இன்னொரு பெரிய உண்மையும் அவரது பிறந்த மண்ணில் வாசம் இருந்தது. அது, மண் வளம் கொழித்திடும் திருக்காட்டுப்பள்ளி வயல்களிலேதான்; நெல் மணிகளோடு அதிர்ஷ்டச் சுடர்களும் விளையலாயின. விளைந்தது ஓரிடம், விதைத்தது மற்றோர் இடம். இருக்கட்டுமே!

திருவாளர் மெய்கண்ட பிள்ளை ‘மெய்’யை வாழ்த்தி வணங்குபவர். இந்த விஷயம் துல்யமான நிஜம் என்பது புலனாக, ‘வழிகள்’ பல திறந்து வைக்கப்பட்டிருக்கும். ‘வழிகள் என்றால், எந்த வழிகள்’ என்றுதானே திகைக்கிறீர்கள்? பேஷ்!

போகும் வழிக்குப் புண்ணியம் சம்பாதிக்க வேண்டியதே தமது லட்சியம் என்பது பிள்ளைவாளின் அழுத்தமான கருத்து. அதன் நிமித்தமே அவர், உண்மை வழிபாட்டு வழிகளிலே தீவிரமான கவனம் செலுத்தி வந்தார். அதற்கான செயல்களில் இறங்கி நிற்கையில்தான், அவருக்குஅவரது தந்தையின் ‘டாகீஸ்’ கட்டடம் ஒன்று கை

கொடுத்தது. அதற்கு அவர் தோள் கொடுத்தார். 'மெய் கண்டான் தியேட்டர் உருவாயிற்று.

மார்க்கெட்டுக்குக் காய்கறியிலிருந்து 'இறைச்சி' வரை வாங்கும் பொது ஜனங்கள் சகலத்தனை பேர்களும், அந்தச் சினிமாக் கொட்டகையை ஒரு தரம் நின்று முறைத்துப் பார்த்து விட்டுப் போகாமல் இருந்ததில்லை; இருக்கவும் மாட்டார்கள். இதற்குக் காரணம் என்ன வென்று தெரியுமா?

அது......

அந்தத் தியேட்டரின் வெளி முகப்பில், "உண்மையே தெய்வம்; வாய்மையே வாழ்வு!" என்ற வாசகங்கள், பிரகதீசுவரர் கோயில் கலசம்போல் துலாம்பரமாகப்பளிச் சிட்டன. இம்மாதிரியான உபதேசங்களை வாழ வைத்து, அதன் மூலம் தாமும் வாழ எண்ணியவர் பிள்ளைவாள்.

உண்மையைச் சோதித்துப் பார்க்கும் அளவுக்குத் துணிச்சல் பெற்றவர் பிள்ளை. பொய்களுடனே புழங்கி வந்த சகடயோகத்தை அழைத்துக் காப்பி வாங்கிக் கொடுத்து, அவரையே மானேஜராக்கி, அதன் பிறகு தாம் எழுதிய மணிவாசகங்களின் மணியோசையைக் கேட்கச் செய்த துணிச்சல் பேர்வழி ஆயிற்றே அவர்! வாரம் ஒரு முறை வந்து தஞ்சையில் தங்கி, சகடயோகத்தையும், சகடயோகத்தின்பால் தொடர்பு பூண்ட 'உண்மை— பொய்ப் படலத்தின்' நிகழ்ச்சிகளையும் பரிசோதனை செய்து திரும்புவது முதலாளியின் வழக்கம்.

சகடயோகம் இருக்கிறரே, அவருக்குக் காசுதான் குறி; காசுதான் கடவுள்! அதற்காக அவர் சட்டத்தின் பேரில் கைவைக்க முடியவில்லை. தமாஷ் வரி ஓடிய டிக் கெட்டுப் புத்தகங்களில் 'தமாஷ்' பண்ண முடியவில்லை. அவர் பொறுப்பில் நடந்த பெட்டிக் கடையிலும்,

'கான்டீ'னிலும் கை வைத்தார். 'காம்ப்ளிமெண்டரி டிக்கெட்' வழங்கி பெரிய மனிதர்களின் அன்புக்குப் பாத்திரமானுர். அதன் பலனுக, ரகசிய உதவிகள் கிடைக்கப் பெற்ருர். சட்டம் நாற்புறமும் காவல் புரிந்து கொண்டிருக்க, ஆண்டவன் ஒருருவாக உண்மையின் வடிவாகச் சிரித்து நிற்க, ஆஜானுபாகுவாக நிமிர்ந்து நின்று கொண்டிருந்த அந்தத் தியேட்டரின் ஒரு ரகசிய அறையில் அன்பர் சகடயோகம் சட்டத்தை உடைக்கும் வகையில் மதுப் புட்டிகளை உடைத்து வந்த சம்பவங்கள், அவருக்கு வேண்டப்படாதவர்களால் தூது அனுப்பப்பட்டு, அவை பிள்ளைவாளின் தன்மானம் மிக்க உணர்வுகளைச் சுண்டியிழுத்தன......!

மெய்கண்ட பிள்ளை முகப்பில் தொங்கிய உண்மை விளக்கப் படங்களை எடுத்துக்கொண்டு வந்து, உள்ளே மானேஜர் அறையில் தொங்கவிட்டார். சகடயோகத்தைக் கூப்பிட்டனுப்பினுர். அவர் வந்தார். அவருடன் கூட, அந்தச் சிறுவனும் வந்தான். அவன் அவருக்கு எடுபிடி ஆள்.

தியேட்டருக்குச் சொந்தக்காரர் அந்தப் பொடியனைப் பார்த்தார். ஆழமான பார்வை அது!

"பய யாரு?"

"தெக்குச் சீமைப் பயலுங்க. பேரு சங்கிலி. கை சுத்தம் ஜாஸ்தியுங்க, முதலாளி...!"

முதலாளியின் அந்தரங்க மேடையில் அமைந்திட்ட குற்றவாளிக் கூண்டில்தான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துப்பு அல்லது ரகசியம், அல்லது உண்மையை அறிந்து கொள்ள சகடயோகத்துக்கு வயசு போதாது!

"டேலே...!"

காவற்காரன் வந்தான்; பவ்யமாகக் கைகட்டி நின்றான்.

"எங்கேடா நம்ப பயல்...?"

"யாரைச் சொல்றீங்க?"

"அதாண்டா சங்கிலி!"

சங்கிலி ஓட்டமாக ஓடி வந்தான். பத்து வயதுதான். வறுமைக் காலத்தையொரு பொருட்டாகக் கருதியிருக்கவில்லை அவன் என்பதை, அவனது முகத் தெளிவு சுட்டியது. அழுக்கு நிஜார்; புதுச் சொக்காய். பறட்டைத் தலையை எண்ணெய் எழிலுறக் காட்டிற்று.

பத்து மணிச் சங்கு ஊதியது.

வெய்யில் சுள்ளாப்புப் பெற்றது.

பனி வாடை கலந்தது.

வாசற்புறத்தே சின எதிர்ப்புக் கண்டனத் தொனி விண்ணைச் சாடியது.

சங்கிலி கை கட்டி நின்றவன், கோஷங்களைக் கேட்டு வாசலுக்கு விரைந்து வந்து, "சீனுக்காரன் ஒழிக!" என்று கூவிவிட்டு,அதன் உணர்வில்தன் கடமையை ஓரளவேனும் நிறைவேற்றிக் கொண்டவன் மாதிரி திருப்தி அடைந்தவனாக, மறுபடியும் உள்ளே சென்று, பழைய இடத்தில் நின்ற போது, அவன் பார்வையில் அருவருக்கும் கொடூரமான பார்வையுடன் சுவரில் காட்சி தந்த வில்லன் ஒருவனின் படம்தான் தென்பட்டது. பையனுக்குச் சிரிப்பு புறப்பட்டது. அடக்கிக் கொண்டான். முதலாளியின் கோபம் தேங்கிய முகத்தை இந்த ஒரு மாதத்தில் அவன் ஒரு வாரம்கூட கண்டதில்லையே?...

'என்ன சமாச்சாரம்.........ஐயா கோபமாயிருக்காங்களே?

"ஐயாவுக்குக் காப்பி வாங்கியாரட்டுமுங்களா?" என்று மானேஜரின் காதைக் கடித்தான் சங்கிலி.

சகடயோகம் மூச்சுக்காட்டினால்தானே?

"ஏம்பா, இப்ப நீ என்ன சொல்றே?"

"சத்தியமான பேச்சுங்க. நான் தப்புதண்டா ஏதும் செஞ்சதில்லீங்க! யாரோ வேண்டாதவங்க உங்ககிட்டே கோள் மூட்டியிருக்கிறானுக...!"

எட்டு முழச் சுவரைத் தாண்டியிருந்த வெளியில் ஒரு பரிவாரம் நின்றது.

பிள்ளை, நீறு பூசிய நெற்றியைப் பிடித்துக் கொண்டே ஒரு சில கணங்கள் வீற்றிருந்தார். ஆசனம் சுட்டது. நெஞ்சுச் சூடு சும்மா விடுமா? மறுபடியும் மறு படியும் சகடயோகத்தை ஓரக் கண்கொண்டு பார்த்தார். 'ஆளு நடிக்கறான்!...ம்... நடிக்கட்டும், நடிக்கட்டும்...!'

"ஓய்!......உள்ளே வாரும் ஓய்!" என்று சகட யோகத்தை அழைத்துக் கொண்டு உள்ளே நடந்தார் மெய்கண்ட பிள்ளை. பட்டுச் சட்டை, அந்தக் கறுப்பு மேனிக்குக் கன பொருத்தம். அதாவது, கன சரீரத்துக்குக் கன பொருத்தம்!...

இருட்டறைகள் சிலவற்றை வெளிச்சத்தைப்போட்டு தேடினார் அவர். ஒரு தடயமும் கிட்டவில்லை!

மானேஜரின் முகத்தில் அப்பொழுதுதான் புதுக்களை வந்தது.

"ஐயாவுக்கு ஓவல்..."

ஓடி வந்த குரலுக்கு முன்னே ஓடி வந்தான் சங்கிலி.

"டேய்!"

"ஏங்க...!"

"நீ எத்தினி நாளா இங்கே இருக்கிறே?"

"ஒரு மாசம் கிட்டத்தட்ட ஆகியிருக்குங்க...!"

"வேலை?"

"பாட்டுப் புத்தகம் விப்பேன்...சாயா விப்பேன்... அப்புறம் பீடி சிகரெட்டு விப்பேனுங்க!"

"ஊம்"

"ஆமாங்க...!"

"ஒனக்குச் சம்பளம்?"

"இருபது ரூபாயுங்க!"

"இது கட்டுதாடா?"

"என்னமோங்க...சின்னப் பயலுக்குச் சின்னூண்டு வயிறுதானுங்களே!" தலையைச் சொறிந்து கொண்டான் சங்கிலி. பிள்ளைக்கோ தலை 'விண்' என்று தெரித்தது.

"சம்பளம் யாரு தாரது?"

"மானேசரு தருவாருங்க...அதாகப்பட்டது ஒங்க பண்ணுறுங்க!"

"பலேடா!"

பையனின் இளஞ்சிரிப்பு, பெரியவரின் இதழ்க்கடையில் வளர்ந்திருந்தது.

"உனக்கு நெசம் பேசிப் பழக்கமிருக்குதா?"

"நெரம்ப இருக்குங்க...அதாலே தாங்க, முகப்பிலே தொங்கவிட்டிருக்கிற பொன் மொழிங்களைக் கண்டு எனக்குப் பயமே உண்டாகலேங்க. நானும் இங்கேயே தங்கவும் முடியுதுங்க!..."

"பலேடா" என்று மெய்ம் மறந்து, 'மெய்' நினைந் துருகிச் சிரித்தார், தியேட்டருக்குடையவர்.

"இங்கிட்டு வாடா!"

சங்கிலியின் காதுடன் காதாக ஏதோ ஓதினார் பிள்ளை. மறுகணம் அவன் முதுகில் தட்டிக்கொடுத்தார்.

"ஓய் சகடயோகம்! உம் யோகம் இன்னிக்கு இந்த மினிட்டோட சரி. உம் கணக்கை செட்டில் செய்துகிட்டுப் போம்! சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியது நம் கடமையிங்கிற நல்லெண்ணம் உண்டாகாத வரையிலே, சமுதாயம் உமக்கு ஒரு நாளும் பரிவு காட்டவே காட்டாதுங்காணும்! என்னோட மானத்தைப் பணயம் வச்சு, உம்மோட பணத்தைப் பெருக்கிக்கிற ரகசிய நாடகம் இனியும் நடக்காதுங்காணும்! போம்!" என்று ஆத்திரம் சுழிக்கக்கூச்சலிட்டார். "இப்பவே உம்மைக் கம்பி எண்ண வச்சிருப்பேன். பாவம், பிள்ளைக்குட்டிக்காரராச்சேன்னு மன்னிச்சேன்!"

"சங்கிலிப் பயல் பொய் சொல்றானுங்க எசமான்!"—என் சாண் உடம்பு ஒரு சாண் ஆனது!

சங்கிலி ஏளனமான நகையை உதிர்த்துவிட்டபடி, மானேஜர் சகடயோகத்தின் தலையைச் சகடக்காலை உருட்டுவதுபோல உருட்டி விட்டவனாக ஒரு முறைப்பு முறைத்துவிட்டுப் பேசினான். "நானா பொய் சொல்லுறேன்? அநாதைப் பிள்ளையான நான் உங்க சொல்படி உங்க சோத்தை வந்து தின்னுருந்தேன்னா, நான் பொய் சொல்லித்தான் இருந்திருப்பேன். ஆனா, நான் இது வரைக்கும் சாப்பிட்டது எம் பணம்—நான் ராக்கண் பகல் கண் முழிச்சுச் சம்பாரிச்ச பணம். ஒரு வேளைச் சோறுன்னு சாப்பிட்டுக் கிட்டும், சாயாவும் சுடு தண்ணியுமின்னு குடிச்சுக்கிட்டும் நாளை நாணயமா ஓட்டுற ஏழைப் புள்ளை நான். நீங்க போலிப் பணக்காரங்களோட சேர்ந்துக்கிட்டு, ரெண்டாம் ஆட்டம்முடிஞ்சதும், என்னை வெளியே காவலுக்கு வச்சுப்புட்டு, நீங்க எல்லோரும் உள்ளே குடிச்சீங்கங்கற விசயமே எனக்கு இப்பத்தான் பட்டுச்சு. நான் சின்னப்புள்ளே. இதெல்லாம் இது வரை எனக்கு விளங்கல்லே!" என்று சொல்லி உள்ளே

ஓடிவிட்டுத் திரும்பினன். அவன் கைகளில் சாக்கடை நாற்றம் வீசியது. ஐந்தாறு அழுகிய பிராந்திப் புட்டிகள் வெறும் சீசாக்கள் இருந்தன அவனது கரங்களில். "இதெல்லாம் நீங்க கொல்லையிலே ரகசியமாய்ப் புதைச்சது தானுங்களே?" என்று கம்பீரமாக முகம் நிமிர்த்தி, சுருட்டை முடிகளை ஒதுக்கிவிட்டுக் கேட்டான் சங்கிலி.

சகடயோகத்தின் பொய்களை மன்னித்தார் பிள்ளை.

இப்போது தியேட்டருக்கு மானேஜர் சிவசங்கரன்.

சங்கிலிப் பயலுக்கு சம்பளம் நாற்பது ரூபாய்.

"எ.. எம். ஜியும், சிவாஜியும் ஒண்ணு நடிச்ச பழைய படம் டோய்!" என்று அந்த 'மாட்டினி ஷோ' வில் குரல்கள் நெரிந்தன, ஜனங்களும் நெரிந்தனர்.

தைப் பொங்கல்.

சங்கிலிக்குக் காலை முதல் வேலை கெட்டி வாங்கியது. புதுச் சட்டையும் புது டிரௌசரும் அவனுடைய அழகின் அணிகலன்களாயின. அந்த வெள்ளைச் சிரிப்புத்தான் அவனுக்குச் சேமநிதி.—'பாங்க் பாலன்ஸ்!'

மெய்கண்ட பிள்ளை அன்று தினம் தியேட்டருக்கு வருகை தந்து, சிப்பந்திகளுக்குப் 'பொங்கல் இனும்' தந்தார்.

சங்கிலிக்குக் கிடைத்த இனும் பத்து ரூபாய். வானத்துக்கும் பூமிக்கும் குதித்தான் பயல். வாயெல்லாம் பல்.

ஜெமினி நடித்த புதுப்படம். கூட்டம் தாங்கவில்லை. 'க்யூ' வளர்ந்தது.

மணி பன்னிரண்டு!

புது மானேஜர்; தியேட்டரின் முகப்பில் வாழைக் குருத்துகள் கட்டப்பட்டப் பணியை மேற்பார்வையிட்டார். பிறகு, "சங்கிலி," என்று அழைத்தார்.

நாகரிகமாக வந்து நின்முன் சிறுவன்.

"ஸார்...!"

"டேய்! ஒரு கால் பிளேட் பிரியாணியும், ஒரு ஆம் லெட்டும் வாங்கியாடா...பசி தாங்கலே.. டிக்கட் புக்கிங் முடிஞ்சுதான் வீட்டுக்குப் போக முடியும் போல!..." என்று காரணம் சொல்லி, பத்து ரூபாய்த்தாள் ஒன்றினைச் சுண்டி எடுத்து அவனிடம் நீட்டினுர்.

சங்கிலி வெளியேறி, அந்தக் கிளப்பினுள் நுழைந்து, 'ஆர்டர்' கொடுத்தான். தூங்கும் கூட்டம் நிரம்பிவழிந்தது. சாப்பிட்டவர்களும் சாப்பிடப் போனவர்களும், அடங்கிய பசியையும் அடங்காப் பசியையும் மோதவிட்டார்கள். சங்கிலி, அந்தக் கல்லாவை — மேஜையை நெருங்கினுன். பிறகு, "எனக்கு கால் பிளேட் பிரியாணி...ஒரு ஆம் லெட்...!" என்று சொல்லிக் கையிலிருந்த பத்து ரூபாய் நோட்டை நீட்டினுன். நோட்டு மேஜை இழுப்பினுள் நுழையவே, "பாக்கிச் சில்லறை குடுங்க...!" என்று கேட்டான் அவன்.

"இருப்பா...!" என்ற பதில் 'கல்லாக்காரர்'ரிடமிருந்து வந்தது.

"பிரியாணி கால்...ஆம்லெட் ஒண்ணு...எம்பத்தைஞ்சு காசு பில்!" என்று 'குரல்' கன கச்சிதமாக வந்தது.

பையன் பிரியாணி ஆம்லெட் பொட்டலங்களைக் கையில் வாங்கிக்கொண்டு, "ஐயா! பத்து ரூவா குடுத்தேன்...எண்பத்தஞ்சு காசு போக மிச்சம் தாங்க ஸார்!"

என்று கேட்டான், வலது கையை மேஜையின் தலைப்பு வரை நீட்டியவாறு.

நீட்டி நின்ற கையைத் தள்ளிவிட்டு "எங்கிட்டவா நீ பத்து ரூபா குடுத்தே? டேய்!...என்னுடா 'டாவு' விடறே?" என்று கோபாவேசமான குரல் ஒன்று அவனைத் தாக்கவே, திக்பிரமை கொண்ட சங்கிலி, நீர் சுரந்த நேத்திரங்களால், நாணயங்களை ஆண்ட அந்த 'மகானுபாவனை' ஏறிட்டுப் பார்த்தான்.

'ஆ...நீரா?'...

"ஏம்பா, ராமு...இந்தப் பய காசு இல்லாம வந்து பொய் சொல்லி, பிரியாணி, ஆம்லெட்டுகளை களவாடிக்கிட்டுப்போக வந்திருக்கான். கேட்டா, பெரிய அரிச்சந்திரன் போல் கதை அடிக்கிறுன். எல்லாத்தையும் பறிச்சுக்க. இவனை விரட்டியடி! ஊம். சல்தி!"...

ஏழையழுத கண்ணீர் அம்பலம் ஏறுமா?

"ஏய்யா! ஒம்மளுக்கு இதயமே இல்லையா?...எம் மாதிரி பிள்ளை உமக்கும் இருக்குதே ஐயா?.. பின்னே, ஏனய்யா என்னைச் சோதிக்கிறீங்க இப்படி?" என்று 'நியாயம்' கேட்கப்போக, அவனது பிஞ்சுக் கன்னங்கள் இரண்டிலும் கைத் தழும்புகள் பதிந்ததுதான் மிச்சம்! சகடயோகத்தின் அகங்காரச் சிரிப்பில் சங்கிலியின் சட்டைப் பையிலிருந்த பொங்கல் இனும் கரைந்தது!

விநாடிகள் ஓடின.

புது மானேஜர் நாசூக்காக ஏப்பம் பறித்தார். ஏப்பத்தின் விலை, ரூபாய்: பத்து, காசு: எண்பத்தைந்து...!

மூன்றுவது ஆட்டம் தொடங்க சில நிமிஷங்களே இருந்தன.

சங்கிலி தெம்பை வரவழைத்துக்கொண்டு கடமை புரிந்தான். சாயா கிளாஸ்கள் கைமாறின; சில்லறைக் காசுகள் சட்டைப் பையில் புரண்டன; அடிவயிற்றில் பசி புரண்டது. கண்கள் இருண்டுவந்தன. "பாட்டுப் புத்தகம் பத்துக் காசு!...பாட்டுப் புத்தகம் பத்துப் பைசா!..."

தரை மகா ஜனங்களிட மிருந்து விடை வாங்கிக் கொண்டு, பெஞ்சுகளுக்கு மத்தியில் 'டார்வின் தியரி' படித்துக் கடைசியாக நாற்காலிகளை நாடின வேளையில், பாட்டுப் புத்தகங்களுக்குக் கிராக்கி தட்டவே, உன்னிப் பான பார்வையை நெடுகிலும் ஓடவிட்டவாறு, நடந்தான். காசுகளை வாங்கிச் சட்டைப் பையில் போட்டுவிட்டு, புத் தகங்களை நீட்டிச் சென்றான்.

அடுத்த வரிசைக்குத் திரும்பின தருணம் சங்கிலியின் பார்வையில் பட்டு விலகினர் இருவர்; ஒருவர்—திருவாளர் சகடயோகம்; அடுத்தது, அவரது 'தர்மபத்தினி!'

ஒரு கணம் கொதிப்பு பொங்கியது.

மீண்டும் குரல்கள் மீட்டின. "ஏ...பாட்டு புத்த கம்...வா...வா!"

சில்லறைகள் மொத்தமாக விழுந்தன.

"இந்தாப்பா...இங்கே ஒண்ணு கொடு!" என்று கேட்டுக்கொண்டே பத்துக்காசை நீட்டினார் சகடயோகம்; தூரத்தே கும்பிட்டவனைச் சிரிப்பால் வாழ்த்தினார்.

சங்கிலியின் கைகள் அந்தப் பத்துக் காசை ஏந்திக் கொண்டு, சட்டைப் பைக்குள் திணித்தன. ஆனால், அவன் பாட்டுப் புத்தகத்தை நீட்டவில்லை!

தர்ம பத்தினியின் நச்சரிப்பைத் தாங்காத சகடயோ கம், அங்கவஸ்திரத்தை நகர்த்திப் போட்டபடி, "எங் கேப்பா பாட்டுப் புத்தகம்?..." என்று வினா கொடுத்தார்.

சங்கிலி அட்டகாசமாகச் சிரிக்கலானான். "காசு குடுய்யா!"...பாட்டு புக் தன்னாலே உம்மகிட்டே ஓடியா ரும்!" என்றான்.

"காசு தான் சித்தமுந்தி குடுத்தேனப்பா!"

"நீரா காசு குடுத்தீர்?...பொய் பேசறீங்களே ஐயா, போயும் போயும் இந்தப் பத்துப் பைசாவுக்கு!..."

பையன் இரைச்சல் போட்டான்.

பாட்டுப் புத்ததத்தில் இருந்த காதல் பாடல்களில் லயித்திருந்த ஆண்-பெண் ஜோடிகள் திரும்பினர்! 'ஒண் டிக்கட்டை'களும் தங்கள் கவனத்தை நிமிர்த்தினர். ஆக, சகட யோகத்தை ஆண்களும், அவர் தர்ம பத்தினி யைப் பெண்களும் 'ஒரு மாதிரியாக'ப் பார்க்கத் தொடங் கினர். இந்தப் பார்வையைச் சகடயோகம் பொறுத்துக் கொள்ளத் தயாராக இருந்தும் கூட, அவரது தர்மபத்தினி அவ்வளவிற்குத் துணிவு பெற்றாளில்லை!

"பத்துப் பைசா பிச்சைக்காசு...இன்னொரு வாட்டி தான் குடுத்துடுங்களேன்!...இந்தப் பத்துப்பைசாவுக்குப் போயி, கேவலம் வாண்டுப் பயலோட வம்பு பண்றது எனக்கு வெட்கமா யிருக்குதுங்க!..." என்று 'நைஸாக'ச் சொன்னாள்.

"சட்...இரையாதே!" என்று சன்னக்குரல் அமுது வழிந்தது.

பட்டுத் தெறித்த பற்களுக்கு மத்தியில், ஆத்திரத் தைப் போட்டு மென்றுகொண்டு மறு பத்துப்பைசாவாகத் தடவி எடுத்து நீட்டினார் சக்டயோகம். தெரிந்தவர்கள் முகங்கள் தெரிந்தன. பாவம், அவருக்கு வியர்வை கொட் டியது!

சங்கிலியின் கைப்பிடிப்பில் இருந்த ஒரு புத்தகத்தின் கனம் குறைந்தது. அட்டகாசமாகச் சிரிக்கும் பொறுப்

பின்னை இப்பொறுப்பினை இப்பொழுது ஏற்றுக்கொண்டவன் சங்கிலி.

இருட்டு அரசோச்ச, காதலர்களின் கண்கள் 'மௌன நாடகம்' ஆடத் தொடங்கின!—திரையிலே!

ஆட்டம் முடிந்தது. கும்பல் கலையத் தொடங்கியது.

சகடயோகம் தன் தர்மபத்தினியின் மென்கரம் பற்றி வெளியே வந்து கொண்டிருந்தார். பழைய வேலைக்காரன் 'சலாம்' வைத்தான். 'கேட்'டை நெருங்கிக் கொண்டிருக்கையில், பையன் சங்கிலி குறுக்கே மறித்து நின்றான். "ஐயா, இந்தாங்க ஒங்க பத்துப் பைசா! இது எனக்கு வேணும்...! எம்பிட்டு பத்து ரூபாய்க்கு ஈடு கட்ட, இந்தப் பத்துப் பைசாவாலே முடியுமா? ஆனா எம்மாதிரி ஏழை பாழைங்களுக்கும் கஷ்ட நஷ்டத்துக்கும் ரொம்பச் சொந்த முண்டுங்க!... ஆனா, ஒங்களுக்கு இன்னிக்கு—அதான் ஸார்- இப்ப படம்பார்த்தப்ப... உண்டாச்சே ஒருநஷ்டம்... அதை உங்களாலே தாங்க முடியாதா ஸார்?... நீங்க படே ஆளு ஸார்! உங்களுக்குத்தான் இதெல்லாம் சர்வ சகஜமாச்சே! நான் சொல்றது பொய்யா ஸார்?'' என்று 'டயலாக்' பேசிவிட்டு, கையில் தயாராக வைத்திருந்த பத்துக்காசுப் பணத்தை அலட்சியத்துடன் நீட்டினான் அவன்.

செயலற்று நின்றுவிட்ட சகடயோகத்தின் முகத்தில் 'தெரிந்த முகங்கள்' தெரிந்தன. வியர்வை வழிய, கால்கள் நடுங்க கோபம் கனல் தெறிக்க அந்த அலட்சியச் சிரிப்பை எதிர்க்க முடியாத தோல்வியுடன் முகத்தைத் தாழ்த்தி, நடுக்கிய கையை நடுக்கத்துடன் உயர்த்தி நீட்டி, அதில் விழுந்த அந்தப் பத்துக்காசு நாணயத்தை உள்ளங்கையில் வைத்து மூடிக்கொண்டே, ஓர் அரைக்கணம் செயலிழந்து, செய்வகை அறியாது நின்றார் சகடயோகம்.

சங்கிலி, ஜெயஸ்தம்பமென உயர்ந்து, வெற்றிக் கொடியின் காம்பீர்யத்துடன் நிலைநாட்டப்பட்ட உண்மையைப் போன்று அந்தரங்கசுத்தியுடன் நின்று, அந்த மனிதரையே இமை பாவாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அதே அலட்சிய பாவனையுடன்!

"ம்...வாங்க... போவோம்!"

'தர்ம பத்தினியின் தோள்களில் அவர் அணையப் பெற்றவராக, வழி நடந்தார்.

எவனோ, "தூ...!" என்று சத்தமிட்டுக் காறித் துப்பி மறைந்த உண்மை நடப்பைத் திருப்பிப் பார்க்கவும் மனத் துணிவு அற்று, தன் போக்கில் தன்னுடைய-தடத்தில் நடந்துகொண்டே இருந்தார் சகடயோகம்! *

2

காதல் எனும் பொய் விளையாட்டு

குமண வள்ளலின் சரித்திரத்தைக் கதையாகச் சொல்லி முடிக்கட்டுமே யென்று காத்திருந்த மாதிரி, பள்ளிக்கூட மணி 'கண கண' வென ஒலித்தது. மணிச் சத்தம் கேட்டதுதான் தாமதம், அவரவர்கள் புத்தக மூட்டைகளை எடுத்துக்கொண்டு கிளம்பத்தொடங்கினார்கள். 'டெஸ்க்கு'கள் அதிர்ந்தன; பெஞ்சுப் பலகைகள் 'கடமுட'வென்று ஓசை செய்தன. மதியச் சாப்பாட்டுக்குப் புறப்படும் பதட்டம்; பசிக் கோளாறு என்றுதான் சொல்லவேண்டும். சின்னப் பிள்ளைகள்......இருக்கதா, பின்னே?

அந்தக் கைப்பிரம்புக்கு வலு அதிகம் என்பதைக் காட்டிலும், மகிமை கூடுதல் என்பதே பொருத்தம். அதையெடுத்து மேஜை டிராயருக்குள் திணித்துவிட்டு, சேலைத் தலைப்பை எடுத்து ஒரு பக்கத்தின் நுனி கொண்டு நெற்றி மேட்டிலும் கன்னக் கதுப்புகளிலும் மூக்கின் முனையிலும் ஒற்றி எடுத்தாள். கோடை என்றால் வியர்வைக்குப் பஞ்சமா? பஞ்சாய்ப் பறந்தது அயர்வு. டவலை மடித்துக் கைக்குள் இடுக்கியவளாக இருக்கையைப் பிரிந்தாள். 'பச்சைமண்' ஏந்திச் சென்ற தாய் ஒருத்தியின் காட்சி அவளுள் பாசத் துடிப்பை மீட்டிவிட்டிருக்கவேண்டும். நீள் மூச்சுப் பிரிந்தது. உதட்டுக்கரைதனில் உல்லாசப் பவனி வந்தது உலர்ந்த மூரல். வாழ்க்கையின்

மேடு பள்ளங்களுக்கென அமைந்த அல்லது, அமைத்துக் கொண்ட அடையாள முத்திரையோ, என்னவோ?

அவள்—பார்வதி. வாத்தியாரம்மா.

"டீச்சர்...டீச்சர்!"

பிஞ்சின் குரல் கேட்கவே அவள் விசை சேர்த்துத் திரும்பினாள். பத்மினி நின்று கொண்டிருந்தாள். சிறுமி இந்தப் பெயருக்கு ஒரு 'மவுஸ்' உண்டல்லவா? அவளது முல்லையரும்பு விரல்களைப் பற்றிக்கொண்டு, சிறு வயசுக் காரர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். கிரமங்கலத்தில் நல்ல புள்ளி. பஞ்சாயத்து சபையின் அங்கத்தினர். மத்தியானம் வீட்டில் ஏதோ விசேஷமாம், மகளுக்கு லீவு வேண்டுமாம். சிரிப்புக் காட்டி, பத்மினியைச் சிரிக்கச் செய்து, அனுமதி ஈந்தாள் ஆசிரியை.

பள்ளிக்கூடத்திலிருந்து மறுகி நடந்து, போலீஸ் ஸ்டேஷனில் திரும்பி, மேலைத் தெருவுக்கு அவள் வந்து சேருவதற்குள் அரைமணி ஆகும். நின்றது நின்றபடியே, அவள் தன் வீட்டினை அடைந்துவிட்டாள். 'பேபி இந் நேரம் தூங்கி விழிச்சிக்கிட்டிருக்கும். பால் புட்டியிலே இருக்கிற பாலை 'அவங்க' கொடுத்திருப்பாங்க...' எண்ணங்களின் மருக்கொழுந்து மணத்தில், 'இறந்தகாலம்' நெடி கூட்டிக்கிறக்கம் கண்டது. அந்தக் கிறக்கம்தான் வாழ்வா? கிறக்கம் தெளிந்ததும், தன் இடது கால் பாதத்தைக் குனிந்து பார்த்தாள் அவள். ஈரம் பெய்தது. இமை நெடுகிலும்.

படிக்கட்டுக்களைக் கடந்து இறங்கினாள். அவள் 'ப்யூன்' கொடுத்த உறைக்கடிதம் அவளுள் சாட்டை சொடுக்கியது. 'ஐயோ, நான் இப்ப என்ன செய்வேன்?... புதுச் சோதனையாயிருக்கே?...' மேனி அல்லாடியது. கண்ணீர் வழிந்தது.

சும்மா சொல்லலாமா?—சித்தர்கள் மகா ஞானிகள். வாழ்க்கை எனும் கணப்புக் குழியில் இந்த மனிதப் பிறப்பெடுத்தவர்களைப் புடம் வைத்து எடுக்கப் பயன்படும் மாய சக்தியைச் சோதனைகள் தாம் கைக் கொண்டிருக்கின்றனவாம்! வாஸ்தவம்தான்!...

கரை நிறை நீர் சேர் காவிரி அன்னையின் கழலடி பதிந்த பொற்புடைத்தது சோணாடு. அம்மகிமையின் நிழலில் தழைத்த குடில்கள் அனந்தம்! குக்கிராமங்கள் மிகுதி. எட்டுக் குடிக்குப் பெருமை தேடித் தந்தான் ஓவியன்; அவன் அற்ப மானுடனல்லன். ஆண்டவன். தாதைக்கு உபதேசித்த பாலன். அவனது கருணைக்கு இலக்கான பதிதன்னில்தான் பார்வதியும் அழகுப் பதுமைக்கு நிகராகப் பிறந்தாள். பொய்மை வாழ்விற்கு எடுத்த உண்மை யாக்கை அவளுடையது. சாமான்யமான குடும்பம்!

காலம் ஓடியது. அவள் ஓடினாள்.

காலம் அவளுக்குக் கன்னிப்பட்டம் சூட்டிற்று. கன்னிமாடத்தில் உலவிடும் ராஜகுமாரியானாள். இளவட்டங்களைப் பொறுத்தமட்டில், காற்றில் பறக்கும் பட்டமாகப் பறந்தான் ராமதாஸ். அவள் அவனுடைய அத்தை மகள். உறவும் உரிமையும் நெருங்கப் பெற்ற வாய்ப்பே அவனுடைய மனக் கனவுகளைப் போஷித்து வளர்த்துச் செழித்துத் தழைக்கச் செய்யவல்லதாகவும் அமைந்தது. அவன் கனவு கண்டான்; அவளும் கனாக் கண்டாள். கனவு உள்ளங்களின் பரிவர்த்தனைக்கு அடையாளமாக அவளுக்கு அவன் 'கணையாழி' ஒன்றைக் கொடுத்தான். இருவரையும் மணக் கோலத்தில் கண்டு களிக்க விரும்பினார்கள், இருதரப்புப் பெற்றோர்களும். வந்தது வினை. சாதாரணமான வினையா அது? உம்மைப் பழவினையின்

வினை அல்லவா அது?... இருவர் மனம் ஒட்டினாற்போல, இருவர் ஜாதகக் குறிப்புக்களும் ஒட்டி வரவில்லை.

பார்வதியைக் கொண்டவன் பெயர் சுந்தரம்.

* * *

புதுக்கோட்டை—அறந்தாங்கி பஸ் விடுத்துச் சென்ற கர்ணகடூரமான சத்தத்தை 'சத்தம்' கொடுக்காமல் வாங்கிக்கொண்டு பார்வதி தன் வீட்டை—அதாவது, வாடகை வீட்டை மிதித்த போழ்திலே, பேபியின் அழுகைச் சத்தம் காதுகளில் வழிந்து, இதயத்தைத் தொட்டுக் குலுக்கி விட்டது. துரிதம் கூட்டி நடந்தாள்; "அத்தான்!..."

சுந்தரம் குணதிசை நோக்கித் திரும்பிப் படுத்தப்படி, எதையோ படித்துக் கொண்டிருந்தான்.

பார்வதி குழவியை எடுத்தாள்; பாலமுதம் உண்டது பேபி. மார்பகச் சேலையைச் செம்மைசெய்து விட்டு அவள் தன் கணவன் பக்கம் நாடி நடந்தாள். அவன் அசையக் காணோம்! அண்டிச் சென்றாள். ஏதோ ஒரு கடிதம். 'ஒரத்த நாட்டிலேருந்து மாமா எழுதியிருப்பாங்க, க்ஷேம லாபம் கேட்டு!'

வடித்து வைத்துச் சென்ற சோறு சூடு மாறாமல், நல்ல பதத்துடன் இருந்தது. குண்டானில் சோற்றைக் கொட்டினாள். சூடு பறந்தது. தட்டு முதலிய உபகரணங்களோடு 'நடை'க்கு நடை பயின்றாள். காலில் ஏதோ தடுக்கிற்றாற் போலிருந்தது. நகக்கண்ணில் பட்டது, கெட்ட வலி. குனிந்த பார்வையை ஓட்டினாள். வலி ஓடவில்லை. 'ஓட்டிக்கு ரெட்டி' ஆனது!

அது ஓர் ஊன்றுகோல்; கைப்பிடிக் கழி!

பார்வதியின் கண்கள் இருண்டன. இருளில் புனல் வழிந்தது.

புருஷனுக்குச் சாதம் படைத்தாள் அவள். குழந்தையைத் தொட்டிலில் இட்டாள். சாப்பிட்டேன் என்று 'பேர்பண்ண' அவளும் இரு கவளம் சோறு பிசைந்து விழுங்கினாள். ஸ்கூலுக்குப் போய் மாலையில் வீடு திரும்புகையில் அவளுடன் அழுத்தப் பிடித்தாட்டிய தலைவலியையும் அழைத்து வந்தாள். கண்ணாடி வளையல்கள் கலகலத்தன!

எப்படியோ இரவு மனைமிதித்தது. இரவின் பிறைநிலா வான வீதியில் நட்சத்திரத் தோழர்—தோழியருடன் விளையாடிக் கொண்டிருந்தது.

பார்வதிக்கு உறக்கம் கொள்ளவில்லை.

சுந்தரம் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்து விட்டிருந்தான். வெளிறிப் போயிருந்த நெற்றித் திட்டில் சுருள் முடிகள் சில இழைந்திருந்தன. அவள் பார்வையில் ஓட்டை சைக்கிள் பட்டது. அவள் அலுவல் புரியும் இதே பள்ளியில்தான் சுந்தரம் 'ட்ரில் மாஸ்டர்!' அறந்தாங்கியில் பொங்கலன்று நடைபெற்ற சைக்கிள் பந்தயத்தில் அவன் தன்னுடைய இடது காலை இழக்க நேரிட்டது. அவன் எடுத்தது மறுபிறப்புத்தான். பிறந்த மனையும் புகுந்த வீடும் வசதியிழந்த நிலையிலே, அவள் பட்ட கஷ்டநஷ்டங்கள் கொஞ்சமா, நஞ்சமா? வரும் விதி இராத் தங்காது என்பார்கள் பெரியவர்கள்!...

தலைக்கு அணை வைத்துப் படுத்தாள் பார்வதி. லேசாகச் சிணுங்கிய பேபியைத் தடவி அமைதிப் படுத்தினாள். ஜன்னல் கம்பிகளுக்குத் தெரியாமல் நழுவி விழுந்த ஒளிக்கற்றைகளின் முத்து நகையில் கடிதமொன்று தெரிந்தது. லாந்தரை நகர்த்தினாள்; தூண்டினாள். தூண்டுகோல் கிடைத்தால் கடிதம் வாய்திறக்காமல் இருக்குமா?

"ஸ்ரீ சுந்தரம்!

குடும்பத் தகராறைப் பெரிது பண்ணி ஆடிய உங்கள் தகப்பனருடன் சேர்ந்துகொண்டு நீங்களும் ஆடினீர்கள்; என்னை ஏமாற்றினீர்கள். ஆனல், ஆண்டவன் உங்களை இப்பொழுது பழிவாங்கிவிட்டான், பார்த்தீர்களா? உங்கள் பேரில் நான் வைத்திருந்த காதலுக்கு அடையாள மாக, நான் பரிசளித்த என்னுடைய உருவம் பதித்த கணை யாழி இனியும் உங்கள் வசம் இருப்பது தப்பு. எனவே, உடனடியாகத் தபாலில் அனுப்பவும்.

இப்படிக்கு,

—தங்கம்மா."

அந்தப் பெரிய பங்களாவை தூரத்தில் நின்று பார்த்துச் செல்லும்போதே, பார்வதிக்கு உடம்பு கூனிக் குறுகியது. பங்களாவில் பிறந்த பையன் குமார், அவனுக்கு அவள் ஆசிரியை. பையன் சுட்டி! 'குறைந்த பட்சம் பார்த்தால்கூட ரூபாய் நானூறு வேண்டும். எண்பது தொண்ணூறு வாங்கும் என்னை ஒரு பொருட்டாக நம்பிக் கடன் தருவார்களா?...இப்போது கொடுத்தால் வட்டிவாசி சேர்த்து அடுத்த ஆறும் மாசத்திலே கடனை அடைத்து விடலாம். அத்தானுக்கு வரவேண்டிய 'பிராவிடண்ட் பண்ட்' பணமும் கைக்குக் கிட்டிவிடும்...!'

...

அலைகடல் ஓய்வதில்லை; உறங்குவதில்லை!

இந்த மனக்கடலும் அப்படியேதான்!

காலை இளம்பரிதியின் வெம்மை சூடு பயிலத் துடித்துக்கொண்டிருந்தது.

நெஞ்சை உறுத்திய கடிதத்தை முகத்திற்கு நேர்முக மாகப் பிடித்தாள். கண்கள் மீண்டும் அக்கடித வரிகளிலே நெளிந்தது.

"அத்தை மகள் பார்வதிக்கு,

விதி நம் நேசத்தைப் பிரித்துவிட்டது. நான் உன் மீது கொண்டிருந்த பிரேமைக்கு இலக்காக, என்னுடைய உருவம் பதித்த ஒரு மோதிரத்தை உனக்குப் பரிசளித்திருந்தேனல்லவா? அதை, இனி நீ வைத்திருக்கக் கூடாது. நம் குடும்பங்கள் பிரிந்தது மாதிரி அம்மோதிரத்தையும் உன்னிடமிருந்து பிரித்து அனுப்பிவைக்கவும்.

இப்படிக்கு,

—ராமதாஸ்."

தன் கணவரின் வைத்தியச் செலவுக்காக, இந்த மோதிரத்தை—காதலின் சின்னமாக கொடுக்கப்பட்ட மோதிரத்தை ரகசியமாக 'பியூன்' மூலமாக அடகுவைத்த நிகழ்ச்சி பாம்பாக நெளிந்து சட்டை உரித்துக்கொண்டு பயங்காட்டியது. இதைத் திருப்புவதற்கு இருநூறு வேணும். என்னைப் போலவேதான் அத்தானும் தனக்கு அளிக்கப்பட்ட பரிசு மோதிரத்தை எங்கோ அடகுவைத்திருக்கிறாராம். அதற்கு வேறு இருநூறு வேண்டும். பணம் மொத்தமாகக் கிடைத்தால், பியூனைக் கொண்டு திருப்பி இரண்டு மோதிரங்களையும் உடைமைக்காரர்களான அவ்விருவருக்கும் அனுப்பிவிடவேண்டும்!—காதல், கனவு, நடைமுறை வாழ்க்கை அனைத்துமே புதிராகத் தான் இருக்கின்றன!... இந்த மோதிரத்தை அடகுக்கு அனுப்பியதிலிருந்து, நான் அனுபவித்துவரும் நரகவேதனை 'இவருக்கு' — அ த் தா னு க் கு ஏற்பட்டிருக்கத்தான் வேண்டும்!...'

பங்களாவில் போய் நின்றாள் பார்வதி, குமாரின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாள். பையன் வந்தான். அவனுடைய தந்தை பெரிய 'லேவாதேவி'க்காரர். விசா

ரித்தாள், ஊரில் இல்லையாம். அவளுக்குத் 'திக்' கென்றது. கடைசியில் வீட்டின் எஜமானியிடம் தன் கஷ்ட நஷ்டங்களை சாங்கோபாங்கமாக விஸ்தரித்தாள் பார்வதி. எதிர் முகாமிலிருந்து வந்திருந்த ராமதாஸ், தங்கம்மா ஆகிய இருவரது கடிதங்களையும், வெட்கத்தையும் வேதனையையும் உள்ளடக்கியபடி, எடுத்து நீட்டலானாள்.

"ஆபத்துக்கு உதவுவது என் கடமை, வாத்தியாரம்மா. எனக்காக இல்லையென்றாலும், என் அருமைப் பிள்ளைகளுக்காகவேனும் கட்டாயம் உதவுவேன்," என்று பவ்யமாகவும் பரிவுடனும் கூறிவிட்டு, உள்ளே சென்றாள் வீட்டுத்தலைவி சாரதத்தம்பாள். அவள் திரும்பி வந்ததும், ஒரு கவரை நீட்டினாள். அதில் ரூபாய் எதுவும் இல்லை. இரண்டு மோதிரங்கள் இருந்தன!

கணவனும் மனைவியும் ஆபத்திற்கு அடகு வைக்க ப்யூன் மூலம் அனுப்பிய மோதிரங்கள் இரண்டும் ரகசியமாக ஒரே இடத்திலேயே வந்து சேர்ந்திருக்கின்றன!

"வேலை ரொம்பச் சுளுவாகப் போய்விட்டதல்லவா? இரண்டையும் இப்போதே அனுப்புங்கள்; எங்களுக்குச் சேரவேண்டிய தொகையை உங்கள் வசதிப் பிரகாரம் தாருங்கள் அம்மா!" என்றாள் வீட்டுத் தலைவி.

சாரதத்தம்பாள் தயங்கித் தயங்கி நடந்து, வாத்தியாரம்மா பார்வதியின் மனையைமிதித்தாள். மீண்டும் கலக்கம் மூண்டது. 'ஊஹூம்' என்ற பாவனையில் தலையை உலுக்கியவாறு, கட்டுந்த படிகளைக் கடந்தாள். அவளுடைய உள்ளங்கைக்குள் உள்ளடங்கியிருந்த கடிதம், சிலிர்த்துக்கொண்டு தலையை அசைத்தது.

அது

"அன்புள்ள அத்தையவர்களுக்கு, ராம்தாஸ் நமஸ்காரம் செய்து எழுதுவதானது:

நானும் என் மனைவி தங்கம்மாவும் புதுப்பாடம் கற்றுக்கொண்டோம். அந்த நாளிலே நான் என் அத்தை மகள் பார்வதிக்கு என் அன்பின் அடையாளமாகக் கொடுத்த மோதிரமும், என் மனைவி தன் அன்பு அத்தான் சுந்தருக்குத் தந்த மோதிரமும் கடைசிக் கட்டமாக உங்கள் வீட்டில் 'அடையாளம்' வைக்கப்பட்டிருக்கும் 'துப்பு' விவரத்தை நீங்கள் எழுதினீர்கள். அன்புக்குச் சின்னமாக அமைய வேண்டுமென்று கொடுக்கப்பட்ட பொருள்களின் விபரீத முடிவைக் கேட்டு வருந்தவே, எங்கள் பொருள்களை உடனடியாகத் திருப்பி யனுப்புமாறு நாங்கள் இருவரும் வெவ்வேறு விலாசமிட்டுத் தபால் அனுப்பினோம். நாங்கள் இருவரும் 'தம்பதி' என்பதைப் பாவம், அந்தத் தம்பதி எப்படி அறிய முடியும்?... ஆம்; ஒரு புதுப்பாடம் கிடைத்தது எங்களுக்கு. காதலின் உண்மைப் பொருளைப் போதித்து உணர்ந்திடவே, நாங்கள் அவ்வாறு கடிதம் எழுதினோம். 'காதலென்பது ஒரு பொய் விளையாட்டு'... அன்பெனும் சக்தி மிக ஆழமுடையது எனச் சொல்கிறார்கள். அப்படியிருந்தால், எங்கள் பரிசு மோதிரங்களை அவர்கள் இருவருமே அடகு வைத்திருக்கமாட்டார்கள்; இப்போது எங்களுக்குத் திருப்பி யனுப்பியிருக்கவும் மாட்டார்கள்!...

இப்படிக்கு,

—ராமதாஸ்."

பி. கு:—இக்கடிதத்தை மறந்துவிடாது, பார்வதி-சுந்தர் தம்பதியிடம் காண்பிக்கவேண்டும். *

3

சோக்கப் பச்சை

களத்து மேட்டிலே பொன் விளைந்திருந்தது. மண் தந்த பரிசில் அது. பொன் விளையும் பூமி என்கிறார்களே, அது மெத்தவும் சரி. சாணம் தெளித்துச் சுத்தம் செய்யப் பட்ட தரையில் நெல்மணிகள் ஒன்றுகூடி இருந்தன. அந்தி மாலையின் வண்ண ஒளி அவற்றோடு கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தது.

திருவம்பலச்சேர்வையின் மனத்தில் மகிழ்ச்சி நிறைந்த நினைவுகள் கும்பல் சேர்ந்தன. 'நல்லவேளை; போட்ட புள்ளி தப்பாது. எல்லாமாச் சேர்ந்து மூந்நூறு கலத்துக்குத் தேறும்பபோவாது!' என்று எண்ணமிட்டார். உழுது பயிரிட்டு உழைத்ததின் பலன் அவர் எதிர்பார்த்த வண்ணமே அமைந்திருக்கக் கண்ட அவருக்கு ஆனந்தம் அலைபாயக் கேட்கவா வேண்டும்?

தலை முண்டாசை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்தார் சேர்வை. தூசியும் தும்பட்டையும் விலகின. புளிய மரத்தடியில் போரடித்த வைக்கோலை ஒன்று திரட்டிக்கொண்டிருந்தார்கள் வேலையாட்கள். "ஏலே; மூக்கா! கிழக்கு மூக்கத்திலே காத்தடிச்சுக் கிடத்தியிருக் கிற வைக்கல் பிசிறுகளை யெல்லாம் கவ்வல் தம்பாலே ஒண்ணு சேர்த்திடுப்பா" என்று ஆலோசனை சொன்ன திருப்தியுடன் வீட்டு வாசல் நோக்கி விரைந்தார் அவர். நொறுங்கிக் காய்ந்த கடலைக்கொடிகளைச் சாவதானமாக

மென்று தின்று கொண்டிருந்த செவலைக் காளையையும் வெள்ளைக் காளையையும் அன்போடு தட்டிக் கொடுத்து விட்டுத் திரும்பினார்.

சுருக்கங்கள் பின்னல் கோலாட்டம் விளையாடிக் கொண்டிருந்த சேர்வையின் முகம் சிரிப்பை ஏந்தித் திகழ்ந்தது. உதடுகளிடைப் பிறந்த மென்முறுவல் அடர்ந்து படர்ந்து நரையோடிய மீசைக்கரையில் ஓய்வு கண்டது. "வாங்க, அத்தான்! திண்ணையிலே குந்துங்க!" என்று முகமன் கூறிய திருவம்பலம், தோளில் கிடந்த துண்டை எடுத்துத் திண்ணையில் விசிறினார்.

"மச்சான், நீயும் குந்து. மகசூல் எல்லாம் எப்படிக் கண்டிருக்கு?" என்று அன்போடு கேட்டார் வேலாயுதஞ் சேர்வை.

"தாராடி சாமி கிருபையாலே எல்லாம் நல்லபடியாகவே கிடைச்சிருக்குங்க, அத்தான். ஆமா, உங்க கண்டு முதல் முடிஞ்சிருக்குமே?... ஐந்நூறு கலம் காணுமில்லே!"

"ஓ!...அதுக்கு மிஞ்சியே கிடைச்சிருக்குது!"

அத்தானின் இதய நிறைவு மச்சானின் முகத்திரையில் பிரதிபலித்தது. 'தங்கச்சிக்குப் பரணி நட்சத்திரம். அது தரணியாளுமிங்கறது மெய்யாகாம இருக்கமுடியுமா?' என்று நினைத்துப் பூரித்தது திருவம்பலச்சேர்வையின் கருணை ததும்பும் உள்ளம்.

இருள் வாசலில் நின்றது.

தீபம் திண்ணைக்கு வந்தது.

இரண்டு குவளைகளிலே நீர் நிரப்பிக் கொணர்ந்தார்கள் வள்ளியும் தேவானையும். கைவளைகள் 'கலகல'வென இன்பப் பண் பாடின,

"சொகமா, வள்ளி?"

"உம்!"

"ஏம்மா தேவானை, சௌக்கியமாயிருக்காயா?"

"ஆமாங்க!"

இருவரும் மறைந்தனர்; வளையோசையின் நாத இழைகள் மட்டும் சில தங்கின.

"மச்சான்! தைபொறக்கப் போகுதே, நெனைப் பிருக்குதா?"

"இருக்குங்க, அத்தான்!...இந்த வருசம் உங்களுக்கு, தங்கச்சிக்கு, எங்க மாப்பிள்ளைக்கு எல்லாருக்கும் என் வீட்டிலேதான் பொங்கல் விருந்துச் சாப்பாடாக்கும்!" என்றார் திருவம்பலச் சேர்வை.

"அதிருக்கட்டும் திருவம்பலம். இந்தத் தையிலே என் மகன் முருகனோடே கண்ணாலம் நடந்தாகணும்; ஆமாம், சொல்லிப்புட்டேன்!" என்றார் வேலாயுதம். சற்று நேரம் திருவம்பலம் முகத்தைப் பார்த்தார்.

"அதுக்கென்னங்க அத்தான்?...முடிச்சிட்டாப்போ வுது. தாராடிசாமி கிருபையாலே பணம் காசு, நெல்லுப் பில்லு எல்லாந்தான் கைக்கு மெய்யாயிருக்குங்களே?"

"அதான் எனக்கும் புரிஞ்ச கதையாச்சே, மச் சான்?" என்றார் அத்தான்காரர்.

"பின்னே எதுதான் அத்தான் உங்களுக்குப் புரி யலே?"—பதட்டம் தந்த மன உழைச்சலுடன் அடுத்த வினாடி அண்டியது.

"உங்கிட்டே பொண்ணுங்க ரெண்டு இருக்கு; ஆனா எங்கிட்டே மாப்பிள்ளை ஒண்ணே ஒண்ணுதானே இருக்கு, மச்சான்?"

இதுவரை ஆளாகியிராத புதிய குழப்பத்தின் தலை வாயிலில் நிறுத்தப்பட்டார் திருவாளர் திருவம்பலம்.

“வள்ளி தேவானை ரெண்டையும் கலந்து பேசி ஜாதகம் பார்த்து முடிவு செய்யவேண்டிய விஷயம் இது. எனக்கு ஒரு கிழமை தவணை குடுங்க. இந்தத் தையிலே கட்டாயம் பையன் எங்க வீட்டு மாப்பிள்ளையாகிடுவாங்க; வீணு நீங்க மனசைப்போட்டு உளப்பிக்கிடாதீங்க, அத்தான்!” என்றார் திருவம்பலம்.

பாக்கு வெற்றிலைப் பெட்டியின் கனம் கொஞ்சம் இறங்கியது.

*　　*　　*

இளங்காலைப் பொழுது. மண்ணைப் பொன்னுக்கும் ரஸவாத வித்தையில் ஈடுபட்டிருந்தான் செஞ்சுடர்ச் செல்வன்.

திருவம்பலச் சேர்வையின் மாட்டுத் தொழுவத்தில் இருந்த தண்ணீர்த் தொட்டியில் கழுநீர் கொணர்ந்து ஊற்றினுள் வள்ளி; பிண்ணாக்குத் துண்டங்களைத் துகள்களாக்கி உதிர்த்துப்போட்டாள் தேவானை. வெள்ளைக் காளையை அவிழ்த்துவிட்ட பெருமை வள்ளிக்கு; செவலை மாட்டுக்குத் தொட்டித் தண்ணீர் காட்டிப் புண்ணியம் சேகரித்துக்கொண்ட செருக்கு தேவானைக்கு.

அது சமயம், “ஓ! மாப்பிள்ளையா? வாங்க மாப்பிள்ளை” என்ற குரல் கேட்டது.

வடித்த தண்ணீரில் தவிட்டைக் கொட்டிக் கலக்கிக் கொண்டிருந்த அதே கோலத்தில் தலை நிமிர்ந்தாள் வள்ளி கையில் அப்பியிருந்த தவிட்டுப்பொடிகளைக் கூடக் கருத்தில் கொள்ளாமல் ‘விடு விடு’ வென்று முன்னே அடியெடுத்து வைத்து நடக்கலானுள். மறுகணம் அவளின் களை பொருந்திய முகம் சாம்பியது.

இக்காட்சியைக் கண்டு மனத்துள் சிரித்துக்கொண்டாள் தேவானை; ஆனாலும் அவளுடைய வதனத்தில் கலவரத்தின் சன்னமான இழைகள் பல கோணங்களில் பின்னிக்கிடந்தன; 'மச்சானை எங்கே காணோம்?'

"வள்ளி அக்கா, ஏன் திரும்பிட்டே?...மச்சானைத் தானே அப்பா அழைச்சாங்க போலிருக்குது!..." என்று தேவானை சொல்லி இன்னும் வாய் மூடவில்லை.

நாடகத்தில் வரும் ராஜபார்ட்காரன் போல வந்து நின்றான் முருகன். "தேவானை...!வள்ளி..." என்று குரல் கொடுத்தான் அவன்.

"அக்கா, இந்தாப் பார்த்தியா நம்ப மச்சானை!" என்று சின்னக்குழந்தையைப் போலக் குழைந்து கொண்டே ஓடிவந்தாள் தேவானை.

வள்ளியின் கண்களிலே அணைந்திருந்த ஏமாற்றம் பையப்பைய விடை பெற்றுக்கொண்டிருந்தது. "கொஞ்ச முந்தி நீங்க உள்ளே இருந்தீங்களா, மச்சான்?" என்று ஆவலோடு வினவினாள் வள்ளி.

'ம்!' கொட்டினான் முருகன். அவன் கண்கள் வள்ளி—தேவானை; சகோதரிகள் இருவரை மாறி மாறிப் பார்த்தன.

"தேவானை இந்தா பூ!..."

"வள்ளி இது உனக்கு!"

பூவையர் இருவரும் பரிசுப்பொருள்களான பூச்சரங்களின் மணத்தில் லயிக்கத் தொடங்கினர்.

"ஆசை மச்சான்!" என்று அன்போடு பாராட்டினாள் வள்ளி.

"நேச மச்சான்!" என்று வாயாறப் புகழ்ந்தாள் தேவானை.

"காலங் கார்த்தாலேயே எங்கே இந்தப் பூச்சரம் கிடைச்சுது, மச்சான்?"

"வயல் காட்டுப்பக்கம் போயிட்டுத் திரும்பயிலே, பண்டாரத்தோடத் தோட்டம் வந்துச்சு; காலையிலே நான் தான் போணி பண்ணினேன். உங்க ரெண்டு பேர் ஞாபகமும் வந்துச்சு. ஆளுக்குக் கொஞ்சம் வாங்கியாந்தேன். வெள்ளிக்கிழமையாச்சே!...குளிச்சி முழுகி மஞ்சள் பூசி தலைவாரி பூமுடிச்சுகிடுவீங்களே!..." என்று விளக்கம் தந்தான் முருகன். வள்ளி—தேவானை இருவருக்கும் ஆனந்தம் பிடிபடவில்லை. குதூகலித்தார்கள்.

தை மாதம் பிறந்துவிட்டது.

ரங்கூன்காரர் வீட்டுப் பூரணிக் காளையை மஞ்சிவிரட்டில் பிடித்து வெற்றிகொண்ட புகழின்போதை முருகனின் இதழ்களிலே நெடி பரப்பிக் காட்டிக் கொண்டிருந்தது. சல்லிக் கட்டுக் காளையின் காவி வண்ண மேனி தழுவி, கூரான சாயம் தோய்ந்த கொம்பு பற்றி, முடித்துவிட்டிருந்தப் பரிசுப் பொருளான சாயத் துணியையும் பத்து ரூபாய்ச் சலவைத்தாளையும் அவிழ்த்து எடுத்துக்கொண்ட காட்சி மனக்கண்ணில் தோன்றியது! அதை அவனால் மறக்க இயலுமா?

'ஏமூற்றுக் கழிந்த மள்ளரை' புறநானூறு சொன்னது உண்டு. ஆனால், முருகன் முன் தோல்வி கண்டு, காளை முன் களைத்துப் போய்விட்ட கிரமங்கலத்துக் 'காளைகள்' இருவரையும் அவன் கண்முன் கண்டிருக்கிறான். கெலிக்கவேண்டும் என்ற ஒரே குறிப்பு நோக்கின் மையப்புள்ளியில் நின்றவாறு, முருகனுக்குப் போட்டியாகப் போராடிய காளிமுத்து,வீரமுத்து ஆகிய இரண்டு வீர இளைஞர்களை அவன் மறக்கவே முடியாது.

வெற்றித் திருவின் வீரப் பெருநோக்கிலே பெண்மையின் இருவேறு நிழல்கள் ஒளி சிந்திச் சிரித்தன; அந்தச்

சிரிப்பினிலே ஆர்வக் கனவின் இருமனம் பேசியது; நேசம் மறக்காத நெஞ்சுகளின் இணைகுரல் தந்தது; தோன்றுமல் தோன்றி—மறையாமல் மறைந்து கண்பொத்தி விளையாடும் காதற்கனவுகள் ஏடு விரிந்தன; உள்ளத்தின் எழிலும் உருவத்தின் அழகும் 'அக்கா—தங்கச்சி!' என்கின்ற பாசத்தின் பிடிப்பில் பூவிரல்களைப் பிணைத்துக் கொண்டு துள்ளிக் குதித்து 'உப்புக்கோடு' விளையாடின! முருகனின் இதயத் தளத்தை அடைத்திருந்த பெருமூச்சு வெளிப்போந்தது. நெடு மூச்சுக்கு இதயம் இருந்தால்; பேசத் தெரிந்தால்; அவை தெரிவிக்கக்கூடிய பெயர்கள் இவைதாம்; 'வள்ளி தேவானை!'

முருகன் மண்ணில் நின்றான். ஆனால் அவன் கண்கள் விண்ணைக் காட்டின. எண்ணங்கள் உயர்ந்தால், இதயம் உயர்கிறது; கனவுகள் வாழும் சமயத்தில் மனித மனமும் வாழ்கிறது. இத்தகைய இயற்கை பின்னணியில்தான் மண்ணும் விண்ணும் 'கழற்சிக்காய்' ஆடின.

உருமப் பொழுது உருண்டு வந்தது.

"ஏலே முருகா! சோறு உண்ண வாப்பா. வட்டி கழுவிப் போட்டிருக்கேன்!"

முருகன் விழிகளை மூடி மூடித் திறந்தான். கனவுகளின் நிழல்கள் விலகி விலகித் தெரிந்தன. சிந்தனைச் சுழல்கள் தோன்றி மறைந்தன.

"இந்தாலே வாரேன் ஆத்தா!"

உணவு கொண்டு எழுந்தான் முருகன். தந்தை வந்தார்; விரிந்த குடையை மடக்காமலேயே கொணர்ந்த செய்தியை அவிழ்த்தார்.

"ஏலே முருகா; ஒன் அம்மான் பொண்ணுங்க ரெண்டுபேரு சாதகமும் ஒனக்குக் கச்சிதமாப் பொருந்தியிருக்குதாம். ஆனு, அந்தப் பொண்ணுங்களிலே நீ

யாரைக் கொண்டுகிடப் போறியாம்?...மூத்ததையா? இல்லே, பிந்தியதையா? உடனே முடிவு சொல்லிப்பிடு.',

இரு மனத்துள் ஒரு மனம் சுற்றியது; ஆலவட்டம் ஆடியது.

"நாளைக்கு மறுநாளு நிச்சயம் சொல்லிப்பிடறேனுங்க, அப்பா!" என்றான் முருகன்.

வெள்ளை நிலாவின் இதயம் கார்முகில்தானே? ஆம்; அவ்வாறுதான் இருக்கவேண்டும். இல்லையெனில் அவை இரண்டும் ஏன் அப்படி அந்தரங்கம் பேசிக்கொள்ளப் போகின்றன?

வேயப்பட்டிருந்த வைக்கோலின் மணம் வள்ளியின் நாசியில் புகுந்தது. ஓட்டுத் திண்ணையை ஒட்டிச் சாய்ந்திருந்த 'முறிமேனி'யைத் தள்ளிக்கொண்டாள். சூடிய செவ்வந்திப் பூவின் வாசம் நெஞ்சுக்கு இதமும் சுகமும் தந்தது.

'ம்...மே...'

வெள்ளைப் பசுவின் கன்று கத்தி அழைத்தது.

வள்ளி திரும்பினாள். அந்தக் கன்று தன்னுடைய மணிக்கரங்களிலே பிஞ்சுக் குழந்தை ஒன்றைக் கொடுத்து வேடிக்கைக் காட்டிய அந்தக் கற்பனைப் பின்னலை இப்போது நினைத்தாள். 'மச்சானும் நானும் வாய் ஓயாமல் பேசிக்கினு இருப்போம்; வெத்திலைச் சருகுக் குட்டானும் கையுமா நாங்க ரெண்டு பேரும் தாழ்வாரத்திலே குந்திக்கிட்டு இருக்கிறப்ப, புள்ளே சத்தம் காட்டும்; அவுக என்னை நையாண்டி செஞ்சு அடுப்படிக்கு அனுப்புவாக; யாரு கண்டாக!...ஒளிஞ்சிருந்து ஓடியாந்து பார்த்திடுவாகளோன்னு எனக்குச் சம்சயம் தட்டும். பாவம், எங்க ராசாவையோ இல்லே ராசாத்தியையோ இதுக்காவ அழுவவாவிடுவேன்?...ஊகூம்; மாட்டேன்;...'

மனம் பலாப் பழமாக மாறியபின் நினைவுகள் சுக்க ளாக உரு மாறுவது இயல்புதானே.

வள்ளியின் கழுத்துச் சங்கிலியில் பதித்திருந்த 'டாலர்' ஒருதரம் எம்பித் தணிந்தது. 'மூத்தவ நான்; நியாயமா மச்சான் எனக்குத்தானே கெடைக்கோணும்?..'

வள்ளியின் கவனம் உடன்பிறப்பை நாடி ஓடியது. ஆழ்ந்து சிந்தித்தது.

'அல்லி அரசாணி மாலை'யில் கருத்துப் பதித்திருந் தாள் தங்கச்சி. கைவிளக்கின் புகை தங்கமுகத்தை மங்கச் செய்ய முயற்சி செய்தது. வாகைமாலை புனைந்த பெருமை தேவானையின் சிந்தூர நிறத்துக்குத்தான் உடைமை.

''தேவானைப் பொண்ணு! கேட்டியா கூத்தை?... ஒக்கப் பொறந்தவுக நீங்க. ஓங்க சாதகம் ரெண்டும் ஓங்க முறைக்கார மச்சான் சாதகத்தோடு அச்சடிச்சு வச்சாப் பிலே ஒட்டுதலா இருக்குதாம். சேதி அனுப்பியிருக்குது நம்ப சம்பந்திபுரத்து வேலாயி. ஆனுக்க, இப்பதான் தாரடிசாமி வேடிக்கைக் காட்டப் போவதின்னு எம் மன சிலே ஓடுது. ஏந்தெரியுமா? ஓங்க ரெண்டு பொண்ணு களிலே யாராச்சும் ஒருத்திதான் நாத்தனாரு வீட்டிலே வாக்கப்பட ஏலும்; வள்ளி காதிலேயும் இதைப் போட்டுப் புட்டேன். ஓங்கிட்டேயும் சொல்லியாச்சு. பெத்த ஆத்தா நானு. எனக்கு நீங்க ரெண்டு பேரும் ஒண்ணுதான். இந்தக் கண்ணுலம் காச்சி விசயமா உசிருக்குசிரான ஓங்க ளோட பாசத்திலே ரவை விரிசல்கூட காணப்படாது. அதான் ஓங்க அப்பாரு கவலையும் எங் கவலையும்;...வார திங்கக்கெழமை மாப்பிள்ளை முடிவு அனுப்புறுகளாம்!... வா, தேவானை!...சாப்பாடு தயாரா இருக்கு, அக்காளையும் ஒரு கொரல் அளைச்சிக்கிட்டு ஒரே எட்டிலே ஓடியாந் திடும்மா!...''

உணவு வட்டில் அன்னம் ஏந்தியிருந்தது. ஆனால், இந்தப் பெண் மனமோ முருகனைத் தேடியலைந்து கொண்டிருந்தது. "மச்சான், நான் இளையவள்னு சொல்லி என்னை ஒதுக்கிப்புடுவீகளா?...எங்கையாலே ஆக்கிப் படைச்சு சந்தோஷப்படலாம்னு கூத்தாடிக் கொண்டிருந்தேனே?... அந்தக் கனு பலிக்குமில்லே? பூவத்தக்குடி காளியம்மன் தேரோட்டத்துக்கு கூண்டு வண்டியிலே என்னையும் குந்தவச்சு ஓட்டிக்கினுப்போறதா ஒருவாட்டி நெனைப்பூட்டினீங்களே?...வேலங்குடிச் செட்டித் தெருவிலே பயாஸ்கோப்பு ஆட்டத்துக்கும் என்னை அழைச்சிக்கிட்டுப் போறதாச் சொன்னீங்களே?...மச்சான் ஆள வந்த தெய்வமாச்சே நீங்க!..."

தேவானையின் கெண்டை விழிகள் கண்ணீரிலே நீந்தின. மூடிக்கொண்ட கண்கள் மூடியவாறே இருந்தன. தவம் இயற்றினளோ?...கங்கைக் கரைதனிலே தவம் இருந்த காமாட்சியம்மனைக் கைதட்டிக் கூவி அழைத்தனளோ? வேறு என்ன மாயம்தான் செய்தாளோ?

"தங்கச்சி!..."

தேவானையின் தவம் கலைக்கப்பட்டது. திறக்கப்பட்ட விழி விரிப்பிலே விரக்தி வரிக் கோடுகள் காணப்பட்டன. வேதனையின் சூடும் அதில் அனல் வாடையை உண்டாக்கி விட்டது. ஏறிட்டுப் பார்த்தாள். மூச்சுக்கு முந்நூறு தடவை 'அக்கா!...வள்ளி அக்கா!' என்று வாய் நிறையக் கூப்பிட்ட அவள் ஏன் இப்படி வாயடைத்துப் போய்விட்டாள்?...

"தேவானை! முதலில் உருட்டின சோத்தை வாயிலே போட்டுக்கத் தங்கச்சி!"

விரக்தியும் வேதனையும் நினைத்த மாத்திரத்திலே புன்னகையை அணிந்து கொள்வதென்பது இயலாத செயல்! சுலபமான காரியமல்ல!

"அக்கா!..."

உந்திக் கமலத்தில் ஒலித்த பாசத்தின் இதயக்குரல் இது. ஆனால் தேவானையின் ஊனக் கண்கள் புனைந்து காட்டிய அக்காட்சியை அவள் எங்ஙனம் நினைக்காமல் இருப்பாள்? பாவம்!...அரசாணிப்பானை, காட விளக்கு, ஓமத் தீ—ஆகியவை சாட்சி சொல்ல வள்ளியும் முருகனும் மணவறையில் கணவன் மனைவியாகத் தரிசனம் தந்தனர்!

"அக்கா!"

உடன்பிறந்தாள் ஒருமுறை விம்மினாள். சோற்றுப் பருக்கைகள் சிதறின.

கொண்டவருக்குச் சாதம் பறிமாறச் சென்று திரும்பினாள் தாயார் வீராயி.

"தேவானை! நான் மூத்தவள் எங்கிற உரிமையை முன்னே வச்சு நம்ப மச்சானை என் கைக்குள்ளே போட்டுக்கிட மாட்டேன். நம்ப குலதெய்வம் பேரிலே ஆணை வச்சுப் பேசறதாக்கல் இது. எனக்குக்கூட உட்கார ஓடலே; ஏந்திருக்க ஓடலே!...நீ வீணுக்கு மனசை உளப்பிக்கிடாதே!...மச்சான் சொல்லப்போற சொல்லுதான் நமக்கு வேதவாக்கு!...அன்னிக்கி எளுதினவன் இன்னிக்கு அளிச்சு எளுதப் போறதில்லே. நம்ப விதிப்படி நடக்கட்டும்! அதுக்காவ, நம்ப பாசம் முறிஞ்சிப்பிடாம நம்பளை நாமே காப்பத்திக்கிடணும். இதை மட்டுக்கும் முந்தானையிலே முடிபோட்டு வச்சுக்கிடு."

பெற்றவளின் நெஞ்சம் அழுதது.

பொங்கலுக்கு முருகன் உடுத்திய கோடி வேட்டியின் ஓரத்தில் அப்பப்பட்டிருந்த மஞ்சள் இன்னமும் நிறம் மாறவில்லை. அதேமாதிரிதான் அந்திமாலையின் வண்ணத்திலும் மஞ்சள் நிறக்கதிர்கள் ஒன்றியிருந்தன.

"நாளைக்குப் பொழுது விடிஞ்சதும், அம்மான் வீட்டுக்குத் தாக்கல் சொல்லி அனுப்பணுமே?..." என்கிற எண்ணம் அவனைத் தீராத சிந்தனையில் ஈடுபாடு கொள்ளத் தூண்டியது. மாரியப்பக் கங்காணி ஊருணியிலின்றும் புனலாடி, மெள்ள ஈரவேட்டியைக் காயவைத்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருக்கையில் முருகனின் உள்ளம் மறுகி மறுகிப் பின்னிக்கிடந்தது.

உதித்த செங்கதிர்ச் செல்வனின் முத்துச் சிரிப்பை அனுபவித்துக் கொண்டு வேப்பங்குச்சியும் கையுமாக மாட்டுத் தொழுவத்தைக் கண்காணித்துக் கொண்டிருந்தான் அவன். அப்போது, வீடு தேடி — உரிமை நாடி ஓடிவந்தாள் தேவானை.

"மச்சான், பிஞ்சுக் கடலையை சுட்டு மடியிலே கட்டியாந்திருக்கேனுங்க. அம்பிட்டையும் ஒடைச்சுத் தாரேன். உங்களுக்கு இதுதான் மெத்தப் புடிக்குமே?...கருப்பட்டித் துணுக்கும் வச்சிருக்கிறேன். அப்பாலே அதை வாயிலே போட்டு மெல்லுங்க. மேலுக்கு கடுகத்தனை தீம்பும் வராது!" என்றாள் அவள்.

அவன் வாங்கிக் கொண்டான்.

"மதியத்துக்கு ஒம்பேரைச் சொல்லிக்கிட்டே திங்கிறேன், தேவானை!" என்று பதிலுரைத்தான் முருகன்.

வேலாயுதஞ்சேர்வையின் வருகை அவளை அங்கிருந்து பிரியச்செய்தது.

உச்சிப்பொழுது 'தாச்சி' சொல்லிவந்தது. உடன் வந்தாள் வள்ளி. உப்புப் போட்டு வேகவைத்த வேர்க் கடலையைச் செட்டிநாட்டுக் குட்டான் ஒன்றில் கொட்டிக்கொணர்ந்தாள் அவள். ஓடு பிரித்த சமயம் பார்த்து ஓடிவந்தார் சேர்வை. ஓட்டம் பிடித்தாள் அவள்.

அதுப் பொழுதுகூட, சோதரிகளை நினைக்காமல் அவன் இருந்தது கிடையாது. ஏன், முந்நாள் கனவில் கூட அவர்கள் இருவரும் மெட்டி குலுங்க, மிஞ்சி ஒலிக்க, மென்முறுவல் ஒளி சிந்த, மேனி எழிலை வண்ணம் பரப்ப வள்ளி தேவானையென முருகனை நாடி வந்திருந்தார்களே?...

“மச்சான்! நானும் தங்கச்சியும் பிறந்தன்னிக்கு மனமொத்து இருந்தாப்பிலேயேதான் இன்னிக்கும் ஒண்ணடி மண்ணடியா இருந்து வாரோம். அதாலே, நீங்க சொல்லியனுப்பிற முடிவுதான் எங்களுக்குத் தாராடிசாமி வாக்காட்டம்!...இல்லியா, தேவானை!” என்றாள் வள்ளி. ‘உம்’ கொட்டினாள் இளையவள்.

சிந்தனை மனிதனை அறிஞனாக்குகிறது என்கிறார்களே?...பின், ஏன் முருகன் மாத்திரம் சிந்தனைக் குமைச்சலிலே சித்தம் குழம்பிப் பைத்தியம் பிடித்தவன் போல் நிற்கிறான்?

“அண்ணே, முருகு அண்ணே!”

திருநீற்றுக்கோடுகளின் வெளிச்சத்தில் இரு உருவங்கள் தெரிந்தன.

“அடலே!...வீரமுத்து!... காளிமுத்து!... பாலைவனம் ஜமீந்தார் கணக்கா இருக்கீகளே?...

“மைனர் சங்கிலியும் ஒற்றைக்கல் கடுக்கனும்பொலிவு காட்டின. நின்றவர்கள் அமர்ந்தார்கள் அருகு திண்ணையில். தாம்பூலத் தாம்பாளம் இருவரையும் உபசரித்தது.

“ஆட்டத்துக்குப் போறோம்; நீங்க வாரீகளா?”

ஒருவனுக்குப் பதிலாக மற்றொருவன் வினவினான்; அந்தக் கேள்வி ஒருவன் சார்பிலே மற்றவனுக்காகவும் அமைந்தது.

"இல்லே! நான் வரலே!"

மஞ்சிவிரட்டுப் பந்தயத்தில் எதிர்த்தரப்பில் இயக்கிய உள்ளங்கள் அவன் வரை விடுகதை எதையும் முன் வைக்கவில்லை!

விடைபெற்றுத் திரும்பும்போது அவர்கள் இருவரும் கேட்டார்கள்: "அண்ணாச்சி!...நீங்க ஒங்க கண்ணாலத் தைப் பத்தி ரோசிச்சுப் பிட்டீங்களா?...யாரைக் கட்டிக் கிடப் போறீங்க?...வள்ளியையா?...இல்லே, தேவானை யையா?..."

திண்ணை முந்தலில் பிரிந்து கிடந்த செய்தித்தாளில் 'இருதாரத் தடுப்புச் சட்டம்' பற்றிய 'கதை' இருந்தது.

முருகன் விழித்தான்.

"வள்ளி தங்கமானது!" என்றான் வீரமுத்து. அவனு டைய இதழ்களிலே எத்தகைய மகிழ்ச்சி! எப்பேர்ப்பட்ட பூரிப்பு!

"தேவானை நல்ல பொண்ணு!" என்று விளக்கவுரை ஈந்தான் காளிமுத்து. கனவின் தேக்கம் அவன் கண் கடையில் வழிந்தது!

இளஞ்சிட்டுக்கள் இரண்டும் நெஞ்சில் தெரிந்தன; 'வள்ளி!...தேவானை!'

முருகன் இப்போது இளங்காளைகளைக் கூர்ந்துபார்த் தான்.

"ஏனுங்க முருக அண்ணாச்சி!... அக்கா தங்கச்சிங்க ரெண்டு பேரிலே ஒருத்தியைவிட்டு இன்னொருத்தியைக் கொண்டு கிட்டீகண்ணா, அவுக அவுக மனசு நோவாதா?"

முருகன் மனம் அதிர்ந்தான். அடுத்தகணம், அற் புதமான ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல் பளிச்சென்று தோற்றமளித்தான்.

மறுநாள் பொழுது விடிந்தது.

"ஆத்தா!...குளமங்கலம் மணியக்காரர் பொண்ணு அஞ்சலையை நான் கட்டிக்கிடுகிறேன்! நீ கவலைப்படாதே, ஆத்தா!"

ஈன்றெடுத்த தாய்க்கு ஏதும் புரியவில்லை. பேந்தப் பேந்த விழித்தாள்.

திருவம்பலச்சேர்வையின் வீட்டில் நடந்த திருமண விருந்தில் கலந்துகொண்டு 'மொய்' எழுதிவிட்டுத் திரும்பிய முருகன் என்னென்னவோ எண்ணமிட்டான்!

"என் மனசு இப்பத்தான் அடங்கியிருக்குது' என் கடமையும் தீர்ந்திடுச்சின்னுதான் நெனைச்சிருக்கேன். 'வள்ளி—தேவானை' ரெண்டோட அன்பும் என் நெஞ்சிலே வாழணுமிங்கிறதுதான் என் ஆசை, கனவு, எண்ணம்-எல்லாம்!...கூடப் பொறந்தவங்க பாசத்திலே என்னாலே எந்த இடைவெளியும் உண்டாகப்புடாதின்னுதான், வள்ளியை வீரமுத்து கையிலேயும், தேவானையை காளிமுத்துக் கிட்டேயும் ஒப்படைச்சேன்!...அக்கா—தங்கச்சியை சமாதானப்படுத்தி, இந்தக் கண்ணாலங்களை முடிச்சுவைக்க நான் பட்டபாடு எனக்குத்தானே தெரியும்?...ஊரே என் நடத்தையைக் கண்டு அதிசயப்பட்டுக் கெடக்காம்! ஆனால், சொக்கப்பச்சையோட மதிப்பைக் காட்டியும், ஒசத்தியா வள்ளி—தேவானை அன்பை நான் மதிச்சிருக்கிறது அவுகளுக்கு எங்கே தெரியப்போவுது? பெத்தவுங்க என் முடிவைக் கேட்டுக் கிலேசப்படப் போறாங்க!...'வள்ளி, தேவானை! இனிமே நீங்க ரெண்டு பேரும் காலமெல்லாம் என் நெஞ்சிலேயும் நெனைப்பிலேயும் வாழப்போறீங்க; ஒங்க நெனைப்புத்தான் என்னை அக்கரைச் சீமையிலேயும் வாழவைக்கப் போவுது...'" *

4

குழந்தைத் தெய்வம்

சங்கரன் குடியிருப்பிலே செக்குவைத்துச் செக்கு மாடாக உழைத்துப் பிழைத்த பழம்புள்ளி செ. மு. அண்ணாமலை. அக்கரைச் சீமைக்கு ஐந்து 'கணக்கு'ப் போய்விட்டுத் திரும்பிய தகப்பன்காரர், அண்ணாமலைக்குச் சொத்துச் சுகம் தேடி வைக்கவில்லை என்றாலும், 'கடன்கப்பி'யைச் சீதனமாக்கிச் செல்லவில்லை. ஆகவே தான், இவரால் மானமாகத் தப்ப முடிந்தது.

எழுபது அடி நீளமும் நாற்பது அடி அகலமும் கொண்டிருந்த அந்தச் சிறிய இடைவெளியில்தான் செக்குப் போட்டிருந்தது. கடைவாயில் நாலு பல் போட்டிருந்த சந்தைப்பேட்டைச் செவலைக்காளை ஒன்று. குத்துக் கட்டையின் முகதலைவில் பாரத்தைச் சமன் செய்ய வைத்திருந்த செம்பூரான் கல்லின்மீது அட்டணைக் கால் போட்டுக்கொண்டு திருக்கை வால் தார்க்குச்சியும் கையுமாகக் குந்தி மாடு ஓட்ட ஓர் எடுபிடிப் பொடியன்.

கோழி கூப்பிடத் துயில் நீக்கும் அண்ணாமலை ஒரு பீங்கான் நீராகாரத்தை மடக் மடக்கென்று குடித்து, ஒரு வாய்க்கு வெற்றிலைச் சருகு போட்டுக்கொண்டு, விபூதி மடலிலிருந்து திருநீறு அள்ளிப் பூசிய சுருக்குடன் செக்கு மேட்டை அண்டி, மாட்டுக்குத் தண்ணீர் காட்டி, தீவனம் வைத்துப் பூட்டிவிட்டு, எடுபிடிப் பையனைக்

காவல் வைத்து, பின்பு எண்ணெய் ஆட்ட வந்திருக்கும் எள் அல்லது நிலக்கடலையைச் செக்கில் போட்டு, கரை தள்ளிச் சேர்த்து, உலக்கையை 'வாகு' பார்த்து, 'வசம்' அமைத்து நிறுத்தி முடித்தாரென்றால், "டேலே, ஓட்டுடாலே பதனமா! ஊம்! அசந்து மறந்து தூங்கினீயோ, தண்டு மரக்கட்டைக்குள்ளார நீ அகப்பட்டுக்கிட்டு, அப்பாலே காளையோட கால் குளம்புக்குள்ளவும் நீ மிதிபட்டுப் போவே! ஆமா! அந்திமழை அழுதாலும் விடாதுங்கிறது கணக்கிலே, அப்புறம் நீ என்னதான் காவடி எடுத்தாலும், நோக்காட்டிலேருந்து நீ தப்பவே ஏலாதாக்கும்!" என்று வளமையான புத்திமதிப் படலத்தையும் சொல்லிக் கொடுத்துவிட்டு, அவரும் செக்கு மாடாகவே இயங்கி, செக்கு இழைத்த ராகத்தாளக்கட்டுடன் கூடிய லயசுத்தமான சங்கீதக் குழைவின் இழைகளுடன் ஒன்றி, இத்தகைய கால நிர்ணய நியதிக் கோலத்துக்குக் கொத்தடிமையாகிக் கிடக்கும் அவரைச் சுய உணர்வு பெறச் செய்யவல்ல புண்ணியம் இருள்தாய்க்கே கிடைத்து வந்தது. முசுமுசு என்று நாலாவது காணம் பிண்ணாக்கைச் சிறிய கடப்பாரை கொண்டு விலாக்குத்துக் குத்தி நிமிண்டி எடுத்து, அப்புறம் பந்தம் பிடித்து, மிச்சம் மீதி இருக்கும் எண்ணெயைக் கொட்டாங்கச்சியினால் வழித்து வழித்து எடுத்துக் கலயத்தின் ஊற்றி, கைப்பிடித் துணியைச் செக்கின் அடிக்குழியில் தோய்த்துப் பிழிந்து இரும்புப்படியில் இட்டு நிரப்பி, அதையும் கலயத்தில் சேர்த்து, கடைசியில் 'ஈசுவரா!' என்ற நாம உச்சரிப்புத்தொனியின் துணைவலியுடன் பெரிய குத்துக் கடப்பாரையை உலக்கையின் அடிவயிற்றில் முட்டுக்கொடுத்து உலக்கையை நீக்கி வீசிவிட்டு, பிண்ணாக்கைத் தோண்டிக் கூடையில் வீசி விட்டு, கடைசியில் உலக்கையைப் படுக்கை வசமாகக் கிழக்கு மேற்கில் வைத்து, அதன்மேல் தென்னங்கீற்றுச் சாம்பான் குடிசையை மூடி முடித்து விட்டுப் புறப்பட்டு

விட்டால் அன்றையப் பணியும் கடனும் முடிந்த கதை தான்.

வேப்பமரப் போத்துக்கு அடியில் நார்க் கட்டிலைத் தூக்கிப் போட்டுக்கொண்டு குந்தி வெற்றிலை குட்டானைப் பிரித்து ஒரு 'வாட்டி'க்கு வெற்றிலைச் சருகு போட்டுக் கொண்டதுந்தான் அண்ணாமலைக்கு நல்ல மூச்சு வரும். நிலவுக்கும் இருட்டுக்கும் ஊடே, இடதுகை விரல்களி னூடே, எச்சிலைப் பிழிந்து பிழிந்து துப்புவார். அரை வட்டக் குடுமியை உதறி எடுத்துப் பிசிர்தட்டி மீண்டும் முடிந்துகொண்ட கையுடன், இடுப்பில் செருகியிருக்கும் சுருக்குப் பையைத் துழாவி, அன்றைய வரும்படியை கணக்கிடுவார். 'சபாசு! ரெண்டு ரூபாவுக்கு ஒருபணம் குறைச்சல்! பரவாயில்லே! செவ்வாச் சந்தையிலே ஒரு கட்டு வைக்கக் கூளம் வாங்கணும்; கச்சப்பொடி,கருவாடு வாங்கவேணும்; பொடிசுக்குப் பொட்டுக்கடலை ஒரு மூணு காசுக்கு வாங்கியாகணும்; வள்ளியம்மைக்குச் சோள முறுக்கு வேணும். சரி, எண்ணிப் பாத்தாக்க, சுருக்குப் பைப் புழுதிதான் மிஞ்சும்!'

"ஒங்களைத்தானுங்களே!..."

அண்ணாமலைக்குக் குரலை இனம் காணவா தெரியாது? தெரியும், தெரியும்!

அழுத்தலாக, கன்னத்தில் ஏந்திய கையுடன் உட் கார்ந்திருப்பார்.

மறுபடியும் குரல் குடையும். "ம். வள்ளியம்மை வூட்டுக்காரங்களே!" என்றபடி வந்து நிற்பாள் வள்ளி யம்மை. அள்ளிச் செருகிய கொண்டை; அதில் ஓர் இணுக்கு மருக்கொழுந்து. நெற்றியில் குங்குமம். முகத் தில் கன்னியாக்குறிச்சி மஞ்சள் பூச்சு. கம்மல் சுழன்றாட, புல்லாக்குப் பூரித்துச் சிரிக்க, கடைக்கண் விலக்கி, இதழ

முதக் குறுமுறுவலை ஏந்தி நிற்பாள் ஏந்திழை, கன்னம் தாங்கிய கை, கள்ளம் நீங்கிய மனம் இரண்டும் ஒருருவாகக் கொண்டது போல. அண்ணாமலை எழுந்து, அவள் கன்னத்தை நெருடி மகிழ்ந்து, கையுடன் கை பிணைத்து, இதயத்துடன் இதயம் இணைத்து நடப்பார்.

அது அவர்கள் குடில். எட்டடிக் குச்சுவீடு. கஷ்டம் உணர்ந்து, காலம் கணித்து வாழ்வு நடத்தினார்கள். சிற்றப்பன் பெரியப்பன் வீட்டுச் செல்வங்கள் 'மகாமேரு'வாக அண்டைத் திடலில் கொட்டிக் கொழித்த விவகாரங்களைப் பற்றி அவர்கள் எண்ணுவதோ ஏங்குவதோ இல்லை. "அவங்க அவங்க பொசுப்பு!" என்பார் அவர்.

வெந்நீர் விளாவி வைப்பாள். அருகில் நிற்பது தெரிந்துங்கூட "ஏலே, அண்ணாமலை ஊட்டுக்காரியோ!" என்று சன்னக்குரலில் ஓர் அழுத்தம் பிடித்துக் கூப்பிட்டுச் சிரிப்பார். குளியல் முடியும். பூவையின் கரம் அவரது மேனி அனுப்புச் சலிப்பை நீக்கிவிடும். ஒரு வெட்டு வெட்டுவார் சாப்பாட்டை. 'கவுச்சி' என்றால் மனிதருக்கு மிகவும் விருப்பம். உண்டு முடிந்துவிட்டால், சிரிப்பும் கும்மாளமுந்தான்! அப்பால்......

எல்லாம் போன சோபகிருது வருஷ நடப்பு.

கதையா இது?

ஊஹூம்!

கனவல்லவே?

அல்ல; கனவல்ல!

'அணில் கொம்பில்; ஆமை கிணற்றில்' என்பார்கள். அதைப்போலத்தான் இப்பொழுது அண்ணாமலையின் கதையும். சதா பாயும் படுக்கையுந்தான். நொடிக்கு நூறு மூச்சு; நூறு மூச்சுக்கு முந்நூறு இருமல். சிணுங்

கல் இருமல். கோழிக்கோடுச் சீமைஓட்டு வீடு. மச்சு மனை. குச்சு, திசை திரும்பிய கதை. ஓடுகளின் 'காங்கை'யும் 'கிருது'ம் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை; ஆனாலும் விதியின் நமட்டுச் சிரிப்பு அவரை அழ வைத்ததே!

மனிதர் இப்படியா நாரும் தோலும் ஆவார்?

"ஏலே வள்ளியம்மை!"

கூப்பிட்ட குரல் கூடிப் பரவுமுன்பே, முன்றானை விரித்து வாழ்க்கைப்பட்டவள் இளமைச் சிரிப்பும் முதுமைக் கோலமும் தாங்கிவந்து அமர்ந்தாள். பட்டு மெத்தையில் கால்கள் உரசின.

"வரக்காபி கொஞ்சம் வச்சுத் தாங்கிறேன்!"

"ஆகட்டுமுங்க, அத்தான்!" என்று அவள் சொல்லி அடுப்படிக்குத் திரும்பி மீளும் நேரத்தில் வரக் காபி வந்து நிற்கும். சுக்கு மணம் கமழ.

ஒரு மடக்குக் குடிப்பார். மூச்சுப் போய் மூச்சு வரும்.

"இன்னிக்கு வெள்ளிக்கெளமை ஆச்சே; சாமிக்கு நம்ம ரெண்டுபேரு நட்சத்திரத்துக்கும் ஒரு அர்ச்சனை செஞ்சுக்கிட்டு வாயேன்!"

"ஆகட்டுமுங்க!" என்றாள் வள்ளியம்மை, அந்திச் சுடர்க்கதிர்களைத் தடவிக் கொடுத்த வண்ணம்.

நரைமுடிகளில் கதிரொளியின் மஞ்சள் கோலம், கோலம் பரப்பியது. அங்குல அளவுக்கு இருந்த பச்சைக் கல் மோதிரத்தை லாவகமாகத் திருப்பிப் பார்த்தபோது, அவருள் பெருமிதம் பூரித்துப் புடைத்தது. காலத்தின் ஏடுகளைப் புரட்டினாரோ? ஞாலத்தின் ஏடுகளைப் புரட்டினாரோ?

கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கிய விதரணை புரிந்த புள்ளி இந்த அண்ணுமலை. குடியிருப்பு வட்டா ரத்தில் நெடுகிலும் இப்படி ஒரு கருத்து.

"வள்ளி!"

"இருக்கேனே!"

"என் நட்சத்திரம் தெரியுமல்ல?"

"ஓ! பூசந்தானுங்களே!"

"ம்! உன்னது?"

"பூராடம்!"

"பலே பலே!" என்று செப்பி, வள்ளியின் கழுத் தோரத்தே விரல் பதித்து, 'கிசுகிசு' மூட்டினுர். சிரித்தாள் பார்க்க வேண்டுமே!

மிச்ச சொச்சம் மிகுந்திருந்த பத்துப் பற்களிலும் பதவிசான, பரபரப்பு முடங்கிய நகைப்பு இருந்தது. "போங்க நீங்க! புள்ளை இல்லாத வூட்டிலே என்னமோ கௌவன் துள்ளித் துள்ளிக் குதிச்சகதை கணக்குத்தான். போங்கங்கிறேன்!" என்று வள்ளியம்மை விடுத்த சொற் பெருக்கின் ஒலி அவரை ஏன் அப்படி முகம் சுண்ட வைத்தது?

"எல்லாம் எனையாளும் ஈசன் செயல்!"

நெஞ்சு நெக்குருகிய நிலையிலும் நினைவிலும் சொற் கள் வெடித்து ஒலி சிதறின. விழிகள் மூடின; இதழ்கள் இடைவெளி காட்டவில்லை; கைகளில் நடுக்கம். நெடு மூச்சில் துடிப்பு. நாடி ஒடுங்கியதுபோல ஒரு நைப் புணர்ச்சி வேறு.

"அத்தான்!"

சுடுநீர் மணிகள் தாம் அவள் கண்ணீரில் தரிசனம் காட்டின.

"இன்னிக்கு வெள்ளிக் கிளமையாச்சே!"

"அதான் தெரிஞ்ச சங்கதியாச்சே!"

"அது சரி; இன்னொரு தாக்கல், அதான், ஓங்க தம்பி ஆட்டுச் சேதி!"—விழுங்கினாள்; மிடறு இறக்கினாள். முகதலையைக் கொய்து அழகுபார்த்து,அழகு காட்டினாள். முகச்சுருக்கங்களின் சருக்கம் விரிந்தது.

"ஓ, அதுவா?"—திண்டை ஒரு நிலைப்படுத்திச் சாய்த்து வைத்துக்கொண்டார். சுவரை ஒட்டித் தலையணையை இழுத்து நகர்த்தியபடி, சாய்ந்து கொண்டார். கோடை இப்படியா ஈரக்கசிவை மேனியில் ஊறச் செய்யும்? சே! "ஆமா, தம்பி ஒன் இஷ்டப்படியே ஒப்புக் கிட்டானா? அவன் சம்சாரம் - அந்தப் புள்ளையும் மனசு இசைஞ்சுருச்சுதா? எல்லாமே ஈசன் செயல்தானுக்கும்!"

"ஆமாங்க. எல்லாரும் சம்மதிச்சாச்சு!"

மறுபடி, அண்ணாமலை இமைகளை மூடினார். கொண்டல்மணிவண்ணனின் உருவில் நின்ற இராமமூர்த்தியின் சேதுபந்தன தரிசனக் காட்சிகளும் சேதுஸ்நான முக்குளிப்பு நிகழ்வுகளும் சலனப்படங்களாயின. மனச் சலனமும் படம் காட்டிற்று. எத்தனை எத்தனை பிரார்த்தனைகள்! ஓர் அரசமரத்தை பாக்கி வைத்தாளா அவள்?

கன்றின் குரல் கனிந்து வந்தது. வள்ளியம்மை ஓடினாள். இரட்டை நாடிச் சரீரம் துயருற்றது. கொட்டடியில் கன்றைக் கட்டி, புல்தழைகளை உதறிப் போட்டுவிட்டுத் திரும்பினாள்.

"எங்கே அந்த மூக்கன் இன்னமா மேய்ச்சலை விட்டுத் திரும்பலே?" என்று வினவினார்.

"வார சமயந்தான்! அது சரி. நல்ல நாளு ஒண்ணு பார்க்க வேணும்னுங்க கொழுந்தன்காரக. சிதம்பர விடுதி

அய்யருசாமி தெவசம் சொல்லப் பறிஞ்சு வந்தாக்க, நெனெப்பூட்டி குறிச்சுக்கிடுங்க!''

''ஆகட்டும்!''

வள்ளியம்மை தேங்காயும் கையுமாகக் கோயிலுக்குப் புறப்பட்டாள்.

தெய்வத்தின் அறக்கருணையே குழந்தை உருக் கொண்ட பாவனை துலங்குகிற குழந்தை அவன். ஆழி மழைக் கண்ணனோ? இல்லை, அருள்மிகு கார்த்திகை மைந்தனோ? உதட்டுக் கரைதனில் மெல்லிளம் புன்னகை; இமைக் கரைதனில் ஆர்வத்துடிப்புக் காட்டும் துள்ளல். மெட்டு ஒலிக்க, கைக்கொலுசுகள் குலுங்க, கழுத்துச் சங்கிலி குலுங்கத் திகழ்ந்த அவன் இன்று எப்படி உருமாறிவிட்டான்! அரைக் கைச்சட்டை என்ன, அரைக்கால் சட்டை என்ன, கோணல்வகிடுக் கிராப்பு என்ன, அரிச்சுவடி படிக்கப் பள்ளிக்கூடம் செல்லப் போகிறானாம்! கேட்டீர்களா?

அண்ணாமலை நயனச் சிமிழ்களை மூடித் திறந்து அழகு பார்த்த வேளையில்தான், அழகு காட்டி ஓடின, மேற்படி சிந்தனை நயங்கள். தானும் பிறருமாக, தானும் தன் இல்லக் கிழத்தியுமாக ரசித்த சிறுவனைப் பற்றிய சிந்தனை இதழ்களின் நெடி அவரைக் கிறங்கச் செய்திருக்க வேண்டும்.

ஆலய மணி ஒலித்தது. கன்னத்தில் போட்டுக் கொண்டார்; 'சிவ சிவ!' என்று முனகினார். அவர் எழுந்து குந்தினார்.

ஏர்மாட்டை அடித்து நொறுக்கினான் பண்ணைக் காரன். 'பாவிப் பயமவன்!' உட்கார்ந்த இடத்திலிருந்தே ஆணையை ஏவினார்: ''ஏலே; அடிக்காதேடா! வாயத்த செம்மமுடாலே! போன சென்மத்லே செஞ்ச

பாவந்தான் இன்னும் சுத்துதேடா! நீ வேறே ஏதுக்குடா அதைப்போட்டு மொத்துற?''

நினைவுகளின் புலம்பலில் இறந்த காலம் எள்ளி நகையாடிக் குலுங்கிற்று. ஆடம்பரமான அழுத்தல் சிரிப்பு. விதி சிரித்திருக்குமோ?

''செந்தில்!''

அழைத்திட்ட வாய் மணத்தது; நினைத்த நெஞ்சு இனித்தது. செந்தில்குமரன் நிழலாடமாட்டானா?

செந்தில் இருக்கிறானே செந்தில், அவன்தான் அண்ணா மலையின் தம்பி மகன். தம்பிக்காரர் தங்கப்பன் கொடுத்து வைத்த பேர்வழி. ஆண்களில் மூன்றும் பெண்களில் நாலும் மொத்தம் ஏழு பிள்ளை குட்டிகள்.

முப்பதாயிர ரூபாய் கைரொக்கமாக வைத்திருந்தவர் அண்ணாமலை. ஆனாலும் அவருக்குத் துளிகூட மகிழ்ச்சியே இல்லை. 'எல்லாம் இருந்து என்ன? வள்ளி வயித்திலே ஒரு பூச்சி புழு உண்டாகலேயே!' என்று ஏங்கிக் காலத்தை ஓட்டியதுதான் கண்ட பலன். மற்றப்படி, பலன் எதை யும் காணவில்லை அவர்.

ஒரு நாள் திடுதிப்பென்று அவருக்கு 'நெஞ்சடைப்பு' வந்தது. நல்ல வேளை, பிழைத்தார்! ''ஒங்களுக்கோ வயசு தள்ளலை. சொத்து சுகத்தைக் கட்டி ஆள்றத்துக் கும் நாளைப் பின்னைக்கு ஒங்களுக்குக் கொள்ளி வச்சு வாய்க்கரிசி போடவும் ஒரு வாரிசு வேணுமா? யோசிச்சு, சொந்தத்திலேயே ஒரு சுவீகாரம் எடுத்துக்கிடுறதுதான் சிலாக்கியமுங்க. ஆட்டிலவும் கலந்துகிடுங்க!'' என்றார் கி. மு. சன்னம் சன்னமான பேச்சு, எடுப்பான பல்லவி யாகக் களைகட்டிவிட்டது.

சுவீகாரத்துக்கு உரிய, உகந்த புள்ளிக்காகச் சல்லடை போட்டார்கள் தம்பதி இருவரும். எடுத்த

எடுப்பிலேயே 'செந்தில்' பெயரை ஓதினாள் வீட்டுக்காரி. அண்ணன் குடும்பமும் தம்பி குடும்பமும் 'சொந்தம் விட்டு' ஒதுங்கியும் விலகியும் வாழ்ந்தாலும், செந்தில் மட்டும் வள்ளியம்மையிடம் ஒட்டிக்கொண்டான். ஒட்டிய பாசம் தழைத்தது. வள்ளியம்மைக்கு கண்ணுக்கு கண் ஆனான் செந்தில். "இறங்கின கை நாம்ப. ஆனாலும் அதுக்காக, மண்டைக் கொண்டு திரியாம, என்னமோ ஒங்க அண்ணன் சம்சாரம் நம்ம செந்தில் பய கிட்ட இம்மாந் தொலைவு ஒட்டுதலா இருக்கிறதே, ஒரு அதிசயக் கூத்துத்தான்! மேலவட்டை செல்லத்தாச்சி மகளை அவுக அண்ணன் பெண்சாதி கரிச்சுக் கொட்டின மாதிரி இங்கே ஒண்ணும் நடக்கவே நடக்காதுங்கிறதுவும் நம்ப மனசுக்கு எம்பிட்டோ சிவாவத்தான சேதி தானுங்க!" என்று கொண்டவனிடம் பரிந்துரைத்த வாசகங்களை வள்ளியம்மை அறியமாட்டாள்.

இரவு வேளைகள் தவிர, எஞ்சிய பொழுதெல்லாம் செந்தில் இந்தச் சிமை ஓட்டு வீட்டில்தான் அடைந்து கிடந்தான். "பெரிய ஆத்தா, பெரியாத்தா!" என்று ஓயாமல் அலட்டிக்கொண்டு, வள்ளியம்மையின் கொசுவத்தைத்தான் சுற்றுவான். வெற்றிலைப் பாக்கைக் கல்லுரலில் வைத்துப் பொடித்துக் கொண்டிருக்கையில் சிறுவனின் கைவிரல் அகப்பட்டு லேசாக ரத்தம் கட்டி நசுங்கியதைக் கண்டதும் அவள் பட்ட பாடு அல்பமா, சொல்பமா? 'பெருத வயிறு' அடைந்த இன்னல் கொஞ்சமா நஞ்சமா?

செந்தில் ஒரு முறை பனங்குளத்துக்கு விருந்துண்ணச் சென்றுவிட்டான். ஒரு வாரம் குழந்தையைக் காணாத ஏக்கம் விசுவரூபம் எடுத்தது; வள்ளியம்மையைப் பாயும் படுக்கையுமாக்கிவிட்டது. செந்திலுக்கு ஆள் அனுப்பும் அளவுக்குச் 'சீக்கு' மிஞ்சியது. குழந்தையின்

முகம் கண்டு, அவள் அகம் குளிர்ந்தது போலும். மறு பிறவி எடுத்தாள். அவள் கண்மலர்களைத் திறப்பதற்குள், செந்தில், "பெரியத்தா! பெரிய ஆத்தா!" என்று புரண்டு குதித்து ஓலமிட்டுக் கதறிய நிகழ்ச்சியை யார் தாம் மறப்பார்கள்?

செந்திலின்பேரில் அண்ணுமலைக்குக் கொள்ளைப் பாசந்தான். ஆனாலும் செந்திலைப்பற்றி அவருக்கு உள்ளூற ஒரு குறை உறுத்திக்கொண்டே இருந்தது. இதை மனைவியிடம் வாய்விட்டுச் சொல்லவும் முடியவில்லை.

'செந்தில் என்னோடே பெண்சாதிகிட்டப் பாசமாயிருக்கிறதாட்டம் எங்கிட்டவும் பிரியம் காட்டுவானு? என்னவோ எனக்கு நம்புறத்துக்கு வாய்க்கலே! ஒரு கடுத்தம் நானும் என் தம்பியும் - அதான் செந்திலோட தகப்பனும் – வாய்ப்பேச்சு முத்திக் காட்டமாப் பேசிக்கிட்டிருந்தோம். அப்போ நான் என் தம்பியைக் கோபமாத் திட்டினதைக் கண்டு, இந்தப் பொடிசு வந்து லபக்கின்னு ஒரு சுக்கான் கல்லை லாவி எடுத்து என்னோட நெத்திப் பொட்டிலே வீசிப்புட்டு ஓடியிட்டானே! அதை நான் எப்பிடி மறப்பேனும்? செந்திலாண்டவனே, என் தம்பி மகன் செந்தில் மனசு எங்கிட்டவும் ஒட்டிப்பழகிறதுக்கு அநுக்கிரகம் செய்யமாட்டீயா அப்பனே?' என்று நெஞ்சின் குகைக்குள் இந்த எண்ணங்களைச் சிறை வைத்து, அந்த மனக் குமுறலில் மனம் குமைந்து சீரழிந்து கொண்டிருந்த உண்மையின் நடப்பை அவரால் எங்ஙனம் துணைவியினிடம் சொல்லித் திரியக் கூடும்?

"என் புண்ணியம் இம்மட்டுத்தான்போலே!" என்று நொந்த நிலையில், மனையாட்டியின் இஷ்டப்படியே, செந்திலைச் சுவீகாரம் எடுப்பதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்தி, சுவீகாரச் சடங்கு நடைபெறுவதற்கான சுபதினத்தையும் நிர்ணயம் செய்த அண்ணுமலைக்கு இருந்

திருந்தாற்போல உடம்பு கொதித்துக் காய்ச்சல் வந்து விட்டது. இரவு வள்ளியம்மைக்குச் சிவராத்திரி. விருந்து உண்ட செந்தில் அயர்ந்த நித்திரை வசப்பட்டான்.

நிலம் தெளியும் நேரம். கோடைமழை சொல்லிக் கொண்டு வருவதில்லை அல்லவா? வள்ளியம்மை திடு மென்று குய்யோ முறையோ என்று கதறி அழுது, தன் பிராணநாதரின் மேனியில் தலைபதித்துக் கூக்குரலிட் டாள்.

அண்ணாமலை மூச்சுப் பேச்சின்றிச் சவம் போலக் கிடந்தார்.

வள்ளியம்மை, "ஐயையோ!" என்று ஓலமிட்டாள்.

ஓலம் கேட்டதும், செந்தில் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான்; கண்களைப் புறங் கையினால் தேய்த்துக் கொண்டு சுற்றிச் சூழ நோக்கினான். 'அரிக்கன் விளக்கு' ஒளி சூழலைப் படம் பிடித்தது. பெரிய தாயாரின் அழுகை யையும் விழிநீரையும் கண்டதும் அவனுக்கும் அழுகை முட்டியது. பெரியப்பனைப் பார்த்தான்; "பெரியப்பா! பெரியப்பா!" என்று கூப்பிட்டான்.

"பெரியப்பா செத்துப் போயிட்டாங்கடா கண்ணே!" என்று அழுதாள் அவள்.

"பெரியப்பா செத்துப் பூட்டாங்கனுக்க, இனிமே எங்கூடப் பேசமாட்டாங்களா, பெரியத்தா?"

"ஊஹூம்!..." செருமல் வெடித்தது.

"ஐயையோ! பெரியப்பாவே!" என்று பிஞ்சு மனம் வெடிக்கக் கத்திற்று. அருகில் இருந்த தூணில் தலையை மோதிக்கொண்டு கதறினான். நெற்றிப் பொட்டில் ரத்தம் கசிந்தது.

"பெரியப்பா தங்கமான அப்பாவாச்சே! நேத்து ரொட்டி தந்தாங்க. நெய்ச் சோறு ஊட்டினாங்களே!

நான்தான் ஒரு தரம் அவங்க நெத்தியிலே கல்லாலே அடிக்சுப்புட்டேன். பெரியப்பா! பெரியப்பா!'' என்று பெருங் குரலெடுத்து அழுத அவன் அண்ணுமலையின் நெற்றிப் பொட்டு வடுவை விரலால் தொட்டுத் தொட்டு மீண்டும் அழுகையைத் தொடர்ந்து, அந்தத் தூணில் தலையைத் திரும்பவும் பலமாக மோதிக்கொண்டான். வள்ளியம்மையின் கரங்கள் துடித்த துடிப்பை அவன் எங்கே அறிந்திருப்பான்? "தம்பி!'' என்று விம்மிஞள் அவள்.

"பெரியப்பா!"

பெரியப்பாவின் காலடியில் விழுந்து கத்தின செந்தில் மறுமுறையும் தூணை நாடி ஓடிய நேரத்தில் அவனைத் தேடி ஓடிவந்த கைகளைக் கண்டு தலைநிமிர்ந்தான்.

பெரியப்பா, "கண்ணே, இப்பத்தாண்டா என் மனசு குளிர்ந்தது. ஐயையோ! இவ்வளவு ரத்தமா? என்று எழுந்து செருமிஞர்; செந்திலை அணைத்துக்கொண்டு தேம்பிஞர். வள்ளியம்மையின் இதழ்க் கரையில் முறுவல் இருந்தது. செந்திலை மார்புறத் தழுவிஞர்; குருதியைத் துடைத்தார். வீக்கம் கண்ட இடத்தைத் தடவிஞர்.

"அப்படீன்னு நீங்க சாகலையா, பெரியப்பா?'' என்று விைவிஞன் சிறுவன். கண்ணீரைச் சட்டைத் தலைப்பிஞல் துடைத்துக்கொண்டான். அழகுக் கண்களில் ஆர்வம் இருந்தது.

பெரியப்பா சிரித்தபடி, "ஊஹூம், இல்லே! உன்னைச் சோதிக்கிறத்துக்காக நானும் உங்க பெரியாத்தாவும் நடிச்சோம்!'' என்று அமைதி கனிய மொழிந்தார்.

செந்திலின் சந்திர முகம் ஏன் இப்படிக் கறுத்துச் சிறுக்கிறது?

"என்னை ஏமாத்தறத்துக்காகவா நீங்க பொய்சொன்னீங்க பெரியப்பா? இனிமே நான் உங்ககிட்டே இருக்க

மாட்டேன். ஆமா!'' என்று சொல்லிக்கொண்டே வீட்டை விட்டு ஓடலானான்.

அண்ணாமலைக்குத் தலை சுற்றியது. எழுந்தார். நடக்கவும் தெம்பில்லை. மூச்சு இறைத்தது.

வள்ளியம்மைக்குச் சப்த நாடிகளும் ஒடுங்கின. ''தம்பி! கண்ணே!'' என்று அழைத்தவளாக, சிறுவனைப் பின்தொடர்ந்தாள்.

செந்தில் திரும்பினால்தானே?

வைகறை நிலவு மங்கியது. சுற்று மதிலின் கீழ்க்கரையில் கிணறு ஒன்று இருந்தது. அதை அண்டினாள். ''தம்பி, இப்ப நீ திரும்பப் போறியா? இல்லே, நான் இந்தக் கேணிக்குள்ளாற குதிச்சுச் சாகட்டுமா?'' என்று கேட்டாள்.

அவ்வளவுதான்!

செந்தில், ''பெரியாத்தா! நான் இந்தா வந்திடுறேன். நீங்க சாகாதீங்க, நீங்க செத்தா நானும் செத்துப்பிடுவேன்!'' என்று சத்தமிட்டுத் திரும்பினான்.

குழந்தைத் தெய்வமா அவன்?

''செந்தில், நீ எங்களை ஆளவந்த சாமியப்பா! கண்ணே! ராஜா!''

இரட்டைக் குரல்கள் மாறி மாறி - மாற்றி மாற்றி - ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன.

விடிந்தது!

5

ஆலமரத்துப் பைங்கிளி

நான் பேசுகிறேன் :

தீபாவளிக்கு ஊருக்குப் போய் வந்தேன். அந்தச் செய்தி இப்போது யார் கவனத்தையும் கவர்ந்தால், அதற்கு நான் பொறுப்பு அல்ல. ஆனால், நான் ஊர் சென்றிருந்த தருணத்திலே நடந்த அந்தச் சம்பவம் என்னை இழுக்கவில்லை; சிந்தையை ஆகர்ஷித்தது: நான் சொல்லப் போகும் இந்தக் கதை உங்களைத் திருப்திப் படுத்தினாலும், படுத்தாமற் போனாலும் அதற்கும் அடியேன் காரணம் அல்ல.

எனக்காக எழுதிக்கொண்ட கதை இது — அல்ல, நான் கண்டேன்; கண்ணீர் சொரிந்தேன். என்னையறியாமலே கண்ணீர்க் கறையில் உருவாகிவிட்ட நிகழ்ச்சிச் சித்திரம் இது.

என்னை நம்பாதீர்கள்; தயை உண்டு உங்களுக்கு. நான் ஜடம்! இதோ என்னை ஆட்டுவிக்கும் குரல்கள் சில கேட்கின்றன.

கிளியின் இதயம் :

ஆவி யுலகத்தில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?... ஐயோ, பாவம்!...இந்த எழுத்தாளரைச் சட்டை செய்யா

தீர்கள், ஐயா! பாம்பின் சட்டைக்கும் இவருடைய உடற் கூண்டுக்கும் நூலிழைகூட வித்தியாசம் கிடையாது!

ஆலமரத்துப் பைங்கிளி நான். ஆனால் உங்களுக்கு உண்மை என்னவென்று தெரியுமா? உங்களைப்போல எனக்குப் பொய் பேசிப் பழக்கம் கிடையாது!...உண்மை இதுதான். 'ஆலமரத்துப் பைங்கிளி' என்னும் பட்டப் பெயர் பொன்னிக்கு உரித்தானது. பொன்னன் அப் படித்தான் அவளைக் கூப்பிடுவான். இப்படிக் கூவி அழைப்பதைக் கேட்டு நான் கூட பலமுறை ஏமாந்திருக் கிறேன். என் மூக்குச் சிவப்பு, ரத்தச் சிவப்பாகிக் கன்றி விடும். எனக்கே புரியாத எங்கள் 'ரங்கா' மொழியில் நான் பேசிக்கொள்வேன். ஆனால் அந்தக் காதலர்கள் வாய் ஓயாமல் பேசித் தீர்த்த பேச்சுக்கள்—அவை தூவிய சம்ப வங்கள் எல்லாம் ஒன்று பாக்கியில்லாமல் என் மனசுக்கு அத்துபடி.

"ஓ, மச்சான்!" என்பாள்—அன்பு காட்ட உரிமை பூண்டவள்.

"ஆ, பொன்னி!" என்பான்—நேசம் நிறைந்த மனம் கொண்டவன்.

அவள் சிரிப்பு மாதிரி நானும் சிரிக்கவேண்டுமாம்!— என்னவள் சொல்லுகிறாள். ஆனால், இந்தப் பொன்னி எவ்வளவு அந்தமாகச் சந்தம் கூட்டி இளநகை புரிகிறாள் என்கிறீர்கள்!...பார்த்துக்கொண்டே யிருக்கலாம்; கேட் டுக்கொண்டே யிருக்கவேண்டும்.

இதே ஆலமரத்து நிழலில்தான் அவர்களுடைய காதல் பிறந்தது; வளர்ந்தது.

ஆலமரப் பைங்கிளியே, அழகுள்ள தாழம்பூவே!
காலமெல்லாம் நீ சிரிப்பாய்; காத்திருப்பேன்
உனக்காக!

ஆலமுண்ட ஐயன் அவன், அன்பு நிறை
ஜோதியவன்!
பாலமொன்று கட்டிடுவான், காதலராம் நமக்காக!

இந்தப் பாட்டுக்கூட எனக்கு மனப்பாடம் ஆகிவிட்டது. இது என் துணைக்கும் பொருந்துவதாதலால், பாட்டுப் புனையும் ஒரு வேலை எனக்கு மிச்சம். என் நன்றி இவ்வூர் ஆசிரியருக்கு உண்டு.

ஆஹா, இந்தக் காதலர்கள் உண்மையிலேயே பாக்கியம் செய்தவர்கள்தாம்! இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் ஆயிரத்தில் ஒரு ஜோடிக்குக் கூடக் கிடைக்காதே...!

என்ன சத்தம் அது? ஓ, நீயா? ம்... பேசம்மா, பேசு!

செல்லத் தேவன் ஊருணி :

ஆலமரத்துப் பைங்கிளி சொல்வது படிக்குப்பாதி! வாஸ்தவம்தான். ஆனாலும், அது உங்கள் முன் வைத்த நிகழ்ச்சிகள் அதிகம் இல்லை. ஆனால், என் மடியிலே பொன்னனும் பொன்னியும் வளர்ந்த விதமே அலாதி. அவர்களுடைய காதலுக்கு அன்பு என்ற பெயர் சூட்டக் கற்றுக்கொடுத்தவளே நான்தான். நான் பெண் அல்லவா? பூமிதேவிக்குச் சொந்தக்காரியாயிற்றே! பொன்னியின் மனம் எனக்குப் புரியாதா?

பொன்னன்—பொன்னி யார்? சொல்ல வேண்டாமா?

சோறு படைத்த சோழவளநாட்டுக் காவிரியோடு கலந்து உறவாட எனக்கு வாய்ப்பு ஏற்படாவிட்டாலும், அதன் எல்லைக்குள்ளாவது தலைசாய்த்து 'பூந்து' படுக்க முடிகிறதே, அந்தமட்டும் நான் பாக்யவதி. என் அரவணைப்பிலே நித்தம் நித்தம் ஆடிப்பாடித் தொட்டு

மகிழ்ந்து விளையாடிய இந்த இணையின் இன்பம் எனக்கு அளவுகடந்த ஆனந்தம் நல்கும்.

பூவைமாநகர் என்ற பெயர்தான் உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டுமே? ஊர் பேர் தெரியாமல் இருந்த ஊர், ஊர்பேர் தெரிந்த ஊராகப் பழகிப்போய்விட்டதே! அந்த ஊரிலே பிறந்தவர்கள்தாம் பொன்னனும் பொன்னியும்.

ஆணிப் பொன் நிறம் அவள்; அவனும் கூடத்தான். ரதியும் மன்மதனும் அவர்கள் முன் தோன்றியது கிடையாது. ஆனாலும், நாலுபேர் அவர்களைப் பார்க்கும் போது சொல்லிக்கொள்வார்கள், "பொன்னியும் பொன்னனும் போலத்தான் அந்த ரதியும் மன்மதனும் இருப்பார்கள் போலிருக்கிறது," என்று. அளவெடுத்துச் செதுக்கிய ஆண்—பெண் சிலைகளையும் மிஞ்சிவிடும் அழகு கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட காதலர்களை எனக்குக் கண்டால் கொள்ளை மகிழ்ச்சி ஏற்படும். 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய், இறைவா?' என்று எனக்கு நானே கேட்டுக்கொள்வேன். என் இதயம், அல்லது என் மனத்திலுள்ள பொருள் அவர்களுக்கும் புரியுமோ, என்னவோ? உடனே 'களுச்'சென்று சிரிப்பார்கள். என் சலசலப்பை மறந்து நோக்குவேன். செந்தாமரை மலரை நாடி ரீங்காரப் பண் பாடிவரும் வண்டின் தரிசனம்தான் எனக்குக் கிட்டும்.

உதயத்தின் தங்கரேக்கு நிறம் அவர்கள் மேனிகளில் பல்லாங்குழி விளையாடும். நிலவின் கீற்றுக்களின் இடைவெளியே இடைச் செருகல் கவி மாதிரி பால் வெள்ளம் பாய்ந்தோடும். அந்திசந்தி எப்போதும் அவர்கள் என்னைக் கண்டார்கள்: எனக்கு எதுவுமே தெரியாது என்று நினைத்திருப்பார்கள், பாவம்!

“மச்சான்!”

“என்ன...பொன்னி!”

“வந்து...வந்து!”

அவள் நாணிக் கோணிவிடுவாள். அவன் அவள் பூங் கரம் பற்றி நிற்பான். அவளது போதையை, அவனது போதை அறியாமல் இருக்க முடியுமா?

சாதாரணமாகக் கதைகளிலே இம்மாதிரி உள்ளம் ஒருமித்த காதலர்களுக்கு ஒரு எதிரி மச்சானே, அல்லது அவர்களது கலியாணத்தை விரும்பாத அப்பனே அல்லது, பொருந்தாத ஜாதகக் குறிப்போ எழுதப்பட்டிருக்கும். ஆனால், இவர்களுக்குக் குறுக்கே யாரும் இல்லை. ஆண்டவன் கூட அனுசரணைப் புரிந்தான்.

ஆனால்...!

இந்த ஆனாலில்தான் பாக்கிக் கதையே அடங்கிக் கிடக்கிறது. அதை இப்போது நினைத்தாலும் எனக்கு அழுகை அழுகையாக வருகின்றது!

ஆலயம் சிந்திக்கின்றது:

புனிதம் மண்டிய என் உள்ளத்துக்குத் தெரியாமல் உலகத்தில் எந்த ஒரு சிறு சம்பவமும் நடக்க முடியாது. அந்தச் செல்லத்தேவன் ஊருணியின் கண்கலக்கம் எனக்குப் புலனாகாமலா போய்விடும்!

ஆம்; பொன்னி—பொன்னன் காதலர்கள் எத்தனை நாட்களுக்குத்தான் காத்திருப்பார்கள்...? கட்டு திட்டங்கள் இல்லை; பருவமும் வயசும், நிலவும் தென்றலும் அவர்களைச் சோதித்தன. ஆனால், அவர்கள் இருவரும் உயிர்விட்டு உயிர் மாற்றிக்கொண்டு அமைதியான ஆரவாரத்துடன் நிலவி வந்தார்கள். என் சன்னதியையும் அவர்கள் மறந்துவிடவில்லை.

“இந்த ஆனந்த நடராசருக்குப் பொதுவா நான் உனக்குத்தான்!...நீ எனக்குத்தான்!” என்று ‘கையடித்துக்’ கொடுத்தான் இளைஞன்.

அவள் மெய்யம் மறந்து போனாள். விம்மினாள்; ‘ஆனந்தக்கண்ணீர்’ என்றாள்.

“என்ன பொன்னி?”

“என்னமோ, பயமாயிருக்குது...!”

“அப்பிடியா?”

“ஆமா!”

“ஆத்தாடி!...சரி, சரி!...வா, போகலாம்!...இன்னிக்கே உன் கழுத்திலே தாலி கட்டிப்பிடறேன். நல்ல நாள்தான்!” என்று சொல்லி ‘பர பர’ வென்று இழுத்துக்கொண்டு ஓடினான். மங்கல நாண் பூட்டினான். ஒரே மூச்சு!

“அத்தான்,நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்? ஐயோ, நீங்கள் எனக்கல்லவா சொந்தம்?...” என்ற ஒரு புதிய பெண்குரல் பொன்னனைச் சாடியது.

“ஓ...பொன்னி! நீ இங்கேயா இருக்கே...அட கடவுளே, நீ என் சொத்தாச்சுதே! வா!” என்ற நூதனமான ஆண்குரல் எதிரொலி பரப்பிற்று.

ஆவிகள் இரண்டும் பிறகு சிரிக்கத் தொடங்கி விட்டன.

பேசாத தெய்வம் பேசுகிறது:

புனிதம் குழப்பிக் கிடக்கும் என் உள்ளத்தின் உள்ளம் குழப்பம் காட்டி விட்டதே!......பேசும் என் வாயைக் கூட அடைத்து விட்டதே!...எத்துணை பயங்கரமான சிரிப்பு அது!...

அந்தச் சிரிப்பின் அலைகள் பயங்கரமாக ஆர்ப்பரித்தன; சிரிப்பில் அழுகை குரல் கொடுத்தது; விரக்தியின் வேதனை பரவியது; வெந்த நெஞ்சங்களின் தாபம் படர்ந்தது.

சிரிப்பு அழுகையாக மாறியது; அழுகை சிரிப்பாக மாறியது.

அழுகையும் சிரிப்பும் கலந்தது வாழ்க்கை!

ஆவிகள் இரண்டும் மறுபடி சிரிக்கத் தொடங்கி விட்டன; ஆவிகளின் நிழல் வடிவிலே நின்ற பூவிழியும் புவனநாதனும் திரும்பத் திரும்பச் சிரிப்பைக் கக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

முப்புரம் எரித்த சடாமுனியின் சிரிப்பை இவர்கள் கண்டதில்லையோ? கேட்டதில்லையோ?...

இவர்கள்—ஆம்; பொன்னனும் பொன்னியும் மெய் விதிர்த்துப் போயினர்; அவர்களது உடல் முழுவதிலும் வியர்வைத் துளிகள் பெய்திருந்தன—ஊசி குத்த இடம் வைக்காமல். அச்சம் ராஜாங்கம் நடத்திற்று-அராஜக நீதியின் விளைவு போன்று. தாம் நிற்பது சாந்தி பூமியா என்ற சந்தேகம் முளைத்தெழுந்தது. தாங்கள் மண்ணில் முளைத்து விட்டமாதிரி புதியதொரு அனுபவம் கிளர்ச்சி புரிந்தது. காதலையும் கனவையும் ஓரே மூச்சாக—ஓரே உயிராகப் பிணைத்து இணைத்த மங்கல நாண் பொன்னியையும் பொன்னனையும் கண்டு கண்ணீர் சொரிந்தது.

அவள் நிலை கலங்கினாள்: "ஐயோ, அத்தான்!..."

அவன் விம்மிப் பொருமினான்: "ஆ! பொன்னி!"

பைங்கிளி:

ஆவியுலகத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டென்பதை நான் அறிந்துகொண்டேன்.

பேசாத தெய்வத்திற்குப் பேச முடிந்தது; ஆனால் பேசும் எனக்குப் பேச முடியவில்லை. ஆத்திரமும் அழுகையும் என் சிவப்பு உதடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்து விட்டன. குறளிமோடி கிறுக்கி விட்டதா, என்ன?

பொன்னனும் பொன்னியும் கனவுகளைத் தாங்கிக் கொண்டு காதலர்கள் என்ற உறவை இன்னும் பலமாக்கத் தம்பதிமாயினர். ஆனால், அவர்களுக்கு இவ்வளவு சீக்கிரத்திலேயே சோதனை விளையுமென்று நான் எதிர்பார்க்க வில்லை. நான் என்ன, சற்று முன் குரல் கொடுத்த அந்தத் தெய்வம் கூட நினைக்கவில்லை போலிருக்கிறது!

பொன்னி என் பேரில் பரிவு காட்டினாள். என் துணைக்குப் பொன்னன் என்றால் நிரம்பப் பிடித்தம். இந்த இணையின் துயரம் கண்டு எங்கள் இதயங்கள் வெடித்து விட்டன.

மறுபடியும் அழுகைச் சத்தம் கேட்டது. பரிதாபம்! புதுமணக் காதலர்கள் பரிதபித்துக்கொண்டிருந்தனர். ஈருடலை ஒருயிராக்கிக் கொண்டவர்கள் ஓருயிர் இரண்டாக வெட்டப்பட்ட மாதிரி துடிதுடித்தனர். பொன்னனும் பொன்னியும் ஒருவரையொருவர் இறுகத் தழுவிய வண்ணம் அலறினர். அவர்களது ஓலத்தினை மிஞ்சிவிட்டது, இடையீடு விட்டு எதிரொலித்த நையாண்டிச் சிரிப்பு.

கண்ணோட்டத்தை ஒரு வழிப்படுத்தக் கண்ணீரை விலக்கினேன் நான். என் இறகுகள் பட படத்தன; உயிர்க்கூடு தத்தளித்தது.

"ஆசை அத்தான்! துருப்புச் சீட்டுக்கள் இடம் மாறி விழுந்திருக்கின்றன. நான்தான் உங்களை அடைய வேண்டிய ஆடுதன் ராணி!...ஓடி வாருங்கள், தேடி வந்தவளிடம்!...ம்...சீக்கிரம் அவளை விட்டு விலகி வாருங்கள். என் குரலுடன் சேர்ந்து கத்தும் அந்த ஆண் குரல் அவளு

டைய குரல் வளையைக் கௌவிப் பிடிக்க எத்தனிக்கிறது.. அதற்குள் ஓட்டமாக என்னிடம் வந்து விடுங்கள். அவனும் அவளும்தான் ஜோடிக்குப் பொருத்தம். நாகரி கத்தின் உச்சாணிக் கிளையில் இருந்த நீங்கள் எப்படி மாறி விட்டீர்கள்?..வாருங்கள், நாம் உம்மை மறுபடியும் அழகு இளைஞனாக மாற்றுகிறேன்......என் அந்தமும் அன்பும் உங்களைக் காப்பாற்றும்! நீங்கள் வரமாட்டீர்களா? அத்தான் உங்களுக்குச் சிரமம் ஏன்?...இதோ, நானே உங்களை அண்டி அழைத்துக் கொள்ளுகிறேன்!... அத்தான்......! இன்றுதான் என் கனவு பலிக்கப் போகிறது!''

ஏன் இந்தச் சத்தம்?

ஊழித்தாண்டவம் தொடங்கிவிட்டது போலும்?

நான் இந்தக் கண்ணராவிக் காட்சியைக் காண என்ன பாவம் செய்திருக்க வேண்டும்!

பொன்னன் — பொன்னியின் வெறும்கூடுகள்தாம் தரையில் கிடக்கின்றன. உயிர்கள் இரண்டும் வெவ்வேறு திசை நோக்கிப் புறப்பட்டுவிட்டன.

வந்த ஆவிகள் இரண்டும் வெவ்வேறு முனையிலிருந்து சிரித்தன!

வானவீதியில் குரல்:

மனிதன் உண்டாக்கிய செயற்கைச் சந்திரனைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்க்க மாட்டீர்கள்; மேலை நாட்டு விஞ்ஞானியின் சிந்தனைக்குப் புகழ் மாலை புனைந்து நிம்மதி யுடன் வீற்றிருக்கும் உங்களுக்கு ஒற்றைத் தனி விண் மீனான என்னுடைய குரல் கேட்குமோ, என்னவோ?

அதோ, பொன்னன் சிலையென மலைத்து நிற்கிறுன். அவனுடைய உடம்போடு உரசியவண்ணம் அவள் நிற்கிறுள். காற்றைச் சாடி வந்த களைப்பு, பூலோகத்தைக் கடந்து வந்த அயர்வு அவ்விரு ஆவிகளின் முகத் திரையில் நிழலாடுகின்றன.

பொன்னன் இளமுறுவலை உதட்டுக் கரையில் உலவ விட்டவாறு நின்றுன். அவனுக்கு எப்படி இத்துணை ஆனந்தமும் அமைதியும் ஏற்பட்டன?......

"அத்தான்!"

"பூவிழி!"

"அத்தான், உங்களைக் காணுமல் நான் எவ்வளவு சஞ்சலப்பட்டுப் போனேன், தெரியுமா?...நான் உங்களைக் காதலித்தேன். ஆனுல், விதி நம் இரண்டு பேரையும் ஒன்றுகூட வைக்கவில்லை. ஆகவே, நான் மரித்தேன். உங்களைத் தேடித் தேடி அலைந்தேன். கடைசியில் ஒரு நாள் உங்களைச் சந்தித்தேன்...!"

"பூவிழி, களிப்பு வேளையில் கண்ணீருக்கு அலுவல் வைக்காதே. நாம் இப்போது எங்கு இருக்கிறேம்?..."

"சொர்க்கத்தில்!"

"பூலோக சொர்க்கத்திலா?"

"இல்லை, இரண்டாவது சொர்க்கத்தில்!..."

"அப்படியென்றுல்!..."

"நான் நிர்மாணித்திருக்கின்ற இந்த இரண்டாவது சொர்க்கத்துக்கு நான் தான் ராணி; நீங்கள் தான் ராஜா!..."

"ஓஹோ!"

"ஆமாம்...!"

"அத்தான், என்னை மறந்து விட்டீர்களா?"

"எப்படி மறப்பேன்?"

"பின், ஏன் என்னைத் தேடி வரவில்லை?"

"நான் எங்கு வந்து உங்களைக் காண்பது?"

"நான் உங்களைக் கண்டு கொண்டேனே?"

"வாஸ்தவந்தான்!"

"ஒன்று சொல்கிறேன்..."

"சொல், பூவிழி!"

"உங்களுக்குப் பூலோகத்தின் நினைவு நெஞ்சில் எட்டிப் பார்க்கிறதா?"

"இ...இல்...இல்லை!"

"தடுமாறுகிறீர்களே!"

"நான் அல்ல; என் உதடுகள்!"

"ஏன்?"

"காற்றில் அழுத்தமும் சீதளத்தின் தண்மையும் உதடுகளை ஆட்டுவிக்கின்றன."

அவளுடைய மென்னகைக்கு அவசரச் சிரிப்பு பின்னணி அமைத்தது.

"அத்தான், பல வருஷமாக நான் உயிரற்ற உடலாக உலவி வந்தேன்; இன்றைக்குத் தான் இந்த உடலில் உயிர் ஒட்டியிருக்கிறது. என்னுடைய முதற் காதல் பலித்த புனித நாள் இது!"

"ஒரு திருத்தம் அன்பே!"

"என்ன?"

"அச்சம் தவிர். 'என்னுடைய' என்று சொல்லி சுய நலக்காரியாக ஆகிவிடாதே. 'நம்முடைய' என்று சொல் கண்ணே!"

"ஆகட்டும், அத்தான். நம் காதலைத் தோற்கடித்த விதியின் வஞ்சகச் செயலினால் நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தோம். நம் இருவர் உடல்களும் எந்தச் சுடுகாட்டிற்குக் காணிக்கையானதோ?" இல்லை, ஓடிச்சென்றகக் காட்டாற்றின் இதயத்தில்தான் ஜீரணம் ஆனதோ; தெரியாது."

"குப்பையைக் கிளறுதே!"

"வினாடிப் பேச்சுக்கு பொறுமை காட்டவில்லை உங்கள் மனம். ஆனால் நித்தம் நித்தம் நான் இதே குப்பையைக் கிளறிக் கிளறி எத்துணை துன்பம் அனுபவித்திருப்பேன் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களா? ..."

"பூவிழி"

"கொஞ்சம் உன் பேச்சை நிறுத்து. என்னைக் கொஞ்சம் பார், அத்தை மகளே!"

"ஓகோ! புதுஉள்ளம் கொண்டது எனக்கு அதிசயமான செய்தி; நீங்கள் புது எழில்கொண்டு விளங்குவது உங்களுக்கு வினோதமான தகவல். சரி, புது உலகம் அழைக்கிறது, போவோம் வாருங்கள் அத்தான்!"

பொன்னன் அவளுடன் தொடர்ந்தான். புதுமையின் மணம் பரவியிருந்த பகுதிகளிலெல்லாம் இருவரும் ஜோடியென மிதந்தார்கள்; எழில் மண்டித் திகழ்ந்த பாதைகள் அத்தனையிலும் அவர்களது தொட்ராத நிழல் பதிந்து புதைந்தது.

"அத்தான்!" அவள் அவனை நோக்கினுள். இளமை கொழித்த கன்னியின் பருவம் போதை கொண்டு திகழ்ந்தது.

"அத்தான்!"

"பூவிழி!" அவனுடைய காமநோக்கு அவளுடைய தூய அழகில் ஊர வேலை பார்த்தது.

யாரோ துஷ்யந்த மகராஜா கந்தர்வ மணம் புரிந்த சகுந்தலையை முனி சாபத்தால் மறந்தாராமே உண்மையா?

அப்பொழுது அவள் அவனது கரங்களைப் பற்றினுள். அவன் மேகத் தட்டொன்றில் சாய்ந்தான். அவளும் சாய்ந்தாள். நிலவுக் குழந்தை கண்களைப் பொத்திக் கொண்ட நேரத்தில் எரிமலை வெடித்தது.

"ஐயோ, அத்தான்!"

ஹற ஹற ஹறா!

இளந்தென்றல்:

"அத்தான்...அத்தான் !"

பொன்னியின் அந்தத் துயரக் குரல் பொன்னனுக்கு எப்படிக் கேட்கும்?—பாவம், இந்தக் கன்னிப்புறுவைத்தான் புவனநாதனின் இதயச் சிறை கம்பிகளைக் காட்டி எண்ணிக்கையைக் கணக்கெடுக்கச் சொல்லுகிறதே!...

பூந்தென்றல் நான்; என் நெஞ்சம் சூறுவளியாகச் சுழல்கிறது. நான் துயருகிறேன்; வேறென்ன செய்வேன்?...கூடுவிட்டுக் கூடு பாயவாவது தெரிந்திருந்தால், பொன்னிக்கு விடுதலை அளித்திருக்கமாட்டேனு?...

"மாமன் மகளே!"

"யார் நீங்கள்?"

"உன் அத்தான்!"

"நான்!"

“நீ என் சொத்து!”

“உங்கள் கண்ணேட்டத்தில் புதிய சொத்துரிமைச் சாசனம் எழுதப்பட்டிருக்கிறதா? நீங்கள் வேற்று மனிதர்!...நான் வேருெருத்தரின் நிதி!”

“பைத்தியக்காரப் பெண் நீ!”

“இதே மொழிக்கு ‘ஆண்பால்’ தந்து நீங்களே சொல் லிக்கொள்ளுங்கள், ஐயா!”

“ஐயாவா?”

“ஆம்!”

“நான் உன் ஐயனல்லவா?”

“என் ஐயனை எங்கோ மறைத்துவிட்டீர்!”

“குற்றம் செய்தவன் நான் அல்ல; வேறு யாரோ ஒருத்தி!”

“பார்க்கிறேன் அவளை!”

“அவளை நீ பார்க்க முடியாது!”

“ஏன் முடியாது? என் தாலி எனக்கு அவளைக் காட்டும்!”

“அப்படியா? உன் நினைவு மாறவில்லையா? பூவுலக ஞாபகம் இன்னும் உன்னைப் பிரிந்து ஓடவில்லையா?”

“ஊஹூம்!”

“அதிசயமாக இருக்கிறதே!”

“இந்த மாங்கல்யத்தின் சிறப்பும் அதுவேதான்!”

“முந்தைப் பிறவியில் நாம் இருவரும் முறைமை கொண்டு முறையாகக் காதலித்தோம்; நாம் இருவரும் கலியாணம் செய்துகொள்ள இருந்தோம். ஆனால், காலன் வழிப்பட்டு விட்டோம்.”

"பழைய ராமாயணம் இது!"

"நம் காதல்...?"

"நம் முன் அதுவும் இறந்துபட்டது!"

"அப்படியென்றால்...!"

"உன் வாயிலிருந்து இந்த மாதிரி முடிவை எதிர்ப் பார்க்கத்தானா இவ்வளவு காலமாக நான் ஆவியாக அலைந்து திரிந்தேன்!"

"நான் என் அத்தானுக்கு உரியவள். என்னை அவரிடம் அனுப்பிவிடுங்கள்!..."

"பொன்னி!..."

"ம்...நெருங்காதீர்கள்!"

"பொன்னி...!"

"என் தாலி உம்மை சுட்டெரித்துவிடும்!"

"என்னைப் பற்றி நான் அக்கறை கொள்ளவேண்டாமா? இதோ, தமிழ்ப் பண்புக் கோட்டைக் கிழித்திக் காட்டுகிறேன். இதை தாண்டினால், உம் ஆவி நரகலோகத்துக்குச் சென்றுவிடும்; நினைவுறுத்துங்கள்!"

"பொன்னி!"

"ஐயா, புவனநாதரே!"

"அத்தான் என்றாவது கூப்பிடு!"

"நீர் அதற்கு உரிமையற்றவர்!"

"பொன்னி!"

"ம்...விலகுங்கள்!"

"முடியாது!"

"முடியாதா?"

"ம்!"

"இதோ பாரும்!"

"ஆ...ஐயோ!...தீ பரவி விட்டதே!...ஐயோ!... பொன்னி!"

"ஐயா, ஓடுங்கள் இனி தீயைக் கட்டுப்படுத்திவிடுகிறேன்!..."

"வேண்டாம்...தீ வளரட்டும்; பரவட்டும் தீ!...என் காதலுடன் என் ஆசையும் தீக்கிரையாகட்டும்!...இனி நான் மறுபிறவி எடுக்கவே வேண்டாம்!...என்னை மன்னித்துவிடு!"

கடவுளே!

ரதி—மன்மதன் காரியாலயம் :

"ஹல்லோ: நான்தான்...டெலிபோன் பேசுகிறது. உங்கள் அன்பு பிராட்டியார் திருமதி ரதி தேவியார் அவர்கள் உங்களிடம் முக்கியமான இச்செய்தியைத் தெரிவிக்கச் சொன்னார்கள்; நீங்கள் உங்கள் நாயகியுடன் போட்டி நடத்தினீர்களாம்: பொன்னியின் கற்பின் திறன்தான் கடைசியில் வென்றுவிட்டதாம்...பொன்னனின் சபல சித்தம் நல்ல பாடம் கற்றுக்கொண்டதாம்...கதையின் கதை முழுவதையும் நீங்கள் அறிவீர்களானாலும், அவர்கள் வாயால் தன் வெற்றியைச் சொல்லவேண்டுமென்று காத்திருக்கிறார்களாம்! இன்றென்று; பொன்னனும் பொன்னியும் பூலோகத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள்!... வணக்கம்...!"

6

பால் சுரந்த சக்தி

முதல் பிரம்மா பெருமூச்செறிந்தார்.

முதற் பூ மடலவிழ்ந்தது.

முதல் குரல் புறப்பட்டது.

குழந்தை அழுதது; அழுதது; அப்படி அழுதது.

அபாயங்களைத் தன்னுள் அடக்கிக் கிடந்த காடு. கூப்பிடு தொலைவில் ஒரு காட்டாறு. கருக்கல் பொழுது.

புல் தரை; பிறந்த மேனியாய்க் கிடந்தது பச்சை மண். பச்சை ரத்தம் மேனியை வெட்டிப் பாய்ந்தோடத் துடித்துக் கொண்டிருந்தது. குழந்தையின் உடல் துடி துடித்தது. நஞ்சுக் கொடி துவண்டு கிடந்தது. ரத்தத் துளிகள் பல கோடுகளில், பல கோணங்களில் சிந்திக் கிடந்தன. பன்னீர்த் துளிகள் அந்தக் குருதிப் புனலில் இரண்டறக் கலந்தன.

புள்ளி மான்கள் ஓடிவந்தன. வண்ணப் பறவைகள் நாடி வந்தன. வாயில்லாப் பிராணிகள் வாய்விட்டுப் புலம்பின.

அந்தக் குழவியின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. குழந்தைத் தெய்வம் அழுதது; அழுது கொண்டேயிருந்தது.

'மன்றுளே மாறியாடு மறைச் சிலம்படிகள்' நடுங்கின; 'வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணருள்ளந் தோறுஞ் சென்றுளே அமுதமூற்றுந் திருவருள்' திகைத்தது; சிவன் சிந்தித்தார்.

'கவுணியர்க்குப் பால் சுரந்த சக்தி' தடுமாறினாள்; 'பங்கயற்கணரிய பரம் பரனுருவே தனக்குரிய படிவமாகி, எண்ணிறந்த சரா சரங்களீனின்றுந் தாழாக் கொங்கயற் கண் மலர்க் கூந்தற் குமரி பாண்டியன் மகள்' செயலிழந்தாள். சிவசக்தி சிந்தித்தாள்.

"தேவி, பூலோகம் வர வர உருப்படாமல் போய்க் கொண்டிருக்கிறது. பார்த்தாயா, அந்தப் பச்சை மண்ணை? கேட்டாயா, அதன் தீனக்குரலை? 'குவா, குவா' என்று கதறி அழும் அதன் வேதனையிலே, 'தெய்வமே, தெய்வமே!' என்ற எதிரொலி கேட்கிறதே? பாவம்!...படைப்பு புதிர் என்று சொல்லுகிறார்கள் மண்ணிலே. ஆனால், அவர்களே படைப்பைப் புதிராக்கி, அத்துடன் வாழ்க்கையையும் புதிராக்கிக் கொண்டு விடுகிறார்கள்; அது மட்டுமா? நீயும் நானும்கூடத்தான் அந்தப் புதிர்ப்பிணைப்பில் இணைக்கப்பட்டுப் பேசப்படுகின்றோம். விந்தைமிகு மக்கள்—மக்களா? மாக்கள்!"

பிறை சூடியின் குரலில் எரிமலை கனன்றது.

"அன்பரே, உங்கள் வாய்மொழி முற்றும் உண்மை. கடந்த பத்து நாழிப் பொழுதாக நான் உறக்கம் கொள்ளவில்லை. முதற் குரல் எதிரொலித்தது— திடுக்கிட்டு விழித்தேன். சிசுவின் வினைப் பயன் அப்படியோ? பாவம், பிறந்த குழந்தை பிறந்த மண்ணில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அதோ, பொழுது புலர்ந்து விட்டது. காட்டு வழி நடப்பவர்கள் ஓடோடி வருகிறார்கள்; குழந்தையைப் பார்க்கிறார்களே! ஆ, என்ன கொடுமை? ஐயோ, அவர்

கள் எல்லோரும் போய் விட்டார்களே, மதலையை மறந்து...! ஒரு சொட்டுக் கண்ணீருக்குக் கூடப் பஞ்ச மாகி விட்டதே? சே, பாழ் உலகம்! இதயமிழந்த பாவிகள்!''

இமயவல்லியின் இமைபாவா விழிகளிலே கோபம் கொந்தளித்தது.

''உமையவளே! சினம் தவிர். பூலோகம் விசித்திர மானது—அது நம் இருவருக்கும் புரியாததல்லவே? குழந் தையைக் கண்டவர்கள் வறிதே சென்றார்களல்லவா? அப்போது, அவர்கள் உதடுகள் உதிர்த்தத் தீர்ப்பை மறு முறையும் நினைத்துப்பார்: ''ம்...! யார் பெற்ற குழந்தை யோ? நமக்கு எதற்கு இந்த வம்பு? எல்லாம் இதன் தலை விதிப்படித்தானே நடக்கும்?'' என்று சொல்லிப் பயந் தோடி விட்டார்களே! அர்த்தமற்ற, நெஞ்சற்ற வார்த்தை களின் அநியாயத்தைப் பார்த்தாயா?'' என்று கேள்விக் குறி எழுப்பினார் மங்கை பாகன்.

''ஆ! நெஞ்சு வெடிக்கக் கதறுகிறதே? பிறந்தது முதல் குமுறிக் குமுறி அழுகிறதே?...தேவா, குழந்தை யின் முடிவு என்னவது?'' என்று கவலையுடன் வினவினாள் மாதா.

''பெற்றவளே குழந்தையைப் பற்றித் துளி கூட அக் கறைப்படாதபோது, நீ ஏன் கவலைப்படவேண்டும், சங்கரி?'' என்று வினயமாகக் கேட்டார் சுடலையாடி.

''மறுபடியும் என்னைப் பரீட்சை செய்ய ஆரம்பித்து விடாதீர்கள், பிரபோ! இந்தக் குழந்தைப் பிரச்னையை முதலில் தீருங்கள். நல்ல தீர்ப்பு நவிலுங்கள்!'' என்று வேண்டிக் கொண்டாள் காமக்கோட்டி.

''ஆகட்டும். நீ வீணே பதட்டப் படாதே!''—ஆறுதல் மொழி தந்தார் பினாகன்,

"நன்றி! ஆனால்?"

"ஐயப்பாடா?"

"அல்ல. ஆனால் அந்தக் குழந்தையின் பெற்றோர்கள்...? ஈரைந்து மாதம் சுமந்து பெற்ற அந்த அன்னை...?" என்று எதிர் வினா விடுக்கலானாள் நாரி.

பிறப்பிலி பெருமூச்செறிந்தார்:

"பூலோகத்தில் காதலுக்குப் புது மாதிரியான பொருள். கலியாணத்துக்கு முன்னும் கலியாணத்துக்குப் பின்னும் கூட 'காதல்' என்ற ஒன்று உதயமாவதே கிடையாது. ஆனால், அவர்கள் வாய் என்னவோ, எல்லாம் உணர்ந்த மாதிரி, எடுத்ததெற்கெல்லாம் 'காதல், இன்றேல் சாதல்!' என்ற ஒரே பல்லவியைத் தான் பாடித் தொலைக்கிறது. பூலோகக் காதலை தேவலோகக் காதலாக 'ரசாயன மாற்றம்' செய்வதாக உறுதி சொன்னான் அவன்—ஆமாம்; இந்தக் குழந்தையின் தகப்பன். அவள்—பிள்ளைக்கனியின் தாய் உண்மையென்று நம்பினாள். உயிரும் உயிரும் ஒன்றாயின. உடலும் உடலும் 'முதல் இரவு' விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடின. இருள் சிரித்த அந்தக் காட்டிலே, பூலோக சுவர்க்கத்தைத் தரிசித்தனர் காதலர்கள். ஆனால், காலம் சிரித்தது; ஊர் சிரித்தது; சமூகம் சிரித்தது. கண் கண்ட பூலோக சுவர்க்கமாம் இக் குழந்தையைக் கையால் எடுக்கத் தெம்பின்றி, அவளைப் பரபர வென்று இழுத்துக் கொண்டு ஓடோடி விட்டான் அந்தப் பாவி! தேவலோகத்தில் மலர வேண்டிய பாரிஜாத மலர் வழி தவறிப் பூலோகத்தில் பூத்துவிட்டது!" என்றார் பார்வதி கொழுநன், கண்ணீருடன்.

"ஆதியே! பாரிஜாதம் கருகி விடும் போலிருக்கிறது. நல்ல முடிவு காட்டுங்கள், துரிதப் படுத்துங்கள்!" என்று ஆதுரப்பட்டாள் சிவை.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளுக்குச் சிரிக்கத் தானு தெரியாது......?

* * *

உதயம்.

தெய்வச் சந்நிதியில் தெய்வகானம்;

சாதிகுலம் பிறப் பிறப்புப் பந்த முத்தி.
அரு உருவத் தன்மை, நாமம்
ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும்
பிரிவற நின்றியக்கஞ் செய்யும்
சோதியை மாத்துரிவெளியே மனதவிழ
நிறைவான துரிய வாழ்வேத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளோ
நினைவாகச் சிந்தை செய்வோம்!

தெய்வக் குழந்தையின் அழுகையொலி வர வரத் தேய்ந்து கொண்டிருந்தது.

இதய முள்ள யாரோ ஒரு செம்படவன் வந்தான்; குழந்தையைப் பார்த்தான்; அவனுடைய கண்ணீர்த் துளிகள் பேசும் பொற் சித்திரத்தைக் குளிப்பாட்டின. "குழந்தை! மேலுலகத்துப் பாரிஜாதப் பூ! ஆண்டவனே உன் மகிமையே மகிமை. எங்கள் பிள்ளைக் கலி தீர்ந்து விட்டது!" என்று ஆனந்தக் குரலைத் திக்கெட்டும் திசை பிரித்து விட்ட வண்ணம், சேயும் கையுமாகப் பறந்தான்.

* * *

முக்கண்ணி சிரித்தாள்!

முக்கண்ணன் சிரித்தான்!

பாரிஜாதம் சிரித்தது!

* * *

இருட்டு—மை இருட்டு.

வண்ணக் களஞ்சியத்தை வாரியணைத்துக் கொஞ்சி மகிழ்ந்தவாறு வாசலில் அமர்ந்திருந்தான் அந்தச் செம்படவன். மெய்ம்மறந்திருந்தாள் அவனுடைய மனையாட்டி.

"அண்ணே, அண்ணே! ஓடியா, ஓடியா! பாவம், யாரோ ஒரு பொம்பளை காட்டாத்திலே விழுந்திட்டா. நாங்க படகிலே காப்பாத்திஞேம். பொழைக்கிருளோ, என்னமோ, சங்கிலிக் கருப்பனுக்குத்தான் தெரியும்!"

அந்தப் பெண் மெல்ல மெல்லக் கண் திறந்தாள். கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது. அவள் கதறிஞள்: "கடவுளே! நான் செஞ்ச குற்றத்துக்கா என் குழந்தையை என் கிட்டேயிருந்து பிரிச்சே? என்னை ஆசை காட்டி மோசஞ் செஞ்சவனைக் கொன்னுப்பிட்டு, என் குழந்தைக்காக ஓடோடி வந்தேனே...! பெற்ற வயிறு துடிச்சுச் சாகுதே? ஐயோ, என் ஆருயிர்ச் செல்வமே, இனி உன்னை எப்பிறப்பிலே கண்ணுலே காணப் போறேஞே?...என்னை மன்னிச்சிட மாட்டியா, தாயே? உனக்குத் தாயாகக் கொடுத்து வைக்காத பாவியாகிப்பிட்டேனே? கொலைகாரியாகிப்பிட்டேனே? ஐயோ...!"

அவளது விம்மிய மார்பகத்திலிருந்து பால் வெள்ளம் சுரந்தோடியது.

அவள் கண்கள் மூடிக் கொண்டன.

குழந்தை வீரிட்டு அழுதது!

*

7

புடம்

'தாயே!...அம்பிகை!...'

சொல் ஒவ்வொன்றிலும் இதயத்தை இருத்திக் கூப்பிட்டாள். இருத்திய இருதயத்தின் ஒவ்வொரு துடிப்பிலும் தெய்வ நம்பிக்கை கமழ்ந்தது. கமழ்ந்த நம்பிக்கையின் உயிர்ப்பாக, மெல்லிய சிரிப்பின் இதழ் படர்ந்தது. ஒற்றை நூலிழை, பாளம் வெடித்த உதட்டோரங்களிலே விளையாட, அவ்விளையாட்டிலே தன் உயிரை விளையாடச் செய்தாள். அவள்—அகிலாண்டம். அகிலாண்டேஸ்வரியல்லள்!—'அவள்' தெய்வமன்றோ?

நைலான் பட்டில் பிசிறு பாய்ந்த வெள்ளைக் கம்பிகள் சிதறுண்டு காற்றில் அல்லாடுவதைப்போன்று, தும்பைப்பூ முடிக்கற்றைகள் காற்றில் பறப்பதைப்பற்றி கவலை கொள்ளாமல், விறைப்பாக ஊன்றிக்கொண்ட இடது கையில் மேனியின் அழுத்தம் பூராவையும் அழுத்தியவளாக—அழுத்திக் கொண்டவளாக உட்கார்ந்திருந்தாள். முடிவை நெருங்குகின்ற தொடக்கமாக, பின் பனி வாடை வீசியதால், ஜமக்காளத்தைவிட்டு நீட்டப்பட்டிருந்த கால் பாதங்களில் குளிர்ச்சி அவ்வளவாகத் தேங்கவில்லை! என்றாலும்,அந்த அளவுக்குக்கூட, சீதளத்தின் சக்தியைத் தாங்கமுடியவில்லை அவளால். பாதங்கள் ஜில்லிட்டிருந்தன. உஷ்ணம் ஏறிக்கொண்டிருந்த மண்டையின் பளு,

தாங்க வலுவிழந்த வரம்புக்குக் கனத்து வருவதாகவே அவளுக்குப்பட்டது. நிமிஷத்துக்கு நிமிஷம், விநாடிக்கு விநாடி, கணத்துக்குக் கணம் அவள் தன்னைத் தானே குனிந்து பார்த்துக் கொண்டாள். அவ்வாறு பார்த்துக் கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஆசையின் நெஞ்சு மகிழ்வின் கண்ணீராகக் கரைந்து மேனியில் வழிந்தது. அந்த உணர்வில், நன்னம்பிக்கையின் துடிப்பைக் கண்டாள் அவள்; அவளால் காது பொருத்திக் கேட்கவும் முடிந்தது. புயல், தென்றல் அவதாரம் எடுக்க எந்நேரமாகும்?

சுயப் பிரக்ஞையை தூண்டில் போட்டு இழுத்தது பெண்மனம். இமை நுனிகளில் சந்திப்பு உண்டாகி, உண்டாக்கிக் கலந்தது. இருட் குகையில் இதுவரை அகப்பட்டுத் திணறிக்கொண்டிருந்ததாக உள்ளொலி பேசியது. பாழ்வெளியின் வெறுமை அவளைப் பற்றியது. தீப்பற்றியது நினைவில். நெஞ்சை வசமாக்குபவளாக நாலா பக்கமும் விழிகளைச் சுழலவிட்டாள் அகிலாண்டம். ஊராளும் மாதாவும், உளமாளும் பிதாவும் தனிப்பட்ட போக்கில்—தனித்தன்மை பூண்ட பாவனையில்—அருள் நெறி முறைகளை முத்திரைகளாக ஏந்தித் திகழ்ந்த தனிமைப் பண்புடன் கூடிய மகிமையில் திகழ்ந்தனர். ஒன்றிய உள்ளத்தோடு, ஒரு முறைக்கு இருமுறையாகப் பார்த்தாள் அவள். விரிக்கப்பட்டிருந்த மாயத்திரை விலக்கப்பட்டதாக எண்ணமிடலானாள். 'தாயே!' அம்பிகை! என்ற ஒலியலைகள் உந்திக் கமலத்தைத் தொட்டுப் புறப்பட்டன.

"அ...கி...லா!"

வார்த்தைகள் இடைவெளி கொண்டு கேட்டன.

அகிலாண்டம் திசை திரும்பினாள்.

ஸ்ரீமான் ராமலிங்கம் அடித்துப் போட்ட கோலத்தில் காட்சியளித்தார். மேல் தோல் வெடித்துச் சிதறிக் கோடுகள் கிறுக்கியிருந்த இதழ்க் கங்கிலின்றும் வார்த்தைகள் கிளம்பின. இருந்த இடத்திலிருந்து நகர்ந்து, இன்னும் நெருக்கம் அமைத்துக் குந்தினாள் அவள், மெலிந்து வெளுத்துக் கிடந்த கைகளை ஆதரவுடன் அன்பு சேர்த்துக் தடவிக்கொடுத்தாள். துளி கக்கிய சுடுநீர் மணிகளையும் நாசுக்காகத் தடவி விட்டாள். சுட்ட இடம் குறிப்புச் சொல்லியிருக்க வேண்டும். அவர் உடம்மை அப்படியும் இப்படியும் அசைத்துக் கொண்டார். ஆற்றுமையில் நெடுமூச்சு விளைந்தது. அரும்பாடுபட்டு விழிகளை அசைக்க முயன்றார் அவர். அரைப்பார்வை நிலைதான். அதுவும் சிறு பொழுதுதான் மூடிய நயன வட்டங்களில் கண்ணீர் வளைந்தது.

அவளுக்கு நெஞ்சு ஏறி இறங்கியது. மார்பில் படர்ந்திருந்த எலும்பு வரிசையில் ஓர் அழுத்தம் தெரிந்தது. குனிந்தவண்ணம், வலது கை நுனிவிரலை வைத்துத் தடவினாள். மின்னலுணர்வொன்று தேகமெங்கணும் ஊடுருவியது. மயிர்க்கூச்சம் கிளர்ந்தது. ‘தெய்வமே’ என்று மெய்மறந்த நினைவில் பேசிய அவள், அந்த ‘அருமைப் பொருளை’ எடுத்துக் கண்களிடைப் பதித்தாள். கொட்டு மேளம் முழங்க, தன் கழுத்தில் மங்கலநாண் ஏறிய அந்தப் பொற்புடைத் தவநாளை அவள் எங்ஙனம் மறப்பாள்?

சுவர்க் கடிகாரம் இருமுறை ஓசை பரப்பிற்று.

அகிலாண்டம் எழுந்து ‘அவுன்ஸ் கிளாசை’ எடுத்துக் கழுவினாள். மருந்துக் கலவையை அளவு பார்த்து ஊற்றி எடுத்துச் சென்று, கணவரின் உதடுகளை நீக்கி ஊற்றினாள். ‘செம்பாதி உள்ளுக்குள் சென்றது. வழிந்ததைத்

தன்னுடைய பட்டுச் சேலைத் தலைப்பால் துடைத்தாள். திருநீறு மடலிலிருந்தும் துளி விபூதியை எடுத்து, அவர் நெற்றியில் இட்டு, மீதத்தைப் பக்தி கனிந்த பக்குவத்தோடு தன் நெற்றில் பூசிக்கொண்டாள். அச்சம் கடந்த ஆறுதல் பூத்தது.

அவள் கைகளை உதறி நெட்டி முறித்தாள். தூக்கம் நேத்திரங்களில் ஊஞ்சலாடியது. அதைக் கருதாதவள் அவள். அமர்ந்திருந்தவள், எழுந்து ஊஞ்சலில் அமர்ந்தாள். 'அந்த நாளிலே நானும் இவரும் இந்த ஊஞ்சலிலே நலுங்கின்போது அமர்ந்து மஞ்சள் நீராடினநிகழ்ச்சி நேற்று நடந்தது மாதிரி அல்லவா தோன்றுகிறது?' சுற்று மதிலைத் தாண்டிக்கொண்டு வந்தது தெருநாயொன்றின் அழுகைச் சத்தம், அவளது மேனி அதிர்ந்தது. அவளையும் அறியாமல், கரங்கள் தொழுதன. வாடைக் காற்றுப் பலத்தது. ஆகவே ஜன்னலில் நெளிந்த இளநீலத் திரையை இழுத்து மூடினாள். பிறகு, அங்குமிங்குமாக நடை பயின்றாள். கடைக்குட்டிப் பயல் ஆழ்ந்த உறக்கத்திற்குக் 'கப்பம்' செலுத்தியவண்ணம் இருந்தான். கலைந்துகிடந்த போர்வையைச் சரிசெய்தாள்.

ஸ்டூலில் வைக்கப்பட்டிருந்த பூஞ்செடிப் பாத்திரம் அவளை இடறிவிட்டது. நகக்கண் வலித்தது. குனிந்து நிமிர்ந்தாள். அந்தப் புகைப்படத்தையே ஓர் அரைக் கணம் இமைக்காமல் நோக்கினாள். 'கமலாட்சி—கார்த்திகேயன் இணை நீடு வாழ்க!' என்ற வரிகள் பளிச்சிட்டன. "ஆஹா!" என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டாள் அகிலாண்டம். தன்னுடைய பத்து நாளைய வேதனைக் குமைச்சலை நொடிப் போதில் மறந்துபோனாள். தனக்கு இனி குறைவேதும் கிடையாது என்ற தைரியம் எழுந்தது. தன்னை மறந்து சிரித்தாள்.

* * *

கோடம்பாக்கம் நெடுஞ்சாலை கண்விழித்தது. வைகறையின் துயில் நீக்கம், அந்தச் சாலையின் அமைதி போர்த்த பாதை நெடுகிலும் பிரதிபலித்தது.

கீழே மணிச்சத்தம் கேட்டது. அதற்கு வாய்த்த பின்னணி இசையென இராஜபாளையமும் குரல் கொடுத்தது. இரு குரல்களும் பங்களாவின் கீழ்த் தளத்தைக் கடந்து மாடிப்படி ஏறிவந்தன.

அகிலாண்டம் மாடி வராந்தாக் கைபிடிச் சுவரில் சாய்ந்து நின்றவாறு, கீழே பார்த்தாள். விளக்குகள் எரிந்தன. வேலைக்காரி சுறுசுறுப்புடன் எழுந்து, பால் பாத்திரத்தை எடுத்துக் கழுவி, தரையில்'தொப்'பென்று கைதவறிப் போட்டு, பின்னர் எடுத்துக்கொண்டு அவசர அவசரமாக வெளிவாசலுக்குச் சென்றதைக் கண்ணோட்டமிட்டாள். மீண்டும் மணிச்சத்தம் தொடர்ந்தது. பால்காரன் சைக்கிளில் பறந்திருக்கவேண்டும்!

இந்த மணி நாதம் காலப்பனி மூட்டத்தில் உருத் தெரியாமல் — உருக்காட்டாமல் தோய்ந்து பதிந்து அழுந்திவிட்ட எத்தனையோ நிகழ்ச்சிகளின் ஓலம் கபால ஓடுகளிலே 'டும், டும்' என்று மோதி எதிரொலி கிளப்பிய விந்தையை—உண்மையை அவள் எங்ஙனம் மறக்கக் கூடும்? ஏன் மறக்கவேண்டும்?

எடுத்த எடுப்பிலேயே சுவை சொட்ட ஆரம்பமாகும் சிறு கதையை யொப்ப, சிலரது விட்ட குறை—தொட்ட குறையின் பரிணாம பலனுக்கு ஏற்ப, அவரவர்களுக்கு வாழ்க்கை சுவையுடன் அமைந்து விடுகின்றது. அத்தகையதொரு புண்ணியத்துக்கு, அல்லது பாக்கியத்துக்கு இலக்குப் புள்ளியானவள்தான் அகிலாண்டம். அந்தஸ்த்தில் உயர்ந்தில்லாமற் போனாலும், அழகில் உயர்ந்து நின்றாள்

அவள். பேச்சிலும் பார்வையிலும் செய்கையிலும் நேரிய முறை இழைந்தது. உயர்நிலை ஆரம்பப்பள்ளிக் கூடத்தின் உபாத்தியாயர் அவள் தந்தை. தில்லை விளாகத்தில் வேலை. சைவமும் வைணவமும் ஒரே சந்நிதானத்தில் இணைப்புப் பெற்றுத் திகழும் பெருமையைக் கண் குளிரக் கண்டு பேறு பெற வந்த பெரியவர், தம் குறிக்கோளுக்கு வெற்றி காட்டிவிட்டு, அன்றைய இரவுப் பொழுதைக் கழிக்கும் சந்தர்ப்பத்தை அந்த ஆசிரியர் வீட்டில் அடைந்தார். சுற்றி வளைந்து ஒதுங்கிக் கிடந்த சொந்தபந்தப் பாசம் பெரியவர்களின் பேச்சில் தலைகாட்டியது. யதேச்சையாகத் தலைகாட்டினாள் அகிலாண்டம். பாவாடையும் தாவணியு மாக ஓடி மறைந்தாள் அவள். ஆனால் அவளது கண்களில் தெரிந்த தெளிந்த பார்வையும், இதழ்களில் மடல விழ்ந்த தூய முறுவலும் ஓடி மறைந்திடவில்லை. பெரியவர் தம் ஒரே செல்வக் குமரன் ராமலிங்கத்துக்கு அகிலாண்டத் தைப் பெண் கொள்ளப் பேச்சைத் துவக்கினார். ‘பெரிய லட்சாதிபதியான நீங்க எங்கே? பரம ஏழையான நான் எங்கே?’ என்ற வாத்தியாரின் பேச்சை மூட்டை கட்டி விட்டு, ஜாதக ஏட்டின் மூட்டையை அவிழ்த்தார். ஜாத கங்கள் பொருத்தம் தாங்கின. “எல்லாம் அம்மையப்பன் காட்டும் மெய்யன்புதான்! என் செல்வ மகள் பூர்வஜன் தில் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்!” என்று ஆனந்தக் கண்ணீர் மல்கினார் அவர்.

பெரியவர் பட்டணத்துக்கு விடை பெற்றுப் போன நான்காம் நாள் வாசலில் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டு, ஓட்டமாக ஓடி வந்தாள் அகிலாண்டம். தந்திச் சேவகன் நின்றான். கனவுகளை விளையாட விட்ட கயல் விழிகள் கலவர மடைந்தன; சிந்தூரம் தூவிய கன்னங்களில் கறுமையின் நிழல் படர்ந்தது. பயந்து போனாள் பாவை. கடைசியில் தந்தியைக் கையொப்பம் செய்து வாங்கினாள்;

உறை கழன்றது. வாசித்தாள். ஒரே கணத்தில் ஆனந்தச் சிரிப்பு கும்மாள மிட்டது. "என் மகன் சம்மதம் அடுத்த மாசம் ஐந்தாம் தேதி கல்யாணம். பிற நேரில்" என்றது தந்தி.

"அம்மா! அம்மா!"—அகிலாண்டம் காலத்தின் நடந்த கதையைத் துண்டுபட நிறுத்திவிட்டு விரைந்தாள். படுக்கையில் உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தான் குமார். "அப்பா ராத்திரி பேசினுங்களா அம்மா?" என்று ஆதுரத்துடன் கேட்டான். அவள் மறுமொழி புகலவில்லை. 'இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள். பத்து நாட்களுக்கு முந்தி ராமலிங்கம் எவ்வளவு ஆரோக்கியத்துடன் உலவினுர்? முகத்தில் தெளிவும், கண்களில் களிப்பும், மேனியில் மினுமினுப்பும் கொண்டு விளங்கினுரே அவர்? மயிலாப்பூரிலே அவருக்குத் தொழில். பெரிய ஜவுளிக் கடை. 'அகிலாண்டம் ஸில்க் எம்போரியம்' என்ருல், லஸ் முனையில் வெகு பிரமாதம். கடை மூடியானதும் சாவிக் கொத்துடன் வந்து காரை 'போர்டிகோ'வில் நிறுத்தி விட்டு, "அகிலா!" என்று குரல் கொடுத்துக் கொண்டே மாடிப்படிகளைக் கடந்தவர், இருந்திருந்தாற் போல மயக்கமடைந்து சுருண்டு விழுந்தார். எஞ்சியிருந்த படிகளில் அவரது மேனி ரத்தத் துளிகளைப் பதித்தது. தொலைபேசி இயங்கியது; மாறுபட்ட எண்கள் மாறி மாறித் திருப்பப்பட்டன. நாடிக் குழல்கள் சோதித்தன. வகை வகையான மருந்துகளும் புதுக் கண்டுபிடிப்பில் வந்த ஊசிகளும் ஒத்துழைத்தன. மூச்சு இழை பிரிந்தது. இந்தப் பத்து நாட்களாகப் பேச்சில்லை! என்ருலும் படிப்படியாகத் தெளிவு காணப்பட்டது. அகிலாண்டத்திற்கு உயிர் வந்தது. 'விள்ளற்கரியவளின்' கழலடிகளில் தலை பதித்துக் கிடந்தாள்.

ஒரு தவணை, ராமலிங்கம் தொழில் விஷயமாகக் கோயம்புத்தூர் ஜில்லாவுக்குப் பயணமானார். புறப்பட்டுப் போன ஆறாவது நாள், பங்களா வாசலில் தந்திச் சேவகன் மணியடித்து நின்றான். அகிலாண்டத்திற்குக் கால்கள் பூமியில் பாவவில்லை. தெய்வம் ஈந்த தெம்புடன், சேதியைப் பிரித்தாள். 'இங்கே மகளும் மாப்பிள்ளையும் சுகம். நான் நாளை இரவு புறப்பட உத்தேசம்' என்று கண்டிருந்தது.

மகனுக்கு முகம் கழுவினாள் அவள். புது வென்னீரில் ஹார்லிக்ஸ் கலந்து கோப்பையில் இட்டு நீட்டினாள். பையன் தந்தையின் கட்டிலையே கசிந்த கண்களால் நோக்கிய வண்ணம், ஹார்லிக்ஸ் கலவையைக் குடித்தான். "நான் பெரியவனானதும் 'ரொம்பப் புத்திசாலியாயிருப்பேன்னு' அப்பா அடிக்கடி சொல்லுவாங்க இல்லையா அம்மா?...நான் பெரியவன் ஆகிறதைப் பார்க்குமட்டும் அப்பா நல்லபடியா இருப்பாங்க...ஏம்மா, இருப்பாங்களில்லியா?" என்றான் அவன்.

தாலியைக் கண்களில் ஒற்றிக் கொண்ட அகிலாண்டம், "நிச்சயம் நல்லபடியா இருப்பாங்கடா, கண்ணு!" என்றாள். நம்பிக்கையில் பிறக்கக் கூடிய சொற்களுக்குத்தான் எத்துணை அழுத்தம்!

குமாருக்கு ஏக மகிழ்வு. கழுத்துச் சங்கிலியைச் சட்டைக்கு வெளியே அழகாகப் போட்டான். அப்பாவின் படுக்கைக்குச் சென்றான். கன்னத்தைத் தடவினான். 'அப்பா!' என்றான். ராமலிங்கம் பையப் பைய விழிகளைத் திறக்க எத்தனம் செய்தார். தவமிருந்து பெற்ற குலக் கொழுந்தின் நெற்றியைத் தடவ கையை உயர்த்தினார். அது நழுவி விழுந்தது. அவரது கண்கள் கலங்கின. குமார் தந்தையின் கண்ணீரைத் துடைத்தான். "நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க அப்பா! அடுத்த மாசம் நீங்க சொன்ன

மாதிரி உங்களுக்கு அறுபதுக்கு அறுபது விசேஷம் தடபுடலா நடக்கும் அப்பா!... டாக்டர் தைரியம் சொல்லியிருக்காராக்கும். ஆமா, அப்பா!... வேணும்னு, அம்மாவுக்கு உதவியா நம்மஅக்காவை வரவழைச்சிக்கிடலாமா?'' —கேள்வியை பவ்யமாகக் கேட்டான் குமார்.

ராமலிங்கம் தம் மனையாட்டியை நோக்கி விரலை அசைத்தார். பிறகு, விரலசைவில் எழுதுவது போன்ற ஒரு பாவனையைக் காண்பித்தார். அவளுக்குப் புரிந்துவிட்டது. மகள் கமலாட்சி எல்லோரது நலம் கோரி எழுதியிருந்த தபாலுக்குப் பதில் அனுப்பிய விவரத்தை அவர் அறிய ஆவல் காட்டினர். அகிலாண்டம் நெருங்கி உட்கார்ந்தாள். "உங்களுக்கு உடம்புக்கு முடியாமல் இருக்கிறதைப்பத்தி கமலாட்சிக்கு எழுதலே. பாவம், அது பொறுக்காது. நாளைக்கு எழுதுறேன். ஒருதரம் இங்கே வந்திட்டுப் போகச் சொல்லலாம்னு இருக்கேனுங்க!'' என்று தெரிவித்தாள்.

கைகளை உயர்த்தி 'சரி' சொன்னர் ராமலிங்கம். உதயத்தின் மலர்ச்சியில் தெறித்த கதிர்கள் அவரது முகத்தில் அணைந்தன.

உள்ளே சென்று மீண்டாள் அகிலாண்டம். மஞ்சளும் திலகமும் பூத்துணுக்கும் பொலிவூட்டின.

டாக்டர் வந்தார்!

* * *

பொங்கி வந்த இருமலை முன்றனையால் கட்டுப்படுத்தியவாறு, அகிலாண்டம் கடிதத்தை மீண்டும் படித்தாள்.

"செல்வமகள் சௌபாக்கியவதி கமலாட்சிக்கு ஆசீர்வாதம்.

உன் தகப்பனர் அவர்களுக்குப் போன வாரம் தொட்டு உடம்புக்குச் சுகமில்லை. இப்போதுதான்

கொஞ்சம் பேசக் கொள்ள இருக்கிறார்கள். கஞ்சிதான் ஆகாரம். சதா உன் நினைப்பாகவும் மாப்பிள்ளையின் நினைப்பாகவும் இருக்கிறார்கள். ஒரு முறை குடும்பத்தோடு இங்கு வந்து செல்வதுவே உசிதம். எல்லோருக்கும் அது ஆறுதலாக இருக்கக் கூடும். நீ, குழந்தை, மாப்பிள்ளை அவர்கள் ஆகியவர்களின் க்ஷேம லாபத்துக்குப் பதில் போடவும். தம்பி குமாருக்குப் பாப்பாவின் முகம் அடிக்கடி கனவில் வருகிறதாம். உன் அப்பா விரைவாகவே நல்ல சுகம் அடைந்துவிடுவார்கள். ஆண்டவன் அனுக்கிரகம் நமக்கு எப்போதும் சித்திக்கும்.

இப்படிக்கு,
உன் தாயார்,
அகிலாண்டம் அம்மாள்.''

எழுதிய கடிதத்தை கொண்டவரிடம் நீட்டினாள் அவள்.

படித்துப் பார்த்தார் ராமலிங்கம். ''ஆல்ரைட்!'' என்றார்.

ஸ்கூலுக்குப் போன குமாரிடம் கொடுத்து அதைத் தபாலில் சேர்க்கச் சொன்னாள் அகிலாண்டம். சலனம் மறைந்து, சாந்தி பிறந்தது.

காலம் எனும் கனவின் நிழல் நிச்சலனமாய் நீண்டது!

* * *

''லெட்டரைப் பெட்டியிலே போட்டுப்பிட்டேன், அம்மா!''

மதிய உணவுக்கு வந்த குமார் இப்படிச் சொல்லிவாய் மூடவில்லை.

வாசலில் சைக்கிள் மணிச் சத்தம் இடித்தது.

தந்திச் சேவகன்!

இடியால் தாக்குண்டவள் ஆனாள் அகிலாண்டம்.

"அத்தானுக்கு உடல்நிலை கவலைக்கிடமாயிருக்கிறது! —கமலாட்சி."

"தெய்வமே! இது என்ன சோதனை?" என்று விம்மினாள் அவள். நாடி நரம்புகள் அனைத்தும் இற்றுச் செயல் தப்பிப் போய் விட்டதென அவளுக்குத் தோன்றியது. "என்னம்மா அது?" என்று துளைத்தான் குமார். அவள் என்ன சொல்வாள், பாவம்! பதி இருக்கும் உடற் கேட்டில், இந்தத் துயர்ச் செய்தியை வெளியிடலாகாது என்பதாக முடிவு கட்டினாள். பூஜை அறைக்குச் சென்று திரும்பினாள் அவள். வழி கேட்ட விழி வெள்ளத்துக்கு வழி சொன்னாள்.

அப்போது வாசலில் காரொன்று வந்து நின்றது.

பிரக்ஞை இழந்த நிலையில் காணப்பட்டான் கார்த்திகேயன்!

"அம்மா, தெய்வம் என்னோட குங்குமத்தைப் பறிச்சுக்கிட்டு, நிரந்தரமா நரகத்திலே தள்ளிப்பிடுமா, அம்மா? என்னமோ, எனக்கு ஒரே பயமாயிருக்குதே அம்மா?... அத்தான் எனக்குக் கிடைக்காமப் போனா, அப்புறம் நானும் குழந்தையும் என்னம்மா செய்வோம்?... ஐயையோ! கடவுளே...!"

எரிமலையின் வெடிப்பு வாயில் கால் பதித்து நின்றாள் அகிலாண்டம். அன்பு மகளின் அழுகை அவளுடைய பெற்ற மணி வயிற்றில் இடியாக இடித்தது. அவள் பேசியப் பேச்சுக்கள் அவளது கண்களைத் தோண்டியெடுத்தன. கமலாட்சி, அப்படியெல்லாம் கெட்ட பேச்சை மனசாலேகூட நினைக்காதே, அம்மா! நம்பினவங்களைத் தெய்வம் சோதிச்சாலும், கடைசி முடிவு நமக்குச்

சாதகமாகவே இருக்கும், கமலாட்சி!...உன் அப்பாவுடைய மிதமிஞ்சின சிக்கைப்பத்தி உனக்குத் தெரிவிச்சா, நீ புழுவாத் துடி துடிச்சுப் போவியேன்னு, இதுநாள் பரியந் தம் மறைச்சேன். கடைசிலே இன்னிக்கு காலம்பறத் தான் கடுதாசி போட்டேன். இடிக்குமேல் இடியா வரச் செஞ்சு இப்படி நம்மளெ பகவான் சோதிக்கிறரு. நாம அற்பங்க!...தேவியோட விளையாட்டுக்கு ஈடுகொடுத்து நிற்க நம்மாலே முடியுமா? எல்லாம் தாயோட கிருபை தான்!...நீ வாம்மா, சாப்பிட!...டாக்டர் சொன்னதை நீ கேட்கலையா? எல்லாம் சரியாகிப் போயிடும். சமயம் புரிஞ்சு மாப்பிள்ளையை நீ கொண்டாந்ததே பெரிய சமர்த்துத்தான்!...நீ வாம்மா!''

தொண்டைக் குழியில் நிரம்பி வழிந்த பாசத்தின் சுழிப்பில் தோய்ந்தெழுந்த ஆறுதல் மொழிகள் மகளுக்கு மட்டுமே கேட்கும் அளவுக்குச் சன்னமாக ஒலித்தன. புதல்வியின் கண்களைத் துடைத்தாள். இரண்டொரு நீர்மணிகள் சிதறி, பாலமுதம் உண்ட குழவியின் நெற்றி மேட்டில் விழுந்தன. அகிலாண்டம் மகளின் கரம் பற்றிக் கூப்பிட்டபோது, கமலாட்சியின் நோக்கல் தன் ஆருயிர்க்கணவரின் கட்டிலில் குறிபாய்ந்திருக்க கண்டாள். 'அம்மா, இவர் ரொம்ப ரொம்பத் தங்கமானவர். இவர் கையிலேலே எனக்குத் தாலிப்பாக்கியம் கிடைக்கிறதுக்கு நான் கொடுத்து வச்சிருக்க வேணும் அம்மா! மெய்தான் அம்மா!' என்று கமலாட்சி திருமணமான புதிதில் மனம் நிறைந்து சொன்ன நடப்புக்கள் சிலேயோடின. 'ஈஸ்வரா! மாப்பிள்ளையைக் காப்பாற்று. என் ஒரே மகளின் தாலியைக் காத்துக்கொடு, அம்பிகே!' அங்க அசைவு துளியும் இன்றி, கட்டைபோல கிடந்த மாப்பிள்ளையைக் கண்ட அவளுக்கு, உலகம் பாழ்வெளியாய் விட்டதைப் போன்று ஓர் எண்ணம் தோன்றியது. விநாடிக்கு விநாடி பூஜைக்

கூடமே சதமென்று தவம் கிடந்தது அவள் தாய் மனம். 'ஒரு பக்கம் என் புருஷன் சாகப் பிழைக்கக் கிடக்கிறார். குணமடைந்து வந்த நோய் திரும்பியிருச்சிதே!... இன்னொரு பக்கம் எங்க மாப்பிள்ளை உயிருக்கு மன்றாடிக் கிட்டுக் கிடக்கிறாங்க, என் தாலியும் என் மகள் தாலியும் சோதனைக் கூடத்திலே ஊசலாடிக்கிட்டு இருக்கு!... இந்த வேத விதியை யார்க்கிட்டே போய் நான் அழுவேன்? ஏனையாளும் மஹேஸ்வரியே!... அம்மா 'அகிலாண்டேஸ்வரியே!...எங்க ரெண்டுப் பேர் தாலி பாக்யத்தையும் கட்டிக் காத்து தா அம்மா!...'

ஊதுவத்தியின் சுகந்தம் புகைச்சுருள் வடிவமாக வெளியேறிக் கொண்டிருந்தது. ஊதுவர்த்திக் குழலின் பாதத்தடியில் சாம்பல் துகள்கள் பரவியிருந்தன.

அகிலாண்டம் திரும்பினாள். கமலாட்சி கை தொழுத வண்ணம் கிடந்தாள். வாய்விட்டுச் செருமினாள். மாப்பிள்ளையைத் தூக்கி வந்து கிடத்திய நேரத்தில் கண் மலர்ந்த ராமலிங்கம், "ஐயையோ, மாப்பிள்ளை" என்று கூச்சல்போட்டு மயக்கமுற்ற சம்பவம் அவளுள் கண் கட்டுவித்தை காட்டியதோ?

அந்தப் படத்தில் அவள் பார்வை ஒன்றியது. 'எம்பிரானின் தாள்களில் அடைக்கலம் புகுந்த காரணத்தால் வந்த காலன் தன் ஆருயிரை 'வவ்விய' கோலம் இருந்தது. இனம் புரியாத—ஆனால் மகத்தானதொரு சாந்தம் நெஞ்சில் குடிகொண்டிருப்பதை மட்டும் அவளால் அனுமானம் செய்துகொள்ள முடிந்தது.

தூளியில் தூங்கியது குழந்தை.

குமார் தூளியின் தாம்புக் கயிற்றைப் பிடித்து ஆட்டிக்கொண்டேயிருந்தான்.

அந்தி மகளின் செம்பஞ்சுக் குழம்பிட்ட பாதங்கள் லயசுத்தத்துடன், தாள அமைப்புத் தவருத பாங்கில் மண்புழுதியில் பதிந்து நடை பயின்றன.

இரணிய வேளை.

பெற்றவளின் அன்புப்பிடி மகளது வைராக்கியத்தைத் தளர்த்தியது. வட்டிச் சோற்றில் கால்வாசி காலியானது. "நாங்க வந்த வேளை, நல்லபடியா குணமாகிக்கிட்டு வந்த அப்பாவையும் மறுபடி படுக்கையிலே விழச் செஞ்சிருக்குது!" என்று கேவினுள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா?...நீ கொஞ்ச நேரம் படுத்து எழுந்திரு. சவலைப் பிள்ளைக்காரி!..."

திடுதிப்பென்று, பயங்கரக் கூச்சல் கேட்டது.

அகிலாண்டமும் கமலாட்சியும் திடுக்கிட்டுத் திரும்பினுர்கள்.

கார்த்திகேயன் கையையும் காலையும் உதறிக்கொண்டு கத்தினுர்; கதறினுர்!

தொலைபேசியும் காரும் சுறுசுறுப்பும் பெற்றன.

* * *

கமலாட்சி கண்ணோடு கண் பொருத்தவில்லை. உட்குழிந்திருந்த கண்கள் செஞ்சாந்தின் நிறம் காட்டின. அவிழ்ந்து விழுந்திருந்தக் கூந்தல் கற்றைகள் காற்றில் சுழிந்தன. கதம்பச் சரத்தில் மிஞ்சியிருந்தது ஒரே ஒரு கனகாம்பரம் மட்டுமே. நெற்றிப்பொட்டு பளிச்சென்றிருந்தது. அழுத குழந்தையைத் தட்டிக்கொடுத்துத் தூங்கப் பண்ணினுள். கணவரையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். மார்பகம் எம்பி எம்பித் தணிந்தது. புருஷனின் மேனிப் போர்வையைச் செம்மை செய்யக் குனிந்தாள். போர்வையினுள் பதுங்கிக்

கிடந்த இதயத்தைத் தொட்டது அவளது தங்கத் தாலிக் குண்டு. கண்களில் வைத்துத் தொழுதாள். அவள் து விழிகளிலே தானே கார்த்திகேயன் வீற்றிருந்தான்! அச் சம் தரும்படியாக, மூச்சு முட்டித் திணறும் சத்தம் கேட்டது. அவள் உடம்பு புல்லரித்தது.

ஆந்தைக் குரல் தாவி வந்தது.

கமலாட்சிக்கு மனத்தை என்னவோ செய்தது. சிறு குழந்தை போல அழுதாள். தாயைப் பரிவுடன் நோக்கினாள். அகிலாண்டம் புகைச்சல் இருமலைக் கக்கிக் கொண்டிருந்தாள். சத்தம் வெளிவராமல், துணியைத் திணித்தாள் நேத்திரங்கள் பொங்கின.

நட்ட நடுநிசி.

"நீ தூங்கு கமலாட்சி...!"

ஊஹூம்! நீ தூங்கு!"

"எனக்கென்ன கண்ணு! நீ சின்னஞ்சிறுசு. தூங் கம்மா. சொன்னாக் கேட்டாத்தானே?"

"முடியாது, அம்மா!"

ஹாலில் இருந்த மேஜைகள் இரண்டிலும் மருந்துக் கோப்பைகள் தயாராக இருந்தன. மூலைக்கொன்றாகப் போடப்பட்டிருந்த இரண்டு கட்டில்களுக்கும் ஊடாக இருந்த பஞ்சுமெத்தைச் சோபாவில் டாக்டர் சாய்ந்திருந் தார். எதிரே இருந்த பெஞ்சியில் நர்ஸ் குந்தியிருந்தாள்.

காலக் குழந்தை நடைவண்டி ஓட்டி விளையாடிக் கொண்டிருந்தது.

தாயும் மகளும் ஒருவர்க்கொருவர் ஆதரவாக அமர்ந்து, ஒருத்தியின் முகத்தை இன்னொருத்தி பரிதா பமாகப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தார்கள்.

அப்போது, புதிய கூக்குரல் ஒன்று முழங்கியது.

"ஆண்டவனே!...என் உயிரை நீ எடுத்துக்கொள். என் மாப்பிள்ளையைக் கொண்டு சென்றுவிடாதே. அவரைக் காப்பாற்று! என் ஒரே அருமை மகளின் மாங்கல்யத்தைக் காத்துத்தா அப்பனே!"

மனம் போட்ட புடத்தினின்றும் கனன்று எழுந்த சொக்கத் தங்க சிதறல்களா அவ்வார்த்தைகள்...?

ஆராதனைக் கூடத்தில் மண்டியிட்டு வணங்கிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார் ராமலிங்கம்.

ஓடினாள் அகிலாண்டம். 'அகிலா! நிஜமாவே நான் அதிர்ஷ்டம் செஞ்சவன்தான். உன்னை மாதிரி மேனி அழகும் உள்ளத்தழகும் கொண்டவ எனக்குப் பெண் சாதியாக வாய்க்கிறதென்பது லேசுப்பட்டக் காரியமா, என்ன? ஆயுள் முச்சூடுமே உன் பக்கத்திலேயே இருக்க வேணும்னு நினைச்சிக்கிட்டிருக்கேனுக்கும்!' என்று முதல் இரவில் மொழிந்த சொற்கள் அவளுள் பண் பாடின. ஊதுவத்தி சாம்பலை மிதித்தவள், குனிந்து திரும்பினாள். அந்தச் சாம்பல் காட்டிய வாழ்வின் தத்துவத்தை ஜீரணிக்க முயன்றவளாக, ஓடிச்சென்று தன் கணவரைத் தூக்கி மடியில் கிடத்திக்கொண்டாள். தாலியைக் கையில் எடுத்தாள் அவள். குனிந்த வேளையில், தாலியில் தன்னையோ, தன் கணவரையோ காணவில்லை. அவள்—காண முடியவில்லை அவளால்! தன் மகளையே தரிசித்தாள்! "அப்பா!...அப்பா!" என்று விம்மிப் பொருமினாள் கமலாட்சி. ராமலிங்கம் கண்ணீரைப் பெருக்கியவாறு, நகைபூத்த வதனத்தோடு காணப்பட்டார். உயிர்த்துணையின் விழிகளைத் துடைத்தார். ஊதுவத்தியின் உயிர்ப்புள்ள வாசனை மிதந்து வந்தது!

மறுமுறையும் கார்த்திகேயன் அச்சுறுத்தும் ஒலியைக் கூட்டினார். அகிலாண்டத்தை முந்திக்கொண்டு ஓடிப்

பாய்ந்தாள் அவள் புத்திரி. அகிலாண்டம் தன் கணவ வரைப் படுக்கையில் கிடத்திவிட்டு விரைந்தாள்.

டாக்டர் நாடி பார்த்தார். ஊசி போட்டார். மருந்து கொடுத்தார்.

அடுத்த ஐந்தாவது நிமிஷம், மாடிப்படிகளில் யாரோ உருண்டுவிழும் அரவம் கேட்டது.

“ஐயையோ!...அத்தான்!”

அலறிக் கதறினாள் அகிலாண்டம்.

“அப்பா!...அப்பா!”

கமலாட்சி துடித்தாள்; குமார் புரண்டான்!

அகிலாண்டம் வைத்த கண் வாங்காமல் டாக்டரின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

‘ஆண்டவனே!...என் தாலியைக் காப்பாற்றித்தா!...’ என்று அகிலாண்டத்தின் உள்மனம் வேண்டியது.

ரத்தத் திவலைகளுக்கு மத்தியில் கிடந்த ராமலிங்கம் கண்களை மூடிமூடித் திறந்தார். அவரது உதடுகள் “மாப் பிள்ளே...மாப்பிள்ளே!...” என்று முணுமுணுத்தன.

‘என் புருஷன் பிழைச்சிட்டாங்க!...

அகிலாண்டம் தன் கணவரை அண்டினாள்.

அப்போது:

“ஐயோ அப்பா!...அம்மா!...என்னை ஏமாத்திட் டாங்களே என் அத்தான்!...” என்று கூக்குரல் எழுப் பினாள் கமலாட்சி.

சித்தம் பேதலித்தவளைப் போன்று விழித்தாள் அகிலாண்டம்: 'நான் பாவி!...' என்றுக் கதறிக் கதறி, தன் மார்பில் ஓங்கி ஓங்கி அடித்துக்கொண்டாள் அவள்!

நித்திய நிருத்தியக்கூத்தின் நியதிக் கோட்டுக்குள்ளே அகப்பட்டு ஆனல், சுயநலம்—பாசம் ஆகிய தளைகட்கு அகப்படாமல், தன் போக்கில்—தன் இஷ்டத்தில்—தன் லயிப்பில் இயங்கிக்கொண்டே இருந்தது அந்தப் 'புண்ணிய பூமி!'

8

கோடிச் செம்பொன்

"சாவித்திரி, போயிட்டு மத்தியானத்துக்குள்ளே வீட்டுக்கு வந்திடறேன்; வீட்டுக்காரர் வாடகைக்கு வந்தால், எப்படியும் இன்னிக்குள்ளே கொடுத்திடுறதாச் சொல்லு!" என்று கூறிவிட்டு வெளிக்கிளம்பினன் ராமசாமி.

கணவன் சென்று மறைந்த வழியையே விழி நோக்கப் பார்த்துக் கொண்டிருந்த சாவித்திரி நீண்ட பெருமூச்சை நிலைப்படியில் தங்க வைத்தபின் உள்ளே நுழைந்தாள். உலகாளும் மாதாவின் அருட்புன்னகையைச் சுடர் தெறித்துக் காட்டிய குத்துவிளக்கின் தெய்வ ஒளி பிரதிபலித்துக் கொண்டிருந்தது. 'தாயே! இன்றைக்காகிலும் ஏதாவது வழியைக் காட்டு!' என்று அவளது இதயம் பிரார்த்தித்தது. சேலைத் தலைப்பால் கண் இமைகளைத் துடைத்த வண்ணம் கூடத்திலிருந்து சமயலறைக்குள் பிரவேசித்தாள் அவள்.

அடுத்த பகுதியில் குடியிருந்தவர் வீட்டுக் கடிகாரம் ஒன்பது முறை ஓசை எழுப்பி அடங்கியது.

சமையல் உள்ளில் தகர டப்பாவைக் கவிழ்த்தபோது, இரண்டு அல்லது மூன்று ஆழாக்குகள் காணும்படியாகப் பச்சரிசி தரையில் சிந்தியது. காய்கறிக் கூடையில் நாலு தக்காளிப் பழங்கள் இருந்தன; வதங்கிப் போன கத்திரிக்

காய்கள் மூன்று கிடந்தன. தட்டில் அரிசியை அள்ளிப் போட்டு அதன் மேற்பரப்பில் காய்கறிகளை எடுத்து வைத்துக்கொண்டு சமையல் செய்ய முன்னேற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினாள் அவள்.

அப்போது, 'அம்மா!' என்று அழைக்கும் குரல் கேட்டது. வெளியே வந்தாள் சாவித்திரி. அவள் மனம் அடித்துக் கொண்டது. அவள் எதிர்பார்த்திருந்தது போலவே, வீட்டின் சொந்தக்காரர் வாடகைக்கு வந்து நின்றிருந்தார். சுவரில் தொங்கிய காலண்டரில் பதினைந்து என்றிருந்த இலக்கங்கள் இரண்டும் அவளை அச்சுறுத்தின.

ஐயா, இன்னிக்கு சாயந்திரத்துக்குள்ளே உங்களுக்குச் சேர வேண்டிய வாடகைப் பணத்தைக் கட்டிப்பிடுறோம். தயவுசெஞ்சு இந்த ஒரு தடவை மட்டிலும் கோபித்துக் கொள்ளாதீங்க!' என்று கெஞ்சினாள் அவள்.

வீட்டுக்காரரின் 'வெட்டரிவாள் மீசை'யில் கோபம் கொந்தளித்தது; நெற்றிப் பொட்டில் ஆத்திரம் கனிந்தது. 'ம்!...இன்னைக்குப் பொழுது படுறதுக்குள்ளாற வாடகை என் வீடு தேடி வரலையானா, என்கிட்டேயிருக்கிற உங்க அட்வான்ஸ் பணம் ஐம்பது ரூபாயிலே போன மாத வாடகையை எடுத்துக்கிணு, பாக்கிப் பணம் இருபத்தஞ்சை நானே உங்களைத் தேடி வந்து வீசிப்பிடுவேன். இந்தப் பதினைஞ்சு நாள் வாடகை எனக்கு நஷ்டமானாப் பாதகமில்லை. நீங்க வீட்டைக் காலி பண்ணிப்பிடுங்க அம்மா! அதுவே போதும். மூணு பேருங்க வீட்டுக்கு அலையுறாங்க!' என்று நிர்த்தாட்சண்யத்துடன் எச்சரித்தார் அவர்.

'ஐயா, அப்படியெல்லாம் ஒண்ணும் செஞ்சுடாதீங்க. பக்கத்துக் குடித்தனக்காரங்க ஏளனம் பண்ணுவாங்க.

பலமாப் பேசாதீங்க. நீங்க போங்க. எந்நேரமானுலும் நானே பணத்தைக் கொண்டாந்து தந்துடறேன். ஆபத்தும் சம்பத்தும் யாருக்கும் உண்டுன்னு நீங்க கேட்டதில்லையா? என்ன செய்யறது?...எங்க போறாத காலம் இப்படிக் கஷ்டப்படுகிறேம்! தயவு பண்ணி இன்னிக்கு ஒரு நாள் மாத்திரம் உங்க கோபத்தைக் கட்டுப்படுத்திக்கங்க ஐயா!'

உதிர்ந்த நீர்மணிகள் வந்தவரின் இதயமற்றபேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தன.

இந்த மட்டிலாவது விஷயம் அடங்கியதே என்று ஆறுதல்கொண்ட சாவித்திரி, குனிந்த தலை நிமிராமல் அடுப்படிக்குள் சென்றுள். கைகளிலே தேங்கிய முகத்தோடு துயரத்தின் ஓருருவாக அமர்ந்தாள் அவள். கடந்து போன நாற்பத்தைந்து நாட்களின் 'இருட்டுப் பகுதி' அவளது மனப்படுதாவில் ஒளிக்கோடாக விளங்கியது. ஆனல், விடிவும் விளைவும் ஒளி கொண்டிருக்கவில்லையே!..

'அரைத் தம்ளர் காப்பி குடித்துவிட்டுப்போனவர் எங்கெங்கே வேலைக்கு அலையருரோ?...தண்டையார் பேட்டையிலிருந்து பஸ்ஸில் எங்கே சென்றிருக்கப் போருர்? அவரிடம் துட்டு எப்படி இருந்திருக்கும்? அம்பிகையின் அருளாலே இன்னிக்கானும் ஏதாச்சும் வேலை குதிர்ந்தால் எவ்வளவோ சிலாக்கியமாகிவிடும்!'

உலை வைத்தாள் சாவித்திரி. அரிசி கொதித்த மாதிரியே மனமும் கொதித்தது. அதிகாலையில் காப்பி தயாரித்துக் கொடுத்துவிட்டு, குளித்து முழுகி, ஒன்பது மணிக்குள் சாப்பாடு போட்டுத் தன் கணவனை வேலைக்கு அனுப்பி வைத்த நாட்கள் இப்போது அவளுக்குக் கனவோ என்றுகூடத் தோன்றியன.

*   *   *

நட்ட நடுப்பகல். வாசலில் வழி அமைத்துச் சென்று கொண்டிருந்த ரஸ்தாவில் தார் உருகியோடியது.

சாவித்திரி வாசலுக்கும்உள்ளுக்குமாக நூறு தடவை நடந்தாள். தன்னுள் மூண்டெழுந்த பசித் தீயை அவள் உணர்ந்தாள். ஆனால், அதைப் பற்றிக் கருதவில்லை; கருத்திடை கொள்ளவும் இல்லை. கொண்டவனின் பசி அவள் இதயத்தில் இருந்த பசித்தீயை இரட்டிப்புடன் அதிகரிக்கச் செய்தது. தன் பசியில் தன்னுடைய கணவனின் பசியின் கொடுமையைத்தான் அவள் உணர முடிந்தது; உணர்ந்தாள். இதயம் வேதனையை அனுபவிக்கையில், விழிகளும்தாம் சஞ்சலப்படுகின்றன. நெஞ்சின் கண்ணீர் நேத்திரங்களில் கூடி வருகின்ற விந்தையில் வாழ்க்கைப் புதிர் ஒளிந்துகொண்டிருக்கிறதோ?

கிழித்தெறியப்பட்டுக் காலமெனும் குப்பைக் கூடைக்குள் திணிக்கப்பட்டு விட்ட நாட்காட்டித் தாள் களைத் தேடிப் பிடித்து ஒட்ட வைத்துப் பார்வையிட்டாள் சாவித்திரி. பிறந்த புண்ணிய பூமியின் பெருமையில் அவள் தன்னை மறந்தாள்; அந்த இன்ப நினைவிலே திருநாளூர் அக்கிரகாரத்தின் வளப்பம் இருந்தது; அவளது இளமை நாட்களின் எழில் இருந்தது; வரன் வேட்டையின் சரிதை இருந்தது; ஆயிரம் ரூபாய் வரதட்சணை அறிமுகப் படுத்தி நிலைக்க வைத்த ராமசாமியின் அன்பும் அமைந்தது. விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பார்கள். அதே போல், பிறந்தகமும் புக்ககமும் அவள் வரை இதம் தந்தன. மாங்குடியிலிருந்து ராமசாமி சென்னைக்கு வந்தான். எஸ். எஸ். எல். ஸி படிப்பும் ‘செர்வீஸ் கமிஷன்’ பரீட்சைத் தேர்வும் அவனுக்கு ஈரோட்டிலே ஆறு மாசத்துக்குப் பலன் தந்ததுடன் திருப்தியடைந்தன போலும்! ஆகவேதான் அவன் பட்டணத்தை நாடினான்; வேலை தேடினான். கடைசியில் தண்டையார்பேட்டையில்

மருந்துக் கம்பெனி ஒன்றில் 'டெஸ்பாட்சிங் கிளார்க்' அலுவல் கிடைத்தது. தொண்ணூறு ரூபாய்ச் சம்பளம். குடித்தனம் வைத்தான் ராமசாமி. அரிசி, புளி முதலியன கிராமத்திலிருந்து வந்தன. எப்படியோ இரண்டு வருஷங் கள் தண்ணீப்போல ஓடின. ஆறு மாதங்களுக்கு முன்னர், இருவருடன் மூன்றாவது நபர் சேரும்படியான ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால், அதுவும் நழுவியது. கருச் சிதைவு உண்டாக்கிய சாவித்திரியின் உடல் நலக் குறைவச் சமன் செய்யவே அவனுக்கு நூறு ரூபாய்க்கு மேல் செலவாகிவிட்டது. கடைசியில், வேலை பார்த்த இடத்திலும் அவனுக்குத் தோல்வியே கிடைத்தது. தபால் தலைகளின் வரவு செலவுக் கணக்கில் ஏற்பட்ட தவறின் விளைவாக அவன் வேலையை விட்டு நீக்கப்பட் டான்.

'சாவித்திரி! அந்த மானேஜரின் ஒன்றுவிட்ட அத்திம் பேர் பையன் வந்திருக்கிறான். அவனுக்கு என் வேலையைக் கொடுத்துவிட்டார் மானேஜர். நீ கவலைப்படாதே. தெரிந் தவர்களைக் கண்டு எப்படியும் இன்னொரு வேலை பார்த்துக் கொள்கிறேன்!' என்றான் அவன். இடையில் நழுவிய நாட்கள் சாமான்யமானவையா? அவை ஏற்படுத்திய மனக் கவலைகள் எத்தனையோ உண்டே?

சாவித்திரி தன் நினைவு எய்தினாள். விழி நீர் கால் விரல்களில் தெறித்து விழுந்து கொண்டிருந்தது. செருப்புச் சத்தம் கேட்கவே, கண்களைத் துடைத்துக் கொண்டு தெருவைப் பார்த்தாள். பக்கத்து வீட்டுக்காரர் புடவை, பலகாரங்களுடன் உள்ளே நுழைந்தார். ஒதுங்கிக்கொண்ட அவள் தன் வீட்டுப்பகுதிக்குள் அடி யெடுத்து வைத்தாள். அருகிருந்து புறப்பட்டு வந்த பேச் சரவம் காதுகளில் ஒலித்தது. அவர்கள் 'மாட்னிஷோ' வுக்குப் போகப் போகிறார்கள்! 'நேத்திக்கு வாடகைக்குக் கொடுக்க பணம் கடன் கேட்டதுக்கு இல்லை என்றாளே கோமதி?...ம்!'

வெறிச்சோடிக் கிடந்தது மனம். கடந்த ஒரு வார மாகக் காலையில் வீட்டை விட்டுச் சென்று மறுபடியும் இரவு ஒன்பது மணிக்குத் திரும்பிவந்தான் ராமசாமி. பொரிசு செய்வதுடன் தனக்கு வேண்டிய சாப்பாட்டு வசதிகளையும் செய்து கொடுத்ததாயும் அவன் மனைவி யிடம் விளக்கம் கொடுத்தான். 'நல்லவர்கள் நாலு பேர் இருக்கக் கண்டு தானே மழை பெய்கிறது!' என்று அவள் எண்ணி ஆறுதல் அடைந்தாள்.

வீட்டு வாடகையின் நினைவு மீண்டது. அவளுடைய மனத்தின் அடிவாரத்திலிருந்து பயம் எரிமலையாகக் கனன்று வெடித்தது. 'இருபத்தஞ்சு ரூபாய் எப்படிக் கிடைக்கப் போறது?...' என்று அவள் குழப்பம் அடைய லானாள். வேலையின்றிக் கழிந்த இடைவேளை நாட் களுக்கு உதவிய தங்க வளையல்கள், ஒரு கல் மோதிரம், கழுத்துச் சங்கிலி ஆகியவற்றை எண்ணியபோது, அவளால் துக்கத்தைக் கட்டுபடுத்த இயலவில்லை. 'எப்ப டியும் இன்னிக்குப் போறுக்குள்ளே வாடகை கட்டியாக ணும்!' என்ற உறுதிப்பாடு புறப்பட்டது. மண்ணடியில் வாசம் செய்து வரும் சித்தியின் ஞாபகம் வந்தது. அங்கு சென்று நிலைமை நாசூக்காக விளக்கிக் கடன்வாங்கி வர வேண்டுமெனத் தீர்மானம் செய்தாள் சாவித்திரி. கண் ணாடியில் முகத்தைப் பார்த்து, அம்பிகையின் பூஜை அறையைத் தரிசித்து, வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம் பினாள் அவள்.

* * *

மண்ணடி முனையில் ஏமாற்றம் கோடிட்டுக் காட்டிய முகத்தோடு வந்து கொண்டிருந்தாள் சாவித்திரி. வேகாத வெய்யிலில் தண்டையார்ப் பேட்டையிலிருந்துநடந்து தம்புச் செட்டித் தெருவுக்கு வந்தாள். தேடிப் போன தெய்வம் அவளைத் தேடி வரவேண்டாம்; கடைசிப்

பட்சம், வீட்டிலாவது இருந்திருக்கலாகாதா? அதுவும் இல்லை. அவளுடைய சித்தி ஊருக்குப் போய் விட்டா ளாம்! சூடு கண்ட வெண்ணெய் போல அவள் மனம் உருகியது. 'ஒருக்கால் அவர் சாப்பாட்டு அகத்துக்கு வந் திருப்பாரோ? ஐயோ, பாவம் என்ற புதிய குழப்பம் ஏற் படவே, அவள் சற்று வேகமாக கால்களை எடுத்து வைத்து நடக்க முற்பட்டாள். குதிகால் இரண்டிலும் சூடு பற்றியது. சித்திரைக் கோடையல்லவா? தாகமாக இருந்தது. வீட்டையே குறிவைத்து அவள் விரைந்து பிராட்வே திருப்பத்தில் மடங்கியபோது, 'சாவித்திரி!' என்று ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள் அவள். தன் முன்னே ஆடம்பரமே உருவமாக—நாகரீ கத்தின் பிரதிபிம்பமாக—அலங்கார ஆடைகளின் கூட்டுச் சக்தியாக பெண் ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள். காலில் 'ஸ்லிப்பர்'; கையில் 'பெண்குடை'; பெண் பதுமையென நின்றாள். ஆனல், சாவித்திரிதான் இப்போது பேச நா வெழாமல் திகைப்புற்று நின்றுகொண்டிருந்தாள். உள் ளங் கால் சூடு உச்சந்தலைக்கு ஏறிக்கொண்டிருந்ததை அவள் மட்டும்தானே உணர முடியும்?

'சாவித்திரி, என்னைப் புரியவில்லையா?'

'நீங்கள் ...!'

வியப்புணர்ச்சிக்குறி அவள் வதனத்திலும் கொக்கி யிட்டுக்கிடந்தது.

'நான்தான் மாலதி! தஞ்சாவூரில் சாரதாம்பாள் ஹைஸ்கூலில் நான் உன்னோடு படிக்கவில்லையா?'

சாவித்திரி இன்னமும் தெளிவு பெற்றாள் இல்லை!

'ஸ்கூல் டிராமாவிலேகூட பிரைஸ் வாங்கியிருக்கேனே நான்...?' என்றாள் மாலதி, வலது கையிலிருந்த டம்பப் பையைச் சுழற்றியபடி. இடது கையில் இருந்த குடை யின் நிழல் சாவித்திரிக்கும் உதவியது.

சாவித்திரி துள்ளிக் குதித்தாள். 'ஆமா; இப்போ நெனப்பு வந்துடுத்து, மாலதி!' என்றாள் அவள். பள்ளி வாழ்வு என்றும் பசுமைப்புல் தரையில் பணம் என்னும் மெருகு பொலிவு காட்டித் திகழ்ந்த மாலதியை எண்ணினாள்; ரங்கூனில் மர வியாபாரம் செய்து விடு திரும்பிய மாலதியின் தந்தை செய்த ராஜோபசாரத்தை சாவித்திரியால் மறக்க முடியாது. கிழக்கத்திக் காளை பூட்டிய கூண்டு வண்டியில் தினமும் பள்ளிக்கு வந்து போகும் அவளது பழக்கத்தையும் வேளைக்கு ஓர் அலங்காரம், நாளைக்கு ஓர் ஆடை என்று தோன்றிய அவளுடைய ஆடம்பரத்தையும் நினைவுக்கு கொணர்ந்தாள் சாவித்திரி. அவள் விழிகள் மாலதியைக் கூர்ந்து நோக்கின. கழுத்தில் தொங்கிய தங்கச் சங்கிலி, கைகளில் மின்னிய தங்கவளையல்கள், மோதிரங்கள், லோலாக்குகள் ஆகியவற்றையும் பார்த்தாள் அவள்.

'அப்பா சௌக்யமா, மாலதி! அவர் எங்கே இருக்கார்? ரங்கூனில் தானா? நீ எத்தனை நாளாகப் பட்டணத்தில்இருக்கே?'

'இப்போது அப்பா இங்கேதான் இருக்கார்; சௌக்யமாகவே இருக்கார்; மயிலாப்பூரில் இருக்கிறோம்; ஸில்க் எம்போரியம் வைத்திருக்கார்; கார் ஸெர்வீசுக்குப் போயிருக்கு; இங்கே என் சிநேகிதி ஒருத்தியைப் பார்க்க வந்தேன்!' என்று பதில் சொன்னாள் மாலதி.

'உனக்குக் கல்யாணம்...!'

'ஆகிவிட்டது!' என்றாள் மாலதி.

இருவரும் தத்தம் கல்யாணங்களுக்கு அழைப்புகளைப் பரிமாறிக்கொள்ள மறந்துபோன குற்றத்துக்குப் பரிகாரம் தேடினார்கள்.

'உன் அகத்துக்காரர் எங்கே வேலையில் இருக்கார்?' என்று சாவித்திரியை வினவினாள் மாலதி.

சாவித்திரியின் உதடுகளில் உண்மை உறைந்தது. 'மாலதியிடம் என் அவல நிலையைச் சொன்னால், தன் அப்பாவிடம் சொல்லி ஏதாவது வேலைக்கு ஏற்பாடு செய்வாளே! ஆமாம், எங்கே வேலை பார்த்தால் என்ன?

விஷயத்தை விளக்கினாள் சாவித்திரி.

'அப்படியா?... இன்றைக்கு ராத்திரியே அப்பாவிடம் சொல்லி ஆவன செய்கிறேன். நீ உன் வீட்டு விலாசத்தைக் கொடு. நான் அடுத்த திங்கள் கிழமை எங்கள் காரை எடுத்துவந்து உன்னையும், உன் கணவரையும் எங்கள் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன். கவலைப் படாதே!

நாடக மேடையில் சம்பாஷணையை ஒப்புவிக்கும் பாங்கிலே மாலதி பேசினாள்.

சாவித்திரி அவளுக்குக் கரங் கூப்பி அஞ்சலி தெரிவித்துத் திரும்ப எத்தனித்தபோது, 'சாவித்திரி, வா ஆளுக்கு ஒரு கப் காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!' என்றுசொல்லி அவள் கரம்பற்றி அழைத்துச் சென்றாள் மாலதி.

* * *

புதிதாகத் திறக்கப்பட்டிருந்த 'மைசூர் பவன'த்திலே கூட்டம் நெரிந்தது. பெண்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த கூடத்தில் மாலதியும் சாவித்திரியும் அமர்ந்தார்கள். மாலதியும் சாவித்திரியும் அமர்ந்தார்கள். மாலதி கைப் பையைத் திறந்து கைக் குட்டையை எடுத்து முகத்தை லேசாகப்பட்டும் படாமலும் துடைத்தாள்; பிறகு குளிர்ச்சிக் கண்ணாடியை அணிந்தாள். சாவித்திரியின் வியர்வைத் துளிகள் அவளுடைய கைத்தறிப்

புடவை முன்றுனையில் அடங்கின. தன் பக்கம் பறந்து விழுந்த தோழியின் நைலான் புடவைத் தலைப்பை எடுத்து அவள் வசம் தள்ளிவிட்டாள் சாவித்திரி. சற்று தொலை வில் இருந்த தம்பதி மாலதியையே இமைக்காது பார்ப்ப தையும் அவள் கவனிக்கத் தவறவில்லை.

'என்ன அம்மா வேண்டும்?

பரிமாறும் ஆள் வந்து நின்றான்.

மாலதி தலையை நிமிர்த்திப் பார்த்தாள். அதே தருணம் சாவித்திரியும் முகத்தை உயர்த்தினாள். மறு கணம் அவளது எண்சாண் உடம்பும் கூனிக் குறுகியது.

'என்ன சொன்னாய்?...அம்மாவா?...என்று எரிந்து விழுந்தாள் மாலதி.

'அம்மா என்று அழைப்பது தவறில்லையே! பெற் றெடுத்த புனித தெய்வத்துக்கு இட்டுச் சூட்டி அழைக் கப்படும் பவித்திரமான சொல்லாயிற்றே அம்மா என்பது!...இந்த ஒரு சொல்லுக்குக் கோடிச் செம்பொன் கொட்டிக் கொடுத்தாலும் ஈடாகாதே!' என்றான் 'செர்வர்!'

'ம்!...உங்கள் வாய்க்குத் தகுந்த மாதிரிதான் உங்கள் பிழைப்புக்கும் வழி வகுத்துக் கொடுத்திருக்கிறான் ஆண்டவன். அம்மாவாம் அம்மா!'

மாலதி பற்களைக் கடித்தாள்.

சாவித்திரிக்கு வியர்த்துக் கொட்டியது.

செர்வரின் முகம் கறுத்தது. குனிந்த தலை நிமிராமல் நின்றவண்ணம், 'சரி; என்ன வேண்டும் உங்களுக்கு?' என்று கேட்டான்.

'இரண்டு கப் காப்பி!'

பரிசாரகன் வந்தான்; காப்பி கிளாஸ்; சாஸர்; இரண்டு 'செட்'டையும் ஒன்றன் மீதொன்றாக அடுக்கிய வாறு கொண்டு வந்து மேஜையில் வைத்து, மேலிருந்த ஜோடியை எடுக்கையில் கை தடுமாறவே, இரண்டு கிளாஸ் காப்பியும் மேஜைமீது சிதறி வழிந்து மாலதியின் அழகிய புடவை நுனியை நனைத்தது.

'ஏம்பா, நீ புது சப்ளையரா?...கொஞ்சமாவது மூளை இருக்க வேண்டாமா?...' என்று பொரிந்து தள்ளினாள் மாலதி. சிவந்த முகம் மேலும் ரத்தச் சிவப்பானது.

'கோபித்துக் கொள்ளாதீங்க; வேறே கொண்டு வந் திடறேன்!' என்று சமாதானப் படுத்திக் கொண்டிருந் தான் 'சப்ளையர்'. அந்தச் சமயத்தில் ஹோட்டல் முத லாளியே வந்துவிட்டார். 'ஏப்பா, நீ வா!' என்று குரல் கொடுத்தார். குங்குமப்பொட்டு அணிந்து நாடகக்காரன் போன்றிருந்த ஒரு நபர் வந்து நின்றான்.

'இரண்டு கப் காப்பி!' என்று உத்தரவிட்டாள் மாலதி. அவன் கண்ணாடியைக் கழற்றிக்கொண்டே விழி களைக் கூர்மைப்படுத்திய நிலையில் ஏதோ தடுமாற்றத்தின் சுவடு காணப்பட்டது. பவுடர் பூசப்பெற்ற வதனத் திரையில் பனி முத்துக்கள் கோலம் போட்டிருந்தன! காப்பி அருந்தினதும், மௌனமே உருவாக தோழிகள் இருவரும் வெளியேறினார்கள். சாவித்திரியின் வீட்டு முகவரி அடங்கிய துண்டுக் காகிதம் மாலதியின் டப்பப் பைக்குள் சென்றது; சில்லறைக் காசுகள் குலுங்கின. விடை பெற்றுப் பிரிந்தனர்.

* * *

சாவித்திரியின் இதயம் புலம்பிக் கொண்டிருந்தது. தலை கனத்துக் கிடந்தது. நொடிக்கு ஒரு முறை பெரு மூச்சுப் பிரிந்தது. கழுத்தில் ஊசலாடிய தாலிக் கயிற்றில்

அவளது கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்ருகச் சிதறின. 'இருந்திருந்து இவர் ஹோட்டலில் ஸெர்வராகவா வேலை பார்க்க வேணும்?...இவ்வளவு நாளாகக் காலையில் வீட்டை விட்டுக் கிளம்பும் இவர், இரவில் வீடு திரும்பும் ரகசியம் இதுதாளு? ஏன் இதை என்னிடம் சொல்லவில்லை? நான் மனம் புண் படுவேனே என்றுதான் ஒளித்து வைத் திருந்தாரா?... கடைசியில் எப்படிப்பட்ட பயங்கர விளைவு உண்டாகிவிட்டது?... ஐயோ, தெய்வமே! என் கண் முன்னலேயே அவரை எப்படியெல்லாம் ஏசி விட்டாள் மாலதி! எல்லாம் பணத் திமிர்!...வரட்டும்!...'

மாலதியின் மூலம் தன் கணவனுக்கு விடிவு காணச் செய்ய முடியும் எனக் கொண்டிருந்த சபலத்திலும் சலனம் கண்டது; சாவித்திரியின் நெற்றி நரம்புகள் தெறித்து விழுந்தன. சமைத்திருந்த சோறு ஆறிவிட் டிருந்தது. ஆனல், மனம் மட்டும் ஆறவில்லை.

இரவு எட்டு மணிக்கு ராமசாமி மனை புகுந்தான்.

இல்லத்தரசியின் விழிவெள்ளம் பதியின் பாதங்களை நனைத்தது. இருந்திருந்தாற்போல சாவித்திரி மயங்கிச் சாய்ந்தாள். வந்த டாக்டர் நல்ல சேதி சொன்னர்:

'சாவித்திரி, நீ அம்மாவாகப் போகிருய்; கோடிச் செம்பொன் கொடுத்தாலும் ஈடு சொல்ல இயலாத 'அம்மா' என்னும் புனித பதவிக்கு நீ உயர்ந்து விடப் போகிருய்! இன்னெரு நல்ல சேதியையும் சொல்லி விடு கிறேன். இனி மேல் நான் ஹோட்டல் சப்ளையர் அல்ல. மாம்பலத்தில் என் நண்பர் வைத்திருக்கும் டிரக் ஸ்டோ ரில் நான் ஒரு குமாஸ்தா. சம்பளம் நூற்றிருபது ரூபாய். இந்தா பணம் நூறு ரூபாய் முன் பணம் கிடைத்திருக் கிறது. காப்பி சாப்பிட வந்த நண்பர் அளித்த பரிசும் பதவியும் இனி நம்மைக் காப்பாற்றும். வீட்டு வாடகைப் பணத்தைக் கொடுத்துவிட்டு வருகிறேன். ஹோட்டலில்

கிடைத்த சம்பளம் வீட்டு வாடகைக்கு உதவுகிறது. கடந்ததை நீ மறந்துவிடு, சாவித்திரி!' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான் ராமசாமி.

* * *

தன் தோழி மாலதிக்காகக் காத்திருந்தாள் சாவித்திரி; தன் கணவனைச் சுடு சொல்லால் ஏசிய அவளுக்குப் பாடம் கற்பிக்கத் துடித்தாள். ஆனால், அவள் எதிர் பார்த்தபடி மாலதி வரவில்லை. அவளுக்குப் பதிலாக, அவளிடமிருந்து கடிதமொன்று வந்தது; பிரித்துப் படிக்கத் தலைப்பட்டாள் சாவித்திரி:

'அன்புமிக்க தோழி சாவித்திரிக்கு,

உன்னுடைய மகத்தான பொறுமையின் முன் மண்டியிட்டு மன்னிப்பு வேண்டுகிறேன் நான். என்னை நீ மன்னித்துவிடு. சென்ற வாரம் ஹோட்டலில் நான் யாரை ஏசிப் பேசினேனோ அவர்தான் உன் கணவர் என்பதை நேற்று இரவுதான் நான் அறிந்தேன். சிறு வயசு முதற் கொண்டு என்னுள் ஊறியிருந்த நாடகப் பித்தின் காரணமாக நான் நடிக்க ஒப்பந்தமான ஒரு நாடகத்தின் ஒத்திகைக்குப் போய் விட்டு சிந்தாதிரிப்பேட்டையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தேன். காலங் கடந்த வேளை. ரிக்ஷாவில் வந்து கொண்டிருக்கையில், மவுண்ட் ரோடில் சினிமாப் பார்த்துத் திரும்பிய போக்கிரி ஒருவனால் தாக்கப்பட்டேன். நல்ல வேளையாக எனக்கு ஒரு தெய்வம் உதவியது. அந்தத் தெய்வம்தான் உன் கணவர்! அவரை அடையாளங் கண்டதும் என் மனம் பதறித் துடித்தது. அவரே சொன்னார் உண்மையை. உன் கணவர் மாத்திரம் இல்லையென்றால், என் நிலை என்ன ஆகியிருக்குமோ? கோடிச் செம்பொன்னுக்கும் மேலான என் 'பெண்மை'யை—மானத்தைக் காத்த தெய்வம் உன் கரம் பற்றியவர்! மதிப்

பிடற்கரிய அந்தத் தெய்வத்தின் முன் நின்று சொல்லத் தயங்கிய இன்னொரு உண்மையையும் இப்போது வெளியிடுகிறேன். நீ அன்று கண்ட பணக்காரப் பெண் மாலதியல்ல நான்; இப்போது நான் ஏழைப் பெண்! ஆனால், வெளிப்பூச்சும் பகட்டும் நாகரீக முலாமும் என்னை யாரிடமும் காட்டிக் கொடுக்கவில்லை. இன்று என்னை நானே உணர்ந்துகொண்டேன். வியாபாரத்தில் ஏற்பட்ட திடீர் நஷ்டம் என் தந்தையைக் கொண்டு சென்று விட்டது. ஆதரவற்றிருந்த என்னை தூரத்து உறவுக்காரர் ஒருவர் பட்டணத்துக்கு அழைத்து வந்தார். என்னை ஓர் அழகிய இளைஞருக்குத் திருமணம் செய்து வைத்தார். அவர் யார் தெரியுமா? அன்று உன் கணவருக்குப் பதிலாக வந்த இன்னொருவர்—நாடகக்காரர் போன்றிருந்த குங்குமப் பொட்டுக்காரர் ஒருவர் வந்து நமக்குக் காப்பி கொடுத்தாரே—அவரேதான் என் கணவர்!...ஆனால், அவர் அந்த ஹோட்டலில் வேலை பார்ப்பதுகூட எனக்குத் தெரியாது. இரவு பகல் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்துக் கொட்டிய பணம் என் ஆடம்பரத்துக்கும் அலங்காரத்துக்கும்தான் கண்டது. நான் நாடகங்களில் நடிப்பதை அவர் வெறுத்தார். ஆனால், அன்று அவர் சொன்ன வார்த்தைகளை இன்று நான் மனப்பூர்வமாய் உணர முடிகிறது. தெய்வத்தின் சக்தி மகத்தானது. என் கண்கள் திறக்க வேண்டுமென்பதற்குத்தான் நேற்று எனக்கு அத்தகைய சோதனை நிகழ்ந்ததோ?... சினிமா பார்த்துத் திரும்பிய உன் கணவர் கார் கிடைக்காமல் நடந்து வரும்படி நேரிட்டதும் என்னைக் காப்பாற்றத்தானோ? எல்லாம் விந்தையாய்த்தான் இருக்கிறது. நேற்று என்னைத் தாக்கிய போக்கிரி என் நகைகள் அனைத்தும் 'போலி' என்று அறிந்தால், அப்போதே என்னை அழித்திருப்பானே?... என்னையும் என் மானத்தையும் காப்பாற்றி, என் கண்களையும் திறந்துவிட்டு என்னை புதிய மாலதியாக ஆக்கி, என் அன்புக் கணவர்

கையில் என்னை ஒப்படைத்துத் திரும்பிய உன் துணைவர் என் கண் கண்ட தெய்வ மனிதர்; அதுமட்டுமல்ல; அவர் என் சகோதரர்! அவரிடம் நான் மன்னிப்புப் பெற்றுவிட்டேன். இனி, நீ மன்னித்தால்தான் எனக்கு அமைதி பிறக்கும்!... நான் தம்புச் செட்டித் தெருவில்தான் இருக்கிறேன். என் 'குட்டு' அம்பலமாகக் கூடாதேயென்று தான் நானே உன்னைத் தேடி வருவதாய்ச் சொன்னேன். நாளை கட்டாயம் வருகிறேன், என் புதிய மன்னியைக் காண!

இப்படிக்கு,
மாலதி.'

சாவித்திரியின் உதடுகள் முணு முணுத்தன: 'பாவம், மாலதி!'

* * *

தமிழ்ப் பண்பு சுடர் சிந்த மாலதி வந்தாள். அவள் கணவனும் உடன் வந்தான். விருந்து நடந்து முடிந்தது.

'ராமசாமி! உங்களை நான் மறக்கவே முடியாது; உங்கள் கம்பெனியில் எனக்கு வேலை வாங்கிக் கொடுத்தீர்கள்; மாலதியும் திருத்தி அவளையும் டைப்பிஸ்டாகச் சேர்த்துவிட்டீர்கள். எங்கள் வாழ்நாள் பூராவும் உங்களுக்கு நாங்கள் இருவரும் கடமைப்பட்டவர்கள்!'

'உஸ்; சத்தம் போடாதீர்கள் சுந்தரம்! என்னை மறந்தால்கூடப் பாதகமில்லை. என் நண்பர் என் பேச்சுக்காக போக்கிரியாக நடித்தாரே, அவரை மறந்து விடாதீர்கள்!'

அவர்களின் சிரிப்பைக் கேட்டு ஓடிவந்த மாலதியும் சாவித்திரியும் ஏதும் விளங்காமல் இப்படியே நின்று கொண்டிருந்தார்கள்!

*

9

உயிர்ப்பரிசு

ஒற்றைப்பூ மட்டிலும் மாலையாகிவிட முடியாது. ஆனால், ஒரேயொரு நினைவு என்னும் மலர், மணம் கொண்டு மாலையாகத் தொடுத்து நிற்க முடியும்போலும்! அந்த ஓர் எண்ணம் அவனுள் மாலையென நீண்டு, நினைவுப் பூக்களை உதிர்த்துவிட்டது; பூ என்றால், மணம் மண்டிய பூ; பின்னர், மனம் மணக்கக் கேட்க வேண்டிய தில்லையல்லவா? இளமையின் தோற்றுவாய் எழிலுக்குப் பொழிப்புரை சொன்னது; கனவுகளின் காதையிலே கண்ணின் கருமணி கதை உரைத்தது; ஒப்பனை சேர்ந்த நுண்ணிய அழகுக் கோடுகள் காலத்தின் விளையாடலுக்குச் சாட்சியமா?

"அங்காளம்மை!"...

காயாம்பூ நினைவு பறிபோனான்; நித்திலம் உதிர்ந்தது.

"மச்சான்!"...

தீபஆவளிக்குக் கட்டியங் கூறிக்கொண்டு விரியத் தொடங்கியிருந்த இருட்செறிவில் ஒளி ஏந்தி வந்தாள் அவள். "வட்டியிலே சோறு கொட்டி ஊர்ப்பட்ட நேரமாயிடுச்சுதுங்க வெரசா வாங்க!"

எட்டடிக் குச்சுக்குள்ளே ஒன்றென ஒட்டிய இரட்டை உள்ளங்களின் அந்தரங்கம் பேசிக்கொண்ட உரையாடலின் உட்பொருளாக அமைந்த பேரமைதியில்

வெய்துயர்ப்பும் வேப்பமரக் காற்றும் 'மோடி' வைத்தன. ஓலைவெடி கிளப்பிவிட்ட சத்தம் அவனுடைய செவிகளில் அறைந்தது. 'தீபாவளி வந்திரப்போவதாங்காட்டியும்!'

காயாம்பூவின் விழிகளில் அவைகளுடைய கருமணிகள் புதைந்தன. "நாளைக்குச் செவ்வாய் சந்தைக்கெடுவிலே போயி ஒனக்கு தீபாவளிப் புடவை, ரவிக்கை வாங்கிக்கிட்டு வந்து தாரேன்!" என்று நயம் சேர்த்துச் சொன்னான் அவன்.

பொன்னரசியின் நோக்கு கால் பெரு விரல்களின் விளிம்பில் பதிந்தது!

பாலைவனம் வேளாரிடம் அச்சாரம் கொடுத்து வாங்கிய உண்டியற் கலயத்தைக் குலுக்கினான் காயாம்பூ; பிறகு அதைத் தரையில் ஓங்கி அடித்தான். சில்லறைக் காசுகள் குலுங்கின; விழுந்தன, சிதறின, மெய்ம்மையின் ஒலியென ஓசை புறப்பட்டது. பிரணவத்தின் ஒலிப்பதிவா அக்குரல்?

ஈச்சம் பாயில் பொன்னரசி முடங்கிக் கிடந்தாள். இடதுகை, கொண்டைக்கு அணையாக அமைந்திருந்தது. அகல் விளக்கின் மென்மையான ஒளியில் அவளது அழகு சுடர் தெறித்தது. 'மஞ்சள் தாலி' மண்ணை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. மண்—அவள் மாதா!

தொய்ந்திருந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்த காயாம்பூ எழுந்தான்; மேனி முறுக்கேறியது. மதமதப்பு ஊறியது. மனை விளக்கைக் குறிப்பு வைத்து நடந்தவனின் பாதங்களில், நாணயங்கள் மிதிபட்டன. 'நாளைக்குச் செவ்வாய்க்கிழமைச் சந்தைக் கெடுவிலே போயி ஒனக்கு தீவாளிப்புடவை, ரவிக்கை வாங்கிக்கிட்டு வந்து தாரேன்!' என்று சொன்ன பேச்சு நினைவுக் குழியிலிருந்து வெளிக்கிளம்பியது. சிந்திக் கிடந்த பணத்தைக் கணக்கிட்டபோது பதினொன்கு ரூபாய்க்குச் சேர்ந்திருந்தது;

புதுக்காசுகள் ஒதுங்கின; ஒதுக்கப்பட்டன. 'பொன்னரசி தீவாளி குளிச்சு; புதிசு உடுத்திக்கிணு எம்முன்னுடி வந்தாக்க எம்பாடு வேட்டைதான்!' நினைவுக்கும் அச்சம், மடம், நாணம், உண்டு!

பொன்னரசி புரண்டு படுத்தாள்; கால்மாட்டில் இருந்த மிளகாய்ப் பானை உருண்டது; அதிலிருந்து ஒரு துணி மூட்டை கழன்று விழுந்தது. 'கோலவெறி' வெற்றி கொள்ள எத்தனிக்கையில், மூட்டைத்துணி காலில் இடறியது. காயாம்பூவின் உடல் நடுங்கியது; ஏனென்றால், உள்ளம் நடுங்கியது. புதுப்புடவை ஒன்றும் புதிய ரவிக்கை ஒன்றும் இருந்தன. 'அங்காளம்மை!...', அவனுடைய நெஞ்சின் நெஞ்சு கதறியது. "மாமன் மவளே, ஒன்னை இனிமே நான் எந்தப் பொறப்பிலே காணப் போறேன்? பூமுடிச்சவ நீ; நான் ஒங்கழுக்கத்திலே தாலிக் கயிற்றை முடிஞ்சேன்; நீ முந்தானை போட்டே எனக்கு!.. மூணே மூணு மாசம்தானு இந்தப் பாவியோடவாழமுடிஞ்சிது?...ஆத்தா அங்காளம்மே! ஏன் என்வீட்டு அங்காளம்மையைக் கொண்டுக்கிட்டுப் போனே? தீவாளிக்கு ஆசையா வாங்கியாந்த இந்தச் சீலையும் இந்த ரவிக்கையும் அவளுக்கு ஒட்டுறதுக்குள்ளாற, அவ தீ கிட்டே ஒட்டிக்கிட்டாளே?...

காயாம்பூவினுடைய அங்காளம்மை நெஞ்சில் இருந்தாள்!

காயாம்பூவின் பொன்னரசி நினைவில் இருந்தாள்!

'கட்டுச்சோறு' காயாம்பூவின் கக்கத்தில் இருந்தது. புகையிலைக் குச்சி குழைந்தது. மனைவியிடம் பயணம் சொல்லிக்கொள்ள அவன் காத்து நின்றான். வெய்யவனின் மேனிச்சூடு வையகத்தில் பரவியது.

"ஏலே, பொன்னரசி!..."

இந்தாலே வாரேன்!''

"வெளக்கு வச்சதும் ராவுக்கு நான் வந்துப்பிடுறேன். கெட்டியமா வீட்டிலே குந்தியிரு, பொன்னு!...நீ சொன்னுப்பிலே கத்தரிப்பூ ரங்கிலே சேலையும் நீல ரவிக்கைத் துணியும் வாங்கியாந்துப்பிடுறேன்!''

"பணம் காசு உண்டனா இருக்கில்லே?''

"ஓ!''...

"பணம் காணலேன்னு?''...

"ஏன், நீ சுருக்குப் பையிலே சேர்த்துப் போட்டு முடிஞ்சி வச்சிருக்கியாக்கும்?''

"ஊக் கும்!''

அவள் மென்று விழுங்கிக் கொண்டு நின்றவண்ணம், கையிலிருந்த துணிப் பொட்டணத்தைக் கணவனிடம் காட்டினாள், "மச்சான், இதிலே ஒசத்தியான புடவையும் மேலுக்குச் சட்டையும் இருக்குதே...வேணும்னு, இதுகளையே நான் தீவாளிக்குப் போட்டுக்கிடுறேன், மச்சான்! இருக்கிற பணம் காசுக்கு ஒங்களுக்குத் துணிங்களை எடுத்துக்கிடுங்க.'' என்று தெரிவித்தாள்.

அவள் பேச்சைக் கேட்ட அவன் நிலை தடுமாறினான்; "வேணும், பொன்னரசி!...இது ஊரார் வீட்டுது!...கீழத் தெரு ஆச்சி தந்திட்டுப் போயிருக்காங்க. மகன் வீட்டிலேருந்து விருந்தாடிப் போய்த் திரும்பின கையோடவந்து வாங்கிக்கிட்டுப் போயிடுவாக! இருக்கிற பணத்துக்கு நல்லதா வாங்கியாந்திடுறேன்; நீ போய்க் கஞ்சிகுடி. முடிஞ்சா, ஒரு கொடங்கைக் கடலைக்கொடி எடுத்து ஆஞ்சு வை. தீவாளிக்கு எண்ணெய், உப்பு, புளி, மைதா மாவு வாங்குறத்துக்கு ஒத்துவரும்!''...

"மச்சான், ஓங்களுக்கும் புதுசு வாங்கியாரணுமாக்கும்!"

"ஆகட்டும், பொன்னு!"

விடிந்தால் தீபாவளியாமே...!

அறந்தாங்கிச்சாலை மடங்கி, முடங்கி, மறுகிக் குறுகி, கடைசியாக அந்த ஒற்றைத் தடத்தில் முற்றுப்புள்ளி கண்டு திருநாளூர் அங்காளம்மன் சந்நிதியிலே பெருமூச் செறிந்தது!

சந்தைக்கு வந்தவர்கள் வழித்துணைக்கு வரமாட்டார்கள். ஆனால், காயாம்பூவுடன் ஒருவன் துணைக்குவந்தான்; காயாம்பூவிடம் காரியமாகவே வந்தான்: 'கடலைக் காய் எம்பிட்டுக்கு இருந்தாலும் அளந்து குடு. நான் மரக்காலுக்கு பதினெட்டுக்காசு மேனிக்குத் தாரேன்!'

காயாம்பூ மனைவியை நெருங்கி அவளிடம், துணி மூட்டையக் கொடுத்தான். தாழ்வாரத்தில் ஆய்ந்து கொட்டியிருந்த கடலை மணிகளைக் குவித்து குறுணி, பதக்கு என்று முறைபோட்டு அளந்தான்; மொத்தம் ரெண்டு ரூபாயும் ஒன்பது காசுக்குத்தான் தேறுது!" என்று சொன்னான்; பணத்தை எண்ணிக்கொண்டே உள்ளே பாதம் பதித்தான். 'கவுச்சி' நாற்றம் அடம் பிடித்தது.

"மச்சான், உங்களுக்கு ஒண்ணுமே வாங்கக் காணமே? ..."

"நீ புதுப் பொண்ணு; நீ புதிசு கட்டிக்கிறதுதான் நாயம்; அதுதான் எனக்கும் நிம்மதிப்படும்!"

"நீங்க..."

"நான் ஆணுப்பொறந்தவன்; கட்டிக்கிட்டவளை அலங்காரம்செஞ்சுக் கண்குளிரக் காண்றதுதான் எனக்கு

சந்தோஷமாயிருக்கும். நித்தக்கூலிக்குக் குறுவை நடவுக்குப்போய் கெடச்ச பணத்திலே 'சுங்கடி' சேர்த்த பணத்தை உன்னோட தீவாளித் துணிமணிகளுக்காகவே தான் கட்டிக் காப்பாத்தி வச்சிருந்தேன் பொன்னரசி!''

அவன் விம்ம, அவள் விம்மினாள். மூச்சின் மூச்சுத் துடித்தது.

"மச்சான், இங்கனே பாருங்க!'' அவளுடைய கைகள் பற்றியிருந்த புத்தம் புதிய வேஷ்டி, சட்டையில் அப்போதுதான் அவன் பார்வை பற்றியது. அவன் திசை திரும்பிப் பார்வையைத் திருப்பினான். அதிசயம் குறுக் கோடிய விழி விரிப்பிலே ஆத்திரம் ஆட்டக் காயானது. வாழ்க்கை சதுரங்க விளையாட்டுத்தானே?

"மச்சான், பாருங்க!''

அவளைப் பார்த்தான் அவன்.

"பொன்னு! பானையிலேயிருந்த அந்தச் சீலையும் ரவிக்கையும் எங்கே?...''

"அதுக ரெண்டையும் அடகு வச்சுப் பணம் சேர்த்துத்தான் மச்சான் ஒங்களுக்கு புதிசு வாங்கியாந்தேன். உங்கிட்டே இருந்த பணம் எனக்குத்தான் காணும், நீங்க ஒங்களுக்கு ஒண்ணும் வாங்கமாட்டீங்கன்னு ரோசிச்சுத்தானுங்க இப்படிச் செஞ்சேன். அடுத்தச் சந்தைக்குள்ளே நான் பணம் சேகரம் செஞ்சு எப்படியும் ஆச்சிவிட்டுத் துணிமணிகளை கமுக்கமா மீட்டுப்பிடுறேனுங்க!''...

கிளிக்குத்தான் கொஞ்சத் தெரியுமா? "அடி பாவி!''

அடித்தது கை; அலறினான் அவன்.

"வராதது கணக்கிலே வந்துபோன என்னோட தெய்வத்துக்குக் கேடு செஞ்சுபோட்டாயே நீ?...நான் சொல்

லப்போற கதை ஒனக்குப் புதிசாயிருக்கும். என்னோட முதல் சம்சாரத்துக்காக வாங்கியாந்த தீவாளித் துணி மணிகதான் பானைக்குள்ளே இருந்துச்சுது!...ஒனக்கு நானும் எனக்கு நீயும் ஆதரவுன்னு ஆனப்பறம் பழசைக் கிளற எனக்கு இஷ்டமில்லே. ஆனா, இந்த மூணு நாலு வருசமாய் அல்லும் பகலும் எனக்கு ஒரே யொரு நினைப்பா இருக்கிறவ என்னோட முதல் பொஞ்சாதி அங்காளம்மையேதான்!...அவ தெய்வம் எப்பிடி இந்த வெறும் மனுசன்கிட்டே வாழுவா?...அந்தப் புதுத் துணிகளிலேதான் நான் நித்தம் எனக்குச் சொந்தமான அங்காளம்மையைக் கண்டுக்கிட்டிருந்தேன். இப்ப அந்தக் கடைசி ஆறுதலைக்கூட பறிச்சிக்கிட்டியே, பாவி?"

நெற்றிப்பொட்டில் ரத்தக் கோடுகள் கிழிக்கப் பட்டன!

"மச்சான்!..."

பொன்னரசி அலறியழுதாள்.

காயாம்பூவின் காலடியில் கிடந்த அவளுடைய தலையைக் காலால் எட்டித்தள்ளினான். அவன் கதவை உதைத்து வெளியேறினான்.

"மச்சான், இப்பப் பாருங்க. உங்க பொஞ்சாதியின் புடவையும் ரவிக்கையும் இந்தாலே இருக்குது; எடுத்துக் கிடுங்க!"

காயாம்பூ கண்களை மூடி மூடித்திறந்தான் "மச்சான், ரெண்டு மாசமா எங்கண்ணே உறுத்திக்கிணு இருந்த இந்தப் புடவை, ரவிக்கையோட கதை புரியாமத்தான் நான் முழிச்சுக்கிட்டிருந்தேன். அதைத் தெரிஞ்சுக்கிடத் தான் பொய்யும் சொன்னேன். என்னோட அக்காவுக்குச் சொந்தமானதை நான் தில்லுமல்லு செய்ய ஏலுமாங்க மச்சான்?...இப்ப ஓங்களுக்கு எடுத்தாந்திருக்கிறது

எல்லாம் சொந்த பணத்திலே வாங்கினதாக்கும். நீங்க உங்கையாலே எனக்குத் தீவாளிக்கு வாங்கித்தாராப் பிலே, நானும் எங்கையாலே உங்களுக்கு வாங்கித்தரணு மில்லே... அதுக்காகத்தானுக்கும்!...சுருக்காச் சாப்பிடுங்க. தீவாளிக்குப பலகாரம் பட்சணம் செய்யவேணும்!''

கைப்பட்ட கன்னத் தழும்பு சிரிக்கத் தலைப்பட்டது!

அங்காளம்மையின் துணி மணிகளை நோக்கிக் கை தொழுதாள் பொன்னரசி!

''எங்களுக்கு நீ தெய்வமா நின்னு நல்லது செய்யி, அக்கா!''

10

காணிக்கை

"பாபு, என்ன அதுக்குள்ளே செருமஆரம்பிச்சிட்டே?...அப்பாதானே...அப்பா இன்னும் கொஞ்ச நாழிகையிலே வந்திடுவாங்க...கீழே கொஞ்சம் விளையாடு...அதோ ஆடும் குதிரை...ஓடிவா பிஸ்கட்தாறேன்... சமர்த்தில்லே...ராஜா!" என்று மகனைச் சமாதானப் படுத்தினாள் வாசவி.

தாய் சொல் மிக்கதொரு மந்திரமில்லை.

பிறந்த மண் வாசனை காற்றோடு மிதந்து வந்தது. வாசவிக்குக் கண்ணீர் வந்தது. "பாபு..." என்று சொல்லி நடை பழகினாள். வாசலிலிருந்து வந்து எதிரொலித்த அறிவிப்பு அவளைச் சுண்டியிழுத்தது; காதைத் தீட்டிக் கொண்டு கேட்கலானாள்.

"சென்னை—தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சி விழாவிலே மரணக் கிணற்றிலே மோட்டார் சைகிள் பந்தயமொன்று வருகிற திங்கட்கிழமை நடக்கப் போகிறது. பம்பாய் புகழ் வீரர் ரமேஷும், சென்னைப் புகழ் வீரர் சுதாகரும் போட்டிபோடப் போகின்றார்கள். வெற்றி பெற்றவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு!...நல்ல சந்தர்ப்பம்!...நழுவ விட்டு விடாதீர்கள்"

சுழன்றேடிய அவ்வார்த்தைகளின் ஒலி அலைப் பரப்பி ஞரடே, வாசவி சுழன்ருள், சுற்றிஞள், கண்மண் தெரியா மல்—திக்குத்திசை புரியாமல்!

நெஞ்சிலிருந்து கண்ணீர் ஊற்றெடுத்தது.

கூடத்தில் கோயில் கொண்டிருந்த அம்பிகையின் முன் கரங்கூப்பிஞள்.

பாபுவை மடியில் போட்டுக் கொண்டவாறே அடித்து வைத்த சிலையென வாசவி வீற்றிருந்தாள், தன்னை மறந்து.

"வாசவி வாசவி!"

கதவைத் தட்டும் ஒலி, 'மைக்'கில் எதிரொலிப்பது போலிருந்தது.

சுதாகர் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தபடி நிலைப் படியில் நின்ருன், கழுத்திலிருந்த 'டை'யை நுனி விரலால் அவிழ்த்து விட்டவாறு.

"அத்தான்...அத்தான்!"

"என்ன வாசவி. அப்படி அதிசயமாகப் பார்க்கிருய்? ஓஹோ!...பத்து மணிக்கே வந்து விட்டேனென்ரு?... எனக்கு லீவ் இன்று. இந்த வாரம் என் ஆசைக் கனவு பலிக்கப் போகிறது, கண்ணே! எனக்கும், பம்பாய் ரமேஷுக்கும் மரணக் கிணற்றுப் பந்தயம் நடக்கப் போகிறது...ஆஹா!...வாசவி, உன்னுடைய அத்தான் தாஞக்கும் வெற்றி பெறுவான்! பாரேன்!...உலகம் இந்தச் சுதாகரின் பெயரை நினைவு கொள்ள வேண்டிய நாள் நெருங்கி வருகிறது...வாசவி!"

"அத்தான்..."

இதற்குமேல் எதுவும் சொல்ல முடியாதவளாக அவள் திணறிஞள்; கண்ணீர் மட்டும் திணறவில்லை.

சுதாகர் ஒன்றும் புரியாமல் மலைத்து நின்றான்!

*　　　*　　　*

20, ஜூலை, 1950.

சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த அந்தக் காலண்டர் தாள் வாசவியின் கண்ணுக்குள்ளே ரங்கராட்டினம் சுற்றியது.

'காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக!' என வாழ்த்தினார்களாம், கோவலன்—கண்ணகி தம்பதிகளை.

அப்படித்தான் சுதாகர்—வாசவி ஜோடியையும் மலர் தூவி பல்லாண்டு வாழ ஆசிமொழி தூவி வாழ்த்தினார்கள்.

20, ஜூலை, 1950—பொன்னாள் அவர்களுக்கு!

அந்த நாளிலே எத்தனை எத்தனையோ இன்பக் கனவுகள் கண்டாள், வாசவி! அவளுடைய கனவுகள் பலிக்கத்தான் பலித்தன. பொன்னை ஒரு தட்டிலும் பூவை ஒரு தட்டிலுமாகப் பாவித்துத்தான் கைத்தலம் பற்றியவளைச் சுதாகர் போற்றினான்; பேணிக்காத்தான். இரண்டு மூன்றானது. இந்திய ஜனத்தொகைக்கு ஓர் எண் பெருக்கம்! அப்போது, இன்னும் மிஞ்சிய ஆனந்தப் பெருக்கம்!

ஆனால்...

இந்த 'ஆனால்' என்ற சொல்லில்தான் தம்பதிகளின் புதிர் சுற்றியிருக்கிறது.

வாசவி தினம் தினம் செத்துச் செத்துப் பிழைத்து வந்தாள்; அவள் மாங்கல்யம் செத்துச் செத்துப் பிழைத்து வந்தது.

புதிரின் புதிரா?...

வாசவியின் கணவன் சுதாகர் பி. ஏ. பட்டதாரி; தேடிவந்த வேலையை உதறிப்போட்டு விட்டு, யாரோ ஒரு

'சேட்'டைச் சுற்றிக் கொண்டிருந்தான். அந்த சேட் ஒரு சர்க்கஸ் கம்பெனி நடத்தினான். அதில் 'மரணக்கிணறு' ஆட்டத்தில் மோட்டார் சைகிளில் இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம் புரிய வேண்டியவன் சுதாகர்—அப்படிப்பட்ட செப்பிடு வித்தைகள் ரசிகர்களுக்குள்ளே அவன் பெயரை நினைவுக் குறிப்பாக்கி விட்டன. அவன் புகழ் நீண்டது.

கணவன் புகழ் மனைவியை ஆகாயத்திற்குத்தான் தூக்கிச் சென்றது. ஆனால் அவளுடைய ஆனந்தத்திற்குப் பின்னணியாக அமைந்திருக்கும் அந்தப் பயங்கரச் சூழலை நினைத்தால், பாவம் அபலை வாசவி அப்படியே சுருண்டு விடுவாள். 'நித்தியகண்டம் பூரணஆயுசு' என்னும்படியான தன் துணைவரின் 'தொழில்' அவளைத் தினமும் தினமும் செத்துப் பிழைக்கச் செய்தது; தாலி அன்றாடம் புனர்ஜென்மம் பெற்றுக் கொண்டிருந்தது!

"அத்தான், என்னை ஒரு நாளாகிலும் நிம்மதியுடன் இருக்கச் செய்யமாட்டீர்களா?...'மரணக் கிணற்று' விளையாட்டை என் நிமித்தம் விட்டுவிட மாட்டீர்களா...அத்தான், உங்களை மாலையில் சர்க்கஸ் கம்பெனிக்கு வழியனுப்பும் நான், இரவு மீண்டும் உங்களைத் தரிசிக்கையில் தான் போன உயிரைத் திரும்பப் பெறுகிறேன்...இந்த மரண விளையாட்டை விட்டுவிடுங்கள், அத்தான்...!" என்று எத்தனையோ முறை தன் கணவனிடம் மன்றாடியிருக்கிறாள் அவள். ஆனால், அவன் எதையும் காதில் வாங்கிக் கொண்டால்தானே?... புகழ் அவனை கிறுகிறுக்கச் செய்தது!

தினமும் புதுப்புது புடைவை வகைகள், ஜாக்கெட் தினுசுகள், பூப் பொட்டலங்கள் எல்லாம்தான் அவள் காலடியில் குவிந்தன; தினமும் குழந்தையை எடுத்துக் கொண்டு புருஷனும் மனைவியும் 'மாட்டினி' ஆட்டங்களுக்கும், தேர்த் திருவிழாவுக்கும்தான் போய் வருகின்

ருர்கள்...! இன்பமயமான இல்லற வாழ்வுதான்! ஆனந்த மயமான சொப்பன உலகம்தான்!

ஆ...அந்தப் பயங்கரப் பின்னணி!...அந்த மரண விளையாட்டு...! அந்தப் புகழ் வெறி...!

* * *

'மரணக்கிணறு...!'

"...ஐயோ, கிடுகிடு பாதாளமாகச் செல்கிறதே அந்தக் கிணறு...! அதோ, அவன்தான் சுதாகர்!...இன்னொருவன்தான் பம்பாய் சாம்பியன் மிஸ்டர் ரமேஷ். அதோ, மோட்டார் சைகிளும் கையுமாக மரண விளையாட்டுப் பந்தயத்தில் இறங்கி விட்டார்களே...ஆஹா, அந்த இரு வீரர்களுக்கும்தான் எப்படிச் சிரிப்புப் பொங்கி விளையாடுகிறது. மரண விளையாட்டில் உயிரைப் பணயம் வைத்து விளையாடத் துணிந்ததற்கென்று புறப்பட்ட தன்னம்பிக்கைச் சிரிப்பா அது?...அல்லது விதியின் விளையாட்டைக்கூட வென்று விட்ட சிரிப்பா?...ஜனங்கள் எப்படிக் கைதட்டி ஆர்ப்பரிக்கின்றனர். மோட்டார் சைகிள்களின் சிம்ம கர்ஜனை வேறு காதைச் செவிடுபடச் செய்கின்றனவே...அதோ பாதாளக் கிணற்றிலே—வட்ட வட்டமாகத் தலை கிறுக்கும்படியாக அவ்வளவு துணிச்சலுடன் சுழன்றோடுகிறார்கள்...கண்மூடிக் கண் திறப்பதற்குள்ளே எத்தனை இந்திர ஜாலங்கள்!...ஆ! அவர்கள் இருவர் கண்களிலும் ஏன் இத்தனை வெறி?...புகழ் வெறியா அது? சுதாகர் வீறு பெற்றுச் சுழன்றான்; ரமேஷும் அப்படியே தான் சுற்றுகிறான். ஆ...!அதோ கிணற்றின் மத்தியிலுள்ள அந்தச் சிறுகொடியை அவிழ்த்துவிட்டால் அதுவே அவர்கட்கு வெற்றிக் கொடி யார் முதலில் வெற்றிக் கொடி பிடிக்கப் போகின்றார்கள்?...என்ன ரமேஷ்தானா?...ஆனால் சுதாகர்...அந்தோ!...அதன் தலை ஏன் அப்படிச் சுழல்கிறது?...மோட்டார் சைகிளினின்றும் நழுவி...ஐயையோ...!"

"ஐயோ, அத்தான்!" என்று கூவி அலறினாள் வாசவி. ஆறுதகப் பெருகிய கண்களுடன் விழித்துப் பார்த்தாள். எத்தனை பயங்கரமான எண்ணங்கள்! நல்ல வேளை. பிழைத்தாள்! எம்பி இறங்கிய நெஞ்சம் பெருமூச்சில் படபடப்பை அடக்கிக் காட்டிற்று. கூடத்திலிருந்த நிலைக்கண்ணாடியில் அவள் பார்வை பதிந்தது. பாதாதிகேசம்வரை பூகம்பமாயிற்று. ரோஜாக் கன்னங்களிலே முள் கீறினாற்போல ரத்தக்கறைப் படிந்த வரிக் கோடுகள் சிரித்தன.

மாலையில் நடந்த சம்பவம் அவள் நினைவில் 'ஆஜர்' தந்தது.

அன்றுதான் மரணக்கிணற்றுப் பந்தயம். சுதாகர் ஒரே புகழ்க் கனவு லயத்தில் மிதந்தவாறு, ஆடம்பரமாக உடை உடுத்துக்கொண்டுப் புறப்பட்டுப் போனான்.

"வாசவி..."

"அத்தான்..."

"கண்ணே, இன்று எனக்கு ஒரு சோதனை நாள்; ஆனால் இதுவேதான் எனக்குரிய பொன்னாளுங்கூட. புகழ் என்னை அண்டி அணையும் நாளல்லவா?...விடை கொடு. நான் போய் வரட்டுமா?...பாபுவைக் கெட்டியமாய்ப் பார்த்துக் கொள்...பார்த்தாயா, மறந்துவிட்டாயே?...உன் தங்கக் கையால் தாம்பூலம் மடித்துக் கொடு!..." என்றான் சுதாகர். அவன் கைகள், மனைவியின் நெற்றியைத் தடவிக்கொடுத்தன.

வாசவியின் கண்களில் கண்ணீர் இருந்தது.

"அத்தான்...அத்தான்—இந்தப் போட்டியில் நீங்கள் அவசியம் கலந்துகொள்ளத்தான் வேண்டுமா?...எனக்குப் பயமாயிருக்கிறதே அத்தான்...' என்று கெஞ்சினாள்.

அவ்வளவுதான், சுதாகருக்குக் கோபம் வந்தது. "என் புகழுக்குக் குறுக்கே நிற்கிறுயா?...புறப்படும் போதே அபசகுனம் போலத் தடையுத்தரவு போடு கிருயே?...சீ!'' என்று அவள் கன்னத்தில் அறைந்துவிட் டான்; அந்த ஆத்திர வெறியில் பந்தயத்துக்கும் புறப் பட்டுவிட்டான்.

சுயநினைவு எட்டிப் பார்த்தது வாசவிக்கு. சற்று முன் அவள் நினைவில் வெறியாட்டம் போட்ட பயங்கர எண்ணங்கள், கணவன் தன்னை அடித்தது, எல்லாம் அவளுக்குப் பயத்தைப் போதித்தன. கனவில் நடப்பது மாதிரியாக உணரலானுள்.

உடனே பூஜை அறைக்கு ஓடிஞள்; கழுத்தில் தொங் கிய தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டாள்: "ஈஸ்வரி, தாயே! என் கணவருக்கு எவ்வித விக்கினமும் வராமல் காத்தருள். அவருக்கே இந்தப் பந்தயத்தில் முதல் வெற்றியையும் கொடு, மகேஸ்வரி!'' என்று பிரார்த்தித்தாள்.

பார்த்தால் பசி தீரும் குழந்தை பாபுவின் முகத்தில் தன் எரிமலை இதயத்தை ஒரு கணம் மறந்தாள். அப் போதுதான் மணி ஏழு'அடித்தது. 'அத்தான் வர இன் னும் நாலுமணி நேரமாகுமே...அதுவரை நான் நரக வேத னையில்தான் உழலவேண்டுமா?'...என்று உருகிப் போனுள்.

அப்பொழுது "அம்மா என்று ஒரு பையன் கூப்பிட் டான்; அவன் கையில் ஓர் கடிதம் இருந்தது.

"அம்மணி,

இன்றைக்கு உங்கள் கணவர் சுதாகருடன் மரணக் கிணற்றுப்பந்தயத்தில் போட்டிபோடப் போகிறவன் நான். சற்றுமுன்உங்கள் பதியிடம் மரண விளையாட்டை

மறக்குமாறு வேண்டுதல் விடுத்ததையும் அதன் பலனுக உங்களுக்குள் ஏற்பட்ட பூசலேயும் அறிய நேர்ந்தது, உங்கள் கணவரின் புகழ் வெறிக்கு—புகழ் வெற்றிக்குக் குறுக்கே நான் நிற்கமாட்டேன், நிற்கவே மாட்டேன்! அதிசயமாகயிருக்கிறதா?...உங்கள் துணைவருக்கு ஒரே புகழ் ஆசை. ஆனால் உங்கள் இதயத்தின் பயத்தை—உங்கள் கணவரின் புகழ் வெறிக்கடியில் நிழலாடும் மரண விளையாட்டை நீங்கள் அறிவீர்கள்; நான் அறிகிறேன். உங்கள் பதி அறியவேண்டாமா?...உங்கள் தாலிப் பாக்கியம் அவருக்கேதான் முதல் வெற்றியருளப் போகிறது...! நான் போட்டியில் கலந்துகொள்வேன்; ஆனால் வெற்றி உங்கள் கணவருக்கேதான்...! அதிசயமா மாகயிருக்கிறதா...! இனியாவது உங்கள் தாம்பத்தியத்திலே தென்றல் வீசட்டும்! அதுவே எனக்கு அமைதி சொல்லும்...!

இப்படிக்கு,

ரமேஷ்.''

* * *

உலகத்தின் எட்டாவது அதிசயமா இது?

வாசவி கண்களைத் திறந்து பார்த்தாள்.

சுதாகர் நின்றுகொண்டிருந்தான், ஆனந்த வெள்ளத்திலே மிதந்துகொண்டு.

"அவர் முதல் வெற்றி பெற்றுவிட்டாரா?...ஆஹா! இனியாவது அவருடைய புகழ் வெறி அடங்குமல்லவா? என் தாலிப்பாக்கியமே பாக்கியம்...! பரிசு ஆயிரம்ரூபாய்.. ஆமாம், ரமேஷ் தியாகி! ரமேஷ் எழுதிய லெட்டரை அத்தான் கண்ணில் காட்டவே கூடாது...அத்தான், இனிக் கட்டாயம் இந்த மரண விளையாட்டில் சிந்தை செலுத்த மாட்டாரல்லவா?...எனக்கும் என் கண்மணி பாபுவுக்கும்

இனி எதிர்காலத்தைப் பற்றிப் பயமே கிடையாது...என் தாலி பிழைத்துவிட்டது. என் உயிர் மீண்டுவிட்டது. அத்தானிடம் கெஞ்சி நான்கு பேரைப்போல வேறு தொழில் செய்யச்சொல்ல வேண்டும்...ஈஸ்வரி, உன் கிருபையே கிருபை...!'' என்பதாகப் பலபட எண்ணிக் கூத்தாடியவாறு, சுதாகரை நோக்கி ஓடினாள் வாசவி.

"அத்தான், வெற்றி பெற்றுவிட்டீர்களா?...''

"கண்ணே, மகத்தான வெற்றி பெற்றுவிட்டேன்... மரணக்கிணற்றுப் பந்தயத்தில் அல்ல; வாழ்க்கையில்!...''

"என்ன?''

"ஆம், வாசவி. நான் பந்தயத்தில் கலந்துகொள்ளவில்லை! உன்னை அழச்செய்துவிட்டு வந்த எனக்குத் துளிகூட நிம்மதியில்லை. கணநேரம் தனித்திருந்து எண்ணினேன். என் கண்கள், இதயம் எல்லாம் திறந்தன. மரண விளையாட்டுப் பந்தயத்திலே புகழ்த் தேடி நான் இத்தனை நாளும்—வருஷமும் பைத்தியமாக அலைந்தேன். அதே சமயம் உன் இதயத்தை அறிய முடியவில்லை, என்னுடைய மரணவிளையாட்டு என் உயிருக்கே முற்றுப் புள்ளியிடுமானால், அப்புறம் உன் கதி, பாபுவின் எதிர்காலம் என்னகும் என்பதைப்பற்றி இன்றுதான் சிந்தித்தேன். அப்பொழுதுதான், தினம் தினம் நீ என்னைக் கண் கலங்குமாறு வேண்டியதும், இந்த மரண விளையாட்டை விட்டுவிட வேண்டுமென்று நீ கெஞ்சிய சம்பவங்களும் நினைவில் ஓடின. என்னை உணர்ந்தேன். என் மகத்தான தவற்றை உணர்ந்தேன். கண்ணே, இனி பயப்படாதே!...இன்றுடன் மரணவிளையாட்டை, அந்தப் புகழ் வெறியை ஒழித்துவிட்டேன்...! நாளையே புதிதாக 'பிஸினஸ்' ஒன்று செய்யப் போகிறேன், உடை மாற்றிக்கொண்டு புறப்படு. 'ரீகலில்' நல்ல படம் ஆடுகிறதாம். பாபுவையும் எழுப்பு...! வாசவி, மாலையில் நான்

மிருகமாக நடந்துவிட்டேன்; என்னை மன்னிப்பாயா?... என்று கூறி, சுதாகர் தன் மனைவியின் கன்னங்களை அன்புடன் வருடினான். அவளுடைய ரத்தக்கிறல் படிந்த பட்டுக் கன்னத்தில் அவனுடைய கண்ணீர் முத்துக்கள் பட்டுத் தெறித்து மன்னிப்பு வேண்டின.

வாசவியின் கண்கள் தந்த அன்புக் காணிக்கை. அவளுடைய உள்ளங்கையில் மறைந்திருந்த ரமேஷின் கடிதத்திற்கு நன்றி தெரிவித்துக்கொண்டிருந்தது.

ரீகல் தியேட்டர் வாசலில் நின்ற பம்பாய் மரணக் கிணறு வீரன் ரமேஷின் கண்களில் கண்ணீர் புரண்டது. அவன் தனக்குள் மெதுவாகப் பேசிக்கொண்டான்.

"...இந்த ரமேஷ் அடிநாளிலே அவளுடைய காதலுக்குப் பாத்திரமான பழைய ரமேஷ்தான் என்பதை வாசவி அறிவாளா?...நான் அவளை எங்ஙனம் மறப்பேன்?...அன்று அவள் பேரில் கொண்ட காதலுக்கு, அன்பிற்கு, பாசத்திற்கு ஒரு தூய காணிக்கையாக, இன்று மரணக்கிணற்றுப் போட்டிப் பந்தயத்தில் எனக்குக் கிட்டவேண்டிய புகழைத் தியாகம் செய்ததிலே என் உள்ளம் எவ்வளவோ அமைதி அடைகிறது...! விதியின் விளையாட்டை யாரே அறியவல்லார், புவியில்?..." *

11

ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்

"ஓம், முருகா!" என்னும் எழுத்துக்கள் பளிச்சிட்டு மின்னின. வெள்ளி நிலவிலே அந்த வெள்ளைக் கட்டடம் மிதந்து கொண்டிருந்தது. பங்களாவின் வெளிப்புற வாசற்கதவில் பிணைக்கப்பட்டிருந்த இரும்புச் சங்கிலியில் ஓசையை உண்டாக்கியவாறு இருந்தது ஒரு நாய். ஒரு கணம் அது தரையில் முகம் பதித்து மோப்பம் பிடித்தது. மறுகணம், கால்களை உதறிய வண்ணம் தலையை உலுக்கிக் குரைக்க எத்தனித்தது.

தாறு நிலையத்தில் 'டாண், டாண்' என்று மணி ஒலி பரவி எழுந்தது. அப்போது மணி பன்னிரண்டு. நட்ட நடுநிசி!

மண்ணில் பதிந்தெழுந்த பாதங்களின் மெல்லிய ஓசை இலேசாகக் கேட்டது. அதற்கு நேர் எதிரிடையாக நாயின் சத்தம் புறப்படத் தொடங்கியது. 'ளொள்!... ளொள்!'

வந்த உருவம் பங்களாவை அண்டியது; பிணைக்கப் பட்டிருந்த பிராணியினைப் பற்றி லவலேசமும் கவலை கொள்ளாமல், அந்த உருவம் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தது. திறந்த கதவை மூட ஓடியது இடது கை. வலது கையில் ஒரு பழைய பை ஊசலாடியது. காருக்கு ஒதுக்கிக் கொடுத்திருந்த 'போர்டிகோ'வையும்

முகப்பு மண்டபத்தையும் நோட்டம் விட்ட அந்த உருவம் சுவரில் பதித்திருந்த பொத்தானை அழுத்தி விட்டது.

தாழ்ப்பாள்களைத் திறந்து கொண்டு, 'யாரது?' என்ற அதிகாரக் குரல் கேட்டது. கேட்டவன், அந்தப் பங்களா வின் சமையற்காரன். வெளித் தாழ்வாரத்தின் மின்சார விளக்கைப் பொருத்தினன்.

அந்த உருவத்தின் முழுச் சித்திரத்தை எடுத்துக் காட்டியது, மின்சார விளக்கின் ஒளி. வாரிக் கலைக்கப் பெற்ற கிராப்பு முடி; சலவை செய்து கசங்கிப் போன உடைகள்; வேளைகெட்ட வேளையின் தூக்கக் கலக்கம் கொண்ட முக விலாசம்.

"யாரு நீங்க?"

"என் பெயர் கந்தப்பன். ஒரு அவசரக் காரியமாகச் செட்டியார் ஐயாவைப் பார்க்கவேண்டும்!" என்ருன் இளைஞன்.

அவன் பேசி நிறுத்துவதற்கும் மாடியிலிருந்த செட்டியார் தட்டுத் தடுமாறிய வண்ணம் இறங்கி வருவதற்கும் கணக்காக இருந்தது. செட்டியார் கண்களைத் துடைத்துவிட்டுக் கந்தப்பனை ஏறிட்டு நோக்கினர்.

கந்தப்பன் கைகூப்பி வணங்கினன்; கை கால்களில் நடுக்கம் ஏற்பட்டது. "எசமான்!" என்ருன் அவன்.

"திருட்டுப் பயலே!...நீ ஏன் இங்கே வந்தாய்?...திரும்பவும் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போகவா இப்படி நேரங்கெட்ட நேரத்திலே வந்திருக்கிருய்? நம்பிக் கைத் துரோகி!...என் கண்முன்னல் நிற்காதே. இங்கிருந்து ஓடிப் போய்விடு!..." என்று இரைந்தார்.

கந்தப்பனின் விழிகள் கண்ணீரைச் சிந்திக்கொண்டேயிருந்தன.

"எசமான்!"

அடுத்த விநாடி செட்டியாரின் விரல்கள் கந்தப்பனின் கன்னங்களில் ஆழப் பதிந்தன. அவனை வெளியே தள்ளிக் கதவை மூடித் தாளிட்ட 'பெருமை' சமையலறை அதிகாரியையே சாரும்!

கந்தப்பனின் உருவம் ராமலிங்கம் செட்டியாரின் மனக் கண்ணைவிட்டு விலகவே இல்லை. அதுபோலவே, அந்தச் சம்பவமும் அவர் நெஞ்சத்தை விட்டு அகலாமல், நினைவில் நிலைத்துப் புனர்ஜன்மம் எடுத்தது.

ஏறத்தாழப் பத்து மாதங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி அது.

அறந்தாங்கியில் சந்தைப்பேட்டை என்பது பரபரப்பு மிகுந்த பகுதி. அங்கேதான் ராமலிங்கம் செட்டியாரின் ஜவுளிக்கடை இருந்தது. ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஜவுளிகள் அங்கே அடைக்கலம் புகுந்திருந்தன. ஆயிரக் கணக்கில் பணம் புரண்டது. 'திருமுருகன் முன் நிற்க!' என்கிற வாசகத்தை எழுதாமல் எந்த ரசீதிலும் அவர் பேனா ஓடமாட்டாது. 'ஓம் முருகா!' என்ற உச்சரிப்பு அவரது இதழ்களில் சதா மணம் பரப்பி நிற்கும். வேளை கூடி வரும்போதுதானே தனலட்சுமியின் கருணையும் கிடைக்கிறது! வெறும் இரண்டாயிரம் ரூபாய் மூலதனத்தைக் கொண்டு ஆரம்பித்த 'ரெடிமேட்' கடை இன்று இவ்வளவு பெரிய அளவுக்கு வளர்ந்திருந்தது. இடையில் வந்துபோன ஆண்டுகள் ஆறே ஆறுதான்.

இப்படிப்பட்ட நிலையிலே ஒருநாள், செட்டியார் கடையைப் பூட்டிப் பூட்டை ஆறுதரம் நன்றாக இழுத்துப் பார்த்துவிட்டுச் சாவிக்கொத்தை இடுப்பில் செருகிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்ட தருணத்திலே, "ஐயா!"

என்று குரல் தந்து முன்வந்து வணங்கி நின்றான் ஓர் இளைஞன். அவன்தான் இந்தக் கந்தப்பன். தான் யாரு மற்ற அநாதை என்றும், ஏதாவது வேலை கொடுத்தால் நாணயமாகச் செய்வதாகவும், கொடுக்கும் சம்பளத்தை வாங்கிக் கொள்வதாகவும் சொல்லிக் கண்ணீரும் கம்பலை யுமாக நின்று வேண்டினான் அவன்.

"கடையிலே ஆறேழு பேர்கள் வேலைக்கு இருக் காங்க. வீட்டிலே என் பெண்சாதிக்கு உடம்பு சரி யில்லை. அதனாலே எனக்கு இப்போதைக்குத் தேவையா னது சமையல் ஆள் மட்டுந்தான்!" என்றார் செட்டியார், இரண்டு நிமிஷச் சிந்தனைக்குப் பிறகு.

"எஜமான்! உங்களுக்குக் கோடிப் புண்ணியம் கிடைக்கும். நான் இதற்கு முன்னால் சமையல் வேலை செய்திருக்கிறேன். செட்டிநாட்டில் பள்ளத்தூரில் உ. அ. மு. வீட்டிலே வேலை பார்த்திருக்கேனுங்க. ஒரு வாரம் பாருங்க. பிடித்தால் வச்சுக்கிடுங்க; இல்லையானால் என் னைத் துரத்திப்பிடுங்க!" என்று மன்றாடினான் கந்தப்பன்.

"சரி, உன் ஊர் எது?"

"எனக்குச் சிவகெங்கைச் சீமைங்க!"

"சரி. ஒரே பேச்சாகச் சொல்லுகிறேன். மூன்று வேளையும் இங்கேயே சாப்பிட்டுக்கொள். சம்பளம் பதினைஞ்சு ரூபாய் தாரேன்!"

"ரொம்ப நல்லதுங்க. முதலாளி!"

முதலாளியின் நாணயமான ஏவலாளாகக் கந்தப் பன் இயங்கத் தொடங்கிச் சுவர்க் காலண்டரின் தினத் தாள்களில் முந்நூற்றிருபத்தைந்தைக் கிழித்தெறிந்தான். இரண்டு முறை மாத்திரம் ஒவ்வொருநாள் லீவு எடுத்துக் கொண்டு போய்த் தெரிந்தவர்கள் ஊருக்குச் சென்றுவந்

தான். மற்றபடி, கந்தப்பன் அந்தப் பங்களாவின் ஒரு நபராகவே மாறிவிட்டான்.

ஒருநாள், மதுரைக்குச் சரக்குப் போட்டு வரத் திட்டமிட்டு விடியற்காலை வண்டிக்குப் புறப்பட எண்ணித் துணிமணிகளுடன் ஐந்நூறு ரூபாய் மட்டும் பிரயாணப் பையில் எடுத்து வைத்துக்கொண்டு படுத்துக் கொண்டார் ராமலிங்கம். ஆபத்துச் சம்பத்துக்கெனக் கைச்செலவுக்கு எடுத்துச் செல்லும் வழக்கமான தொகை அது. சரக்குக் கொள்முதல் ஆயிரக் கணக்கில் நடைபெறும். அது கடன். சரக்கு இவருடைய கடைக்கு வந்த கையோடு உரிய பணம் உரிமைக்காரருக்குச் சேர்ந்து விடும். வியாபார ஒப்பந்தத்தின் மாமூல் நடப்பு இது!

கந்தப்பன் கொடுத்த சூடான பாலைக்குடித்துவிட்டுப் படுத்தவர் மீண்டும் அலாரத்தின் ஒலி கேட்டு விழித்தார். காருக்குப் புறப்பட்ட நேரத்தில், பையைப் பிரித்துப் பணத்தை எண்ணியபோது, அவரது இரத்தம் கொதித்தது. உடனே "கந்தப்பா! டேய், கந்தப்பா!" என்று கூச்சல் போட்டார் செட்டியார். கந்தப்பனைத் தேடிப் பார்த்தார். அவன் அங்கு காணப்படவில்லை. "கடவுளே! இந்தப் பயல் கந்தப்பன் நூறு ரூபாயைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டானே!" என்று முணுமுணுத்தார். கடைசியில் அவரது படுக்கைத் தலையணைக்கு அடியில் ஒரு கடிதம் இருக்கக் கண்டார்.

"முதலாளி அவர்களுக்கு,

உங்களுடைய பணத்தில் நூறு ரூபாயை மட்டுமே எடுத்துப் போகிறேன் நான். இந்தப் பணத்தை உங்களிடம் மறுபடியும் திருப்பிக் கொடுத்துவிடுவேன். இது நிச்சயம்.

இப்படிக்கு,

கந்தப்பன்.'

இந்தக் கடிதத்தைப் படிக்கப் படிக்க அவருடைய ஆத்திரம் வேகமாக வளர்ந்தது. பற்களைக் கடித்துக் கொள்வதைத் தவிர அப்போதைக்கு வேறு வழியில்லை.

* * *

அன்று சென்றவன் இன்று நடுராத்திரியில் திரும்பியிருக்கிறான். அவன் திரும்பி வருவான் என்று அவர் கனவிலும் எண்ணியவரல்லர். அவருக்கு மட்டும் உடல் நலம் செம்மையாக இருந்திருந்தால், இந்நேரம் அவனை அடித்து நொறுக்கியிருப்பார். புதிய சமையற்காரனைக் கொண்டு பழைய சமையல் ஆளை வெளியேற்றி விட்டு மாடிக்கு வந்து படுக்கையில் சாய்ந்தார் ராமலிங்கம். 'ஆ! என்ன தப்பு செய்துவிட்டேன்!...அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து போலீசிலே ஒப்படைத்திருக்கலாமே...!' என்று ஒருகணம் நினைத்தார். மறு விநாடிதான் அவன் முன்பு எழுதி வைத்துப் போன கடிதத்தின் வாசகம் நினைவில் ஓடியது. உடனேயே அது வந்த வழியே திரும்பியது. 'ம்...இந்தப் பயலாவது பணத்தைத் திருப்பிக் கொண்டு வந்து தருவதாவது...!' அடுத்த விநாடி என்ன தோன்றியதோ,படுக்கையிலிருந்து எழுந்தார் செட்டியார். கந்தப்பனைத் தேடிப் பிடித்துத் தாணாவில் ஒப்படைக்க வேண்டுமென்ற புதிய துடிப்பு அவரை உலுக்கியது. எழுந்து கதவைத் திறந்தபோது, அவருடைய காலில் பட்டு விலகிய ஒரு புகைப்படத்தைக் கண்டெடுத்துப் பார்த்தார். அவ்வளவுதான்; அவர் அந்தக்கணமே மயங்கித் தரையில் சாய்ந்துவிட்டார். அப்போது "திருப்பதி!" என்று அவர் வாய் உச்சரித்தது!

"திருட்டுப் பயலே...! நம்பிக்கைத் துரோகி!"

ராமலிங்கத்தின் உள்ளம் அவரையும் மீறிய வண்ணம் இவ்வாறு கொக்கரித்தது. சில நாழிகைப் பொழுதுக்கு முந்தி அவர் கந்தப்பனை இகழ்ந்த சொற்களல்லவா

இவை? மீண்டும், மீண்டும் இவை ஏன் செவிகளிடையே ரீங்காரம் செய்கின்றன...? அவரது முகம் ஏன் இப்படி விகாரமடைந்து வருகிறது? தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஏன் அவர் வேதனையின் எல்லை வரம்பில் நின்று தவியாய்த் தவிக்கவேண்டும்?

பட்டு மெத்தையில் அலுங்காமல், குலுங்காமல் கிடந்த அந்த நிழற் படம் செட்டியாரின் மனத்தில் நிழலாக அப்பிக்கொண்டிருந்தது. உள்ளம் சிலிர்த்தது போலவே, உடலும் சிலிர்த்தது. ஊனக் கண்கள் திறந்திருந்த மாதிரியே மனத்தின் கண்களும் விழித்திருக்கத் துடித்தன. மனம் துடித்தது; மனச் சாட்சி துடிக்கச் செய்தது; 'உன்னுடைய நூறு ரூபாய்ப் பணத்தைத் திருடிய கந்தப்பனை நீ திருடன் என்றாய்; நம்பிக்கைத் துரோகி என்று ஏசினாய்; பேசினாய்; அடித்து விரட்டச் செய்தாய்! ஆனால், நீ செய்த நம்பிக்கைத் துரோகத்தை மறந்துவிட்டாயா...?'

கடந்த ஆறு ஆண்டுகளாக எந்த மனச் சாட்சியை ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு அதன் மேல் தளத்தில் அவர் தம் இன்ப வாழ்வை நிர்மாணித்துக் கொண்டிருந்தாரோ, அந்த வாழ்வு, வளம், வனப்பு அனைத்தும் இப்பொழுது ஆட்டம் காணத் தொடங்கின. எந்த ஒரு புகைப்படத்தைப் பார்க்கவும் மனத் துணிவை இழந்து அதை எங்கோ ஓரிடத்தில் போட்டுப் பூட்டி வைத்திருந்தாரோ, அதே படத்தை அவர் ஏன் தேடிப் பிடித்து எடுத்தார்...? பாதத்தில் சிக்கிய அந்தப்படம் அவர் மனத்தின் மனத்தையும் மிதித்துவிட்டதோ...? தெய்வத்தின் திருவிளையாடலா இது...?

மறைத்து மூடப்பட்ட ஆறாண்டு இரகசியம்:

காரைக்குடியில் 'திருப்பதி மளிகைக் கடை'யின் முதலாளி திருப்பதியேதான். கல்லுக்கட்டி வட்டாரத்

தில் நாலு பேருக்குப் பழக்கமான மண்டி அது. பிறந்த மண்ணில் வரித்த மனைவியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ராமலிங்கத்தைப் பிறிதோரிடத்தில் கைகட்டிச் சேவகம் புரிய வைத்தது. திருப்பதியைக் கண்டார்; கணக்கு வழக்குகளிலிருந்த திறமையைச் சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறினார். கல்லாப் பெட்டியடியில் இருந்த திருப்பதி மனம் இரங்கி ராமலிங்கத்திடம் கணக்குப் பொறுப்புகளை யெல்லாம் ஒப்புவித்தார்.

திருப்பதியின் வியாபாரம் கூடி வந்தது. நாட்கள் கூடி வந்தன. தீபாவளி வந்து போயிற்று. பக்கத்து ஊர்களில் அங்கங்கே 'நிலுவை' தங்கியது. வசூல் பண்ணி வருமாறு ராமலிங்கம் அனுப்பப்பட்டார். காளுடுகாத்தானில் அ. முத்தையா அம்பலம் என்ற புள்ளியின் பேரில் இரண்டாயிரம் ரூபாய் 'பற்று' நின்றது. உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும்கூட அந்த மனிதர் கையில் இருந்த பணத்துடன் கடன் உடன் வாங்கி இரண்டாயிரத்தை 'மால்' பண்ணி ராமலிங்கத்தினிடம் கொடுத்தார். முதலாளி கைப்படவே ரசீது போட்டு அனுப்புவதாகச் சொல்லி விட்டு பஸ் ஸ்டாண்டுக்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார் ராமலிங்கம். காரில் ஏறப்போன போது, முத்தையா அம்பலத்தின் வாழ்வு திடுதிடுப்பென்று முடிந்த கதையைக் கேள்விப்பட்டார். மனித மனத்தில் மிருகத்தன்மை ஓடியது. காரைக்குடியை மிதித்தார் ராமலிங்கம். முத்தையா அம்பலத்தின் அநியாய முடிவைச் சொன்னார். "அந்தப் பணம் இனி வராதுங்க!" என்றார். திருப்பதி நம்பினார். மறுதினம் ராமலிங்கம் மனைவிக்கு உடல்நிலை அபாயமாயிருக்கிறதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும், புறப்பட அனுமதி வேண்டுமென்றும் வேண்டினார். புறப்பட்டார் அவர். அவருடன் புறப்பட்டது இரண்டாயிரம் ரூபாய். அது 'ரெடிமேட்' கடைத்திறப்பு விழாவை நடத்தியது. இன்று ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு

மேல் துணிமணிகள் குவிந்திருக்கின்றன! சில மாதங்களுக்கு முன்னதாகத் திருச்சி இரயில் நிலயத்தில் எலும்பும் தோலுமாக வறுமைக் கோலத்தில் காட்சி தந்த 'பழைய தெய்வத்'தின் பார்வையில் படக்கூடப் பயந்து மறைந்த சம்பவம் அவர் வரை என்றென்றும் பசுமை கொண்டதாகும். நம்பிக்கைத் துரோகம் எனும் மூல தனத்தைக் கொண்டு ஆரம்பமான தம் வியாபாரத்தைப் பற்றியோ, இரண்டாயிரம் ரூபாய்க்கு உடைமையாயிருந்தவர் குறித்தோ ராமலிங்கம் மறந்துபோனார்! ஆனால் அதே மறதிதான் இன்று அவரைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கிறது!

வள்ளி மணவாளனை ஏறிட்டுப் பார்த்தார் செட்டியார், ஓவியம் உயிர் பெற்றுப் பேசியது: 'ராமலிங்கம் நீ இப்போது உன்னையே எண்ணிப்பார்...!' என்ற குரல் எதிரொலித்துக் கிளம்பியது.

ராமலிங்கம் எண்ணினார். பங்களாவும், கடையும் நினைவில் ஓடின. இரும்புப் பெட்டியிலிருந்த 'நிதி' முன் வந்தது. ஆனால் அவரது மனத்தின் 'நீதி' அவரைச் சாறு பிழிந்து வதைத்தது. பங்களாவைச் சுற்றிலும் நோக்கினார். அவர் உயிர் பதைத்தது.

ராமலிங்கம் சுவரில் மோதிக் கொண்டார். முருகனின் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார். உள்ளே சென்றார் செட்டியார். நூறு ரூபாய்த் தாள்கள் இருபதை எண்ணினார்; எடுத்துப் பையில் வைத்துக் கொண்டார்; திரும்பினார். திருப்பதியின் படம் அவரது கைகளில் தவழ்ந்தது. வடித்த கண்ணீர் வழிந்து படத்திலோடியது. "முதலாளி! என் தப்பை மன்னித்து விடுங்கள். நீங்கள் எங்கேயிருந்தாலும் தேடிக் கண்டு பிடித்து, உங்களுக்குச் சேர வேண்டிய பணத்தை ஒப்படைத்துவிடுகிறேன். அப்பொழுதுதான் என் மனச்சாட்சி என்னை மன்னிக்கும்,

வேலன் மன்னிப்பான், இனி நீங்க என் நிழலிலே—இல்லை, உங்கள் அன்பு நிழலிலே இனிமேல் நான் இருப்பேன்!'' என்று தம்முள் கூறிக்கொண்டார் ராமலிங்கம்.

* * *

உதயம் கண் மலர்ந்தது; உலகமும் துயில் நீத்தது.

''எசமான்!'' என்று கூப்பாடு போட்டு வந்தான் சமையற்காரன்.

ராமலிங்கம் முருகன் முகத்தில்தான் கண் விழித்தார். 'ஓம் முருகா!' என்று ஓதினார். என்றும் அடைந்திராத அமைதி அவர் மனத்தில் பிறந்தது. ஒடுங்கக் கண்ட யோகியர் உள்ளம் மாதிரி செட்டியாரின் உள்ளம் பக்குவம் அடைந்திருந்தது.

''எசமான்!''

''தவசிப்பிள்ளை, சீக்கிரம் வெந்நீர் போடும். வெளியூர் போகவேண்டும்!'' என்று கூறினார் ராமலிங்கம்.

''எசமான்! ராத்திரி வந்த அந்தப் பையன் உங்க கிட்டே கொடுக்கச் சொல்லி நூறு ரூபாய் பணம் தந்துச் சுங்க!''

ராமலிங்கம் திக்பிரமை அடைந்தார். நூறு ரூபாய்ப் பணத்தின் பின்னணியில் கந்தப்பனின் உருவம் மாத்திர மல்ல, உள்ளமும் பளிச்சிட்டது. ஐந்நூறு ரூபாய்ப் பணத்தில் நூறு ரூபாயை மட்டும் எடுத்துச் சென்ற 'விந்தை நிகழ்ச்சி' புத்துயிர் பெற்றது.

''அவன் எங்கே?''

''காலையிலேயே போயிடுச்சுங்க, அந்தத் தம்பி. இந்தாப் பாருங்க, இதையும் உங்கக் கிட்டே கொடுக்கும் படி சொல்லிச்சு!''

கடிதத்தின் உறை கழன்றது; உரை வாய் திறந்து கொண்டது:

"அன்புடைய ராமலிங்கம்,

என்னை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்; மறந்திருக்கவும் முடியாது. ஆம்; உங்களுடைய மாஜி முதலாளியான திருப்பதியேதான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். தவறுகளை மன்னிப்பவனே மனிதன் என்பதன் உண்மையை உணர்ந்தவன் நான். அன்று நீங்கள் செய்த குற்றத்தை என்றோ மன்னித்த நான், இப்போது உங்களிடம் என் தப்பை மன்னிக்கும்படி கெஞ்சுகிறேன். புதிராகத்தான் தோன்றும். உங்களிடம் சில காலம் வேலை பார்த்த கந்தப்பன் என் மகன். நானேதான் உங்களிடம் அனுப்பினேன். அவன் என் மகன் என்ற உண்மையையும் மறைக்குமாறு எச்சரித்தவனும் நானேதான். ஊழ்வினைப் பயனாக என் நிலை தலைகீழானது. வறுமை ஆட்டிப் படைத்தது. மனைவியை இழந்த எனக்குக் கடைசிக் காலத்தில் என் மகனே ஐந்து, பத்து அனுப்பி உதவினான். ஆனால் உங்கள் பணத்திலிருந்து நூறு ரூபாயைத் திருடி வந்து என் நோயைப் போக்கப் பிரயத்தனப்பட்ட நடப்பு நேற்று முன் தினம்தான் எனக்குத் தெரிந்தது. என் நெஞ்சே என்னைச் சுட்டது. மணச்சநல்லூரில் என் பூர்வீகச் சொத்தாக மிஞ்சி நின்ற என் வீட்டை விற்று, உங்களுக்குச் சேர வேண்டிய பணத்தை அனுப்பியிருக்கிறேன். மிகுதிப் பணத்தில் என் மகனுடைய எதிர்கால வாழ்வுக்கு அடிகோலும் வகையில் சிறிய மளிகைக் கடை ஒன்றையும் தொடங்கிக் கொடுத்துள்ளேன். என் மைந்தன் செய்த தவற்றுக்குத் தண்டனையை நான் அன்றே அளித்துவிட்டேன். நீங்களும் மன்னித்து விடு

வீர்களல்லவா? உங்கள் பணம் உங்களிடம் வந்து சேர்ந்த சேதி கிடைத்ததும்தான், என் ஆவி அமைதியாக அடங்கும்.

இப்படிக்கு,
க. திருப்பதி."

"எஜமான்......! கந்தப்பா!......" என்று கதறிக் கொண்டே பிரயாணப் பையும் கையுமாகப் புறப்பட்டார் ராமலிங்கம்செட்டியார். மூடியிருந்த அவருடைய மனக் கண்கள் மலர்ந்து கொண்டிருந்தன! *

12

கண் மயக்கம்

"அம்மா!" என்று அழைத்தார் அப்பா. கூட்டுக் கறி செய்ய வாழைக்காய் நறுக்கிக் கொண்டிருந்தேன். குரல் கேட்டதும், கைவேலையை அந்தரத்தில் விட்டுவிட்டு ஓடினேன். ஓடும்போது என்னுடன் கூட கைவளை ஒலியும் மெட்டிகளின் ஓசையும் ஓடிவந்தன. இவ்வளவுதானா? 'அம்மா' என்ற அந்த அன்பின் அழைப்புக் குரலுமல்லவா எனக்குப் போட்டியக அமைந்துவிட்டது? போட்டியா வது, ஒன்றாவது? ஆமாம்; போட்டியேதான்! அது பாசத் தின் போட்டி! 'அம்மா' என்றுதான் என்னை என் தந்தை கூப்பிடுவார். ஒருபுறம் எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வரும். "அப்பா, அப்பா! ஒரு சின்னச் சந்தேகம்! ஆமா; நானா உங்களைப் பெற்றேன்?" என்று ஒரு முறை கேட் டேன். என் சிரிப்பையும் அவர் வாங்கிக் கொண்டு அவர் வயிறு குலுங்க நகை சிந்திய நிகழ்ச்சி நான் ஒவ்வொரு தவணையும் எண்ணிக்கொள்ளுவேன்; என்னுள்ளேயே சிரித்துக் கொள்ளவும் தவறுவதில்லை. மறுபுறம், 'அம்மா' என்ற அச்சொல் என் கண்களைக் கிண்டிவிடும். கண் வேதனையை நெஞ்சின் ஈரப்பசை மிகுந்த இடங்களிலெல் லாம் உணர்வேன். நான் மட்டுந்தானா அழுவேன்? ஊஹூம், என்னுடைய உடம்பின் ரத்தநாளங்கள் ஒவ் வொன்றுமல்லவா என்னுடன் இணைந்து விம்மி வெடித் துக் கதறும்?

ஐயோ அம்மா!...

அப்பா திண்டில் சாய்ந்திருந்தார். 'முண்டா பனியன்' அணிந்திருந்தார். தலை முடி காற்றில் அலைந்தது. நான் கூடத்தில் வந்து நின்றதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. முகக்ஷவரம் செய்யப் படாததுடன் மட்டுமன்று, முகத்தில் கவலை ரேகைகளும் ஓடியிருந்ததைக் கண்டேன். எனக்கு உள்ளம் பதைத்தது. மூன்று நாள் இரவு பகலாக அடித்த காய்ச்சல் இப்பொழுதுதான் கொஞ்சம் படிந்திருக்கிறது. இந்நிலையிலே, மன உளைச்சலும் கூட்டுச் சேர்ந்தால், ஒருகால் காய்ச்சல் திரும்பினாலும் திரும்பிவிடுமோ? என்ன செய்வேன்? பகவானே!

"அப்பா!..."

அப்பா கண்களை மூடி மூடித் திறந்தார். இமை இழைச் சந்திப்புக் கோடுகளிலே ஈரம் சொட்டியது. எனக்கு நெஞ்சம் வெடித்துவிடும் போலிருந்தது. அம்மாவின் ஞாபகம் அண்டியிருக்க வேண்டும். நகர்ந்து நடந்தேன்; தாவணித் தலைப்பைக் கொய்தேன்.

"நீ இரும்மா!..." என்று சொல்லியபடி தன்னுடைய துண்டை எறிந்தார் அவர். அது சமயம், படமொன்று கண்ணில் பட்டது. அம்மா அவரருகில்தான் இருக்கிறாள்! விழிநீரைத் துடைத்துக் கொண்டார் அப்பா.

நீ ஏன் அம்மா போய்விட்டாய்?

அப்பாவுக்கு இனி ஆறுதல் சொல்ல யார் இருக்கிறார்கள் அம்மா?

என்னுள் நான் அழுதேன். வேறு நான் என்ன செய்யட்டும்? என்னுடைய தொடரும் வினைகளுக்கு, தொடராத பாங்கிலே விடை அளிக்கத் தெரிந்தவள் என்னை ஈன்றவள் ஒருத்தியேதான்! ஆனால், அந்தத்

'தெய்வத்'தைத்தான் இந்தத் தெய்வம் பறித்துக்கொண்டு விட்டதே? கண்ணுமூச்சி ஆட்டத்தில் கண்கட்டப் பெற்ற வளின் நிலையில் தத்தளித்தேன், இருளெனும் வியன் வெளி அரங்கை அமைத்துக் கொண்டு!

தெய்வமே!

"அம்மா காந்தி! நீ அழறியாம்மா? ..."

"ஊஹூம், இல்லையே!... நான் அழலீங்களே அப்பா!..."

"இல்லே; நீ சும்மா சொல்லுறே!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க! ... இந்தாப்பாருங் களேன்!"

இதழ்கள் முறுவல் கூட்டின; விழிகள் கண்ணீர் கூட்டின.

அப்பாவும் என்னைப் போலவேதான் திண்டாடினர். சுடுநீரும் சுமிழ்ச் சிரிப்பும் கண்பொத்தி விளையாடின போலும்!

"பத்தியம் சாப்பிடுறீங்களா, அப்பா?"

"கொஞ்சம் பொறுத்துச் சாப்பிடுகிறேன் காந்தி!"

கோடை மழைக்கு நேரம், காலம் இருக்க முடியாதல் லவா? வெய்யிலுக்கும் மழைக்கும் ஊடாக, சுவர்க்கடி காரம் பன்னிரண்டு முறை துடித்து அடங்கியது.

வாசல் குறட்டில் அரவம் கேட்டது. எட்டிப் பார்த் தேன். தங்கசாலையிலிருந்து வந்திருந்தான் அவன். எங்கள் கடைப் பையன்; எடுபிடி! கும்பகோணம் அண்டா ஒன் றின் விலை திகையவில்லையாம்; யாரோ அயலூர் ஆள் கேட்கிருராம். எண்பத்துநாலு சேர் நிறுவை நிற்கிற தாம். 'ஆ'விலாசம் போட்டு, 'இ' என்று மீண்டும்

திருத்தப் பட்டிருக்கிறதாம். ஐயப்பாட்டைத் தீர்த்துப் போக வேண்டியது அவன் கடன். மெய்தான்! கருர்விலை யைச் சொல்லி அனுப்பப்பட்டான் சிறுவன்.

"பாப்பா!..."

"அப்பா!..."

அப்பா என்னைப் பார்த்தார். மறுவினாடி. 'கடகட' வென்று சிரித்தார். "நீ என்னம்மா, இன்னும் தவழ்ந்து விளையாடுற பாப்பாவாவே இருக்கிறதுக்கே ஆசைப் படுறே" என்றார்.

சின்னஞ்சிறு பாப்பாவைப்போல தரையில் தவழ்ந்து காட்டிய நான் எழுந்தேன்; தாவணியைச் செம்மையாக்கிக் கொண்டேன். எனக்கே வெட்கமாகத்தான் இருக்கிறது!... வெட்கம் என்ன வெட்கம்!... என் அப்பாவுக்கு நான் என்றென்றும் பாப்பாதானே? பாரதியாரின் பாப்பாப் பாடல் அப்பாவுக்குத் தேன் குழல் சாப்பிடுவதுபோல இருக்குமே!

"அம்மா!..."

"ஊம்!..."

"என்னம்மா நீயே சிரிச்சுக்கிறே?"

'ஒன்றுமில்லை' என்று பாவனையைக் கை முத்திரை யில் அமைத்தேன்.

ஒரு சம்பவம்.

அப்போது, அம்மா இருந்தாள். உடன் அப்பாவும் இருந்தார். நான் ரேடியோப் பெட்டியருகில் அமர்ந்திருந் தேன். ஒரு பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தேன், அம்மா என்னிடம் வந்து, 'பாட்டு என்ன ராகம்?' என்றாள். எனக்குத் தெரியவில்லை. 'பைரவி' என்றாள். தியாகராஜர் போன்ற மகான்களை நினைப்பூட்ட வல்லதாம்

பைரவி; தெய்வாம்சப் பண்பு பொருந்தியதாம். அம்மா சொல்லுவாள். இப்போது அவை அனைத்தும் பறந்து போயின. நான் விளையாடும் கண்ணாமூச்சி ஆட்டத்தில் இந்த ராகங்களும் சேர்ந்து விட்டனவா?

ஹூம்! என்னவோ சொல்ல வந்தேனே! ஆமாம்; இப்போது நினைவு தெளிவு காண்கிறது. நான் அம்மா, அப்பா எல்லாரும் உட்கார்ந்திருக்கையில், அப்பா என்னை நோக்கி "அம்மா!" என்று விளித்தார். உடனே நான், "என்ன மகனே!" என்று கூவினேன் துடுக்கான செயல். ஆனாலும், எனக்கு ஏக மகிழ்ச்சி. பெதும்பைப் பிராயம். நல்ல வேளை; அப்பா கோபிக்கவில்லை; குதூகலம் அடைந்தார். இச் சம்பவம் நினைவுக்கு வரும்போது, சிரிப்புக்கு வழிவிடாமல் தப்புவது சாத்தியமா? நீங்களே சொல்லுங்கள்.

"காந்தி!"

அப்பாவின் வலது கையில், உறை நீங்கப்பெற்ற பெரிய கடிதமொன்று காட்சி கொடுத்தது.

"என்ன அப்பா?"

"இப்படி உட்காரு காந்தி!"

உட்கார்ந்தேன். அப்பா என் மீது ஆழிய நோக்கு ஒன்றைச் செலுத்தினர். விழிகள் கலக்கம் கண்டன.

"அம்மா காந்தி! என்னாலே உனக்கு எத்தனை தொல்லைங்க?...நாள் முச்சூடும் அடுப்படியிலே நின்று எனக்கு வேகவச்சுக் கொட்டறத்துக்கே உனக்கு நேரமும் பொழுதும் சரியாகிடுதேம்மா?... ஐயையோ, பவுன் நிறத்திலே இருந்த உன் மூஞ்சி இப்படிக் கறுத்துப் போயிடுச்சேம்மா?...என்னை மன்னிச்சிடு காந்தி!..."

அப்பா இன்னும் என்னென்ன பாடம் ஒப்புவிக்க வேண்டுமென்று 'மனப்பாடம்' செய்து வைத்திருந்தாரோ? அதற்குள் நான் இடைமறித்தேன். "அப்பா!" என்று ஓங்காரக் கூச்சலைப் பரப்பினேன். என் இதய ஒலி மண்ணில் பறந்தது; நான் விண்ணில் பறந்தேன். என் தகப்பனாரின் இந்தப் பேச்சுக்கு அம்மாவுக்கு அர்த்தம் தெரியுமல்லவா? அம்மா!... அம்மா!...நீ எங்கே இருக்கிறாய் அம்மா?...உன்னுடைய கண்ணாமூச்சி விளையாட்டுக்கு நான் தானா கண்கட்டிக் கொள்ளக் கிடைத்தேன்? அம்மா!...அம்மா! கண்கட்டை அவிழ்க்க மாட்டாயா தாயே?

"காந்தி, ஏம்மா அப்பிடிப்பார்க்கிறே? நான் ஒண்ணும் தப்பாச் சொல்லலே அம்மா!...இந்தாப்பாரு கண்ணு! எத்தனை நாளைக்குத்தான் வயசுப் பொண்ணு நீ இப்படியே பிறந்த வீட்டிலேயே அடைஞ்சுகிடக்கிறதாம்?...ஊர் உலகம் அப்பறம் என்ன சொல்லும்?... தாயில்லாப் பொண்ணுக்கு ஒரு வழி வகை செய்யத்தெரியாத அப்பன்னு என்னை ஏசுவாங்க, காந்தி!...நீ கண்ணைத் துடைச்சுக்க; அத்தோட, என் கண்ணையும் துடைச்சு விடம்மா!...இந்தாப் பாரேன்!......எங்கே சிரி!......என் ராஜாத்தியல்லே...ஆ...ஆ!...சபாஷ்!...இப்ப உன்கிட்டே ஒரு ரகசியத்தைச் சொல்லப் போகிறேனாக்கும்!... காந்தி!...அம்மா காந்தி!...உனக்கு வைகாசி மாசத்திலே கல்யாணம்!...ஆமா!...இந்தாப்பாரு!...இதுதான் மாப்பிள்ளை போட்டோப் படம்!...எங்கண்ணுக்கு ஏத்த மாப்பிள்ளை!...ம், முழிச்சுப் பாரும்மா!"

கண்களைப் பொத்திக்கொண்டு சமையற்கூடத்துக்கு ஓடிவந்துவிட்டேன் நான். எனக்கு நானே கண்பொத்தி விளையாடி விட்டேனா?—'அம்மா!...'

நாளைக்கு என்னைப் 'பெண்பார்க்க' வரப் போகிறார் களாம்!

அப்பாவுக்கு மனம் கொள்ளாத ஆனந்தம்; கண் கொள்ளாக் கனவுகள். அம்மா 'போன' பிறகு—காலம் உண்டாக்கிய அதிர்ச்சி மறைந்திடத் தேவைப்பட்ட இந்த இருபது மாதங்களுக்குப் பின்னர் அப்பாவின் முகத்தில் இப்போதுதான் உண்மையான ஜீவகளையைக் காண் கிறேன். அம்மா இருந்திருந்தால், இந்நேரம் ஆடிப்பாடிக் குதித்திருப்பாள். ஒரு முறை சொன்னாள்;—எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது—உறவு வகைப் பெண் மணக்கோலம் தரித்து எங்கள் இல்லம் தேடிவந்தாள். அப்போதுதான் நான் 'பக்குவம்' அடைந்திருந்தேன். அம்மா என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். "காந்திக் கண்ணு! என்ன அம்மா அப்படி முழிச்சுப் பார்க்கிறே?... ஒனக்குந்தான் வயசு வந்திட்டதே; நாளைக்கு இதுமாதிரி நீயுந்தான் கல்யாணப் பொண்ணு நிற்பே! அப்போ ஒன்னைப் பார்த்துப் பார்த்துப் பெத்த என் வயிறு எவ்வ ளவோ சந்தோஷமும் ஆறுதலும் கொள்ளும்!..." என்று உள்ளத்துச் சிரிப்பு அவ்வளவையும் ஆனந்தக் கண்ணீ ராக்கிப் பேசினாள் அம்மா! ஆனால் இன்று அம்மா இல்லை! அவள் பேசிய வார்த்தைகள் சோகக் கண்ணீர் வடித்த வண்ணம் இப்போது நின்றுகொண்டிருக்கிறேன் நான். ஏன் அம்மா இப்படி என்னைச் சோதித்துவிட்டாய்? ஆண் டவனே, என் அன்னையை ஏன் இவ்வாறு சோதனைக்கு இலக்காக்கிவிட்டாய்? விழி வெள்ளத்தை வடித்தவாறு, தலையை ஏறிட்டுப் பார்த்தேன். நிலாமுற்றத்தில் செஞ் சுடர் செல்வன் விளையாடினான். ஆனாலும் என் பார் வைக்கு ஏதும் சரிவரப் புலனாகவில்லை. கண்களை இருட் திரை மறைத்தது. என்னுடைய கண்களைப் பொத்தி விளையாடினாள் அம்மா! நீ இல்லாமல் இந்த விளை யாட்டை என்னால் ரசிக்க முடியவில்லையே அம்மா?...

ஆலைச் சங்கு ஊளையிட்டது; ஓலம் பரப்பிற்று.

கடையிலிருந்து அப்பா சாப்பாட்டுக்குத் திரும்பும் வேளை வந்துவிட்டது. முகத்தைச் சேலை முகத்தலைப்பி னல் துடைத்துக்கொண்டே அடி அளந்து நடந்தேன். நடையில் தயக்கம். நடை குறிக்கிட்டது. நிலைக்கண்ணுடி கைதட்டி அழைத்தது. நின்றேன்; நிமிர்ந்தேன். என்னை நானே பார்த்துக்கொண்டேன். கண்ணுடியில் என்னை நான் காணவில்லை. என்னுடைய நெஞ்சில் குடியிருந்த 'அந்த ஓர் உருவம்' தான் தட்டுப்பட்டது. எனக்கு வெட் கம் வந்துவிட்டது. அழகுக்கு அரும்புதவுரை மொழியும் முகவிலாசம்; கனவின் காதையைப் படித்துக் கொடுக்கும் நேத்திர அமைப்பு; ஆதரிச வாழ்வின் எதிர்கால வளப்பத் திற்கு உத்தாரம் சொல்லும் இதழ்த்தோற்றம்; சுருட் டைத் தலைமுடி! நான் சுருண்டுவிட்டேன்; என் வெட் கம் என்னையே சுருட்டிவிட்டது. வெட்கம் வராதா பின்னே? ஆமாம், இதற்குப் பெயர்தான் காதலென்று கதைகள் கூறுகின்றனவா? வாழ்க! எங்கள் ஜாதகங்கள் பேழையும் மூடியுமென பொருந்துகின்றனவாம். அப்பா பெருமிதம் காட்டினுர். எங்கள் மனப்பொருத்தம் அந்த ஜாதகங்களுக்குத் தெரிந்துவிட்டதோ? என்னைப் படத் தில் கண்டதும், 'அவருக்குப் பிடித்துவிட்டதாம்! அப்பா பொல்லாதவர்! இதைப்போய் என்னிடம் சொல்லலாமா? அம்மா இருந்திருந்தால், இது அம்மாவின் கடமையாக அல்லது அலுவலாக இருந்திருக்கும்! ஆனுல் நான்தான் அதற்குக் கொடுத்துவைக்காதவளாகிப் போனேனே?

அம்மா, நீ என் கல்யாணத்திற்கு வரமுடியாதா? ஏன் முடியாது! நீ கட்டாயம் வருவாய்; வரவேண்டும்! நீ வேறுயார் கண்களுக்கும் தென்படாமல் போனுலும், நீ என் கண்களுக்குக் கட்டாயம் காட்சி தருவாய்! உன்னு டைய ஆசி எனக்கு நிச்சயம் கிட்டும்! நீ என் தெய்வம்!

என்னை நானே மறந்த ஒரு நினைவில்—நிலையில் ஓடினேன். மனம் அழுதது. பத்து மாதம் சுமந்த அந்த அன்புப் பொறுமையின் தியாக சீலத்துக்கு நான் எப்பிறப்பிலே நன்றிக்கடனை அடைக்கப் போகிறேனோ?

ஒரே ஒருநாள் காய்ச்சல். அம்மாவுக்கு அதைப் பொறுக்க இயலவில்லை. போய்விட்டாள். ஆனால், நானும் அப்பாவும் அல்லும் பகலும் மனக் காய்ச்சலால் அவதிப்படுகிறோமே, இது அம்மாவுக்கு எங்ஙனம் தெரியும்? "ஐயோ சாரதம்!...என்னையும் உன் கண்மணியையும் தவிக்கவிட்டுப்புட்டு, நீ மட்டும் நிம்மதியாய்ப்போயிட்டியே சாரதம்?......தெய்வமே, அடுக்குமா இது?......மனசறிஞ்சு நான் ஒரு பாவமும் செய்யலையே ஈஸ்வரா!...இனிமே நான் எப்பிடி உயிர்வாழப் போறேனோ?...ஐயையோ!..." என்று கூக்குரலிட்டார் அப்பா.

பச்சைத் தண்ணீர் பல்லில் படாமல் இருந்த என்னிடம் தட்டுத் தடுமாறி நடந்துவந்த என் தந்தை எனக்குத் தேறுதல் சொன்னார். 'அம்மா, நீ மட்டும் இல்லாமலிருந்தாக்க, இந்நேரம் நான் செத்த இடமும் புல் முளைச்சுப் போயிருக்கும்!...ம், நீ வந்து ஒரு பிடி சாப்பிடும்மா. தவமிருந்து அவதரிச்ச மகள் நீ. ரவை கண் கலங்கினாலும், நானும் உன் தாயாரும் உன் காலடியிலே பழியாக்கிடப் போம். இனி நான் தானே உனக்கு அம்மா—அப்பா எல்லாம்!...வாம்மா!..."

என் இதயம் வெடித்து விடாதா?..."அம்மா!..."

"அம்மா" என்ற குரல் என் நெற்றித் திட்டத்தைத் தொட்டது.

அப்பா வந்துவிட்டார்!

அம்மாவால் இந்தப் படத்தை உடைத்துக் கொண்டு வரமுடியாதா?...

கொடிக்குக் காய் கனக்காது என்பாயே?

*　　　*　　　*

இது பழமொழி: கனத்தால் இனமாகுமாம்; பணத்தால் ஜனமாகுமாம்!

பூர்வீகம் எங்களுக்குப் புதுக்கோட்டைச் சமஸ்தானம். அங்கிருந்து உறவினர் ஒருவர் 'விருந்தாடி' வந்திருந்தார். அப்பாவைக் காட்டிலும் மூத்தவர்; ஆனாலும், திடகாத்திரத்தில், அப்பாவைவிட மட்டம். ஆள் மாப்பிள்ளைக் கணக்காகக் காணப்பட்டார். கையிலே காப்பிக் கொட்டைச் சங்கிலி. கழுத்திலே 'மைனர் சங்கிலி! 'இந்த ஒரு சலுகைதான் ஒரு வேளை அவரை மாப்பிள்ளையாக மதிக்கவைத்ததோ! இன்னொரு விஷயம். அவருக்குப் போன மாதந்தான் கல்யாணம். இரண்டாங் கல்யாணம் நடந்தது.

அப்பாவும் அவரும் விருந்து உண்டார்கள்; தாம்பூலம் தரித்தார்கள். அமெரிக்க உளவு விமானம் ஏதோ சமீபத்தில் ருஷ்ய நாட்டுக்காரர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது பாருங்கள், அதைப்பற்றி ஏதோ சந்தேகத்தைக் கிளப்பினார் வந்தவர். எங்கள் அப்பாவா அந்த விமானத்தை இயக்கிச் சென்றார்? இல்லை, சுட்டவர்தான் என் தந்தையா? ஏதோ கேட்டார்; ஏதோ சொன்னார்.

எனக்குச் சிரிப்பு மூண்டது.

"ராமையா! நீ ரொம்பவும் இளைச்சுப் போயிட்டியேப்பா! நான் சொல்லுறேன்; கேட்டுக்க. உன் பொண்ணு கல்யாணம் முடிஞ்சா, அதுவும் புருஷன் வீட்டுக்குத் திருச்சிக்குப் பயணப் பட்டிடும். அப்புறம் நீ கிளப்புகளிலே சாப்பிடவேணும். இன்னம் மோசமாகிவிடும் உடம்பு. பேசாமல் நீயும் என்மாதிரி இரண்டாந் தாரம் கட்டிக்கிடு!...அதான் சிலாக்கியம்!'' என்றார் என் சொந்தக்காரர்.

என் மனம் விம்மித் தாழ்ந்தது. சுவர் ஓண்டலில் நின்று, ஜன்னல் கம்பிகளினூடே என் செவிகளை அனுப்பினேன்.

அப்பா இதழ் மலர்ந்தார். நீங்க ஒண்ணு, என் கவலையெல்லாம் என்னோட குழந்தை காந்திக்குக் கல்யாணம் செஞ்சு வைக்க வேணும் என்கிறதுதான். காந்தி கழுத்திலே தாலி ஏறியிருச்சுதானுத்தான் எனக்கு நிம்மதி வரும். என்னோட சாரதத்தின் ஆவியும் அமைதி காணும்! அப்பாலே, என்னைப்பத்தி எனக்குத் துளிகூட கவலை இல்லீங்க. கடை கண்ணியைக் கவனிச்சுக்கிட்டு ஓட்டலிலே சாப்பிட்டுக்கிட்டு காலத்தை ஓட்டிப் பிடுவேன்!...சரி; வாங்க. கடைத் தெருப்பக்கம் புறப்படலாமுங்க!''

இருவரும் புறப்பட்டார்கள்.

காலக் கடிகாரத்தின் முள் கண்ணுக்குக் காட்டாமல் தன்னுடைய பணியினை இயற்றிக் கொண்டிருந்தது.

என்னுள் ஏதேதோ சிந்தனைகள் கிளர்ந்தெழத் துடித்தன, அந்தச் சிந்தனைகளுக்குள்ளே நான் அமிழ்ந்துத் துடிக்கத் தொடங்கிய வேளையில், வாசற்கதவு தட்டப்பட்ட ஓசை கேட்டது. கண்களிலே படர்ந்திருந்த இருளெனும் திரையைச் சுமந்தவளாகவே நடந்து சென்றேன். தாழ்ப்பாளைத் திறந்தேன்.

யாரோ ஒருத்தி நின்றாள்! வயசு முப்பது இருக்கலாம்; இன்னும் சொல்லப் போனால், ஒன்றிரண்டு குறைவாகக் கூட இருக்கலாம். வறுமைச் சகதியில் முளைத்துப் பூத்த அழகுத் தாமரைப் பூவின் நினைவும் உதாரணமும் எனக்கு உண்டாயின. நான் கற்பனைக் கதை புனைபவளல்லள்; இருந்தும், ஏனோ—எப்படியோ உண்டாயின!

உன்னிப்புடன் வந்தவளை நோக்கினேன். அபிஷேகத்துக்குக் காத்து நிற்கும் சிலையைப் போன்று தோன்றினாள். என்னுள் என்னையறியாமலேயே பக்தி உணர்வு தோன்றியது. எனக்கே இந்நிலை விந்தையெனப்பட்டது. மீண்டும் பார்த்தேன். பார்த்த உருவிலே இன்னோர் உருவம் நிழலாடியது.

"அம்மா!"

வந்தவள் அழைத்தாள்.

என் அம்மா என்னை ஆட் கொண்டாள். எதிரே என் தாயைக் காண்பதைப் போலவே நான் உணரலானேன். பக்தியும் பாசமும் பெருக்கெடுத்தன.

அவள் ஏழையாம். ஆதரவு பிடிப்பாய் இருந்த அன்னையும் அப்பாவும் அண்மையில்தான் காலஞ் சென்று விட்டனராம். மாம்பலத்தில் வீடாம். பிறந்த மண் தஞ்சாவூராம். பாட்டுச் சொல்லிக் கொடுத்துப் பிழைக்க வழி கிடைக்குமா என்று அறிந்து போக வந்திருக்கிறாள்.

"உங்களுக்குக் கல்யாணம்..."

நெற்றித் திலகம் என் கேள்விக்குத் துணை நின்றது கழுத்தின் 'வெறுமை' எனக்கு ஆத்ம பலம் ஈந்தது.

உதடசைத்தாள். கன்னி கழியாப் பெண் அவள். "உங்க மாதிரி இன்னும் அஞ்சாறு இடம் கிடைச்சால் என் வயிற்றுக்கும் குடக் கூலிக்கும் கட்டுபடியாகும். வறுமையை என்னாலே தாளவே முடியலே. உயிரை மாய்ச்சிக் கிடலாம்னு கூட சில சமயங்களிலே தோணுது அம்மா!"—கண்ணீரின் வரலாறு.

அப்பாவை அழைத்தேன்; தோன்றினார்—மனக் கண்ணிலே! வந்த உறவுக்காரர் சொன்ன 'ஆலோசனை'யும் வந்து நின்றது. இதோ, இந்த அபலைப் பெண்!

ஒன்றை நினைத்தேன். அபலைப் பெண்ணுக்குக் கொழுகொம்பான அப்பாவையே அளித்துவிட எண்ணினேன்.

நானும் அவளும் உண்டோம்.

சங்கீத அப்பியாசம் குறித்துத் தந்தையின் யோசனையைக் கேட்டுச் சொல்வதாகத் தெரிவித்தேன். பத்து ரூபாய்த் தாள் ஒன்றையும் நீட்டினேன். நாளைக்கு அவள் வந்து விடுவாள்!

"ஆமா, உங்க பேரு?"

"நீலாட்சி."

* * *

மணவினை அழைப்புக்களில் விலாசம் எழுதுவதில் முனைந்திருந்தார் அப்பா.

சீதளக் கதிர்கள் புள்ளிக் கோலம் இட்டுக் கொண்டிருந்தன.

"அப்பா."

"என்னம்மா?"

"உங்க உடம்பு ரொம்ப இளைச்சுப் போச்சு அப்பா,"

'சிணுங்கல் இருமல்' ஒன்றை முதலில் வெளிப்படுத்திய பின், மெல்லிய சிரிப்பைக் கொட்டினார் அவர். "அதாலே இப்ப என்னம்மா?"...என்றார்.

"நீங்க என்னப்பா இப்படிக் கவலை இல்லாமப் பேசுறீங்களே?"

"எங்கவலை யெல்லாம் உம்மேலேதாம்மா! நீ சந்தோஷமா இருந்தா, அதாம்மா எனக்குச் சந்தோஷம், நிம்மதி! நீ குடியும் குடித்தனமுமா இருக்கிறதை உன்னோட புகுந்த வீட்டிலே வந்து பார்த்து மகிழ்ந்து திரும்புற

திலே உண்டாகக் கூடிய நிம்மதி ஒண்ணிலேயே நான் என் சொச்சக் காலத்தையும் கழிச்சிப்பிடுவேன் காந்தி!...''

"அப்படின்னு, நீங்க என்னைப் பார்க்கிறதுக்கு எப்ப வாச்சுந்தான் வருவீங்களா அப்பா?...''

"பின்னே என்னம்மா?...அது தானே அம்மா முறை?...நானும் உன்னோடவே வந்திட்டா, அப்புறம்ஊர் உலகம் என்னை இழிவாப் பேசாதா?...மகள் வீட்டுக்கு அப்பன்காரன் விருந்தாடியாட்டம் வந்து திரும்புறதுதான் நடை முறைப் பழக்கம்!...நான் அங்கே வந்தா, இந்தக் கடையை யார் பார்த்துக்கிடுவாங்களாம்?''

"உங்களுக்குச் சாப்பாடு...''

"பட்டணத்திலே ஆயிரம் ஓட்டல் கடை இருக்கே காந்தி?''

"அந்தச் சாப்பாடு உங்களுக்கு ஒத்துக்கிடாது அப்பா!''

"அதெல்லாம் நாளா வட்டத்திலே சரிப்பட்டுப் போயிடும் காந்தி!''

"ஊஹூம்!...''

"சரி; இப்ப என்னை என்ன காந்தி செய்யச் சொல்லுறே...?''

நான் எப்படிச் சொல்லப் போகிறேன்?

நேற்று அப்பா வீட்டில் இருக்கையிலேயே மீனாட்சி வந்தாள். அப்பா அவளைப் பார்த்தார். சங்கீதப் பயிற்சியின் விவரத்தை மட்டிலும் அப்போதைக்குச் சொல்லி வைத்தேன். "அதுக்கென்ன, திருச்சிக்கே அழைச்சிட்டுப் போயிடேன். நேரமிருந்தா, மாப்பிள்ளையையும் சங்கீதம் கத்துக்கச் சொல்லேன். அவரும் பெரிய பண்ணையார்

வீட்டுப் பிள்ளை. சங்கீதத்தாலே பயிர் பச்சை செழிப்பமா வளரும்னு வேறே பேப்பர்க்காரன் சொல்றான்!'' என்றார்.

ஆனால், நீலாட்சியிடம் நான் உரையாடல் நிகழ்த்திய அந்தரங்கம் குறித்து அப்பாவிடம் எப்படித் தெரிவிப்பது?

அம்மாவை எண்ணித் தொழுதேன்; தந்தையின் நலம் காணவேண்டுமென்ற ஒரே குறிக்கோளில் நான் சுழன்றேன்.

''அப்பா!''

''அம்மா!''

வியர்வை வழிந்தது. நாசூக்காகச் சொல்லிவிட்டேன்.

அப்பா விரக்தி தொடுத்துச் சிரித்தார். ''பணம் காசு நூறு இருநூறு கொடுத்திடலாம், வேணுமானால் வேறிடத்தில் மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் செஞ்சு வைக்கலாம், பாவம் நீலாட்சி!''

அப்பாவைப் பார்த்தேன். ஒப்புக்குச் சிரித்த முகம் ஏந்தியிருந்தார். சோகம் தவழ்ந்த முகத்தோடு சதா சர்வ காலமும் திகழும் அவரை நான் மறக்க முடியுமா? அம்மாவின் படத்தையே வெறித்துப் பார்த்த வண்ணம் வேதனையின் மடியில் சிரம் பதித்துக் கிடந்த நிகழ்ச்சிகள் ஒன்றா, இரண்டா?

வேளைக்கு ஒரு பேணுதலும் நாளைக்கு ஒரு போஷணையுமாகக் கவனித்து வந்த அம்மாவின் ஸ்தானத்தில் இருக்கத் தகுதி வாய்ந்தவள் நீலாட்சி ஒருத்திதான்! அதிருஷ்டம் தேடி வந்திருப்பதாகவே அவள் கருதுகிறாள்!

''அப்பா, நீங்க நீலாட்சியைக் கல்யாணம் கட்டிக்கிறதாய் வாக்குக் கொடுத்தால்தான் நான் மணவறையில் குந்துவேன்!''

வீறு கொண்டு பேசினேன் நான்.

"அம்மா!"

அலறினார் அவர்.

"நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன் அம்மா! முதலிலே உன்னோட கல்யாணம் நடந்திடட்டும்!"

"அப்பான்னா அப்பா...நல்ல அப்பா!... தங்க அப்பா.'

நான் 'பேபி' ஆனேன்!

* * *

பெற்றவள் வாழ்த்தினாள். உடல் பதித்து மனம் பதித்துக் கை தொழுதேன். என் கழுத்தில் 'மங்கல நாண்' விளங்கியது.

'அத்தானோடு' நான் திருச்சிக்குப் புறப்பட வேண்டுமாம்!—நாள், நட்சத்திரம் பார்த்து விட்டார்கள். புது மணமும் புது மனமும் பெற்ற நான் அந்த ஒரு கட்டத்தை நினைவுக்குக் கொணர்ந்தேன். ரத்தம்முழுவதும் மண்டைக்கு ஓடி மண்டை வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது! 'என் அப்பாவைப் பிரிஞ்சு நான் எப்படி இருக்கப் போகிறேன்? அம்மாவை இழந்த நான் அப்பாவையும் பிரிஞ்சு அனாதையாக இருக்க வேணுமா? இதுதான் என்னுடைய தலை விதியா?...என்னுடைய கண்கட்டு இனிமே அவிழவே அவிழாதா?' கடவுளே!...'—புலம்பினேன்!

வீடு 'ஜே-ஜே' என்றிருந்தது.

அப்பா வந்தார். அந்தி சந்திப் பொழுதின் அந்தமே தனிப் பண்பு கொண்டது. தம்முடைய திருமணத்துக்கு நாள் குறிப்பதற்குக் குறித்திருந்த கெடு இன்றுதான். நீலாட்சியை நான் மறக்கவே முடியாது! 'சின்னம்மா!... சித்தி!...இரண்டாவது அம்மா!'—மேனி சிலிர்த்தது.

'அப்பா' என்று நானே கூப்பிட இருந்தேன். அதற்குள் அவர் முந்திக் கொண்டார். "அம்மா காந்தி கொஞ்சம் இப்படி வாம்மா!"

அமைதி கனிந்தது.

உறை ஒன்றைத் தந்தார்.

"அம்மா!

என்னை மன்னித்து விடு. என்னில் உயிர் வாழும் உன் அம்மாவைப் பிரித்து விடாதே தாயே!...உன்னைப் பிரிந்தும் நான் வாழச் சக்தியற்றவன். இன்றிரவு, நம்முடைய பாத்திரக் கடையை விலைபேசி முடிக்கப் போகிறேன். இனி எப்போதும் உன்னுடனேயே இருப்பேன். ஆண்டவன் நல்ல வழி காட்டி விட்டான். மாப்பிள்ளைக்கும் இதில் பெருமையுண்டு. நீலாட்சி நல்ல பெண். அவளைத் தகுந்த இடத்தில் 'வாழ' வழி செய்கிறேன்.

இப்படிக்கு,

உன் அப்பா!"

"அப்பா!"

அப்பாவின் தோள்களில் சாய்ந்தேன்; கண்ணீர் ஓடியது. நிமிர்ந்தேன். விழிகளை விரித்தேன். அப்பாவின் உருவிலே அம்மாவையும் தரிசித்தேன்! "அப்பா!... அம்மா!"—புத்தொளியின் புத்துணர்வு படர்ந்தது. கண்களை விரித்து விழித்துப் பார்த்தேன். ஆமாம்; புது ஒளி! 'கண்கட்டு' அகற்றப்பட்டுவிட்டதா? 'கண்மயக்கம்' அகன்று விட்டதா?...'

ஆஹா...!

ஈஸ்வரா...!

13

எழுதிச் செல்லும் விதியின் கை!

ஊர் வாய் முணு முணுத்தது—வல்லமை அதிகம்; எதிரொலிக்குப் பலம் மிகுதி.

"முத்தம்மாவும் முருகேசனும் புண்ணியம் செஞ்சவுங்கதான்—புருஷன் — பொண்சாதி ஆகிப்பிட்டாங்க. அவங்க மாரியாத்தாளுக்கு எடுத்துப் போட்ட பூ நல்ல பூ...ஆத்தாடியோ! முத்தம்மா கழுத்திலே மஞ்சக் கயிறு ஏறுறதுக்குள்ளே எத்தனை தொல்லை, என்ன பாடு?... பாவம், முருகேசன் தவியாத் தவிச்சிப் பூட்டானே?... அன்னிக்கு எளுதி வச்சவன் தலையெழுத்தை அழிச்சி எளுதிப்பிடத்தான் தலைகீழா நின்றான் மாயாண்டி. முடிஞ்சிதா?...முத்தம்மாவும் முருகேசனும் சின்னஞ் சிறுசுகள். செல்லத்தேவன் கம்மாயிலே மீன் நண்டு பிடிச்சி விளையாடுற காலத்திலே இருந்து இதுக ரெண்டும் புருஷன் பொண்டாட்டி விளையாட்டு விளையாடிச்சுதுக. இன்னிக்குத்தான் அதுக கனவு பலிச்சுது. பிள்ளையும் குட்டியுமா சொகமா யிருக்கோணும். ஊர் காத்தா அந்த மாரியாத்தா காப்பாத்தணும்!..."

*　　　*　　　*

முதல் இரவு—போதையும் போதமும் 'உடலுறவு' கொள்ளும் ஒரு சுபதினம்!

"இரவே, நீ வா!"—தம்பதி சமேதராக வரவேற்றனர்.

இரவு வந்தது. இரவு மட்டுமா வந்தது. நிலவும் வந்தது; தென்றலும் வந்தது.

முத்தம்மாவுக்கு வெட்கம் வந்துவிட்டது. 'நாணம்' என்ற சொல்லைத்தான் போடவேண்டும், இல்லையா? ஆமாம், நாணம் வந்துவிட்டது.

முருகேசன் கணத்துக்குக் கணம் தன்னையே இழந்து கொண்டிருந்தான்.

மதுக்கிண்ணம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. சட்டத்தைத் தூர விலக்கி வைத்துவிட்டு; உலகத்திற்கு கண்ணும்பூச்சி விளையாட்டுக் காட்டி விட்டு!

"மு... த்... த... ம்... மா!..."

"........."

"ஏலே, பொண்ணு!"

"ம்..."

அவள் சிரிக்கவில்லை; அவன் சிரிக்கச் செய்து விட்டான்.

மேனியில் தவழ்ந்து கிடந்து, பிறகு சரிந்து விழுந்து, பிறகு தன் நிலை அடைந்து கொண்டிருந்தது சுங்கடிச் சேலை.

அமைதி.

விண் மீன்களின் சிரிப்பில் வெட்கம் வந்துவிட்டதோ இளசுகளுக்கு. வரட்டும், வரட்டும்.

"முத்தம்மா!...அந்தப் பயல் மாயாண்டி நம்ப ரெண்டு பேரையும் கூண்டோடே கைலாசத்துக்கு அனுப்பிப்பிடத்தான் திட்டம் போட்டிருந்தான். ஆனு முடியல்லே! தெய்வமின்னு ஒண்ணு இல்லாமையா?...அந்தத் தெய்வம் இல்லையானு, நம்ப ரெண்டு பேரும் இப்பிடி

தன்னந்தனியே அடைபட்டுக் கிடக்க ஏலுமா?...நான் சொல்றேன் பாரு!—அந்தப் பய மவன்—மாயாண்டி நிஜமாகவே ரோசக்காரனா யிருந்தா இம்மா நேரம் கழுத்திலே தூக்குக் கயிற்றை மாட்டிக்கிட்டிருக்கணும்!... ...ஆ! இப்போ நெனைச்சாக்கூட மனசு திகில்படுதே? போன இளமை நம்ப கண்ணாலப்பந்தலிலே கூட துணிஞ்சு—இரக்கப்படாம தீ வச்சுப்பிட்டானே?... ...தெய்வம் நின்னு கொல்லுமுன்னு பெரியவங்க—நாலும் அறிஞ்சவுங்க சொல்லுறதுண்டு. வரட்டும்''

"மச்சான், நல்ல நாளும் பெரிய நாளுமா நீங்க எதுக்கு இப்ப அந்தப் பாவியைப் பத்தி மனசிலே நெனைக்கறீங்க? முறைப் பொண்ணு குறிதவறிப் போயிடுச்சேன்னு ஆத்திரம் அவனுக்கு!''

"கட்டாணி முத்தே! ஒன்னை நான் எப்பவும் மறக்கவே மாட்டேன். அந்த நாளிலே நாம்ப ரெண்டு பேரும் நாவ மரத்தடியிலே ராக்காச்சி அம்மன் பொட்டலிலே நின்னு கையடிச்சுச் சத்தியம் செஞ்சிக்கிணமே, அதை நீ காப்பாதிட்டே. அது போதும்.''

"அத்தான் வேறே பேச்சு பேசமாட்டீங்களா?''

"ஓ...!'' என்று உத்தாரம் சொன்னான் உரிமை பூண்டவன். அவன் கண்களிலே மோடி கிறுக்கியது.

ஓலைக் குடிசையைப் பிய்த்துக்கொண்டு காற்று வீசத் தொடங்கியது. முல்லைச் சிரிப்பருப்பிக் கொண்டிருந்த தாரகைகள் மண் குடிசையை வசந்த மண்டபமாக ஆக்கிக் கொண்டிருந்தன.

ஜோடிப் பெருமூச்சு; அனற் காற்று.

கொட்டா மணக்கெண்ணெய் அகல் விளக்கை அணைக்க இரு உயிர்கள் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தன.

அப்பொழுது…

"மச்சான்!"

"என்ன, முத்தம்மா?…"

காற்றும் மழையும் கலந்தடித்தது.

'சக்தி காற்ருகி விட்டாளா?'

'உலகம் ஓடுநீராகிவிட்டதா?'

விளக்கு அணைந்தது!

"ஐயோ, மச்சான்!" என்று அலறினள் முத்தம்மா.

ஓலைக்குடிசை பிய்த்துக்கொண்டது. கம்பும் கழியும் சிதறி ஓடின.

முத்தம்மா மயங்கி விழுந்தாள்.

முருகேசன் விக்கி விக்கி அழுதான்.

* * *

மாயாண்டி சிரித்தான்—அகங்காரச் சிரிப்பு;ஓங்காரச் சிரிப்பு.

பத்துரூபாய் நோட்டுகள் இருபது சிதறி ஓடின.

அருகில் நின்ற கையாட்கள் சிரித்தனர்.

ரத்தப்பலி ஏற்க 'வேளை' பார்த்துத் துடித்துக் கொண்டிருந்த அந்த 'பிச்சுவா'வை வீசி எறிந்தான் மாயாண்டி.

"ஏலே, காத்தா, தீத்தான்! பாத்தீங்களா, ஆண்டவன்கூட எம்பக்கமாயிட்டாரு! இல்லாப் போனா, பாவம் முத்தம்மா—முருகேசன் முதல் இரவு அன்னிக்கு சமயம் பார்த்து இப்படிப் புயலும் வெள்ளமுமா உலகம் சீரளியுமா?…எனக்கு கிடைக்கவேண்டியவளை அந்தப் பயல் முருகேசன் அடைஞ்சிட்டான். இதை பார்த்துக்கிட்டு

நான் சும்மா யிருப்பேனு? ம்!...புறப்படுங்க!...காற்று மழை ரெண்டு பேரையும் பலி வாங்கிறதுக்கு முன்னடி நான் பழி வாங்கவேணும்! ஜல்தி!..."

கத்தி மின்னியது.

வெட்டிப் பாய்ந்த மின்னல்கள் கத்திக்கு அழகு கூட்டிற்று.

ஓடினுன் மாயாண்டி.

காற்றும் மழையும்!...ஊழிக் கூத்தின்தொடக்கமா?.. முடிவா?...

உலகம் அழுதது; "கடவுளே! உனக்கு ஈவு இரக்கம் இல்லையா?...ஏழைபாழைங்களை ஏன் இப்படி ரெண்டாந் தடவையும் சோதிக்கிறே?...மூணு வருசத்துக்கு முந்தி உண்டான பசி இன்னங்கூடவா அடங்கலே?...ஐயோ! நாங்க இனி எங்கே போவோம்? என்ன செய்வோம்?... தெய்வமே! எங்களை ஏன் படைச்சாய்?...பாவி!

மாயாண்டியின் சிரிப்பு எல்லை கடந்தது.

அந்தக் குடிசை தெரிந்தது—முத்தம்மா, முருகேசன் குடிசை!

"ம்...ஆரம்பியுங்க!"

கவண் கற்கள் குடிசையைச் சாடிப் பறந்தன.

கத்தியைக் குறிவைத்து வீசப்போனுன் மாயாண்டி; வலது கை ஓங்கி உயர்ந்தது.

மறுகணம்...

"ஐயோ!" என்று அலறிக் கீழே விழுந்தான். அவனுடைய உடம்பின்மீது ஆலமரக்கிளை 'தவழ்ந்து' கிடந்தது. ரத்த நுரை சிந்தியது வாயிலிருந்து. கண்களைத் திறந்தான்; மரணம் விளையாடியது-வாலைக் குமரிபோலே!

கைகள் இரண்டினையும் சேர்த்து, மிச்சம் மீதப்பட்ட பலத்தைத் துணைக்கு அழைத்துக்கொண்டு ஆலமரக் கிளையைத் தரையில் தள்ளிவிட்டு, எழும்ப முயன்றான். முடியவில்லை. ரத்தநுரை புது வெள்ளமாகப் பெருக் கெடுத்தது. வஞ்சத்தின் நிறம் சிவப்பா?

முதன் முறையாகக் கண்ணீர்விட்டான். யார்?— மாயாண்டி!

மனம் பேசியது? "எனக்கேனுதான் இந்தப் புசலும் வெள்ளமும் தோணுச்சுதா...? என் மனசைத் திறக்கவா? இல்லே, நான் இந்த லோகத்தையே ஒரே முட்டாத்துறந் திறவேதானு?...புத்தம் புது தம்பதிகளோட வாழ்வுக்கு முடிவுதேடி வஞ்சம் தீர்க்க மனசிலே நெனைச்சேன்: இப்போ, ஆண்டவனே எனக்கு முடிவுதேட நெனைச்சிட் டாரே! ஐயோ!...பாவம், முருகேசனுக்கும் முத்தம்மாளுக் கும் இன்னிக்குத்தானே சாந்திக் கண்ணுலம்!...என்ன ஆனுங்களோ, இந்தப் புயலிலே?...மண் குச்சாச்சே?..."

தெய்வமே, நீ வாழி!—சாவின் சந்நிதியிலாவது மனச் சாட்சியை விழித்துக்கொள்ளச் செய்துவிட்டாயே!

யானைப் பலம் வந்தது. மனித மனம் கூட்டுள் அடங் கிக்கொண்டது. ஓடினுன்.

விண்ணைக் கிறுக்கிச் சென்றது மின்னல்.

பாழடைந்த வீட்டில் 'தனித்தனியே' கிடந்தார்கள் முருகேசன்—முத்தம்மா தம்பதிகள்!

மாயாண்டி இரண்டாம் முறையும் அழுதான்.

* * *

"நீங்க ரெண்டுபேரும் என்னை மன்னிப்பீகளா?...... பொழுது விடிய இன்னம் பத்து நாழிப் பொழுதுக்கு

மேலேயே இருக்குது. நல்லநாளும் அதுவுமா தேதிவைச்ச சாந்திக் கண்ணாலத்தை மாத்தப்படாது. இதையும் உங்க வீடு கணக்காகவே நெனைச்சுகிடுங்க. முத்தம்மா, போம்மா!...ஊம்...நீயும் போ, முருகேசா!...கடவுளே, இப்பத்தான் நான் நிசமான மாயாண்டியா ஆனேன்—மனுசன் ஆனேன்!...''

தலை நீட்டிய நிலவு ஓடியே ஓடிவிட்டது!

*

14

பிறந்த நாள்

ஏட்டடிக் குச்சுக்குள்ளே வாசம் செய்துவந்த அவள், அந்த இரண்டடுக்கு மாளிகைக்குள் நுழைந்து வேலை செய்யும் அதிர்ஷ்டத்தைப் பெற்றதானது, தன்னுடைய பூர்வ ஜென்மத்தின் பலனே என்பது அவளது அசைக்க முடியாத—அந்தரங்க சுத்தியான நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையே அவளுக்கு வாய்த்திட்ட ஓர் எதிர்காலமாகவும் தோன்றியது. ஆகவே, அவள் அந்தப் பெருமனையின் ஓர் அங்கமாகக் கருதப்படும் அளவுக்கு உழைத்தாள். உண்மை தப்பாமல் உழைத்தாள். காஞ்சீவரம் பட்டுப் புடவைகளும் ஷிபான் ஸில்க் சேலைகளும் புழங்கிய இடத்தில், அவள் மானம்புச்சாவடிக் கைத்தறிச் சேலையை கிழிசல் மறைத்து, அழுக்கைத் கசக்கித் துவைத்துக் கட்டிக் கொண்டுதான் நடமாடினாள்!

'நாகரிகம், செல்வந்தர் இல்லங்களிலேதான் தோன்றுகிறது!' என்று ஒரு வாசகம் உண்டு. இது முற்றிலும் உண்மை. இல்லாவிட்டால், அந்தப் பங்களாவில் ஒரு வாரத்துக்குப் பதினைந்து தினுசுப் புடவைகளும் பதினைந்து ரக சோளிகளும் அர்ஜண்ட் சலவைக்கு அனுப்பப் படுமா?

முன்மாதிரி வேலாயி இல்லை இப்போது. தலைச்சன் பிறந்தும் ஒரு வருஷத்துக்கு மேலாகி விட்டது. பழைய

தெம்பு அழிந்தாலும், உடற்கட்டு கட்டுவிடவில்லை யானதால், அவள் ஓடியாடி அலுவல் பார்க்க மனம் சளைக்கவே மாட்டாள். அவள்கூட தன் எஜமானி அம்மாளிடம், 'அம்மா! உங்க புடவைங்களையெல்லாம் நானே ரைட்டாத் துவைச்சுப் போடுறேனுங்க!' என்று நயம் பயமாகச் சொல்லியுங்கூட, தாரிணிதேவிக்கு அந்த யோசனை கேவலம் பத்து ரூபாய் சம்பளத்துக்கும் மிச்சம் மீதிகளைச் சாப்பிடுவதற்குமே உரிய ஒரு வேலைக்காரியின் தகுதிக் குறைவான ஒரு யோசனையாகவே பட்டது. எனவேதான் அவள் முகத்தில் அடித்த மாதிரியாக, 'நீ துவைச்சுக் கிழிச்சேடி. போ!' என்று எரிந்து விழுந்தாள்.

வேலாயிக்கு என்ன, வேலை மிச்சம்! அந்த நேரத்தில் சின்ன எஜமான் ராஜாவை 'ரோலிங் சேரில்' வைத்து ஆட்டி விளையாட்டுக் காட்டினால் போச்சு! அதே சாக்கில், தன்னுடைய தலைமகளையும் யாரும் பார்க்காத சுப வேளையிலே சுழன்றுடும் நாற்காலியில் குந்தவைத்து, ஆட்டிவிட்டு; சிரிக்கச் செய்து, தானும் சிரித்துப் பூரித்தால் போச்சு! 'வேலாயி, உம்பாடு ஷோக்குத்தான்! பெரிய வீட்டிலே வேலை செய்யிறே! என்னைப் பாரேன், ஒரு நாளைக்கு இந்தத் தஞ்சாவூரை ஒம்பதுவாட்டி சுத்துறேன், சுத்தியும் நம்ம பழைய பேப்பர் வியாபாரம் சுரத்துத் தட்டு தானு அதான் கிடையாதாக்கும்! ம்...!' என்று அவள் கணவன் காத்தமுத்து சமயா சமயங்களில் மனம் காய் வதும் மெய்தான்.

'எனக்கென்னுங்கிறேன் கவலை மச்சான்! எங்க பெரிய எசமானருக்கு லேவாதேவி வியாபாரம்! ஒரு நாளைக்கு லட்சக்கணக்கிலே பணம் புரளும். ஒருநாளைக்கு எம்புட்டு வெள்ளைக் கடுதாசி எழுதிஎழுதி முத்திரைத் தலை ஒட்டி கையெழுத்து எல்லாம் வாங்குறுரு எங்க கணக்குப்

பிள்ளை! அடேயப்பா! நாளைக்கு எங்க சின்ன ஐயா கிட்ட கொத்துச்சாவி வந்தானதும், அப்பாலே எம்பாடு வேட்டைதான்!' அப்புறம் நம்ம செவந்திக்குட்டிக்குக்கூட நல்ல அதிர்ஷ்டம்தான்! என்று மெய்ம்மறந்து போய்விடுவாள்வேலாயி! கொண்டவளின் பேச்சைக் கேட்க கேட்க, காத்தமுத்துவுக்குக்கூட வ. உ. சி. நகர், ராஜப்பா நகர், மேற்கு அலங்கம், கீழவாசல், மானம்புச் சாவடி என்று கால்கடுக்கச் சுற்றியலையும் சோர்வில் ஓர் ஆறுதல் கனியவே செய்தது.

மூன்று மாசமாக இந்த நாடகம்!

* * *

தாரிணிதேவியார் வேலைக்காரியைக் கூப்பிடுவதற்கு ஒரு 'காலிங் பெல்' வாங்கி வைக்க வேண்டுமென்று விழைந்தாள். பின், என்னவாம்? கேவலம், ஒரு வேலைக்காரியை—'செர்வண்ட் மெய்டை' அழைக்கக்கூட இப்படித் தொண்டைத் தண்ணீரைச் செலவு செய்ய வேண்டியிருக்கிறதே?

கொல்லைப்புறத்தில் தென்னங்கன்றின் நிழலில் குத்துக் காலிட்டுக் குந்தியவளாக, பாத்திரம் பண்டம் கழுவித் தேய்த்துச் சுத்தம் செய்து கொண்டிருந்தவள், எஜமானியின் ஒன்பவதாவது சிறுமூச்சுப் பெருங்குரலைக் கேட்டு ஓட்டமாக ஓடினாள். 'அடியே...நீ என்னடி! சரி...சரி! வருகிற வெள்ளிக்கிழமை நம்ம ராஜாவுக்கு—எங்க ராஜாவுக்குப் பிறந்த நாள் விழாவாக்கும்! வேலை நிரம்பக்கிடக்குது! ஓடியாடி!' என்றாள்.

'பிறந்த நாளா? சின்ன முதலாளி பிறந்துதான் மூணுவருசம் ஆகப்போகுதே? பிறந்த நாளுன்னு என்னுவாம்?'

எல்லாக் கேள்விகளையும் கேவலம் ஒரு வேலைக்காரி பற்களில் நாவை இழைத்துக் கேட்டுவிட முடியுமா?

மணி ஏழு அடித்தது.

ராஜாவுக்குக் குளிப்பாட்டிச் சட்டை போட வேண்டும்.

வேலாயி உள்ளே பார்வையினைச் செலுத்தினள்.

பெரிய ஐயாவும் கணக்குப்பிள்ளை ஒருவரும் சிறிய பீரோவைத் திறந்து போட்டுக் கொண்டு அதன் ஓரத்தில் அமர்ந்து இருந்தார்கள். புரோநோட்டுக்கள் சிதறியிருந்தன. குறிப்புச் சிட்டை கணக்குப் பிள்ளையின் கையில் இருந்தது. மாதக் கடைசி 'செல்' வைக்க வேண்டியவைகளையும், வட்டி வாங்க வேண்டியவைகளையும், காலவதி ஆகும் தருணத்தை நெருங்கியவைகளையும், காதுகிள்ளி பைசல் ஆக வேண்டியவைகளையும் இனம் பிரித்து 'செட்டில்' செய்ய வேண்டாமா? அந்தக் குவியலுக்கு மத்தியில்—அதாவது, ஆயிரக்கணக்கான ரூபாய்களை விழுங்கி ஆறு காசு வெள்ளைக் காகிதங்களாக வடிவெடுத்த அந்தப் பிராமிஸரி நோட்டுக் குவியல்களுக்கு மத்தியில் அமர்ந்து லூட்டி அடித்துக் கொண்டிருந்த ராஜாவைக் கைத்தாங்கலாகப்பற்றி இழுத்துச் செல்வதற்குள் வேலாயிக்குப் பெருமூச்சு முட்டிற்று. கால்மூட்டு வலித்தது. 'நாலு வீசை தானுமோ? ப்பூ! நான் என்னத்தைக் கண்டேன்? பொட்டைச்சி!'

திலகர் திடலில் ஏதோ கூட்டம். கதிர் அரிவாள் கொடிகள் பறந்தோடின. மைக்ரபோன் வைத்துப் பேசிச் சென்றூர்கள்!

வேலைக்காரிக்கு வேடிக்கைப் பார்க்கிற புத்தி இருக்லாமா?

ராஜா இப்போது ஜம்மென்று இருந்தான். யாட்லி பவுடர் பூசும் உறவும் உரிமையும் அவன் அம்மாவுக்கே உண்டாம்!

வேலைக்காரி வந்து தலையைச் சொறிந்தபடி நின்றாள். தலையில் பேன் இல்லை. உப்பு புளிக்குக் காசு வேண்டும். ஆமாம், சம்பளத்தில்தான்! அவள் மச்சானுக்குச் சோறு ஆக்கிப் போடவேண்டாமா? செவந்திக்குட்டிக்கு நேரம் காலம் தெரியவே மாட்டேனென்கிறது—அழுவதற்கு! ஆனாலும் பெற்ற வயிறு துடித்தது.

'இருடி!'

பங்களாச் சொந்தக்காரி திரும்பினாள். ஒரு கட்டு நியூஸ் பேப்பர் வந்து விழுந்தது. 'இந்தாடி! இதை உம் புருஷன் கிட்டே கொடுத்து வித்து அந்தப் பணத்தை சம் பளத்திலே கணக்குவச்சிக்கிட்டு நீ எடுத்துக்கடி!' என்றாள் அதிகாரத் தோரணையுடன்.

'அம்மா! வந்து...' என்று பல்லைக் காட்டினாள் வேலாயி. பல் வலியா ஊஹூம்!

'அரை ரூவாகூட தாளாதும்மா வந்து...'

'போடிபோய்த் தொலை! மெட்ராஸ் வேலைக்காரி கூட உங்கிட்ட பிச்சை வாங்கணும்! சரி பேப்பர் பணத்தை நீயே இனுமா எடுத்துக்கடி! ஐயா காதுக்கு எட்டப் போகுதடி! ஓடிட்டு ஜல்தியா வரவேணும்!'

அனுமத்தாக ஒரு ரூபாய் லாபம் கிட்டிய மகிழ்வின் திளைப்பில், 'பிறந்த நாளின்னு என்னுங்க அம்மா?' என்று கேட்டுத் தெளிய வேண்டுமென்று கொண்டிருந்த நப்பாசை ஈடேறவில்லை!

*   *   *

செவந்திக் குட்டியையும் பேப்பர் கட்டையும் மாற்றி மாற்றித் தூக்கி வந்து குடிசையை அடைத்தவள், பேப்பர்க் கட்டைப்பரணில் வீசிவிட்டு, செவந்திக்குட்டியை மண் தரையில் வாகு பார்த்து வாட்டமாக உட்காரவைத்து அருமை மகளுக்குப் பாலமுதம் ஊட்ட, கொட்டடி

ரவிக்கை முடிச்சுக்களை அவிழ்த்த நேரத்தில், காத்தமுத்து பேப்பர் இருக்கா, பேப்பர்! கல்கி, ஆனந்த விகடன், குமுதம், தினமணி! பேப்பர்!' என்று கத்திக்கொண்டே உள்ளே நுழைந்து, பெரிய விகடத்துணுக்கைச் சொல்லி விட்டவன் போலச் சிரித்து வைத்தான். இம்மாதிரி சந் தர்ப்பங்களிலே சிரிக்காவிட்டால் ஆபத்து என்பதை ஊகித்து வைத்திருந்த வேலாயியும் கடனுக்குச் சிரித்து வைத்தாள். காலைக் கஞ்சியை கோப்பையில் வார்க்கும் பொழுது, 'ஆமாங்கிறேன். பிறந்த நாளுன்னு அது என்ன வாம்?' என்று வினவினாள்.

பெரிய மனிதர்களின் காம்பவுண்டுகளிலே புழங்கு கிறவனுக்கு மனைவியின் சந்தேகத்தை நிவர்த்தி செய்யத் தெரியாமல் இருக்குமா? சாங்கோபாங்கமாகச் சொன் னான்! 'அப்படீன்னு மச்சான்! நம்ம செவந்திக் குட்டிக் கும் ஒரு பொறந்தநாள் வைபோகம் நடத்திப்புடலாமே! ஆமா, வார செவ்வாய் வந்தாக்க நம்ம பொண்ணு பொறந்து வள்ளிசா ஒரு வருசம் ஆகிடுமே!' என்றாள். பெற்ற மனத்தில் தழைத்த மகிழ்வின் காரணமாக, அவ னுக்கு ஒரு கரண்டி அயிரை மீன் சுண்டல்க் குழம்பு கூடுத லாகவே கிடைத்தது!

ராஜாவின் பிறந்த நாள் விழா கோலாகலமாக நடந் தேற கேட்கவும் வேண்டுமோ? அழைப்புக்கள் ரயிலேறிப் போனதுதான் தாமதம், உற்றவர்களும் உறவுக்காரர் களும் ரயிலேறி வந்து விட்டார்கள். கடைசி மைத்துனன் மட்டும் லடாக்கில் அகப்பட்டுக் கொள்ளவே, தேவியார் ஆயிரம் முறை அந்தப் பாழாய்ப் போன சீனாக்காரனை வறுத்தெடுத்து விட்டாள்!

குமாரி குந்தளா நடனம்.

ஸ்ரீமதி மோகனாம்பாள் பாட்டுக் கச்சேரி.

பரிசுகள் எத்தனை, படப்பிடிப்புக்கள் எத்தனை! விழாவுக்குத் தலைமை தாங்கிய புதுக் கலெக்டர் குழந்தைக்கு அளித்த ஆசிகள் எத்தனை!

வேலைக்காரி வேலாயியும் அவள் பிராணபதியான காத்தமுத்துவும் மணிக்கூண்டுப் பொடியன் விற்ற 'இஞ்சி மூரப்பா'வை ஆளுக்கு ஆறு காசுக்கு வாங்கித் தின்றதென்னவோ, உண்மையிலும் உண்மையே!

வேலாயிக்குச் செவ்வாய்க் கிழமைதான் சிந்தனையாக இருந்தது. 'இன்னம் ரெண்டே ரெண்டு நாளுதான் மிச்சம் கெடக்குது. மச்சான் கிட்டயிருக்குற காசையும் உண்டிக் கலயத்திலே இருக்குற சில்லறையையும் சேத்துச் செலவு செஞ்சு எங்க செவந்தியோட பொறந்த நாளை திருவிழா கணக்கிலே கொண்டாட வேணும்! என்னம்மோ, விரலுக்குத் தக்கின வீக்கம்! ஏழைக்குத் தக்கது எள்ளுருண்டை! சின்னவருக்கு வந்து குமிஞ்சாப்பிலே பரிசுங்க எதுவும் எங்கக் குட்டிக்கு வராட்டியும், கடைசிப் பட்சம் எங்க எசமானி அம்மாவானும் ஏதாச்சும் இனும் தருவாங்க கட்டாயமா!'

கை ஓய்வான பொழுது.

வேலாயியின் பார்வைக்கு தாரிணிதேவி இலக்கானாள். தன் அபிலாஷையை பிட்டுப்பிட்டு வைத்துவிட்டாள் வீட்டுப் பணி இயற்றுபவள்!

'ஆத்தாடி! கேட்டீங்களா கூத்தை ஆளுன்னாலும் ஆளு நீ அம்மன்பேட்டை ஆளுங்கிறதை ரூபிச்சிட்டியேடி! போடி போ! உன் பொண்ணுக்குப் பிறந்த நாள் ஒண்ணுதான் குறைச்சலாக்கும்! வேறே யார் காதிலேயும் இதைச் சொல்லாதே! பைத்தியமின்னு உன்னை நினைச்சிடப் போறாங்க!' என்று கேலிச் சிரிப்புடன் பேசினாள் தாரிணி.

வேலாயிக்கு நெஞ்சிலடித்த மாதிரி இருந்தது அப் பேச்சு. 'ஏம்மா! பணக்காரங்க மட்டுந்தானு அவங்க அவங்க குழந்தை குட்டிகளுக்குப் பிறந்த நாள் வைபவம் கொண்டாடுறது? ஏழை பாழைங்க கொண்டாடப் புடா தின்னு சட்டம் உண்டுங்களா?' என்று பொங்கி வந்த ஆத் திரத்துடன் கேட்டுவிட்டாள் வேலாயி.

தாரிணிக்குக் கோபம் வந்ததே, பார்க்கவேண்டும்' பவுடர் அப்பியிருந்த முகம் கறுப்பாகச் சிவந்தது. அவ் வளவு கோபம்! 'சீ நாயே! ஓடு என் சோற்றைத் தின்று விட்டு என்னையா எதிர்க் கேள்வி கேட்குறே?' என்று திட்டிக்கொண்டிருக்கையில், உள்ளே காரசாரமாகத் திட்டிக் கொண்டிருந்த தன் கணவரின் கோப மொழிகள் அவள் செவிகளில் விழுந்தன.

தாரிணிக்குக் குலை நடுக்கம் எடுத்தது. ஐயாயிரம் ரூபாய் கடன் கொடுத்து, எழுதி வாங்கிய புரோநோட்டு ஒன்றைக் காணுமாம்!

வீடு அமளி துமளிப்படாதா?

வேலாயி நடந்து வந்த துயரத்தை ஒதுக்கிவிட்டு, நடந்து கொண்டிருக்கிற துன்பத்துக்கு அனுதாபப்பட்ட வளாக, அடுப்படி, கூடம், முகப்பு என்று தேடினுள். ராஜாவும் பிஞ்சுக் கரங்களைத் துழாவித் தேடுகிருனே!

தாரிணிக்கு எப்போதோ பார்த்த சினிமா ஒன்று ஞாபகம் வந்தது. அப்படத்தில் ஒரு திருட்டில் வேலைக் காரி சந்தேகத்துக்கு ஆளான கட்டம் நினைவில் குதிக் கவே, இங்கே இப்பொழுது எஜமானி அம்மாளும் வேலாயி மீது பாய்ந்து கோபமாக குதித்தாள்.

'ஐயோ அம்மா!' என்று விம்மித் துடித்தாள் வேலைக் காரி.

அப்பொழுது, சைகிளில் வந்து இறங்கினான் காத்த முத்து.

'இந்தாங்கம்மா! அன்னிக்கு எம் பெண்சாதிக்கு நீங்க தந்த பேப்பர்க் கட்டுக்குள்ளாற இது இருந்திச்சு. இப்பத் தான் பார்த்தேனுங்க!' என்று மூச்சு வாங்கச் சொல்லி நீட்டினான்.

காணாமற்போயிருந்த அந்தப் பிராமிசரி நோட்டு கிடைத்துவிட்டது.

குற்றவாளியான ராஜாவுக்கு எப்பொழுது பார்த் தாலும் சிரிப்புத்தான்!

தாரிணிதேவியாருக்கு உயிர் வந்தது. ரகசியமாக நூறு ரூபாய் நோட்டு ஒன்றை வேலைக்காரியிடம் நீட்டினாள். 'இந்தா வேலாயி! இதை என் இனமாக வச்சுக்க. உன் மகளின் பிறந்த நாளைக் கொண்டாடு! என்னை மன்னிச்சிடு!' என்று வேண்டினாள்.

வேலாயி குதூகலம் எய்தினாள்; 'அம்மா, நீங்க நல்லா இருக்கோணும். எங்க மகளோட பிறந்த நாளைக்கொண் டாடுறத்துக்குப் பெரிய மனசு பண்ணி உத்தரவு தந்தீங் களே, அதுவே போதுமுங்க! உங்க பணம் காசு வேணா முங்க! உங்க அன்பு குறையாமல் எப்பவும் இருந்திருக்க, அதுவே போதுமுங்க! உங்க மாதிரி நடந்துகிடறதுக்கு அன்றாடங் காய்ச்சிகளான நாங்களும் ஆசைப்படுறது குத்தமுங்க; தப்புங்க! தலைக்கு வந்த ஆபத்து தப்பிப் போன விசயமே, எனக்கு ஆயிரம் ரெண்டாயிரம் பணம் கெடைச்சமாதிரி. அம்மாந்தூரம் தெம்பு ஊறிக்கெடக்கு துங்க! எம்மகளுக்கு ஆயுசு மட்டும் பலமாக எழுதிப் போடும்படியா நீங்க சாமியை நெனச்சி ஆசீர்வாதம் பண் ணுங்க தாயே! அது போதும்!' என்றாள். சுடுசரம் விரிந் தது. கண்டாங்கிப் புடவைத் தலைப்பில் கனவுகளையும் முடிந்தாளோ?

செவ்வாய்க்கிழமை.

எட்டடிக் குச்சுக்குள்ளே, செவந்தியைத் தாய் வீட்டு நல்ல விளக்கின் முன் அமர்த்தினார்கள். பூச்சூட்டினார்கள். தெய்வத்தை 'நேந்து' கொண்டு விபூதிச் சம்புடத்திலிருந்து விபூதித் துகளை எடுத்து மாறிமாறிப் பூசினார்கள் பெற்றவர்கள். 'போதுமிங்கிர மனசை எங்களுக்கு நிதம் கொடு, தாயே!'' என்று வேண்டிக்கொண்டார்கள். தாரிணிதேவி வற்புறுத்திக் கொடுத்த இனும் நூறு ரூபாயோடு குழந்தைக்குக் கொடுத்த பட்டுக் கௌனையும் போட்டு மகிழ்ந்தார்கள்.

*

15
இரு மனம்

அந்தக் கோடை விடுமுறையில் ஆனந்தனின் வீடு கல்யாண வீடுபோலக் கூத்தும் கும்மாளமுமாகக் கலகலத்திருந்தது. ஆனந்தனின் அழைப்பின்பேரில் அவன் தங்கை பார்வதியும் அவள் புதல்வி ராதையும் விருந்தினராக வந்திருந்தார்கள். ஆபீஸ் அலுவல் நிமித்தம் பார்வதியின் கணவன் வரமுடியவில்லை. இவர்கள் மட்டும் வந்தார்கள். இந்த விருந்தினரின் வருகையால் அதிக ஆனந்தம் எய்தியவன் ஆனந்தனின் புதல்வன் கண்ணன்தான். ஏனென்றால் கண்ணனுக்கு விளையாட்டு 'ஜோடி'யாக அங்கு ராதை இருந்தாள்!

ராதையைப் பார்ப்பதற்குள் அவன் எவ்வளவு துடிதுடித்துப் போய் விட்டான்? தினமும் காலண்டரைப் புரட்டிப்பார்த்து 'பள்ளிக்கூடம் கோடைக்குச் சாத்த இன்னும் எத்தனை நாள் இருக்கிறது?' என்று கணக்கிட்டு நாட்களை ஓட்டிய சங்கடம் அவனுக்கல்லவா தெரியும்? பட்டணத்தில் வாசித்துக்கொண்டிருக்கும் ராதையை

வேலை காரணமாக உடன் பிறந்த குடும்பங்கள் இரண்டும் பிரிய நேர்ந்தது. இரு குடும்பங்களுக்குமிடையே விடப்பட்டிருந்த தூரத்தை இட்டு நிரப்பும் அன்புப் பாலமாக—பாசத் தொடராக அமைந்தது அவர்களிடையே நடந்து வந்த கடிதத் தொடர்பு.

கண்ணன் பத்து வயது நிரம்பப் பெற்றவன். ராதைக்கு ஆறுவது ஆண்டு ஆரம்பம்.

அவன் நாலாவது வகுப்பு. அவளுக்கு 'ஆனா-ஆவன்னா' ஏடு தலைகீழ்ப்பாடம்!

கண்ணன் கொஞ்சம் குறும்பு. சும்மா இருக்கவே மாட்டான். ராதையை ஏதாவது 'நிமிட்டி' பண்ணி அழவைத்து வேடிக்கை பார்ப்பதில் அவனுக்கு ஒரு மகிழ்ச்சி. ராதையின் வேண்டுகோளுக்கிணங்க ஆனந்தன் ரேடியோவைத் திருப்பினான், வேண்டுமென்றே 'ஸ்டிரைக்' செய்வான் கண்ணன். உடனே மேலிடத்துக்கு தாக்கீது தூது செல்லும் ராதையின் சார்பில்.

"நீங்க ரெண்டு பேரும் எப்படியாவது போங்கள். புருஷனும் பெண்டாட்டியும் இப்போ சண்டை போட்டுப்பீங்க. சற்றுக் கழித்துப் பார்த்தா கூடிக் குலாவிப்பீங்க" என்பான் ஆனந்தன்.

அடுத்த வினாடியில் என்ன மாயமிருக்குமோ, ராதையும் கண்ணனும் திரும்பவும் கும்மாளம் போட ஆரம்பித்து விடுவார்கள், தம்பதிகளிடையே கணத்தில் தோன்றி கணத்தில் மறையும் பிணக்குப்போல.

உள்ளத்தே துளிர்த்திருந்த ஆசையை வார்த்தைகளாக்கிச் சொக்கும் புன்னகையுடன் கூறிய பார்வதியின் முகத்தில் அந்த 'ஆனந்தக்கனவு' நிழலாடியது.

ஆனந்தன் சிரித்தான்.

"பேஷ் பார்வதி. இப்போதே உன் பெண்ணுக்கு வரன் செட்டில் செய்துவிட்டாயே?..."

* * *

அன்று......

'கண்ணா' என்று அலட்டியவண்ணம் துள்ளிக் குதித்து வந்தாள் ராதை. மெட்டியொலி கண்ணனின் உறக்கத்தைத் தட்டியெழுப்பியது போலும்! விழித்தெழுந்த அவன் அரைக்கணம் ராதையைப் அப்போது தான் புதிதாகப் பார்ப்பதுமாதிரி ஏற இறங்கப் பார்த்தான்.

"அத்தான், இந்நேரமா தூங்குவாங்க யாரும்? என்னைப் பாரு. எப்படி ஷோக்கா சட்டை போட்டு வந்துட்டேன் அதுக்குள்ளே. உனக்கு ஒரு வேடிக்கை காட்டட்டுமா? நம்ப வீட்டுக்கு முன்னாலே பார்..." என்று குழைந்த குரலில் கூறிய ராதை, எதிரே சுட்டிக் காட்டினாள். இளஞ் சூரியனின் கதிரொளியில் அந்த மணல் வீடு அழகாக விளங்கியது. அதைப் பார்க்கப் பார்க்க ஏனோ கண்ணனின் கண்கள் சிவந்து வந்தன. முகம் வேறுபட்டது. அடுத்த விநாடி 'விருட்'டென்று ஓடி அந்த மணல் வீட்டைக் காலால் உதைத்துச் சிதைத்தான் அவன். தன் செயலால் பாவம், அந்தச் சிறுமியின் பிஞ்சு மனமும் சிதைந்து போனதென்பதை கண்ணன் அறிய மாட்டான். ராதை துடித்துப் போனாள். அவனது விசித்திர மாற்றத்துக்குக் காரணம் எதுவும் புலப்படாமல் தவித்தது அப்பெண் உள்ளம். வாய்விட்டுப் புலம்பு

வதைத் தவிர மாற்று ஒன்றும் பிடிகொடுக்கவில்லை ராதைக்கு. ஆனால் அத்தனை எளிதில் அழத்தான் தெம்பு வந்து விடுகிறதா? தெம்பிருந்தாலும் அழத்தான் மனம் இடம் கொடுத்துவிடுகிறதா?

"கண்ணு, ஏதுக்கு என் வீட்டை அழிச்சியாம்?" என்று கேட்டாள் ராதை தணிந்த தொனியில். பூமனதில் வீசிய புயலின் கொந்தளிப்பு, குரலில் காணோம்.

"பதிலுக்குப் பதில் செஞ்சுட்டேன், பார்த்தியா?"

கண்ணன் இப்படிப் பதில் சொன்னான். அவன் குரலில் ஆத்திரம் எடுப்பாக இருந்தது.

"நீ சொல்றது எனக்கு விளங்கலையே..."

"எப்படி விளங்கும்? நான் கட்டின வீட்டை மாத்திரம் நீ கெடுத்துடலாம். பதிலுக்கு நான் செஞ்சா மாத்திரம் நோகிப் போயிடுமோ?"

கண்ணனின் வார்த்தைகள் குழந்தை ராதையை ஆச்சரியத்துக்குள்ளாக்கின. ஏனென்றால் அவன் சொன்னதுபோல மணல்வீடு கட்டி விளையாடவே இடையாது. அன்றைக்குச் 'சடு குடு' விளையாட்டுதான் அங்கம் வகித்தது. வீண்பழியைத் தன்மீது சுமத்துவது கண்டு ராதை பொருமினாள்.

"நானு உன் வீட்டை அழிச்சேன்? நம்ப மணல்வீடு கட்டி விளையாண்டு ஒரு வாரம் ஆகப் போகுதே. நல்லா யோசிச்சு எதையும் செய்யணும். ஒருவேளை கனு ஏதாச்சும் கண்டு உளறுறியா...?"

'கனு' என்றதும் பளிச்சென்று எதையோ ஒன்றை ஞாபகப்படுத்திக் கொண்டவனாக ஒருகணம் செயலிழந்தான் கண்ணன். அவன் செய்த தவறை—வீணாக ராதையைக் குற்றம் சாட்டிய பழியை—அப்போது நன்கு உணரலானான்.

இரவு கண்ணன் கண்ட கனவின் விளைவே இருவரிடையிலும் ஏற்பட்ட மனத்தாங்கலுக்குக் காரணம். அவன் நிர்மாணிக்கும் அழகான மணல்வீட்டை ஆசையுடன் காட்டப்போக, அவள் அதைத் 'திடுதிப்'பென்று அழித்து விடுவதாகக் கனவு காண்கிறான். அதற்கு வஞ்சம் தீர்க்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் புரண்ட அவனை ராதை எழுப்பியதும் பழைய ஞாபகம் மட்டுமே அவன் தளிர்நெஞ்சில் முன்னின்றது. கடைசியில் ராதையின் வீட்டைச் சிதைத்து விடுகிறான் கண்ணன்! பூ மனத்தின் விந்தையைப் பாருங்கள்!

"ராதை, என்னை மன்னிச்சுப்பிடு. நான் முட்டாள். நீ என் ராதையில்லையா? இதற்கெல்லாம் கோபிக்கப் படாது—ராதை" என்று கெஞ்சினான் அவன். பின் காரணத்தையும் விளக்கினான். ஆனால் அவன் எதிர் பார்த்தபடி அவள் வாய்திறக்கவில்லை. பேசாமடந்தையாக இருந்த அப்பேசும் பொற்சித்திரம்—ராதை தேம்பினாள். கண்ணனுக்குப் 'பக்'கென்றது. அவன் கண்களும் கலங்கின.

"ராதை, நொடிப்போதிலே நீ கட்டின வீடாட்டமாக் கட்டித் தந்துட்டாச் சரிதானே. அப்புறம் அழவும் படாது. அத்தை, அம்மாகிட்டே போய்ப் புகார் சொல்லவும் கூடாது..."

கண்ணன் அவ்வடிவழகியை ஏக்கத்துடன் நோக்கினான். அவன் பார்வையில் என்ன வசியமோ? மின் வெட்டில் ராதை சிரிப்பதைக் கண்டவுடன் கண்ணனுக்கு உயிர் மீண்டும் வந்ததுபோன்ற உணர்வு பரவியது.

"அத்தான். கடைசி மட்டும் நீ என்ன செய்யப் போறேன்னு பார்க்கவே நான் அப்படி அழறது கணக்கா நடிச்சேன். இந்தத் தரம் உனக்கு 'மாப்பு' ஆமா; இனி

எம்மேலே கோவிச்சுக்கப்படதாக்கும். நீ எனக்கு வீடு கட்ட வேணும். நம்ப ரெண்டு பேருமே சேர்ந்து ஒண்ணு நம்பர் பங்களாவாக் கட்டிடலாம்...'' என்றாள் ராதை குதூகலம் நிரம்பி வழிய.

இவ்விதம் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் இருவரும், சிரிப்பொலி கேட்டுத் திரும்பினர். ஆனந்தன், அவன் மனைவி, தங்கை மூவரும் நின்றார்கள்.

"உங்கள் 'டூ'விற்கு மத்தியஸ்தம் இல்லாமலே ராசியாகி விட்டீர்களாக்கும். அதுதான் அழகு. ஊம்; காப்பியைச் சாப்பிட்டுவிட்டு அப்புறம் விளையாடுங்கள்...'' காப்பி 'செட்' இரண்டை அவர்கள் முன் சமர்ப்பித்தாள் திருமதி ஆனந்தன்.

* * *

இரண்டு மணி மெயிலுக்குப் பட்டணம் புறப்பட வேண்டுமென்று தன் அம்மா கூறக் கேட்ட ராதை மிகவும் வேதனைப்பட்டுப் போனாள். பள்ளிக்கூடம் திறக்க இன்னும் நாலைந்து நாட்களே இருந்தன. ஆனாலும் வேறு ஏதோ அவசர காரியமாக உடனே புறப்பட்டு வரும்படி பார்வதிக்கு அவள் கணவனிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

கண்ணனின் காதுகளில் செய்தி எட்டியதும் அசந்து விட்டான். ஒரு நிமிஷம் கூட அவளைவிட்டுப் பிரியமாட்டாத அவன் எப்படி அடுத்த லீவு வரை ராதையைப் பிரிந்து—அந்த ஆசை முகத்தைக் காணாமலிருக்க முடியும்? ராதை தன்னுடனேயே இருந்து படிக்கும் படி வேண்டினான். பார்வதிக்குக் குழந்தையைத் தனியே விட்டு வைக்க மனமில்லை.

"கண்ணா, அடுத்த மாசம் திருவிழாவிற்கு ராதையை உன்னிடம் கொண்டு சேர்த்து விடுகிறேன். கடல் கடந்தா

போகிறோம்? எண்ணிச் சில நாள் பொறுத்திரு'' என்று பார்வதி சொன்னது, கண்ணனுக்கு என்னவோ அமைதி யூட்டவில்லை.

ராதை ஊருக்குப் புறப்பட்டபோது அவள் கண்களில் நீர் மின்னிய காட்சி மட்டும் அடிக்கடி கண்ணனின் மனத்திரையில் நிழல் வடிவிட்டது.

* * *

நாட்கள் கழிந்தன.

ராதை ஊருக்குச் சென்றதிலிருந்து கண்ணனுக்கு எதிலுமே மனம் செல்லவில்லை. விளையாட்டு, கோலி ஆட்டம் என்றால் பிராணனைவிடும் அதே கண்ணன் அன்று விளையாடும் இடத்தைக் கூட ஏறிட்டுப் பார்க்கவில்லை. பித்துப் பிடித்தவன் போலச் சதா காணப்பட்டான். ஒரு நாள் ராதையின் மணல் வீட்டை அழித்துவிட்டானல்லவா? அந்தத் துன்ப வடு அவன் குருத்து மனதைக் குடைந்தது.

கண்ணனுடைய இந்த மாறுதலைக் கண்ட அவன் பெற்றோர்கள் திகைப்படைந்தனர்.

"கண்ணு, உடம்புக்கு ஏதாவது பண்ணுதா? டாக்டரைக் கூட்டி வரட்டுமா? ஏன் இப்படி என்னவோ போல ஒரு மாதிரி இருக்கே...'' என்பதாகத் தாயும் தந்தையும் மாறிமாறி வினவினார்கள்.

பெற்றோர்கள் நச்சரிப்புக்குப் பயந்தோ என்னவோ அன்று உண்மையை வெளியிட்டான் குழந்தை.

"அம்மா, அப்பாவிடம் சொல்லி என்னை நம்ப ராதைகிட்டே அழைச்சுட்டுப் போகச் சொல்ல மாட்டியா?'' என்று அழாக் குறையாகக் கூறினான்.

ராதையின் பிரிவுதான் கண்ணனின் சஞ்சலத்திற்கும், மாற்றத்துக்கும் காரணம் என்பதை அறிந்த தாய் ஆச்சரியப்பட்டாள்; அமைதியடைந்தாள்.

"ஆகட்டும் கண்ணே; முன்னாலே இதைச் சொல்லியிருக்கப்படாதா? நாங்கள் பயந்துவிட்டோமே......நல்லவேளை...எங்கள் வயிற்றில் பாலை வார்த்தாய்!"

அன்று மாலை ரயிலுக்குப் புறப்பட ஆனந்தனும் கண்ணனும் ஆயத்தமாகினர்.

அதே சமயம் வாசலில் ஜட்கா ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து குதித்து வந்த ராதையைப் பார்த்த கண்ணனுக்குத் தன் விழிகளையே நம்ப இயலவில்லை.

"ராதை," என்றான் கண்ணன்.

"அத்தான்," என்றாள் ராதை.

இடைவேளை கழிந்து சந்திக்கும் காதலர்கள் போலக் குழந்தைகள் இருவரும் களிப்புற்றார்கள்; சிரித்து மகிழ்ந்தார்கள்.

ராதையின் தந்தை கோபுவை வரவேற்ற ஆனந்தன், "கோபு, நான் கண்ணனை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் புறப்படத் தயாராக இருந்தேன். ராதையைப் பார்த்தால்தான் உண்டு என்று துடித்து விட்டான். நல்லவேளை நீங்களே ராதையைக் கூட்டி வந்து விட்டீர்கள்," என்றான்.

"ஆனந்தன், குழந்தை உள்ளம் அதி விசித்திரமாக இருக்கிறதே. ராதை என்னிடம் அத்தானைப் பார்க்க வேண்டுமென்று பாடாய்ப்படுத்தி விட்டாள். அவள் பேச்சுக்கு எவ்வளவுதான் டிமிக்கி கொடுக்க முடியும்?

அழைத்து வந்துவிட்டேன். கண்ணனுடன் சேர்ந்தே படிப்பதாகவும் கூறிவிட்டாள்''

''ரொம்ப சந்தோஷம். பருத்தி புடவையாக் காய்த்த மாதிரி இனி எங்கள் கண்ணன் பாடும் யோகந்தான்!'!

'இனி நாம் இருவரும் என்றென்றுமே இணைபிரியாதிருக்கலாம்' என்பது போல ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டார்கள் கண்ணனும் ராதையும்!

*

16

சிவன் தந்தது...!

மண்ணைப் பொன்னாக்கும் வண்ணப்பொழுது; தங்கத் துகள்கள் தரணிதனை அந்தம் மிகுந்த கனவுலகாக உருமாற்றிக் கொண்டிருந்த ஆனந்தமான வேளை. பின், இளஞ் சுடரொளியிலே கனவுகள் சதிராடக் கேட்கவா வேண்டும்?

தேதிப்படத்தாளைக் கிழித்துவிட்டு, அன்றையத் தேதியையும், அது ஏந்தி நின்ற கிழமையையும் பார்த்தாள் கல்யாணி அம்மாள். இனம் புரியாத மகிழ்வும், இனம் புரிந்த இன்னலும் சமன் அளவிட்டுத் தோன்றலாயின. தும்பைப்பூ நிறப்புடவையின் முகதலையில் கண்ணீரின் முத்துச்சரம் ஒடுங்கியது, யோகியாரின் உள்ளமென! ஆளோடியைக் கடத்தினாள் அவள். கதிர்களின் சதுராட்ட விளையாட்டு நடைப் பகுதியிலும் நடந்தது. அவள் ஏறிட்டு விழித்தாள். விழிவிரிப்பில் படர்ந்த உருவத்தைக் காண எதிர்ப்புறம் கண்ணோட்டம் செலுத்தினாள் அவள். பெரிது செய்யப்பட்ட அந்தப் புகைப்படம் அண்டியது. கால் பாதங்கள் தத்தளித்தன; தடுமாற்றம் கண்டன. தரையில் பாவிய ஸ்மரணை இல்லை. கால்விரல்கள் ஈரம் ஏந்தின. ‘அத்தான்!...நான் செஞ்சது குத்தம்தானா?’’ இதைத்தவிர; வேறுவழி ஒண்ணுமே எனக்கு மட்டுப்படலேங்களே?...நான் என்ன செய்வேன், பாவி?...’ வாய்ப்புலப்பமும், சுடுநீரின் குழப்பமும் அவளு

டைய அறிவுணர்வைத் தட்டிப் பறித்துக் கொண்டன போலும். தாலாட்டுப் பொம்மையைப் பறிகொடுத்த விளையாட்டுக் குழந்தை போலச் செருமிச் செருமி அழுதாள்!

“அம்மா...!” என்று அழைத்தபடி கோமதி வந்தாள். அவள் மட்டுந்தானா வந்தாள்? அவளைத் தொடர்ந்து அன்பும் பாசமும் வந்தன; புன்னகையும் புத்தெழிலும் வந்தன. அவள் கையில் கடிதமொன்று இருந்தது. “அத்தான் உனக்கு எழுதியிருக்காங்க, அம்மா!”

அன்னை கடிதம் ஏந்தினாள்.

ஆவணி இருபத்தேழாம் தேதி முகூர்த்தம் வைப்பதற்கு ‘வேளை’ பொருந்தியிருக்கிறதென்றும், அன்றைக்கே கலியாணத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் எழுத்துக்கள் ஓடியிருந்தன. ஓடக்காணும் பூம்புனல் வெள்ளமாய் அவள் நிறைவு அடைந்தாள். நிறைவு ஆனந்தத்தைக் காட்டிற்று; ஆனந்தம் அமைதியைச் சுட்டியது; அமைதி கண்ணீரைக் கூட்டியது. கண்ணீரிலே தெய்வத்தைத் தரிசித்தாளோ?

சற்றைக்கெல்லாம் அவளது மனம் மீண்டும் அலைபாயத் தொடங்கிவிட்டது. தாலி கொடுத்து, ‘கொண்டவன்’ என்னும் ஸ்தானத்தை ஏந்திய ‘அந்தநாள்’ நினைவில் குதித்திருக்கவேண்டும்; கொண்டவன் தாலியுடன் கொண்டோடிய ‘அந்தநாள்’ நெஞ்சத்தில் குத்தியிருக்கவேண்டும்! சதா சர்வகாலமும் சிணுங்கிக்கொண்டிருக்கும் கைக்குழந்தைகள் போலவேதான் இந்த நினைவுகளும்!

“அம்மா, ஆசாரி வந்திட்டாரு, அம்மா”!

குரல் கொடுத்தாள் கோமதி. நிலைப்படியைக் கடந்து வந்த ஆசாரியைக் கண்ட சடுதியில், அவள் தூணுக்குத்

துணை ஆனாள். மார்பகச் சேலையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். இமைகளில் வண்ணாத்திப் பூச்சிகள் குந்திக்கொண்டன, சிறக்கடிக்காமல் தப்புமா?

ஆசாரியைக் கண்டதும், கல்யாணி அம்மாளுக்கு அதிர்ச்சி விளைந்தது. சமாளித்துக்கொண்டாள். "வாங்க ஐயா! நகை நட்டெல்லாம் சாடாவையும் செஞ்சு முடிச்சுப்பிட்டீங்களா?" என்று கேட்டாள்.

"ஓ, ஒங்க மனசுப் பிரகாரம் சகலத்தையும் கச்சிதமாச் செஞ்சுப்பிட்டேனுங்க!...நீங்க குடுத்த பழைய நகை அம்புட்டையும் உருக்கி, ஒங்க பொண்ணு மாதிரி காட்டினது போலவே அற்புதமாச் செஞ்சிருக்கேனுங்க!... நீங்க என்னை நம்பினீங்க. அதாலேதான் எங்க வீட்டோடவே பட்டறையை வச்சிக்கிட்டு அலுவல் பார்க்க ஒத்து வந்திச்சுது. இந்த நம்பிக்கை தானுங்க அம்மா எங்க மாதிரிப்பட்டவுங்களுக்குச் சொத்து சுகம் எல்லாம்!... எங்க அப்பாரு படிச்சுக் குடுத்திருக்கிற நல்ல பாடமும் இதுதானுங்க!..."

மூச்சுப் பிடிக்கப் பேசினவன், மறந்துபோகாமல் மூச்சைப் பிரித்துவிட்டான்! செய்துவந்த ஆபரணங்களை 'வெல்வெட்' துணிப்பெட்டியினின்றும் பிரித்தான் ஆசாரி சிங்காரம். ஜடைபில்லை, மோதிரம், கைவளை, சங்கிலி, மூக்குத்தி, லோலாக்கு என்று அணிகலன்கள் அணிவகுத்துக்கொண்டன.

கல்யாணி அம்மாளின் பெற்றமனத்தளத்தில் நின்ற பாசம் என்ற கம்பத்தில் மகிழ்ச்சி கொடிகட்டிப் பறந்தது. ஆனால், அவள் இதயம், அந்த இதயத்தின் இதயம் ஏன் அப்படி அல்லாடித் தள்ளாடுகிறது?

"ஏம்மா கோமதி, உன் மனச்சுக்குப் பிடிச்சிருக்குதாம்மா?"

"பேஷா!"

"உன் அத்தானுக்கும் பிடிச்சிருக்குமில்லே?"

"உங்க அண்ணன் பிள்ளை சமாச்சாரம் உங்களுக்குத் தானே அம்மா தெரியும்?"

"எம் பொண்ணுச்சே? பேச்சுக்குக் கேட்கணுமா?"

சிங்காரத்துக்கும் சிரிப்பு, வாய்ப்பிடியில் பிடிபட மறுத்தது.

"கணக்கு எம்பிட்டு ஆகுது?"

ஆசாரி துண்டுச் சீட்டு ஒன்றைச் சமர்ப்பித்தான். நகைகளின் மொத்த எடை, பிறகு உருக்கப்பட்டதும் உருவான தங்கக் கட்டிகளின் எடை, கழிவு—சேதார எடை, கற்கள் விலை, கூலி—இப்படிக் 'கூட்டுப்புள்ளி' காட்டிற்றுக் கடுதாசி.

மூன்றுநாள் கெடுவைத்தாள் வீட்டுத்தலைவி.

பதில் பேசவில்லையே சிங்காரம்!...

கூடப்பிறந்தவரிடமிருந்து வந்துசேர்ந்த கடிதம், "உன் இஷ்டப்பிரகாரமே, உன் மகள் கோமதி ஜாதகமும் என் மகன் சேதுவின் ஜாதகமும் கனகச்சிதமாய்ப் பொருந்திவிட்டது. ஆவணி பிறந்தவுடன், கலியாணத்தை முடித்துவிட வேண்டியதுதான். முகூர்த்த நாளைப்பார்த்து அப்புறம் எழுதுகிறேன்!" என்ற சேதியை அஞ்சல் செய்தது; 'அஞ்சேல்' என அபயம் தந்தது.

ஆவணி பிறந்ததோ, இல்லையோ, பெற்றவள் உற்ற மகளை அழைத்து அவளிடம் சொன்னாள்: "அம்மா கோமதி! உன்னைப் பெத்தவகிட்ட நீ எதொண்ணையும் ஒளிவு மறைவாக வச்சுக்கிட வேணும். உனக்கு என்னென்ன நகை நட்டு வேணுமெங்கிறதைச் சொல்லிப்பிடு. உன்னோட சிநேகிதிங்க யாரானும் போட்டிருக்கிற தினுசு

உம் மனசுக்குப் பிடிச்சிருந்தாக்க, அதுகளை வாங்கியாந்து காட்டு. செட்டிநாட்டுப் பக்கத்திலேருந்து நாணயமான ஆசாரி யாரோ வந்திருக்காராம். அவரை அழைச்சிட்டு வரச்சொல்லி, அவர்கிட்டக் காண்பிக்கலாம். உன் அப்பா இருந்து, உனக்கு வேணுமிங்கிறதைச் செஞ்சுபோட்டு அழகு பார்க்கக் கொடுத்துவைக்கலே. இதை நினைச்சாத் தான் ராத்தூக்கம் பகல் தூக்கம் கொள்ளலே! ம்...பிடிச்சுப்போட்டவன் ஆட்டிப் படைக்கிறான். சரி அம்மா! நாளைக்கு நல்ல நாள்தானும். நான் சொன்ன தாக்கலை மறந்துப்புடாதே!''

உடன் தொடர்ந்த நாள் விடிந்தது.

தாய் வீட்டில் பீரோவிலிருந்த தன்னுடைய பழைய நகைகளைப் பெட்டியினின்றும் பிரித்தெடுத்தாள். நகை யோடு நகையாக 'அந்தத் தாலி'யும் வந்து சேர்ந்தது. அவ்வளவுதான், தன் உயிரையே யாரோ பிரித்தெடுத்தாற் போல உணரலானாள் கல்யாணி அம்மாள். தன்னைத் தானே ஒருமுறை குனிந்து பார்த்துக் கொண்டாள். வெள்ளையுடை காட்சியளித்தது. காலச்சிமிழைப் பதமாகத் திறக்கக் கூடவில்லை. பதட்டம். 'பொல, பொல'வென்று மணிகள் உதிர்ந்தன. கண்ணீர் மணிகளுக்கு ஓசை ஏது? உருவந்தானே உண்டு? உருவமொன்று தோன்றியது. அது அவள் புருஷனின் உருவம். சோமசேகரன் 'ஜம்'மென்று இருந்தார். மாப்பிள்ளை அல்லவா? மனம் அறிந்து, மணம் முடித்தார்கள். கெட்டி மேள முழக்கத்தூடே திருப் பூட்டப்பட்டது. அவள் அவரது சொத்து ஆனாள். காலப்பூ இதழ்கள் சிலவற்றை உதிர்த்துச் சிரித்தது. கோமதி பிறந்து சிரித்தாள்; பெற்றோர்கள் பேணிச் சிரித்தார்கள். முன் சிரிப்பு, பின் அழுகை என்பார்கள். அது கல்யாணி அம்மாள் வரை மெய்யேதானோ?

இமை பிதுங்க, மனம் பிதுங்க, அந்தத் தாலியையே உறுத்துப் பார்த்தாள் அவள். மங்கலநாண் எனும் சிறப்புப்

பெற்ற அந்தத்தாலி இருந்தது. ஆனால், அந்தத் தாலிக்கு உடையாளி போய்விட்டார், பாவம்! பாவமும் புண்ணியமும் ஊழ் விளையாட்டு!

நினைவு மீண்டது.

"ஆசாரி சிங்காரமுங்க அம்மா!" என்று தன்னை அறிமுகம் செய்வித்து நின்றான் வந்தவன். தாலியைப் பெட்டியில் பக்தியுடன் வைத்தாள்; பிற நகைகளை வெளியே எடுத்தாள். மகள் கொண்டு வந்து காட்டிய 'மாதிரிகளை'யும் முன்னே வைத்தாள். தன் கை வசமுள்ள நகைகளை உருக்கினால், மகள் விரும்புவது போலச் செய்ய இயலுமா வென்று கேள்விக்குறியைப் போட்டாள் அவள்.

"நகைங்களை உருக்கி எடை பார்த்துத் தானுங்க சொல்ல முடியும். நீங்க சம்மதிச்சா, நான் இதுகளை வீட்டுக்குக் கொண்டுபோய் உருக்கி, எடை போட்டுக் காண்பிக்கிறேனுங்க. என்னைப்பத்திப் பக்கத்துத் தெரு 'மு,லெ' வீட்டிலே கேட்டுக்கிடுங்க அம்மா," என்று உரைத்தான் அவன். அவன் பேச்சு அவனது நாணயத்துக்கு உரைகல் ஆனது. நம்பினாள். சென்றான். திரும்பினான். "இன்னம் இரண்டு சவரன் எடை தங்கம் தேவைப் படுதுங்க. இருநூறு ரூபாய் பணம் கொடுத்தாலும், தங்கம் வாங்கலாங்க!..." என்றான்; எடைப் படிக்கற்களையும் தராசையும் தரையில் வைத்தான்.

கல்யாணி அம்மாளுக்குத் திகைப்பு வளர்ந்தது. 'தெய்வமே!' என்று நெடு மூச்சைப் பிரித்தாள். பிரஹதீஸ்வரர் ஆலயம் மணி முழக்கம் செய்தது. அவளுக்கு ஓர் ஆலோசனை புறப்பட்டது, புறப்பட்ட நடுக்கத்தைப் போர்த்தி மூடியவளாக, உள்ளே சென்றாள். சற்றுமுன் தரிசனம் தந்த தாலியைத் தொட்டாள். தொட்ட கை நடுங்கியது. "அத்தான், என்னை நீங்க மன்னிச்சிருங்க. நம்ம பொண்ணு நல்ல காரியத்துக்குத்தான் இந்தத் தப்

பைச் செய்ய வேண்டியிருக்குது. ஆசாரி சொல்லுற பணத்துக்கு வகை இல்லீங்க. பொண்ணைப் பொறந்தவ நான் வேறே எங்கே போயுங்க பணம் புரட்டுவேன்?... இந்தத் துப்பு சம்பந்தி வீட்டுக்கு எட்டப் புடாதுங்களே?...இல்லேன்னு, ஆயிரம் ரெண்டாயிரம் கூட மறு பேச்சாடாம எங்க அண்ணன் தருமே?...பொண்ணோட கல்யாணச் செலவுக்கே இந்த வீட்டை அடமானம் வச்சு தானுங்க திரணும்!...அத்தான், நீங்க தெய்வமாவே இருந்து, என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னிச்சுக் கிடுங்க!...அத்தான், அத்தான்!..."

மகள் அறியாமல், ஆசாரியிடம் அந்தத் தாலியை நீட்டி அதையும், 'அழித்து'ப்பயன் படுத்திக் கொள்ளுமாறு கோரினாள் கல்யாணி அம்மாள். அன்றிரவு பூராவும் ஆயிரம் தரம் "அத்தான்", "அத்தான்!" என்று நாமாவளி பாடிக் கொண்டேயிருந்தாள்!

* * *

முகூர்த்த தினம் நிர்ணயம் ஆனது.

மகள் கோமதியின் வதுவை விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செவ்வனே முடித்த நிறைவில் மனம் மகிழ்ந்து நின்றாள் கல்யாணி அம்மாள். திருமண விழாவுக்காக வீட்டை 'அடமானம்' வைத்துப் பணம் பெற ரகசிய ஏற்பாடுகளைச் செய்தாள் அவள். மானம்புச் சாவடியில் தெரிந்தவர் ஒருவரை வரவழைத்து விஷயத்தைச் சொன்னாள். அவர் யோசித்து முடிவு சொல்வதாகக் கூறிப் போனார். போன பெரியவர் திரும்பிய போழ்தில், வாஸ்தவமாகவே 'பெரிய மனிதராகவே' வந்தார். வீட்டை அடமானம் வைக்கத் தேவையில்லையென்றும், தேவைப்படக் கூடிய பண உதவியைச் செய்வதாகவும், மெதுவாகப் பணத்தைத் திருப்பித் தரலாமெனவும், இந்த விஷயம் மூன்றும் பேருக்குத் தெரியாமல் காப்பதாயும் உத்தாரம்

மொழிந்தார். அந்த வினாடியில் அவளுக்கு இரண்டு தெய்வங்கள் தோன்றினர். ஒன்று: உலகினை ஆண்டவன். அடுத்தது: அவளை ஆண்ட சோமசேகரன்!

*　　　*　　　*

நாடியம்மனையும் அங்காளம்மனையும் துணைக்கு அழைத்துக்கொண்டு அழைப்பிதழ்கள் சுற்றுலா புறப்படலாயின.

'அம்மா, எங்கழுத்திலே அத்தான் மூணு முடிச்சுப் போடட்டும். அப்புறம் பாரேன், நம்ம கஷ்டம் எல்லாம் பறந்து போயிடும்!' என்று அடிக்கடி தேறுதல் அளித்து, துயரம் அழித்து வந்த அருமைப் புதல்வியை எண்ண எண்ண, கல்யாணி அம்மாளின் இதயம் இனித்தது. '...எங்குடும்ப கவுரவத்தைக் காப்பாத்தத்தான் எனக்கு இம்பிட்டுத் தொல்லைங்க. ஆனா, இதெல்லாம் எங்க கந்தசாமி அண்ணனுக்குப் பட்டுக் கோட்டைக்கு எட்டிப்பிடாமல் இருக்கவேணும்!...''

உருமப்பொழுது.

'குடமிளகாய்' சாப்பிட்டதற்கு அனுசரணையாக வெள்ளோட்டம் வந்த செஞ்சுடர்ச் செல்வன் திடுதிப்பென்று 'ஊசி மிளகாய்' கடித்தாற் போன்று உரைக்கத் தொடங்கினன்.

காலையில் நல்ல நேரம் கணித்து, மகளுக்குச் செய்திருந்த புது நகைகளைப் பூட்டி அழகு பார்த்து மகிழ்ந்த காட்சிக் கல்யாணி அம்மாளுக்குச் சரபோஜி மஹால் சிற்பத்தை நினைவூட்டிக் கொண்டேயிருந்தது. பெட்டகத்தில் நூறுரூபாய் நோட்டுக்களின் வாசம் வேறு அவளுக்கு இதம் அளித்த வண்ணம் இருந்தது. லாபநஷ்டக்கணக்கை எழுதிக் காட்டியவாறு இருந்த காலக் கணக்கனின் நியதிப் பொறுப்பு அவளது கண்களைப் பொசியச் செய்யத் தவறவும் இல்லை!

வாசலில் இரட்டை மாட்டு வண்டி ஒன்று வந்து தேங்கியது.

“அம்மா!”

கண் நிமிர்த்தி, நோக்கை நிமிர்த்தி விட்டாள் கல்யாணி அம்மாள். கையில் சாவிக் கொத்துக் குலுங்கியது. முந்திரிப்பருப்புத்துணுக்குகள் பற்களுக்கிடையே நசுங்கிச் சுவை காட்டின.

வாசற்புறத்தே ஆசாரி சிங்காரம் நின்றான்.

‘இவருக்குத்தான் நகை செஞ்ச கூலி அவ்வளவையும் அணு பைசா பாக்கி வைக்காம குடுத்துப்பிட்டேன்?...அப்பாலே, ஏதுக்கு இப்ப மறுபடியும் வந்திருக்காராம்...?’

தவழ்ந்து வந்த கேள்விக்குத் தக்க விடை தவழ்ந்து வந்தது!

சிங்காரத்தின் துணைகொண்டு நடந்து வந்த, ‘அந்த உருவம்’ அவளுடைய கண் நோக்கில் தென்பட்டதுதான் தாமதம்; அவளது தலை ‘தலையாட்டிப் பொம்மை’ ஆனது. ‘...இந்த ஆண்ட பெருமாள் ஆசாரி இத்தனை காலங் கழித்து இப்போ இங்கே ஏன் வந்திருக்கார்?...’ வினாவின் சுழிப்பில் விதிச்சுழல் நிழலாடியதா?

குடும்பச் சொந்தம் கட்டு விட்டுப்போகாமல் இருக்க வேண்டி, கல்யாணியை அவளின் மாமன் முறைமை கொண்ட சோமசேகரனுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாக, இரு தரப்புப் பெற்றோர்களிடையிலும் நடந்த பேச்சு வார்த்தைகளின் பேரில், ஒரு முடிவு நிர்ணயம் ஆயிற்று! மாப்பிள்ளை வீட்டினர் குல வழக்கத்தை ஒட்டி, ‘முகூர்த்தத்தாலி’ செய்து, மணவறையில் வைக்கவேண்டும். அவ்வாறே தாலி செய்வதற்கு, அப்போது நற்கியாதி பூத்து விளங்கிய ஆண்ட பெருமாள் ஆசாரியை ஏற்படுத்தி, வெற்றிலை பாக்குக் காணிக்கை முதலியன வைத்தார்கள்.

அவர் கைராசி வாய்க்கப் பெற்றவர் என்பது ஏகப் பிரசித்தம்! ஆனால், விவாக தினத்துக்கு முந்திய நாள், உருக்கப் பட்ட தங்கக் கட்டியைத் திருப்பிக் கொண்டுவந்து கொடுத்துவிட்டார் ஆசாரி. அதற்கப்புறம் அவரை அந்த வட்டாரத்திலேயே காணோம்! இந்தப் பதினெட்டு வருஷங்களாக அவர் எங்கே அஞ்ஞாதவாசம் இருந்தாரோ?...

காம்புவிட்டு உதிரக் காத்திருக்கும் கனிந்த பழமென நின்றார் ஆண்டபெருமாள் ஆசாரி. தளர்ந்த உடல்; முதிர்ந்த நரம்புகள். நெற்றியில் விபூதிக் கோடுகள். நரை திரண்ட முடியை 'அள்ளி முடிந்து' விட்டிருந்தார்.

ஆசாரியைக் கண்ணுற்றதும், கல்யாணி அம்மாளுக்குத் துணுக்கென்றது. காலச் சவுக்கு அவள் நெஞ்சைத் தஞ்சமடையாமல் இருக்குமா, என்ன?

'ஒருவேளை, இவர் கையாலே செஞ்ச தாலி எங்கழுத்திலே ஏறியிருந்தால், என்னோட அத்தான் பிழைச்சிருப் பாரோ?...என் மாங்கல்யம் பிழைச்சிருக்குமோ?...'— எண்ணம் பிறந்த பகைப்புலத்தில், தன் தாலி உருமாறிய நிகழ்ச்சியும் கோடு அமைத்து நகைத்தது! 'என் விதி!... ம்!...'

"அம்மா!"

"வாங்க, ஆசாரி ஐயா!"

முகப்பு வெளித் திண்ணையில் அமர்ந்தார் ஆண்ட பெருமாள் ஆசாரி.

தாம்பூலத் தட்டு ஓடி வந்தது.

"அம்மா! என்னை மறந்திருக்க மாட்டீங்க நீங்க!... உங்களுக்குத் தாலி செய்ய இருந்த வேளையிலே, எம் மகளுக்குப் பிரசவ வேதனை அதிகமானதாகத் தந்தி வந்திச்சு. ஆனபடியினாலே, நான் பொன்மலைக்கு ஓடிப் போயிட்டே

னுங்க. கடவுள் புண்ணியத்தாலே எம் மகள் பெற்றுப் பிழைச்சது. ஆனா, இங்கே வந்து பார்க்கையிலே, உங்க கல்யாணம் முடிஞ்சிருந்திச்சு. பிழைப்புக்காக அலைய வேண்டி வந்திச்சு. கடைசிலே, உங்க பரிதாபமான நிலைமையைக் கேள்விப்பட்ட நான் கழுத்திலே கத்திபட்ட ஆட்டுக்கிடாமாதிரி துடிச்சிப் போனேனுங்க. எங்கையாலே உங்களுக்குத் திருமங்கலியம் செஞ்சு தரத்துக்கு எனக்கு அதிர்ஷ்டம் வாய்க்காட்டியும், உங்க பொண்ணுக்காச்சும் கட்டாயம் தாலி செஞ்சு தந்துப்பிடவேணும்னு ஆண்டவனை எண்ணி உறுதி எடுத்துக்கிட்டேனுங்க. என்னைக் காணும் ஒருநாள் உங்ககிட்ட வந்து, விவரத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்கணும்னு இருந்தேன். இப்போ வேளை கூடியிருக்குதுங்க!... இந்தாலே இருக்கானே சிங்காரம். இவன் எம்மவன்!...இவன் மூலம் உங்க பொண்ணு கல்யாணச் சேதியை அறிஞ்சேன். அம்மா உங்ககிட்ட ஒரே ஒரு வரம் வாங்கிட்டுப் போகத்தானுங்க இப்போ வந்திருக்கேன். எங்க குலதெய்வத்தை நேந்துக்கிட்டு, என்னோட சொந்தத் தங்கத்திலே செஞ்ச தாலிஇது! உங்க அண்ணன் வீட்டிலேயும் என் ஆசையைச் சொல்லியனுப்பிச்சேன். இதுக்குப் பதிலா நீங்க எனக்கு யாதொண்ணும் தரப்பிடாதுங்க. இந்தத் தாலியையே உங்க மகளுக்குப் பூட்டறதுக்கு சரியின்னு ஒப்புக்கிட்டீங்கண்ணா, அப்பதானுங்க தாயே என் மனசு ஆறும்!...''

ஆண்டபெருமாள் விம்மினார்.

"அம்மா!"

"என்னுங்க!"—கண்ணீர் பொழிந்தாள். அவளுடைய வலது கையில் புதுத்தாலி மின்னிப் பளிச்சிட்டது!

ஆசாரி இருமினார்; "இன்னொரு சேதிங்க!...இந்தாங்க, இது உங்க தாலி!...இதைப் பத்திரமாய் வீட்டிலே வச்சுக்கிடுங்க. உங்க மகளுக்குச் செஞ்ச நகைகளுக்குக் குறைஞ்ச

தங்கத்தையும் நானே வாங்கிப் போட்டுப்பிட்டேனுங்க, அம்மா! இலையும் பழுப்பும் எல்லாருக்குந்தாங்க! உங்க அன்பு மனசு இந்த ஒரு காரியத்துக்கும் மறுப்புச் சொல் லிப்புடாதுங்க. உங்க வீட்டுக்காரருதானுங்க எங்களை அந்த நாளையிலே ஆதரிச்ச தெய்வம்!...நீங்க இதை மறுக் காதீங்க. அப்பதான், இத்தனை காலம் எனக்குள்ளாற வீசிக்கிட்டிருக்கிற புயல் ஓயுமுங்க!...''

தேம்பினார் ஆசாரி.

கல்யாணி அம்மாளின் சம்மதம் கிடைத்ததும், புதுப் பிறவி பெற்ற பாவனையாகச் சிரித்தார் ஆசாரி. உந்திக்கம லம் வெளியேற்றிய சிரிப்பு அது! நீட்டிய காப்பியை நிறை வோடு குடித்தார் அவர்; தாம்பூலம் தரித்துக் கொண்டார்.

'எங்கையிலேலே உங்களுக்குத் தாலிப் பொட்டு செஞ்சு கொடுத்திருந்தாக்க, ஒரு சமயம், உங்களோட தாலி நிலைச்சாலும் நிலைச்சிருக்குமோ?...நான் எங்கடமை யைச் செய்யாததற்கும், உங்க அவலக் கோலத்தை நான் கண்டதுக்கும் ஊடாலே என்னாலே இப்படித்தானுங்க ஒரு ஆறுதல் வழியை உண்டாக்கிட முடிஞ்சது, தாயே! ஊம்!...வாழ்க்கை ஒரு நாடகமாகத்தான் இருக்குது. வாழ்ந்து நொடிச்ச குடும்பத்தைக் காணவே ஆறமாட் டேங்குதே!...அம்மா வீட்டை அடமானம் வச்சு, மகள் கல்யாணச் செலவைச் செய்ய இருந்திருக்காங்க. அந்தச் சேதி கிடைச்சடியும், அதுக்கும் நானே ஒரு வழியை உண் டாக்கி, திரை மறைவிலே ஒரு உபகாரம் செஞ்சுப்புட் டேன். சோமசேகரம் ஐயா குடும்பத்துக்கு ஆபத்துக்கு உதவாத என்னோட நிலபுலம் இருந்தென்ன?...பட்டினத் தார் பாடின மாதிரி, நடுவிலே வந்த சிவன் தந்த சொத்து இப்படிப்பட்ட சுபகாரியத்துக்கு உதவுகிறதே என் மன சுக்கு ஆறுதல் தரும்! ஈசனே, எல்லாம் நீ காட்டுற நல்ல பாதைதான்!...'

17

நாதத் தந்தி

வாஸந்திக்கு மூளை வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது. தொடர்ந்து எதையுமே அச்சமயம் அவளால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. தூசு தட்டித் துடைத்து வைக்கப்பட்டிருந்த அந்த வீணையை மீண்டும் ஒருமுறை நோக்கினாள். மருட்சி தோய்ந்த அவள் விழி வீச்சில் அடியுண்ட மானின் ஏக்கம்—வேதனை சுடர் விட்டது. ஜன்னல் கம்பிகளினூடே பாய்ந்து ஒளி பரப்பியிருந்த அந்தி வெயிலின் செங்கதிர்கள் வீணை மீது படிந்திருந்தன. அக்காட்சி அவள் நைந்த மனதை ரம்பம்போல அறுத்தது. அந்த நாட்களில் தன் அக்காள் சுலோ வீணை வாசித்து, அத்தானை மகிழ்வுறச் செய்த சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நினைவுப்படுத்திப் பார்த்தாள் வாஸந்தி. நெடுமூச்சு வெடித்துக் கிளம்ப இமை வட்டங்களில் நீர்த்திவலைகள் வரம்பு கட்டின.

அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள். மத்தியானம் உண்டு முடித்ததும் அமைதி கனிய உட்கார்ந்து, வம்பளந்து வீண்பொழுது கழிக்கத் திட்டமிட்டிருந்தான் மூர்த்தி. அதற்கு வாஸந்தியும் பூரண சம்மதம் கொடுத்திருந்தாள். ஆனால் யார் சூதோ, தம்பதிகளின் ஒட்டிய இரு உள்ளங்கள் ஏகோபித்துப் போட்டிருந்த ஏற்பாடு சடுதியில் நிலைகுலைந்தது. மூர்த்தி முன் கூட்டியே தயாரித்து வைத்திருந்தவன்போல விண்ணப்பம்

ஒன்றைச் சமர்ப்பித்துக் கொண்டான் தன் இதயராணியிடம். பதியின் ஆசை வேண்டுகோள் வாஸந்தியை மனமுடையச் செய்து விட்டது போலும்! இல்லையென்றால் அவள் கண்கலங்கக் காரணம்...?

"வாஸந்தி, நானும் யோசித்து யோசித்துப் பார்த்து விட்டேன். எப்படியும் திரும்பவும் ஒரு தரம் உன் தமக்கை வாசிக்கும் அந்தத் "தந்தியிலெழுவது நாதம்" என்ற பாட்டை வீணையில் இசைத்துக் கேட்க வேண்டும் என்ற அபரிமிதமான ஆசை என்னைப் பைத்தியமாக ஆட்டி வைக்கின்றது. ஆனால் அந்தப் பாட்டை சுலோமாதிரி உன் ஒருத்தியாலேயே அத்துணை திறம்பட வாசிக்க முடியும். வாஸந்தி, மறுக்க மாட்டாயே?" என்று கேட்டுக் கொண்டான் மூர்த்தி. இயல்பான அவனது ஆணையில்—அல்ல, விண்ணப்பத்தில் கம்பீரம் ஒடுங்கி ஒலித்தது. தலையை உயர்த்திப் பார்த்தாள் கணவனை. உடனே தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். புருஷன் கொண்ட மனைவியிடம் வேண்டுவதா என்ற இரண்டுங் கெட்டான் நிலையில் "ஆகட்டும்," என்று ஒப்புக் கொண்டாள். மூர்த்திக்கு அப்பொழுது ஆகாயத்தில் 'ஜிவ்'வென்று பறப்பது போன்ற உணர்ச்சி உடலெங்கும் ஊடுருவிப் பாய்ந்தது.

* * *

அட்வகேட் அனந்தராமனின் பெயருக்கும் புகழுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கினர் அவரது இரு புதல்விகளும். மூத்தவள் சுலோ; இளையவள் வாஸந்தி. ஒரே கிளையில் பூத்த இரு மலர்கள் அவர்கள். அழகு அரியணை வகிக்கும் கனவுப் பதுமைகள் சுலோவும் வாஸந்தியும். வளர்ச்சியும் கவர்ச்சியும் அவர்களுக்குப் பருவ எல்லையை நிர்ணயித்தது. சுலோவிற்கு வாஸந்தியைவிட ஒருவயது தான் அதிகம் என்றாலும், முதலில் சுலோவின் கல்யா

ணத்தைப்பற்றிய கவலை தான் அனந்தராமனுக்கு உண்டாயிற்று. ஆனால் கல்யாணத்தைப்பற்றி வரன் விஷயமாகத் துளிகூட யோசிக்க வேண்டிய நிர்பந்த மில்லை அவரைப் பொறுத்த மாத்திரத்தில். கையில் கரும்பை வைத்துக் கொண்டு கற்கண்டுக்கு யாரேனும் அலைவார்களா என்ன? தன் சகோதரி மகன் மூர்த்தியை சுலோவிற்கென்றே நிர்த்தாரணம் செய்தவர் அட்வகேட். மூர்த்தி ஒரு பி. எஸ்ஸி. படிப்பிற்குப் படிப்பு; அழகுக்கு அழகு; அந்தஸ்துக்கு அந்தஸ்து. பின் என்ன? ஜாதகங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஆனால் என்றைக்கோ அவர்கள் இரண்டு இதயங்களும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு விட்டனவே!...

சுலோ படிக்கும்பொழுதே வீணை மீட்டக் கற்றுக் கொண்டாள். நாட்கள் செல்லச் செல்ல 'வீணைப் பைத்தியம்' வளரத்தான் வளர்ந்தது. இதுபற்றி அவள் பெற்றோர்களுக்கும் சந்தோஷமே. தமக்கை வீணையைக் கையில் எடுப்பதைப் பார்த்து விட்டால் போதும். கண்ணன் குழலோசை கேட்ட கோபியர்களைப்போல ஓடோடிச் சென்று அவள் வாசிக்கும் கானத்தை ரசிக்கத் தொடங்கி விடுவாள் வாஸந்தி. நாளடைவில் வாஸந்தியின் ரசிகத்தன்மை அவளையும் வீணை சிக்ஷை பெறத் தூண்டி விட்டது.

விரைவில் சுலோ மிஸஸ் மூர்த்தி ஆனாள். அவனும் ஒரு சங்கீதப் பித்தன். பித்தம் தெளிய மருந்து சுலோவின் இசை வெள்ளம். இப்படியல்லவா ஜோடி பொருந்த வேண்டும்? அவளும் முன்கூட்டியே வேண்டுகோள் எதுவுமின்றி, ஆனால் குறிப்பறிந்து—ஜாடை தெரிந்து வீணை வாசித்துத் தன் அத்தானைப் பரவசப்படுத்தத் தவறுவது கிடையாது.

சுலோவை அடுத்து அட்வகேட்டின் கவலை வாஸந்தியின் பேரில் நிலைத்தது நியாயமே! ஆனால் வரன் விஷயந்தான் அவருக்கு மட்டுப்படவில்லை. மூர்த்தி போல இன்னொரு மாப்பிள்ளையும் அமைந்துவிட வேண்டுமென்பதுதான் அனந்தராமனின் ஆசையும் ஆதங்கமும். அந்தச் சமயம்தான் அவர் மனம் இடியும் வண்ணம் சுலோவின் அகால மரணம்பற்றி தந்தி வந்தது. மணம் முடிந்து புது வாழ்வு தொடங்கி இன்னமும் ஓராண்டுகூடப் பூர்த்தி பெறவில்லை. அதற்குள் தன் ஆசை மகள் சுலோவின் பிரிவை எங்ஙனம் அவரால் சகிக்கக்கூடும்?

உயிர்த்துணை போன்ற தன் தமக்கையின் சாவினால் புண்பட்டிருக்கும் தன் நிலையை வெளிக் காட்டிக்கொள்ள நேர்ந்தால் அப்புறம் தந்தையையும் தாயையும் எவ்விதம் தேற்ற முடியும் என்று எண்ணியே வெளியில் தன் துயரத்தைக் காட்டாமலிருந்தாள் வாஸந்தி. தன் பெற்றோர் இஷ்டப்படி மூர்த்தியை வீட்டோடு வைத்து சிசுருஷை செய்ய ஆரம்பித்தாள் வாஸந்தி. தன் மனைவியை இழந்த நஷ்டத்தையும் மாளாத துக்கத்தையும் ஓரளவு மாற்றச் சாத்தியமாயின வாஸந்தியின் அன்பு கனிந்த ஆதரவு மொழிகளும், தூய உள்ளத்துடன் செய்த பணிவிடைகளும். தன் அத்தான் எப்படியும் துயரம்நீங்கி அமைதியுடன் இருக்க வேண்டுமென்பதே வாஸந்தியின் தனித்த கவலையாக—லட்சியமாக அமைந்தது.

ஆனால் மூர்த்தி—வாஸந்தி இருவரிடையிலும் நிலவிய ஐக்கிய மனப்பான்மையையும் பாசத்தையும் அடிக்கடி கவனித்த அட்வகேட் எப்பாடுபட்டேனும் அவ்விருவர்களை 'முடிச்சுப் போட்டு' கணவனும் மனைவியுமாக்கத் தீர்மானித்தார். காலமும் சமயமும் கூடின. மனம் போலல்லவா வாழ்வு? மூர்த்தி வாஸந்தியின் கைத்தலம் பற்றினான். ஒவ்வொரு அம்சத்திலும் சுலோவின் பிரதி

பிம்பமெனத் தோற்றமளித்த வாஸந்திக்கு முதல் மனைவியின் ஸ்தானம் அளிக்கப்பட்டது; ஆதரிசவாழ்வின் தொடக்கம் அழகாக, அற்புதமாக இணைந்தது; அமைந்தது.

சுலோவைப்பற்றி எண்ணும் போதெல்லாம் அவள் தினமும் வாசிக்கும் வீணையின் ஞாபகமும் தொடர்ந்தே வரும். அப்போதெல்லாம் வாஸந்தி அந்த வீணையைக் கண்ணால் காணக்கூடாதென்று மறைத்து வைத்துவிடு வாள். மேலும் நீண்ட நாட்களாக வீணையைக் குறித்த பேச்சுக்கே அத்தம்பதிகளிடையே சந்தர்ப்பம் எழவும் இல்லை. ஒருவேளை தன் அத்தான் என்றாகிலும் வீணையை மீட்டி வாசிக்கும்படி கேட்க நேர்ந்தால் என்ன ஆகும் என்று மட்டும் மனத்தில் பலமுறை சம்சயப்பட்டதுண்டு. பொங்கிக் குமுறும் துக்கத்தை மாற்றிவிட வகை இது என் பதாக ஆராய்ந்தும் இருக்கிறாள் வாஸந்தி. அவ்வளவு பாசம் தமக்கை மீது. ஆனால் வாஸந்தியின் பயம் முடிவில் நிஜமாக நிகழத்தான் செய்தது. ஒருநாள் வீணையை ஒரே ஒருமுறை வாசிக்கவேண்டு மென்று விண்ணப்பித்துக் கொண்டான் மூர்த்தி.

விழிக்கோடியில் உருப்பெற்றுக் கொண்டிருந்த கண் ணீரைத் துடைத்துவிட்டு நெற்றியில் விழுந்து புரண்டு விளையாடும் கேசத்தை ஒதுக்கிக்கொண்டு மெல்ல எழுந் தாள் வாஸந்தி. பார்வையில் ஏக்கம் வலை பின்ன தலையை நிமிர்த்தி சுவரில் மாட்டியிருந்த சுலோவின் போட்டோவை ஒரு கணம் நோக்கிய பின் வீணை சகிதம் கீழே அமர்ந் தாள். எதிரேயிருந்த நாற்காலியில் மூர்த்தி வீற்றிருந் தான். இறந்துபோன சுலோவே உயிர்பெற்று வந்து கான மிழைக்கப் போவதாக மூர்த்திக்கு எண்ணம் ஓடியது. உடம்பு புல்லரித்தது. வாஸந்தி முகத்தில் புன்னகையை வருவித்துக் கொண்டாள்!

"ஆரம்பிக்கிறாயா வாஸந்தி?"

"ஆகட்டும்," என்பதற்கு அடையாளமாக வீணையின் கம்பிகளை நெருடிவிட்டாள். விரல்கள் தந்திகளில் இழைய கானம் காற்றில் மிதந்தது.

"தந்தியில் எழுவது நாதம்
சிந்தையில் எழுவது காதல்......"

தளிர் விரல்கள் வாத்தியத்துடன் விளையாடத் துவங்கின. தொடர்ந்து வாசித்துக்கொண்டேபோனாள். மூர்த்தி தன்னை மறந்து, சூழ் நிலையையும் மறந்து கான லயத்தில் ஒன்றிப்போய் ரசித்த வண்ணமிருந்தான்.

மின்னல் கொடி படரும் ஒரு வினாடியில் என்ன தோன்றிற்றோ, பாட்டு முடிவதற்குள் திடீரென்று மூர்த்தி எழுந்து வெளியே போய்விட்டான். இதைக் கண்ட வாஸந்தி தணலைத் தீண்டியவள் போன்று நடுங்கிப் போனாள். தன் அத்தானின் இத்தகைய செய்கை வியப்பை அளித்தது. அவள் மனம் அஞ்சி அதிர்ந்தது.

இந்தச் சம்பவத்தைக் குறித்து அதன் பின் தம்பதி களிடையே எவ்வித வியாக்கியானமோ அல்லது சமாதான உடன்படிக்கையோ உதயமாகவில்லை; நிகழவுமில்லை. அப் புறம் ஒன்றிரண்டு நாட்கள் வழக்கம்போல வந்தன, ஓடி விட்டன. அன்றாடம் நடக்கும்—நடக்கவேண்டிய சிரிப் பும் கேளிக்கையும் இடம் பெற்றன; களித்தனர்.

அன்று இரவு மூர்த்தி வெளியே சென்றிருந்த சமயம் வாஸந்தி தனித்திருந்த அவ்வீட்டின் பயங்கர அமைதி அவளை என்னவோ செய்ய ஆரம்பித்தது. அன்று வீணை வாசிக்கையில் நிகழ்ந்த சலனம் அவள் மனத்தில் அப் படியே ஆழப் பதிந்திருந்தது. காரணமின்றி அரைகுறை வாசிப்பில் அவ்விதம் மூர்த்தி திடுதிப்பென்று வெளியே எழுந்து சென்றதன் அர்த்தம் மர்மமாகவே பட்டது

வாஸந்திக்கு. நேரில் கணவனிடம் இதைப்பற்றிக் கேட்க வும் விரும்பவில்லை. இருப்பினும் தன்னைப்பற்றி ஏதா கிலும் தவறுபட எண்ணி விட்டிருப்பாரோ? அவள் மனம் ஒரு நிலையில் அடங்காது அலைபாய்ந்து தத்தளித்தது.

அன்று வீணை வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது அவள் பட்டபாடு அவள் ஒருத்தியே அறிவாள். திரும்ப வும் வீணையை மீட்டிவிட்டதும், தன் தமக்கையின் நினைவு அவள் இதய வீணையையே நெருடிவிட்டதை மூர்த்தியால் உணர்ந்திருக்க முடியுமா? ஒவ்வொரு தவணையும் கானம் கூட்டும் சமயம் அவள் உயிரே போய்த் திரும்பும். கண்கள் கலங்கும். இந்த மாற்றத்தைத் தன் அத்தான் கவனித்து விட்டால்.........?—அவள் சந்தர்ப்பத்தைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

வாஸந்தி எதிரேயிருந்த சுலோவின் படத்தினருகே சென்று சிறு குழந்தையைப் போலத் தேம்பினாள். திரும் பவும் ஒருநாள் தன் கணவன் அந்த வீணையை வாசிக்க உத்திரவு பிறப்பித்தால் தன் கதி என்னாகும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்தாள்; அன்று தன் கணவன் லவலேசமும் சலனமற்று ரசித்துக்கொண்டிருந்த காட்சி யையும் மனத்தில் நினைவுபடுத்திக் கொண்டாள்.

ஆனால் மறுமுறை அவ்வீணையை கையால் தீண்ட வும் கூடாது என்பதாக அசைக்க முடியாததொரு எண் ணத்தை உற்பவித்துக்கொண்டாள் வாஸந்தி. உடனே பித்துப் பிடித்தவள் போல உள்ளே ஓடினாள். கண்முன் காட்சி தந்த வீணையை எடுத்து 'படீர்' என்று அதன் தந்தி ஒன்றை அறுத்துவிட்டாள். அப்போது அவளது இதயமே அறுந்துபோனது போன்ற ஓர் உணர்வு எழுந்தது. மறு நிமிஷம், 'அத்தான் ஊரிலிருந்து வந்து இந்த நிகழ்ச்

சியைக் கண்டால் என்ன செய்வது?' என்ற கேள்வியும் உடனடியாக மின்வெட்டிச் சென்றது. வாஸந்தி அசை யாச் சிலையாய் சமைந்து நின்றாள். கண்ணீர் பிரவகிக்க, சிதைந்த உருவம் மாதிரி பொலிவிழந்து காணப்பட்ட அந்த வீணையை ஆற்றாமையுடன் பார்த்தாள். சூன்யக் கோளமாகத் தோற்றமளித்த உலகமே அவள் முன் சுழன்றது. அவள் தமக்கை சுலோவின் படத்தின்கீழ் மண்டியிட்டு விம்மியழுதாள்.

கண்ணீர் நின்றுபோய் எப்பொழுதுதான் தூங்கினாள் என்பதே அவளுக்குத் தெரியாது. ஏதோ ஒரு சப்தம் அருகில் கேட்ட மாதிரி திடுக்கிட்டுக் கண் விழித்தாள். பக் கத்தில் பார்த்தாள். தன் கணவன் எழுந்து அந்த அறைக் கதவைத் திறந்து பக்கத்து அறைக்குப் போவதைப் பார் வையிட்டாள். கண்களை அகல விரித்துக்கொண்டு படுக் கையில் படுத்தவாறே அந்தப் பக்கம் நோக்கியபடியே இருந்தாள். 'தன் கணவன் எப்பொழுது வந்தார்' இப் போது அந்த அறைக்கு எழுந்து போவானேன்! என்ப தெல்லாம் அவளுக்குத் திகைப்பாக இருந்தன. அவன் அந்த அறைக்குள் சென்று சில நிமிஷங்கள் இருக்கும். அந்த அறையில் இருந்து கிளம்பும் சப்தம் மூலம், நடப் பதை அறிய முயன்று கொண்டிருந்தாள் அவள். படீரென ஒரு சப்தம் கேட்டது. அடுத்த விநாடி ஏதோ ஒன்று தெறித்த சப்தம், ஒரு கம்பி தெறித்து மற்றொரு கம்பியில் அடித்துக் கிளம்பும் நாதம்!

அவள் சுருண்டு எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள்.

'ஆமாம்; வீணையின் மற்றொருகம்பியை அவர் அறுத்து விட்டிருக்கிறார். இனி அந்த வீணை பயன்படக் கூடா தென்று, தான் செய்த அதே காரியம் அவர் மனதிலும் தோன்றியிருக்கவேண்டும்!''

வாஸந்தி எழுந்தாள். படுக்கையிலிருந்து எழுந்து அந்த அறையை நோக்கிச் சென்றாள். அதே தருணம், மூர்த்தியும் அந்த நிலைக்கு வந்து சேர்ந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"வாஸந்தி! இனி அந்த வீணையை நீ தொடவேண்டிய சந்தர்ப்பம் வரவே வராது!" என்றான் அவன்.

வாஸந்தி அவனுடைய தோள்மீது கையை வைத்து லேசாகச் சிரித்தாள்.

"ஏற்கனவே அது பயன்படாததாகி விட்டது."

"வாஸந்தி! என்ன சொல்கிறாய்?"

"தாங்கள் அறுத்துவிட்டது இரண்டாவது தந்தி. முதல் தந்தியை நானே......"

"வாஸந்தி! நீ முந்திக்கொண்டு விட்டாயா?" என்று அவளது தோள்களில் கைவைத்து மூர்த்தி அவளை அன்பான ஆதரவுடன் அணைத்துக்கொண்டான். இருவருக்கும் நிம்மதி பிறந்தமாதிரி இருந்தது! *